உ

கடவுள் துணை.

# நாரதர் கலகம்

## நான்காம்பாகம்.

இஃது

அனேக புராணங்களை ஆராச்சிசெய்து,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1911.

ரிஜிஸ்தர் காபி ரையிட்.

இந் நான்காம்பாகத்தின் விலை அணா-6.

நெ-8. சட்டணநாய்க்கன் வீதி, சூளை-மதராஸ்.

நாலுபாகமும் ஒரேகட்டடம் புல்காலிக்கோபயிண்டு விலைரூபா 1 8 0

# ரிஜிஸ்டர் காபிரைட் அரிவிப்பு.

இதனுல் சகலமான புத்தக வியாபாரிகட்கும் அச்சுக்கூடத் தலைவர்கட்கும், தெரிவிப்பது யாதெனில் 1847-ம் வருடத்திய இந்துதேசத்து காபிரைட் என்னும் கிரந்த சுதந்தர ஆக்டின்படி ரிஜிஸ்டர் காபிரைட்டு செய்திருக்கிறபடியால் என்னுடைய அனுமதியின்றி யாரும் யெவ்வித முகாந்தரத்திலும் அச்சிடக்கூடாது.

சென்னை 20-1-1911.

இப்படிக்கு
சிறுமணவூர் - முனிசாமி முதலியார்.
நெ-8. சட்டணாய்க்கன் தெருவு சூளை-மதராஸ்.

கலியாணக்கிரமமென்னும்

# விவாக சாஸ்திரம்.

விவாக ரகசிய மென்பது அனேகமாய் பாமரஜெனங்களுக்கும் படிப்பு கேள்வியில்லாதவர்க்கும் எள்ளளவும் தெரியாதபடியால் பிராமணர்கள் இட்டது சட்டமாக பணத்துக்குத்தக்க மந்திரமும் ஓமமும் செய்து விவாகம் நடத்திவிடுகிறார்கள். இதுயுகதர்மமேயன்றி காலக்கிரமமென்றுயாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கலியாணக்கிரமமென்பதை அடியில் வருமாறுகாண்க,

- விவாககாலம்
- விவாகபேதம்
- பெண் இலட்சணம்
- பெண் அவலட்சணம்
- சகுணம்
- பொருத்தம்
- பரியம்
- உருதிப்பத்திரம்
- பந்தக்கால்
- பந்தல்
- தீட்டாணிமேடை
- மணவரைசதுரம்
- புரோகிதர்
- கும்பகலசம்
- திக்குப்பாலகர்
- குடவிளக்கு
- கிளைவிளக்கு
- அம்மி, குழவி
- முளைக்கட்டல்
- சத்தகலசம்
- அரசாணிக்கால்
- மாப்பிள்ளை வரும்விதி
- கால்மெட்டு
- பாதபூசை
- காப்புசங்கற்பம்
- கூரையணிதல்
- மங்கிலியதாரணவிதி
- தாரைவார்த்தல்
- மங்கிலியமணியும்விதி
- உபதேசம்
- பட்டங்கட்டல்
- சேலையிடுதல்
- பொன் மோதிரம்
- மாலை மாற்றுதல்
- அம்மிமிதித்தல்
- அருந்ததிகாட்டல்
- தேவாசீர்வாதம்
- கங்கணவிசர்ஜ்ஜனம்
- பந்தல் பிரித்தல்
- பாலிகை விடுத்தல்
- கர்ப்பதானம்
- தகாத ருதுசாந்தி
- வேசிகள் ருதுசாந்தி
- புணர்ச்சிவிதி
- சங்குதரித்தல்
- இருமன்மேடை
- செங்கோலம்
- மாக்கோலம்
- தோழிப்பிள்ளை
- தாலியின் உருவம்
- குலாலன் மரியாதை
- நாத்தினர் விளையாட்டு
- இரண்டாவது விவாகம்
- பரியம் சீதனம்
- குலதருமம் ஜாதககருமம்
- நாமகரணம்
- உபநயனம்

இத்தனை விஷயங்களுக்கும் சாஸ்திரயுக்த்தமாகவும் சாட்சிப்பிரமாணமாகவும் சரித்திரரூபமாய் அச்சிடப்பட்டிருக்கிறது இந்துக்கள் ஒவ்வொருவரும் முக்கியமாய் அரியவேண்டிய குலதரும சாஸ்திரம். இதன்விலை அணா 4.

## வியாசர் விபரீதம்.



"வியாசோ நாராயணோஹரி" என்றபடி ஸ்ரீமந்நாராயண மூர்த்தியே வியாசபகவானாய் வந்தபடியால்மந்திரம் யெந்திரம் சந்தியாவந்தனம் முதலானதும் அவர்வாக்கினால் வந்தபிரகாரம் இட்டதேபிச்சை யென்று ஆயிரத்தெட்டண்டமும் ஆடடிப் படைக்கிறது. இதுவுமன்றி குறுக்கு நெடுக்காய்த திருபபிய வேத சாஸ்திர புராண மெல்லாம் அசைப்பாரில்லாமல் ஆசசாவைரமாய்க் குந்திக்கொண்டது. வியாசர்விபரீதமென்றால் அதிகமாய் விரித்துச் சொல்வதற்கு நாமெல்லாம் பெரியோரல்ல, உலகமயக்கமெல்லாம் வியாசர் கட்டுப்பாடென்று சகலருக்குந் தெரிந்தவிஷயம். இதன் விலை அணா 4.

---

சிறுமணவூர் முனிசாமி முதலியார் கம்பெனி,

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

# தெய்வகுணவெளிச்சம்.

விசுவாவசு என்பவன்—வாதி. கிருசானு என்பவன்—பிரதிவாதி.

பூலோகத்திலுள்ள தெய்வங்களையும் தெய்வஸ்தலங்களையுங் குறித்து தேவலோகத்து காந்தருவர்களாகிய (விசுவாவசு என்பவனுக்கும் கிருசானு என்பவனுக்கும்) நடந்த அனேக திருட்டுப் புரட்டுகளும் வியாசர் கட்டுபாடுகளும் விளங்கும், இந்தப் புத்தகமானது (விஸ்வகுணாதெரிசனமென்னும்) சமஸ்கிருத சாஸ்திரத்தை அப்படியே மொழிபெயர்த்தது. ஸ்தலரகசியமெலலாம் இதிற்காணலாம்.

சூரியபகவானைக்குறித்து
ஸ்ரீமந்நாராயணனைக்குறித்து
பூமிதேவியைக்குறித்து
அயோத்தியைக்குறித்து
கங்காநதியைக்குறித்து
காசியைக்குறித்து
சமுத்திரங்களைக்குறித்து
ஜகந்நாதத்தைககுறித்து
பைராகிகளைக்குறித்து
திருவேங்கடாஜலத்தைக்குறித்து
கடிகாசலத்தைக்குறித்து
திருவெவவுளூரைக்குறித்து
ஸ்ரீபெரும்புதூரைக்குறித்து
திருவல்லிக்கேணியைக்குறித்து
கஞ்சிவரதராஜரைக்குறித்து
வேதாந்ததேசிகரைக்குறித்து
நரசிமமசுவாமியைக்குறித்து
வைகுண்டப்பெருமாளைக்குறித்து
உலகளந்தபெருமாளைக்குறித்து
பாண்டவதூத சுவாமியைக் குறித்து
விஜயராகவசுவாமியைக்குறித்து
க்ஷீரநதி பாலாற்றைக்குறித்து
சூத்திரரைக்குறித்து
பாகாநதியைக்குறித்து
செஞ்சிக்கோட்டையைக்குறித்து
ஸ்ரீமூஷ்ணத்தைக்குறித்து
காவேரியைக்குறித்து
ஸ்ரீரங்கத்தைக்குறிதது
கருடாழ்வாரைக்குறித்து
அரிதாசரைக்குறித்து
திருவானைக்காவலைக்குறித்து
சோழதேசத்தைக்குறித்து
கும்பகோணத்தைககுறித்து
சேதுவைக்குறித்து
மதுரைமீனாட்சியம்மையைக்குறித்து
திருமாலிருஞ் சோலைமலையைககுறித்
தாம்பிரபரணியைக்குறித்து
சமயவிளக்கத்தைக்குறித்து
சைவப்பிராமணர்களைக்குறித்து
பண்டாரங்களைக்குறித்து
ஜோசியர்களைக்குறித்து
வைத்தியர்களைக்குறித்து
கவீஸ்வரர்களைக்குறித்து
தர்க்கசாஸ்திரிகளைக்குறித்து
மீமாம்சகர்களைக்குறித்து
வியாகரணர்களைக்குறித்து
உபாத்தியாயர்களைக்குறித்து
கிரந்தகர்த்தாசொல்லியதுகளைக்குறித்
இராஜசேவையைக்குறித்து
அத்துவைதிகளைக்குறித்து.

இப்படி இன்னும் அனேக தெயவங்களைக் குறித்திருக்கின்றது.

இதன் விலை அணா 8. தபாற்கூலி அணா 3.

---

சிறுமணவூர் முனிசாமி முதலியார் கம்பெனி.

பெரம்பூர் பாரெக்ஸ்போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

# நாரதர் கலகம்

## நான்காம்பாகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
9 - NOV 1911
MADRAS.

### நாரதர் ஜென்மாந்திரம்.

வியாசமுனிவருக்கு ஸ்ரீஹரிப்பிரபாவத்தை சொல்லிவந்த நாரதமகாமுனிவர் மறுபடியும் அவருக்கு நம்பிக்கை நிமித்தியமாக தன்னுடைய ஜன்மாந்தரத்தில் ஹரிசங்கீர்த்தனத்தால் அடைந்த பாக்கியத்தைச் சொல்லுகிறார்: வாரீர் பராசகுமாரரே! நான் முன்ஜென்மத்தில் வேதாந்த வித்துக்களான பிராமணனுடைய வீட்டு வேலைக்காரியாகிய கிரகதாசியினுடைய புத்திரனாக ஜனித்திருந்தேன். வாரீர் வியாசரே! இந்தரகசியத்தை சாக்கிரதையாகக்கேளும் அப்போது வருஷாகாலத்தில் தீர்த்தயாத்திரையில் ருசிபெற்றயதிதிகள் அந்தப்பிராமணனுடைய கிருகத்தில்வந்து சாதுர்வருஷரிது சரத்ரிதுவென்கிற இரண்டு மாசங்களிலும் வழிநடக்கிறது அறிதாகையினாலே அந்தப் பிராமண கிருகத்திலே வாசஞ்செய்தார்கள். அவர்கள் பரமயோகிகளாகையால் பரமாத்மாவினுடைய திவ்யகுணங்களை மிகவுஞ்சொல்லத் தொடங்கினார்கள் அப்போது நான் நன்றாகப் பேசத்தெரி

யாமல் மெத்தவும் பாலனுகையிருக்கையிலும் அவர்களுடைய மு காரவிந்தத்தில் சனித்தஹரிகுணமிருதகதையை கேட்கவேண்டு மென்று பகவத்சங்கற்பத்தினுல் அன்புபெற்றிருந்த படியினுலே அவர்களும் இவன் அதிபாலகன் தன்விளையாட்டிற்கு உசிதமான பரமபாவை முதலானது தரித்திருக்கையிலும் இந்திரிய சாபல் யங்களை விட்டிருக்கின்றுனென்றும் இதுவுமல்லாமல் நாம்சொல் லுகிற பரமபுருஷனுடைய கதைகளைக்கேட்க நினைத்து நாமிரு ந்தவிடத்திலிருந்து நாம்திரிந்தவிடத்தில் திரிந்துக்கொண்டிருக் கிருனென்று மிகுதியுந் தயவுபண்ணி அனுக்கிரகஞ் செய்தவர்க ளுக்கு முன்பாகமழலைச்சொல்லுடனே கூடியிருந்தாலும் அவர் கள் சொல்லுகிற கதைகளைக்கேட்டுக்கொண்டிருந்தேன். ஒருநாள் அவர்கள் போசனம்பண்ணின இலைகளைத்தொட்டு அந்தஎச்சிலை என் உடம்பெல்லாம் பூசிக்கொண்டதைக்கண்டு வேண்டாமெ ன்று அவர்கள் விலக்கும்போது சூட்சுமமாகக் கையிலகப்பட்ட பிரசாதத்தை ஒருதரம் நான் பொசித்தமாத்திரத்தில் சகலமான பாதகங்களை தவிர்த்தேன் இப்படிப்பட்ட என் நடத்தையாலே ரசோகுண தமோகுணங்களை விலக்கி சத்வகுண மிகுதியாகிய மனதுக்கு சம்சயங்களைவிலக்கி நிச்சயத்தைப் பிரப்பிக்கையாலே அந்த யோகிகளுக்குப் பிரியமாகிய தருமங்களிலே எனக்கும்அன் புபிறந்தது அவ்விடத்தில் சமுஸ்தகாலங்களிலும் அதிகமநோகர ங்களான ஸ்ரீகிருஷ்ணன் கதைகளைத் தியானம்பண்ணுகிற யோகி களுடைய அனுக்கிரகத்தினுலே அந்தக் கதாசிரவணத்திலே சிற த்தை பிறந்து திரிகாலங்களிலும் சிரவணம் பண்ணிக்கொண்டு அதில் அதிப்பிரீதியாகவே யிருந்தேன் வாரீர் அதிபுத்திசாலியே ஸ்ரீஹரி கதையில் மிகவும்பிரீதிபிறந்தால் கதாசிரவணங் கிடை க்கிறவிடத்தில் நினைவுண்டாயிருக்கிற எனக்கு விஷயங்களில் சுழன்று திரிகிற என்மனது ஸ்ரீஹரிகதையில் மறிபட்டு நின்றது அந்த ஸ்ரீஹரிகதையில் பிரீதியினுல் தனக்கு வசவசர்த்தியான மாயையினுலே கற்பிதமான சூட்சும ஸ்தூலமாகிய பிரபஞ் சத்தைச் சகலசேதனு சேதன சரீரகரமான பிரமத்தில் ஒன்றுகிக் கலந்த என்னிடத்தில் நான் பார்க்கின்றேன்.

இப்படி வருஷரிதுவிலேயும் சரத்ரிதுவிலேயும்அந்த யதீஸ்வர ர்களிடத்திலிருந்து அடிக்கடி நிர்மலமான ஹரிலீலைகளைக் கேள் விப்பட்ட எனக்கு அந்த மகாத்துமாக்களுடைய அனுக்கிரகத்தி

ஞல் ஸ்ரீஹரியிடத்தில் பக்திபிறந்து அதனுலே என்னுடையமன திலே யிருக்கிற ரசோகுண தமோகுணங்கள் நீங்கி பக்தியான து விருத்தியடைந்து சிரத்தையு முண்டாயிற்று இதுகளாலே பாவங்கழிந்தன. இப்பால் இந்திரிய சாபல்யங்களை விட்டு விசுவா சத்துடனே கூடியிருக்கிற பாலனுகிய என்னை அவர்கள் உத்தம பாத்திரமென்று அனுக்கிரத்தித்து சாக்ஷத் ஸ்ரீமந்நாராயணனுல் அனுக்கிரகிக்கப்பட்ட அதி கோப்பியமான பிரமக்கியானத்தை யருளிச்செய்தார்கள். அவர்கள் பிரயாணம் புறப்படுகிற காலத் திலும் மிகுதியான கிருபையினுலே உபதேசித்த கியானத்தினு டைய பிரபாவத்தினுலே சகல் பிராணிகளையும் சிருஷ்டித்த வா சுதேவனுடைய சங்கற்பபிரபாவத்தையும் யாதொருபிரமக்கியா னிகள் பிரமபதத்தையடைகிருர்களோ அந்தப் பிரபாவத்தையும் அப்பொழுதே யறிந்தேன். ஓய் பிராமணேத்தமனே தாபத் திரையங்களாகிய ரோகத்துக்கு அவுஷதம் ஏதென்றுல் ஷட்குண பரிபூரணனுன பரமாத்மாவினிடத்திலே விகிதகருமங்களை பலத் தை யிச்சியாமற் செய்து பிர்மார்ப்பணமென்று சமர்ப்பிக்கி றதே யல்லாமல் வேறில்லை. சகல சாஸ்திரங்களாலேயும் இப்படி யே நிச்சயிக்கப்பட்டது. எந்த வஸ்துக்களாலே ரோகங்கள்பிறக் குமோ அந்த வஸ்துக்களாலே அந்த ரோகங்கள் எப்படியானுல் தீரமாட்டாதோ அப்படி மனுஷியருக்குச் சமுசாரங்களைக் கொ டுக்கிற பல இச்சையால்செய்த கருமங்கள் அந்தசமுசாரங்களைப் பரிகரிக்கமாட்டாது அந்தக் கருமங்கள் தானே பலனைக்கோரா மல் சுதந்தரத்தைவிட்டு செய்யப்பட்டு ஹரியிடத்தில் தியானம் பண்ணப் படுமாகில் அந்தச் சமுசாரங்களை வேரறப் பரிகரிக்கும் இந்தச் சமுசாரத்திலிருக்குங்காலத்தில் உசிதமாகிய கருமங்க ளெல்லாம் பகவானுடைய பிரீதியை உண்டாக்கும்படி செய்தால் ஸ்ரீஹரியுடைய தத்வக்கியானமும் பக்தியு முண்டாக்கும் ஆகை யால் தங்களுக்கு உசிதமான தருமங்களைச்செய்கிற கியானிகள் பகவானிடத்தில் சித்தத்தைவைத்து கருமங்களையும் அனுஷ்டித் தபின்பு அந்த கருமங்கள் பகவத் பிரசாதமாகிய பலனைப் பரிபூர ணமாகக் கொடுக்கவேண்டி ஸ்ரீபகவானுடைய குணமகிமையால் பிறந்துவிளங்குகிற நாமங்களை யடிக்கடி நினைக்கிருர்கள். ஷட்கு ணபரிபூரணனுன உனக்கு வந்தனம் சர்வபூதங்களிலும் உள்ளும் வெளியும் நிறைந்திருக்கிற வுன்னை மனதிலே தியானம்பண்ணுகி ருேமென்று வாசுதேவனுக்குவிக்கியாபனம்பண்ணி பிரத்தியும்ன

னென்றும் அனிருத்தனென்றும் சங்கருஷ்ணனென்றும் நித்திய மாகிய திவ்வியமங்கள விக்கிரகத்தைத் தரித்திருக்கிற உனக்கு நமஸ்காரம்பண்ணுகிறேமென்று மூர்த்திபேதங்களைச் சொல்லி தன் சங்கற்பத்தினலே தரிக்கப்பட்ட மூர்த்திகளை யுடைத்தான மந்திரமே மூர்த்தியாகிய யக்கியபுருஷனை சகலமுந்தெரிந்தவன் யிச்சிப்பான் ஆகையால் நானும் சகல தருமங்களையும்பிர்மார்ப்ப ணமாகச் செய்துவருகிறேன் ஆகையாலிதையறிந்த சர்வக்கியனு பரமாத்மா எனக்குத் தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவ கோசரமா கிய கியான ஐசுவரியத்தையும் தன்னிடத்தில் பக்தியையுங் கொ டுத்தார். பிராம்மணோத்தமனே யாதொருவஸ்துவை சகல துக்க ங்களுடையநிவர்த்திக்குச் சாதகமென்றும் சமுசாரநிவர்த்திக்கு மற்றொன்றில்லை யென்றும் கியானிகள் சொல்லுகிறார்களோ தத் துவத்தை அறியவேண்டுமென்று நினைத்திருக்கிற பெரியோர்கள் எந்தப்பொருளை முழுது மறிந்தபின்பு இனிக் கேட்கவேண்டிய தில்லையென்று ஒழிந்திருக்கிறார்களோ சகல வேதங்களும் எந்தவ ஸ்துவை நிச்சயமாய்ச் சொல்லுகின்றனவோ அந்த பரமானஸ்வ ரூபத்தை இந்தத்துக்கத்தி லடிப்பட்டு இருக்கிற ஜனங்களுக்கு ரசாயனமாகச் சொல்லும்.

சத்தியவதியுடைய புத்திரனானஸ்ரீவியாசபகவான் தேவமுனி யான நாரதருடைய சன்மத்தையும் கருமத்தையுங் கேட்டபின்பு வாரீர் பிர்மகுமாரரே தேவரீருடைய வித்தியாபனத்துக்கு உப தேசஞ் செய்தருளின யோகீஸ்வரர்களாகிய அந்த சந்நியாசி கள் போனபின்பு பாலனயிருந்த தேவரீர் என்னசெய்தீர் அந்த சென்மத்தில் பாலபருவத்துக்கு மேலானபருவங்களி லெப்படி காலங்கழித்தீர் அந்தசரீரத்தை விடுகிற பரிபக்குவத்தில் தாசிகு மாரனான அந்ததேகத்தை யெப்படிவிட்டீர்? ஓய் முனிசிரேஷ்ட ரே காலமானது அறிந்த வஸ்துக்களுடைய நினைவைமறித்து மதியைத்தானே கெடுக்கு மல்லவோ அப்படியிருக்க இப்போது உமக்குப் போனசன்மத்தில் நீர் அனுபவித்த நடத்தைகளை எப் படி நினைத்துக்கொண்டிருக்கிறீர் என்ற வியாசரைப்பார்த்து நா ரதர்சொல்லுகிறார் ஓய் வியாசரே அந்த யதீஸ்வரர்கள் எனக்கு கியானோபதேசஞ்செய்துபோனபின்பு அந்த பாலரூபமாயிருந்த நான் என்தாயாருக்கு ஒரேபிள்ளை யாகையாலும் அவளும் ஸ்திரீ சாதி அறிவுமில்லாதவள் பிராமணாள் வீட்டு வேலைக்காரியான

வ்ள் எனக்குவேறு திக்கில்லையென்று என்னிடத்திலே யதிகமாகிய பாசமுடைத்தானவளாகி என்னுடைய யோகக்ஷேமத்தை நினைத்து நினைத்து தன்னாலேயொன்றுமாகாதபடியினாலே ஒரு தேறுதலுங் காணாமலிருந்தாள் ஈஸ்வரனுடைய இந்தவுலகத்திலாதீனமான ஸ்திரீசனமானது மரப்பாவைபோ லல்லாமல் வேறல்லவென்று நினைத்து நான் அந்தமாதாவிடத்தில் அந்தப் பிராமணனுடைய வீட்டிலேதானே சுகித்திருந்தேன்கிழக்கு மேற்கு முதலான திக்குகளையும் வருஷமாச முதலான காலங்களையும் அறியும்படியான வயது ஐந்தானபின்பு என்னுடையமாதாவானவள் ஒருநாள் பிராமணனுடைய பசுமந்தையில் பால்கறந்துகொண்டு வருகிறவழியில் சர்ப்பம் அவள்காலில் கடித்தது அவளுங்காலதருமத்தை யடைந்தாள்.

ஸ்ரீபகவானானவர் தன்பக்தாளுடைய சாந்தியைக் கோருவானாகையால் இதுஎன்னிடத்தில் ஸ்ரீ ஹரியினுடைய அனுக்கிரகமென்று தெரிந்துக்கொண்டு பின்பு வடதிசையை நோக்கிப்போகையில் சம்பூரணமான தேசங்களையும் பட்டணம் கிராமங்கள் சூத்திரவாடங்கள் வனங்கள் உத்தியானவனங்களையும் நானாவிதமான வர்ணங்களான காவிக்கல்லுகளாலும் மரங்களாலும் நிறைந்த மலைகளையும் மலர்ந்த கமலங்களால் விளங்கியும் தேவதாஜனங்கள் கிரீடிக்கப்பட்டு மிருக்கிற தாமரைத் தடாகங்களையும் விசித்திரமான நாதங்களுடனே கூடியபட்சிகளாலும் மதுரமான கீதஞ்செய்கிற வண்டுகளாலும் நிறைந்தும் பெருமூங்கில்களாலும் நாணல்களாலும் குசங்களாலும் சிறுமூங்கில்களாலும் நிறைந்த மகத்தான அடவியையும் கண்ணாலேகண்டேன் அப்பால் அதிகோரமாகிய பாம்புகள் கோட்டான்கள் நரிகளாலும் நிறைந்த பயங்கரமான வனத்தைக் கண்டேன் பின்புதேகத்தில் இளப்பையடைந்து இந்திரியங்கள் வசவிருத்தியாகாமல் பசியுந்தாகமும் மிகுதியாகயிருந்ததினாலே அங்கேயிருந்த நதியில் ஸ்நானம்பண்ணி ஜலபானஞ்செய்து சிரமத்தைப் பரிகரித்துக்கொண்டு அந்த நிர்மானுஷமான ஆரணியத்தில் ஒருஅரசமரத்தினடியின் கீழிருந்துகொண்டு அந்தயோகிகள் உபதேசஞ்செய்தபடி என்னிடத்தில் அந்தரியாமியாயிருக்கிற பரமாத்மாவை அறிவினாலே நினைத்து சிந்தித்து பக்தியினாலே மனதைநிறுத்தி கமலங்கள் போலிருக்கிற ஸ்ரீ ஹரி சரணங்களை தியானம்பண்ணி அந்தஹரி சரணங்களைப் பிரத்தியட்சமாகக் காணவேண்டுமென்கிறஆசை

அதிகமாகையாலே கண்களிலே ஆனந்தபாஷ்பங்கள் பெருகின. ஸ்ரீ ஹரியும் என்னுடைய இருதயத்தில் மெள்ள மெள்ள ஆவிர்ப்பவித்தார் அதனாலே மிகுதியான பக்தியுண்டாய் ஆனந்தபரவசமாகிய என்னுடைய தேகத்தில் புளகாங்கித முண்டாயிற்று வாரீர் வியாசமுனீஸ்வரரே அப்போது ஆனந்தமாகிற சமுத்திரத்தில் முழ்கிய நான் மற்றொன்றையும் காணமற்போனேன் பின்பு என்மனதை மற்றொருவிடத்தில் போகவொட்டாமல் நிறுத்தி தன்வசம் செய்துகொண்ட ஸ்ரீ ஹரியினுடைய திவ்வியமங்களஸ்வரூபத்தைக் காணமல்அவனாற்பிறந்த அந்தசுகத்தையிழந்து என்னுடைய இருதயமும் சூனியமாயிருக்கையால் திடுக்கிட்டவனைப்போலே எழுந்திருந்து பின்னையும் அந்த ஹரிரூபத்தைக் காணவேண்டுமென்று நினைத்து மனதைஇருதயத்தில் நிறுத்தியும் புத்தியினாலேமுன்போல காணமாட்டாமற் போனேன் ரோகியானவன் இச்சையானபடி வயிறுநிறைகிறமட்டும் போசனம் பண்ணக்கூடாமல் எப்படிதவிப்பானே அப்படி அந்த ரூபத்தைக் கண்டுதிருபதியடைய வேண்டுமென்று நினைத்து ஜனங்களில்லாத அந்தவனத்தில் தப்பித்திரிகிற என்னைவேதார்த்தங்களாலும் அளவிடப்படாத மகிமையை உடைத்தாகிய பகவான் என்னுடைய சுகத்தை மிகுதியும் பரிசரிக்கிறவன்போல் கம்பீரமாகியும் வழுவில்லாத எழுத்துக்களாயும் இருக்கிற வார்த்தையைச் சொன்னார். பிள்ளாய்! நீ இந்த ஜன்மத்திலே என்னைப் பார்க்கிறதற்கு யோக்கியனல்ல! ரசோகுண தமோகுணங்கள் தவிர்ந்து சுத்தசத்வமாகிய மனதையுடைத்தான யோகிகளாலேயும் பார்க்கிறதற் கரிதான நான் அந்தகுணங்கள்தவிராத உன்னைப்போலொத்த யோகிகளுக்கு பிரத்தியட்சமாகமாட்டேன் நீ பண்ணுகின்ற சாகசம் எனக்கு ஆச்சரியமா யிருக்கின்றன இப்போது ஒருதரம் என்னை நீ காணும்படியாக நான் சங்கற்பித்ததேனென்றால் இந்த ரூபத்தைக்கண்ட உனக்கு மிகுதியான ஆசை பிறக்க வேண்டுமென்று காண்பித்ததேயல்லாமல் வேறல்ல ஆகையால் உன்னுடைய இருதயத்தின் பிரத்தியக்ஷத்தில் இப்போதுகண்ட என் திவ்யமங்கள விக்கிரமத்தை மிகவும் இச்சித்துக்கொண்டிரு என் ஸ்வரூபத்தைமிகவும் நினைத்தும் இச்சித்து மிருக்கிறவனுடையபாவங்கள் பரிகாரமாகும் சாத்விகளான யோகிகளிடத்தில் சிலகாலஞ் சேவைபண்ணி அவர்கள் அனுக்கிரகம்பெற்ற உன்புத்தியானது என்னிடத்தில் நிலையாய் நின்றபடி யினாலே

இடைவிடாமலிருக்கிற அரிஷ்ட வர்க்கங்களுடனே கூடிய இந்த சரீரத்தைவிட்டுப் பரமபாகவதனுன சரீரத்தை எடுக்கப்போகிறுய் அப்போது என்னை எப்பொழுதும் காண்பாய் உன்புத்தியானது இப்போது என்னிடத்தில் நிலையாய் நின்றபடியினுலே இனிமேல் ஒருகாலத்திலும் உனக்குத்தீங்கில்லை.

இந்தவுலகங்களுக்குப் பிரளயங்கள் வந்தபின்பு நீ மற்ருெ சென்னம் எடுத்திருக்கையிலும் என் அனுக்கிரகத்திலுலே என்னுடைய ஸ்மரணம் உனக்குமறக்கமாட்டாது என்றுசொல்லிப் பின்பு ஆகாசரூபமான அந்தப் பரமபுருஷன் அந்தரத்தானமாய் எழுந்தருளினுர் நானும் மகத்துக்கெல்லாம் மகானுபாவனுகிய அந்தப் பரமபுருஷனைக் குறித்து திக்குநோக்கி சாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்தேன் அன்றுமுதல் அபிமானத்தைவிட்டு அந்த அனந்தனுடைய நாமங்களை உச்சரித்துக்கொண்டு அந்தபகவான் உலோகோபகார நிமித்தியமாகச் செய்த அதிகோப்பியமான லீலைகளை நினைத்துக்கொண்டு மற்ருெரு வஸ்துவிலும் ஆசையில்லாமல் என்மனதிலேதானே சந்தோஷப்பட்டுக்கொண்டு நின்றவிடத்தில் நில்லாமல் பூமியெல்லாந் திரிந்துக்கொண்டு மதத்தையும் மாச்சரியத்தையும் விட்டு ஸ்வாமி நியமித்த காலத்தைக்குறித்துக்காத்திருந்தேனென்று நாரதபகவான் வியாசமுனீஸ்வருக்குச் சொல்லிப்பின்னையும் ஓய் பிராமணுேத்தமனே மற்றவிரதங்களையும் சொல்லுகிறேன் கேளும்.

இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பற்றினமனதுஎனக்குமற்ருெருவரிடத்தில் இச்சையில்லாம விருக்கையாலே பிரசன்னமான மனதை யுடைத்தான எனக்குப் பரிபக்குவகாலம் வந்தது மழையில்லாமல் தாபத்தினுலே தபிக்கப்பட்ட ஜனங்களுடைய மனதுக்குச் சந்தோஷமுண்டாகவேண்டி வெகுமழைக்கு ஏதுவான மிகுதியும் பிரகாசமாகிய மின்னல்போல் நெருங்கிவந்த பரிபக்குவகாலத்தை நினைத்து பரமபாகவத ரூபமானசரீரத்தை யடையவேண்டுமென்று மிகுதியும் நினைத்தேன் எனக்குப் பிராப்தகருமத்தாலே வந்திருந்த பஞ்சபூதியமாகிய தேகமானது விழுந்து போனபின்பு பிளயகாலத்தில் இவ்வுலகங்களை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு சமுத்திர ஜலத்தில் பள்ளிகொண்டிருக்கிற பரமாத்மாவிடத்தில் சேர்ந்து நித்திரைசெய்வதாக நினைத்து நித்திரைபண்ணுகிற பிர்மாவினுடைய மூச்சுக் காற்றுடன் அவருடனே பிரவேசித்திருந்தேன் சதுர்யுகசகஸ்திரமானபின்பு

எழுந்திருந்து இவ்வுலகத்தை முன்போல சிருஷ்டிக்க நினைத்து சதுர்முகனுடைய பிராணவாயுவி னிடத்திலிருந்தும் மரீசிமுத லான ரிஷிகள் ஜனித்தபோது அவர்களுடனே நானும் ஜனித்தேன் அன்றுமுதல் மூன்றுவகையாகப் பிறக்கப்பட்ட இந்தப் பதினலு லோகங்களிலும் உள்ளும்புறமும் சஞ்சரித்தாலும் ஸ்ரீ மஹா விஷ்ணுவினுடைய அனுக்கிரகத்தினாலே என்னுடைய விரதங்களுக்குக் குறைவில்லை. பிரமதேவனாலே கொடுக்கப்பட்ட இந்த வீணையைமீட்டி நாதபிரம்மத்தானே அலங்கரித்து ஸ்ரீஹரி கதைகளைக்கானஞ்செய்துகொண்டு சஞ்சரிக்கிறேன். தன்னுடைய திருவடியிலே சர்வலோகபாவன தீர்த்தமானகங்கையை ஜனிப்பித்து தன்னுடைய லீலாசிரவணத்தால் பிரசன்னனாகிற ஸ்ரீ கோவிந்தன் தன்மகிமைகளைக் கானஞ்செய்கிற என்னிட இருதயத்தில் அழைக்கப்பட்டவனைப்போல சீக்கிரமாகப் பிரகாசித்துத் தரிசனத்தைக் கொடுக்கிறான்.

விஷய சம்பந்தத்தினால் அடிக்கடிகலங்கி அச்சுதனிடத்தில் மதியை நிறுத்தமாட்டாத பிராணிகளுடைய சமுசாரமாகிற சமுத்திரத்தைத் தாண்டுவித்து அவர்களைக் கரைசேர்க்க வேண்டுமென்று நினைத்தால் ஸ்ரீ ஹரிதியானஞ்செய்கிற பாகவதனாலே செய்யப்படுகிற ஹரிலீலா வர்னமாகிற தெப்பமேயல்லாமல் வேறில்லை காமலோபாதிகளாலே கலங்கினமதியையுடைய ஆத்மாவானவன் ஸ்ரீமுகுந்த சேவையினாலேஎப்படியானால் சீக்கிரமாக சாந்திபெறுகிறானோ அப்படியே இயமநியமாதிகளான யோகங்களினாலே சாந்திபெறமாட்டான் வாரீர் பரிசுத்தமூர்த்தியே யாதொரு அர்த்தங்களை பிரஸனஞ் செல்கிறீரோ அதுகளைச்சம்பூரணமாகச் சொன்னேன் என்னுடைய சனனத்தையும் ரகசியத்தையும் கடத்தையையும் உம்முடைய ஜன்மத்தையும் உம்முடைய சீலத்தையும் நீரினிமேல் செய்யவேண்டிய காரியத்தையும் பரமாத்மாவினுடைய முகவுல்லாச ஜனகமாகவே சொன்னேன் என்று நாரத பகவான் வாசவி புத்திரனான வியாசரைப்பார்த்து இப்படிசொல்லி வியாசராலேஅனுப்பி வைத்துக்கொண்டு தாம் கோரிவந்த காரியம் தலைகூடினதினாலே மிகுதியும் சந்தோஷமடைந்து வீணையை மீட்டிகானஞ்செய்துகொண்டு தம்முடைய சித்தமுவந்த விடத்தில் நடந்தார்.

நாரதர் ஜென்மாந்திரம் முற்றிற்று.

நாரதர்

# தருமராஜர் சந்தேகந் தெளிவித்தது.

ஒருகாலத்தில் சௌனகரைப்பார்த்து சூதமுனிவர் சொல்லுகிறார் ஸ்ரீ சவுனகாதி மகரிஷிகளே நம்மிலும் அதிகவைராயான இருப்புமனமுமுடையவர் இல்லறத்திலும் உண்டென்பதைப்பற்றி விசாரித்தீரே அதைச் சொல்லுகிறோம் யென்று திருவாய்மலர்ந்தருளுவார். பாண்டுகுலத்திலகராகிய தருமராஜாவானவர்கிருஷ்ணனுடைய திருவடிகளை அடிக்கடி சேவித்துக்கொண்டு மற்றொரு வஸ்துக்களிலேயும். ஆசையில்லாமல் பிரசைகளைச் சந்தோஷமாக ஆக்கினைபண்ணிச்கொண்டு பிதாவைப்போல் பாலனஞ் செய்தார். ஐஸ்வரியங்களும், யக்கியங்களும், ஜனங்களும்பட்ட மகிஷியுங், பிராதாக்களும், பூமியும், சம்புத்வீபாதிபத்தியமும், சொர்க்கத்தையளாவிய கிர்த்தியும், பொருந்தி யிவையெல்லாக்தேவர்கள் கோரும்படியாகவிருந்தாலும், முகுந்தனிடத்தில் நிலைபெற்ற மனதுண்டாகிய தருமராஜா இதுகளில் இச்சையில்லாமவிருந்தார். பிராமணோத்தமர்களே! இப்படி ராச்சிய பரிபாலனத்தை யுதிஷ்டிரர்செய்துவருங் காலத்தில் மாதாவினுடைய கர்ப்பத்திலிருந்த வீரனுகிபரிக்ஷித்துவான சிசு நிர்மலஸ்வரூபனுகி சொர்ணகிரீடமும், அதிசுக்தரமும், கருத்ததேகமும், மின்னலைப்போல் விளங்குகிற பீதாம்பரமும், நீண்ட சதுர்புஜங்களும், குண்டலங்களும், சிவந்த கண்களும், வாய்ந்த கதாபாணியான அச்சுதனுல் அஸ்திரசுவாலையைப் பரிகரித்துக்கொண்டு தன்னுடைய சமீபத்திலேயிருக்கிற ஸ்ரீஹரியைக் கர்ப்பத்திலிருக்கிற பரிக்ஷீத்து பார்த்துக் கொண்டிருக்கையிற்றானே பத்துமாதஞ்சென்ற பிற்பாடு பகவான் அந்தர்த்தானமானுர். அப்பால் சகல நன்மைகளுக்கும் ஏதுவாகியும் அனுகூலமாகிய கிரகவுதயங்களுடனே கூடியுமிருக்கிற சுபலக்கினத்தில் பாண்டுமகாராஜாவுடைய வமிசபாலனுகிய புத்திரன் பாண்டுவே மறுபடி பிறந்தானென்று தோன்றும் படியாக ஜனித்தான். தருமராஜா-தவுமியர்-கிருபர்முதலா

கிய பிராமணர்களாலே அப்புத்திரனுக்குச் சாதக கருமத்தைச் செய்வித்து மங்களமாகிய ஆசீர்வாதத்தைச் செய்வித்தார்.

அந்தத்தருமராஜா இந்த பிரசோற்பத்தியாகிற புண்ணிய காலத்தில் பிராமணர்களுக்குச் சுவர்னங்களையும், பசுக்களையும் கிராமங்களையும் அசுவங்களையும், ரதங்களையும், அபரிமிதமாக வழங்கிப் பின்பு பிராமணர்களை விசுவாசத்துடனே வந்தனஞ் செய்கிற புகிஷ்டிரரைப்பார்த்து அவர்கள் மிகவுஞ் சந்தோஷத் துடனே ஓ கௌரவசிரேஷ்டனே ! இந்தப்பிள்ளை விஷ்ணுராத னென்று உலகத்தில் நாமதேயத்தைத் தரித்து மிகுதியான கீர்த் திசாலியாயும், பாகவதாளுக்குள்ளே யுயர்ந்த மஹானுபாவனு கவு மிருப்பான்சந்தேகமில்லையென்று சொல்லத் தருமநந்தனன் ஓ பிராமண சிரேஷ்டர்களே ! இந்தக்குமாரன் ராஜரிஷிகளாகி யும் புண்ணியமான நல்லகீர்த்திகளையுமுடைய மஹாத்மாக்களை யனுசரித்து சத்புருஷனென்கிற சொல்லுண்டாக அனுசரித்து நடப்பானோவென்று கேட்கப் பிராமணர்கள் இவன் இட்சுவா கைப்போல் பிரஜைகளைப் பரிபாலனஞ்செய்யவும் தசரதபுத்திர னை ஸ்ரீராமனைப்போலச் சத்தியசந்தனுகவும், உசீநரபுத்திர னை சிபிச்சக்கிரவர்த்திக்குச் சமானமான தாதுருத்துவத்தை யும், துஷ்டியந்தன் புத்திரனுகிய பரதனுக்கு நிகராக யக்கிய சீல ரான ஜோசியர்களுக்குக் கீர்த்திகரனுகவும், அர்ச்சுனனைப்போல வும் கார்த்தவீரியார்ச்சுனனைப் போலவும், வில்லாளிகளில் சிரே ஷ்டனுகவும், சிங்கத்தைப்போல் பராக்கிரமத்தையும், பூமியைப் போல் பொறுமையும், சதுர்முகனைப்போல் சாந்தியையும் பிர சாதத்தில் சிவனைப்போலவும். சமஸ்தமாகியசற்குணங்களுடைய மகத்துவத்தில் ஸ்ரீகிருஷ்ணனை யனுசரித்தும், நந்திதேவனைப் போல் அவதாரியுமுண்டாகியும், தயிரியத்தில் மகாபெலியைப் போலவும் ஸ்ரீ ஹரிபக்தியில் பிரகலாதனைப்போலவும், அநேகமா கிய அசுவமேதங்களை அனுஷ்டித்தும் கியானத்தில் முதிர்ந்தவர் கள் வயோவிருத்தர்கள் சீலவிருத்தர்கள் இவர்களுடைய சக வாசஞ்செய்தும், ஜனகனைப்போல் ராஜரிஷியாகியும், சாஸ்திர மரியாதை அதிக்கிரமித்து நடக்கிறசனங்களுக்குச் சிக்ஷகனுகவு ம், பூமிநிமித்தியமாகவும், தரும நிமித்தியமாகவும் கலிபுருஷனை நிக்கிரகஞ்செய்தும் பிரகாசித்திருப்பான். பின்பு பிராமணகுமா ரனுடையசாபத்தினல் தக்ஷகனுலேதான்மரணத்தை யடையப் போகிறவனுகி அந்தச் சாபத்தைக்கேட்டுச் சர்வசங்க பரித்தி

ய்ாகஞ்செய்து ஸ்ரீ ஹரியினுடைய பாதத்தையே நினைத்து ஆத்ம தத்வக்கியானத்தைக் கோரி வியாசகுமாரனான சுகப்பிர்மரிஷியிடத்திலிருந்து பிரமக்கியானத்தையடைந்து கங்கையில் பிரயோபவேசஞ்செய்து இந்தச் சரீரத்தைவிட்டு நிர்மயமாகிய ஹரிசரணத்தை யடையப்போகிறானென்று ஜாதகபாகத்தில் சமர்த்தராகிய பிராமணர்கள் ரகசியமாகச்சொல்லி அந்த தருமராஜாவிடத்திலிருந்து சகலவெகுமானங்களையும் வாங்கிக்கொண்டு அவரவர் வீட்டுக்குப்போனார்கள். இந்தப்புருஷன், தான் கெர்ப்பத்திலிருக்கும்போது பரமபுருஷனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவன் ராச்சியபரிபாலனஞ் செய்யும்போது பூமியில் காணுகிறசனங்களிடத்திற் பரிட்சித்தபடியினாலே பரிட்சித்தென்று நாமதேயம் விளங்கியது. இப்படிச்சுக்கிலபட்சத்தில் பிதுர்த்தேவதைகள் தங்களுடைய கலைகளாலே நாள்தோறும் விர்த்திபண்ணப்பட்ட சந்திரனைப்போலப் பரிட்சித்தும் தனக்குப் பிதுர்வர்க்கங்களான யுதிஷ்டிரர் முதலானவர்களால் விர்த்திசெய்யப்பட்டான், இப்பால் தருமராஜாவும் தம்முடைய தாயாதிகளுக்குத்தாம் செய்த துரோகத்தைப் பரிகரிக்கவும், நிக்கிரகத்தையும், கப்பம் வாங்குகிறதையும் விட்டுமற்ற சாத்விதமான வகையால் தனத்தையாசிக்கவேண்டியும் நினைத்ததை யவர்தம்பி மார்களறிந்து அச்சுதனிடத்தில் அந்தநிச்சயத்தைச் சொல்லி அந்த ஸ்ரீ ஹரியுடைய சாசனத்தினால். உத்தரதிக்கில் பூர்வத்திலிருந்த ராஜாக்கள் மிகவும்யாகஞ்செய்து மீந்துபோய் புதைத்திருந்த சேஷமான தனத்தை அபரிமிதமாகக் கொண்டுவந்து அந்த தனத்தினால் சகலசாமக்கிரியைகளும் கற்பித்துக்கொண்டு சந்தோஷத்துடனே யக்கியேசனாகிய ஸ்ரீ ஹரியை மூன்று அசுவமேதங்களால் ஆராதனஞ் செய்தார். தருமராஜாவினால் அழைப்பிக்கப்பட்ட கிருஷ்ணபகவான் அசுவமேதவிதானத்தை யறிந்தபிராமணமுகத்தால் யுதிஷ்டிரரை யாசிப்பித்துச் சுகுத்துக்களான பாண்டவாதிகளுக்குப் பிரியத்தைச் செய்விக்கவேண்டுமென்று சிறிதுமாசங்கள் பரியந்தம் அவ்விடத்திலிருந்து அப்பால் தருமராஜாவினாலேயும், துரோபதையினாலேயும். மற்றுமுண்டானபந்துக்களாலேயும், அனுபவிக்கப்பட்டு அர்ச்சுனனுடனேயும், யாதவர்களுடனேயும், துவாராவதி புரத்துக்கு எழுந்தருளினார்.

இப்படி சூதர் சவுனகாதிகளைப் பார்த்துப் பின்னையும் சொல்லுகிறார். ஓ சவுனகாதிகளே! விதுரர் யாத்திரை போனவிடத்

தில் மைத்திரேயரைக் கண்டு அவரால்பரமாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனுடைய நடக்கையை அறிந்து பின்னேயுந் தான்கேட்கவேண்டிய தத்வங்களு மவரிடத்திலிருந்து தெளிந்துகொண்டு அஸ்திஞபுரத்திற்கு வருவதை தருமராஜாகண்டு தம்பிகளுடனே எதிர்கொண்டார். அப்படியே திருதராஷ்டிரனும், யுயுச்சுவும், கிருபாசாரியரும், குந்திதேவியும், காந்தாரியும், துரோபதையும், சுபத்திராதேவியும், உத்தரையும், கிருபியும் மற்றுமுள்ள ராஜஸ்திரீகளும், கியாதிகளும், கியாதிபத்தினிகளுந் தங்கள் தங்கள் புத்திரர்களுடனே எதிர்கொண்டு சந்தோஷத்தையடைந்து ஆனந்த பாஷ்பங்களைப் பொழிந்தார்கள். தருமராஜா விதுரருக்கு ஆசனத்தைக் கொடுத்துப் பூசித்துப் போசனஞ்செய்வித்து சிரமந்தீர்த்த பின்பு சுகமாக விருந்த விதுரரைப் பார்த்து விசுவாசத்துடனேயும், வினயத்துடனேயும் தருமராஜா தம்முடைய பந்துஜனங்கள் கேட்டுக்கொண்டிருக்க ஒரு வார்த்தை சொல்லுகிறார், விதுரரே! தேவரீருடைய நிழலில் வளர்ந்த பலத்தினால் விஷங்கள் அக்கினிகள் முதலான ஆபத்துகளைத் தவிர்ந்து மாதாவுடனே நிருபத்திரவமாகி அந்தந்தக் காலங்களில் சஞ்சரித்தோம் தாங்கள் இந்தப் பூமண்டலத்திலிருக்கிற தீர்த்தங்களில் ஸ்நானாதிகளைச் செய்து முக்கியக்ஷேத்திரங்களைத் தரிசனம் பண்ணிக் கொண்டுவந்த சரித்திரங்களைச் சொல்லவேண்டுமென்று கேட்ட தருமராஜனுக்கு யாதவாளுடைய குலக்ஷயம் நீங்கலாய் சகல சங்கதிகளையும் பிரீதியாய்ச் சொல்லி அவரால் பூஜிக்கப்பட்டு (எமதருமராஜாவான சூரியகுமாரன் தனதுதொழிலைப் பிதாவானவர் நடத்தும்படியாயும், தான் ரிஷிசாபத்தினால் சூத்திரசன்மத்தையெடுத்திருக்கும்) விதுரனானவர் பாண்டவர்களுக்கிடைத்ததற்கரிதான காலகதியை யறிந்து திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓ ராஜாவே! இந்த வீட்டைவிட்டுச் சீக்கிரமாகப் புறப்படவேண்டும். மகத்தான பயமான துவந்தது. வாரும் ஓய்பிரபுவே! இந்தலோகத்தில் சனித்தவர்கள் எந்தக்காரணத்தினாலே விபத்தையடைந்து மிகவும் பிரியமாகிய பிராணங்களை விடுகிறார்களோ? அந்த மகிமைசாலியான காலசரீரக பரமாத்மா நமக்கெல்லாம் ஒருமிக்கவந்தார். இந்த சமயத்தில்தேகானுபந்தியான சனங்களையும் தனாதிகளையும் நாம் விடவேண்டுமென்கிறதில் எத்தனந்தேவையில்லை. பிதுர்சனங்களும் பிராதுவர்க்கங்களும்சிநேகிதர்களும்புத்திரர்களும்சங்கரிக்கப்பட்டார்கள்.

உமக்கு வயதுஞ் சென்றுபோச்சுது. உம்முடைய சரீரமும் நரை திரையால் மூடப்பட்டது. சத்துருகிரகத்திலும் வாசஞ்செய்கிறீர். பூமியில் சனித்த பிராணிகளுக்கு எவ்வளவுகாலஞ் சென்றாலும், எந்தவிபத்து வந்தாலும், பிழைக்கவேண்டுமென்றே இச்சையாகையால் தேவரீர் பீமன்கையினால் எறிந்த பிண்டத்தைப் பட்சித்துக்கொண்டிருக்கிறீர். எவர்களுக்குஅக்கினியையும் விஷத்தையுங் கற்பித்தீரோ எவர்களுடைய பாரியை யகாலத்தில் சபையில் அவமானஞ் செய்வித்தீரோ? க்ஷேத்திரத்தையும், தனத்தையும், அபகரித்துக்கொண்டு ராச்சியப் பிரஷ்டராக அலைவதாகவுஞ் செய்வித்தீரோ? அவர்களால் கொடுக்கப்பட்ட அன்னங்களைப் புசித்துக்கொண்டு பிராணனை எவ்வளவுகாலம் தரிப்பீர். இந்தத் தேகம் சீர்ண வஸ்திரங்களைப்போல் நரையில் சீர்ணித்து இதை விடக்கூடாதென்று நினைத்திருந்தாலும் நாசமடைகிறதில் சந்தேகமில்லை. ஆகையால் வைராக்கியம் பிறந்தவன் இந்தத் தேகத்தில் தனக்குப் பிரயோசனமில்லாத தசையைப் பார்த்து சமுசார பந்தத்தை இச்சியாமல்தான் போனவழிதெரியாமல் சரீரத்தைவிட்டானாகில் அவனே தீரனென்று சொல்லப்பட்டவன். யாதொருவன் மனோசயஞ் செய்துகொண்டு தன் புத்தியினாலேயாவது பிறராலேயாவது இந்தச் சமுசாரத்தில் அசூயைபிறந்த பின்பு தன்மனதில் ஸ்ரீஹரியை நினைத்துத் தன் வீட்டைவிட்டு வெளியில் புறப்பட்டு நடக்கிறானோ அவனே நரோத்தமன் இப்பால் தேவரீர் சுசனங்களி லொருவருக்குந்தெரியாமல் வடக்குத் திக்கிலே நடக்கவேண்டும்.

இனிமேல் காமமானது ஜனங்களுடைய சத்வாதி குணங்களையும், தைரிய சந்தோஷாதிகளையும், அபகரிக்கிறதில்சம்சயமில்லையென்று சொல்லத் திருதராட்டிரன் தன் தம்பியான விதுரரால் போதிக்கப்பட்டுத் தான் ஞானமாகிய நேத்திரத்தையுடைத்தானவனாகிச் சனங்களிடத்திலிருக்கிற உறுதியான சிநேகபாசங்களை யறுத்து விதுரர் காண்பித்த மார்க்கத்தில் நடந்தான். அவனுடனே சிலாக்கிய சீலத்தையுடைத்தாகியும், பதிவிரதையாகியுமிருக்கிற காந்தாரியுங்கூடவே நடந்தாள். இப்படி இந்த மூன்றுபேர்களும் சந்தோஷத்தைக் கொடுக்கிற இமவத்பர்வதத்தை யடைந்தார்கள். பின்பு தருமராஜா பிராதக்காலத்திற் சந்தியாவந்தனம் முதலான நித்தியகருமமும் ஆதித்தியோபாஸ்தானஞ் செய்து பிராமணர்களுக்குத் தானமுங்கொடுத்துத் திரிதராஷ்டி

ரனையும், விதுரனையும், காந்தாரியையும் வந்தனஞ்செய்ய வேண்டுமென்று கிரகத்தில்வந்து அவர்களைக் காணமல் மனோதுக்கத்துடனே அவிடத்திலிருந்த சஞ்சயனைக்கேட்கின்றார். வாராய் கவதக்கினி புத்திரனான சஞ்சயனே! விருத்தராகியும் நேத்திரங்களுமில்லாமலு மிருக்கிற நம்முடைய பிதாவான திரிதராஷ்டிரனும், புக்கத்தையுடைத்தாகிய நமக்கு மாதாவான காந்தரியும், சிறியதகப்பனும் உபகாரியுமாகிய விதுரரும் எவ்விடத்துக்குப் போனர்கள். பந்துக்களையிழந்த திரிதராஷ்டிரன் பத்தினியுடனே கூட என்னிடத்தில் தோஷத்தைச் சங்கித்து மிகவும் துக்கித்துக்கொண்டு கங்கையில்விழுந்தாரோ? எங்களுக்கு ஜனகபிதாவான பாண்டுமகாராஜா சொர்க்கத்தையடைந்த பின்பு எங்களுக்கு உபகாரியர்களாகி அந்த விசனம்தெரியாமல் ரட்சித்த பிதர்சகோதரராளான விதுரர் திருதராஷ்டிரரும் இவ்விடத்தை விட்டு எவ்விடத்துக்குப் போனர்களென்றுகேட்க தயவினலேயும் சிநேகத்தாலுண்டாகிய இரக்கத்தினலேயும், திருதராஷ்டிரனைவிட்டுப் பிரிந்ததினலேயும், வாடினசரீரத்தை யுடைத்தான சஞ்சயனும் தனக்கு ஸ்வாமியாகிய திரிதராட்டிரனைக் காணாதபடியினல் துக்கபீடிதனுகி பிரதியுத்தரஞ் சொல்லமாட்டாமலிருந்தான். பின்பு ஆலோசனைசெய்து தன்மதியால் மனதை வுறுதிசெய்துகொண்டு தனக்குப் பிரபுவான திரிதராஷ்டிரனுடைய பாதங்களைநினைத்து அஜாதசத்துருவைப்பார்த்து ஓ குலநந்தனனே! உங்கள் பிதாக்களுடைய நினைவையும் நானறியேன் பதிவிரதையான காந்தாரியுடைய இருதயத்தையும் அறியேன் அவர்கள் என்னைவஞ்சித்து எனக்குத்தெரியாமல்நடந்துவிட்டார்கள். அறிவுடையவரேயென்று ராஜாவுடனே சஞ்சயன்சொல்லும்போது வீணாநாதஞ்செய்துக்கொண்டு பகவானான நாரதர் தும்புருவுடனேகூட காணப்பட்டார். அவருக்குப் புருவம்சத்திற் பிறந்த தருமராஜா எதிர்கொண்டு அர்க்கியம்சமர்ப்பித்து அபிவாதஞ்செய்து ஆசனத்திலிருத்தி, ஓ பகவானே! எம்முடையபிதாக்கள் போனவிடமும் பிள்ளைகளையெல்லாம் நாங்கள் கொன்றபடியினல் ஆர்த்தியையடைந்த காந்தாரியும்போனவிடந்தெரியவில்லை. இந்தச் சோகசமுத்திரத்திலமிழ்ந்துபோகிற எங்களுக்கு மீகாமனைப்போல் தேவரீர்எழுந்தருளினீர். அதை யருளவேண்டுமென்று கேட்க நாரதர்சொல்லுகிறார். ஓ ராஜாவே! சகல பிரபஞ்சமும் ஈஷ்வராதித்தமென்று நினைத்தீராகில் ஒருவரையுங்குறித்து

நீர் சோகப்படவேண்டியதில்லை. குழந்தைகளுடைய இச்சையி னால் விளையாட்டுக்குத் தகுதியான மரப்பாவைகளுடைய கூட்டமும் நீக்கமும்போல் ஈஸ்வரனுடைய இச்சையினால் மனிதருக்கு சுஜனங்களுடனே செறிதலும் பிறிதலும் உண்டாயின. ஓ தர்ம புத்திரனே! இந்த லோகத்தை என்றைக்கும் அழிவில்லாததென்று நினைத்தாலும், இதற்கு அழியுந்தன்மை இயல்பென்று நிச்சயித்தாலும் இரண்டு மிலாதனவென்றுந் தெளிந்துகொண்டாலும், அவர்களைக்குறித்துஅக்கியானத்தால் துக்கப்படுகிறதேயல்லாமல் ஒரு காலத்திலும் அவர்கள் விஷயத்தில் விதனப் படத் தேவையில்லை.

ஆகையால் ஓ சிரேஷ்டரே! திக்கில்லாத தீனர்களானதிரித ராஷ்டிராதியர்கள் என்னைவிட்டு எப்படியிருக்கப் போகிறார்களென்று அக்கியானத்திலுண்டாகிய அவலத்தைப்பரித்தியாகம்பண்ணுங்காலத்தினாலேயும், பிராப்தகருமத்தினாலேயும், பிரகிருதி குணங்களினாலேயும், பரிணமித்த பஞ்சபூத விகாரமானது இந்த தேகம் சர்ப்பத்தினாலே சூழப்பட்ட புருஷன் மற்றொருவனை ரட்சிக்குமாப்போல் இதரப்பிராணிகளை எப்படி பாலனஞ்செய்யும் கைகளில்லாத ஜந்துக்கள் கைகளுண்டான பிராணிகளுக்கும் கால்களில்லாத சீவன்கள் நாலுகால்களுடனே கூடின வுயிர்களுக்கும் கொஞ்சம் பலமான சீவன்கள்மிஞ்சிய பலசாலிகளான பிராணிகளுக்கும் ஆகாரமாகவேயிருக்கின்றன. அப்படிப்பட்ட இந்த வுலகங்களைச் சரீரமாகப்படைத்த ஷட்குணபரிபூரணனான பரமாத்மா சுயம்பிரகாசனாகியும் சீவவர்க்கங்களுக்கு அந்தராத்மாவாகியும் இந்தச் சேதனாசேதனங்களுடனே கலந்து ஒன்றாகியும்தன் சங்கற்பத்தினால் வெகுவாகியும் உள்ளும்புறமும் பிரகாசித்திருக்கிறானென்றறியும். ஓமகாராஜாவே! சகல பூதங்களையும் கற்பித்த அந்தப் பகவான் இந்தபூமியில் தேவத்துரோகிகளான அசுரர்களைக் கருவறுக்கவேண்டிக் காலசரீரனாகி இப்போது அவதரித்து அவன் தேவதைகளுக்குச் செய்யவேண்டிய உபகாரங்களைச் செய்ததுபோக மிகுந்த கருமத்தைச்செய்கிறதற்குப் பார்த்துக்கொண்டிருக்கிறான் நீங்களும் இந்தப்பூமியில் செகதீஸ்வரன் எவ்வளவுகாலம் இருக்கிறானோ அவ்வளவுக்குள் உங்கள் கருமத்தையோசித்துக்கொள்ளுங்கள். திரிதராஷ்டிரனும் விதுரனும் காந்தாரியும் இமோத்கிரிக்குத் தென்பாகத்தில் ரிஷிகளுடைய ஆசிரமத்தைச் சேர்ந்தார்கள் யாதொரு ஆகாசகங்கையானது சப்த ரிஷி

களுடைய பிரீதியைச் சம்பாதிக்கவேண்டுமென்று ஏழுபிரிவாகப் பிரிந்து சப்த சுரோதாவென்று பெயரையுடைத்தாகி யிருக்கிறதோ அந்தக்கங்கையில் திரிதராஷ்டிரன் மூன்றுகாலத்திலும் ஸ்னானஞ்செய்து ஓமாதிகள்செய்து ஜலத்தை ஆகாரமாகச் செய்துக்கொண்டு சாந்தியுக்தனாகி பீஷணத்திரையத்தையும் விட்டு ஆசனஞ் செய்துகொண்டு சுவாசத்தையும் ஜபித்து ஷட்டிந்திரியங்களையும் விஷையங்களிற் செல்லாமல் நிவர்த்திசெய்துகொண்டு ஸ்ரீஹரியடைய கியானத்தினால் ஆணவம் மாயை காமியமுமாகிய மூன்றுமலங்களையும் தவிர்ந்து மனதைப் புத்தியுடனேகூட்டி அந்தக் கியானத்தைச் சீவாத்மாவுடனேசேர்த்து அந்தச்சீவனைச் சர்வாதாரமான பிர்ம்மத்தினிடத்தில் கடாகாசமாக மகா ஆகாசத்தில் கலக்குமாப்போற் கலந்து பிரகிருதிகுணங்களுடைய பரிணமமாகிய விகாரங்களைவிட்டு இந்திரியங்களையும் சித்தத்தையும் பரமாத்மாவிடத்தில் நிறுத்தி சருகு-ஜலம்-காற்று இவைகளைக் கண்டு சிலநாள் இவைகளையுண்டு சிலநாள் இவைகளையும் விட்டு கிளைகளைக் கழித்த மரத்தைப்போல் சலியாமலிருக்கிறான். சகலமான காரியங்களையும் விட்டிருக்கிற அவருக்கு நீர்விக்கினஞ்செய்யவேண்டாம் அந்தத் திரிதராஷ்டிரன் இன்று முதல் ஐந்தாநாளையில் தன்னுடைய சரீரத்தை விடப்போகிறான் ஓ ராஜனே! பர்ணகசாலையிலிருந்து தியானஞ்செய்கிற திரிதராஷ்டிரனுடைய தேகத்திலுண்டாகிற யோகாக்கினியுடனே கலந்த திரேதாக்கினியினாலே பர்ணகசாலையுடனே திரிதராஷ்டிரன் தேகமும் பஸ்பமாகப்போகிறது அதை அந்தபர்ணகசாலைக்கு வெளியில்இருந்து பார்த்துக்கொண்டிருக்கிற பதிவிரதையான காந்தாரியும் அந்த அக்கினியில் பிரவேசிக்கப்போகிறாள், விதுரரும் அந்த ஆச்சரியத்தைக் கண்ணால் பார்த்தபின்பு இவர்களுக்கு இந்தகதி கிடைத்தல்லவோ வென்று சந்தோஷத்துடனேயும் பிராதாவையும், பிராதுர்பத்தினியையும் இழந்தோமே யென்கிற சோகத்துடனே தீர்த்தயாத்திரை செய்யப்போகிறார். இந்தப்பிரகாரம் யுதிஷ்டருக்குத் தெளியச்சொல்லி நாரதர் சொர்க்கலோகத்துக்குப்போனார். யுதிஷ்டிரரும் நாரதருடைய வார்த்தையை நினைத்துக்கொண்டு சோகத்தைவிட்டார்.

நாரதர் தருமராஜர் சந்தேகந்தெளிவித்தது

முற்றிற்று.

நாரதரால்

# மநோரமை கலியாணம்.

முன் ஒருகாலத்தில் வேதாரண்யமென்னுந்தலத்தில் மறையவருள் தீர்க்கதமசு என்கிற பரம தார்மிகரான ஒரு முனிவரிருந்தார். அவருக்குக் கக்ஷிவான்என்கிற புத்திரனொருவனிருந்தான். அவனுக்கு உபநயனமான பிறகு ஜிதேந்திரியனாய்ப் பிரமசாரியாய், உதங்கரென்னுங் குருவிடத்தில் நாலுவேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், இதிகாசபுராணங்களையும், உபநிஷத்துகளையும், அறுபதுவருஷகாலம் அத்தியயனம் செய்து, குருதட்சணை கொடுத்துவிட்டுத் தன்வீட்டுக்குவரப் பிரியப்பட்டுக் குருவைப் பார்த்து! "சுவாமி, நான் வீட்டுக்குப்போக அநுமதிகொடுத்தருளவேண்டும்; என்னிடத்தில் கருணைகூர்ந்து என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்திக்க, உதங்கரும் அவனைப்பார்த்து, "உனக்கு வீட்டுக்குப்போக அனுமதிகொடுக்கிறேன். நீ விவாகஞ்செய்துகொள்ளுகிற உபாயமும்உனக்குச்சொல்லுகிறேன் கேள்:—இராமசேதுவாகிய கந்தமாதனத்துக்குப்போய், ஸர்வாபீஷ்டத்தையுங் கொடுக்கிறதாயும், சகலபாபங்களையும் கெடுக்கிறதாயும், புத்திமுத்திகளை யளிப்பதாயுமிருக்கிற அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்துகொண்டு, மூன்றுவருஷம் அங்கேயே விரதமநுஷ்டித்துக் கொண்டிரு. நாலாவது வருஷம் அந்தத் தீர்த்தத்திலிருந்து நாலுதந்தங்களையும், பெரிய சரீரத்தையும், சரத்கால மேகம்போல வெளுத்தநிறத்தையுமுடையஒருபெரிய யானையானது வெளியில்வரும், அப்பொழுது அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்துயானையின்மேலேறிக்கொண்டு சுவநயன் என்கிற அரசனுடைய பட்டணம்போய்ச்சேரு. நாலு தந்தங்களுள்ள யானையின்மேலிரண்டாவதிந்திரனைப்போல் வருகிறஉன்னைப்பார்த்து அந்த ராஜரிஷியானவர், தன் கன்னிகையின் விவாகத்தினிமித்தமாக அடைந்திருக்கிற துயரம்நீங்கிச் சந்தோஷமடைவார். இராஜபுத்திரியாகிய மனோரமை யென்பவள், நாலு தந்தங்களும், பெரிய சரீரமும், வெள்ளை நிறமுமுடைய யானையின்மேலேறிக்கொண்டு வருகிற புருஷனையே நான் மணம்புரிவேனென்று சபதஞ்செய்துகொண்டாள். அதுகேட்ட அரசன்மனம் நொந்திருக்கையில் ஒருநாள் அவ்விடத்துக்கு நாரதமுனிவர்

வந்தார். வந்தமுனிவரைக் கண்ட தார்மிகனென அரசன் சந்தோஷத்துடன் எதிர்கொண்டழைத்துவந்து, அர்க்கிய,பாத்திய,ஆசமனீய, ஆசனுதிகள்கொடுத்து, உபசரித்துப் பாதத்தில்வணங்கி, அவரிடத்தில் தன் குமாரத்தி செய்துகொண்டிருக்கும் சபதத்தைச்சொல்லி, 'இவ்விதமான யானை யிவ்வுலகத்திவில்லையே! தேவலோகத்திலல்லவோ உள்ளது. பேதையான என்குமாரத்தி நிறைவேற்றக்கூடாத பிரதிக்ஞை செய்துகொண்டாளே யென்று என் மனம்வருந்துகிறது. பெண்ணுக்கு விவாகஞ் செய்துவைபாத தகப்பனுக்கு எப்போதுந் துக்கமேயுண்டாகும்' என்றுகூறிய ராஜரிஷியைப்பார்த்து, நாரதமுனிவர், 'ஐயா! வருத்தப்படாதேயும்; பூலோகத்தில் கக்ஷீவான்என்ற பிரமனேத்தமனொருவன் இவ்விதமான வெள்ளை யானையின்மே லேறிக்கொண்டு உமக்கு மருமகனுக வருவான்.' என்றுசொல்லி யாகாச மார்க்கமாகப் போய்விட்டார். நாரதர் சொல்லியதைக்கேட்ட சுவநயன் என்ற அரசன், இவ்விதமான மாப்பிள்ளையின்வரவுக்கு இரவும் பகலும் எதிர்பார்த்திருக்கிறுன். ஆகையால்பாலதபசியாகிய கக்ஷிவானே நீ அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வதற்காகச் சீக்கிரம்போ. உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகும் சந்தேகமில்லை.' என்று சொன்னர். இவ்விதம் உதங்கரால் அனுக்கிரகிக்கப்பட்ட கக்ஷிவான் குருவினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, சீக்கிரமாக அகஸ்திய தீர்த்தம்வந்து ஸ்நானம்பண்ணி, ஒருநாள் க்ஷேத்திரோபவாசஞ்செய்து, மறுநாள் பாரணைபண்ணி இராத்திரியில் அங்கேயே தூங்கினர். இவ்விதம் நியமத்தோடு இருந்துவருகையில் ஒருநாள்குறைய மூன்றுவருஷமாய்விட்டது. மூன்றும்வருஷக் கடைசிநாளில் சாயந்திரம் சந்தியாகிரியை முடித்துக்கொண்டு, அதன் கரையில்படுத்து நித்திரைசெய்யுங்காலத்தில், விடிய ஜாமத்துக்கு பிரளயகாலத்தில் அலைவீசிக் கொந்தளிக்கும் சமுத்திரகோஷத்துக்கு ஒப்பான ஒரு பேரொலிகேட்டுக் கண்விழித்துப்பார்த்தார். அப்பொழுது மதுராபதியான சுவநயன் என்கிற அரசன் யானை, சிங்கம்,வராகம்,மகிஷம், குரு என்கிற மான் முதலிய மிருகங்களை அம்பினற்கொன்று வேட்டையாடிக்களைத்து, நால்வகைச்சேனைகள், மந்திரி முதலானவர்களோடு, அகஸ்திய தீர்த்தக்கரையில்வந்து களையாறிக்கொண்டிருந்தான். விடிந்து வெளிச்சமானவுடனே கட்சீவான் என்கிற ரிஷியானவர் அகஸ்தியதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனுதிகளை

முடித்துக்கொண்டு அதன் கரையில் ஜபம்பண்ணிக்கொண்டிருந்தார், அந்தச்சமயத்தில் கைலாசமலை இந்த உருக்கொண்டு வந்ததோவென்று நினைக்கும்படியாக நாலு தந்தங்களுடைய ஒருபெரிய வெள்ளையானையானது அந்தத் தீர்த்தத்தினின்றும் புறப்பட்டுக் கக்ஷீவான்கிட்டவந்து நின்றது. உதங்கர் சொன்ன லட்சணங்களோடு கூடியிருக்கிற அந்த யானையைக்கண்ட கக்ஷீவான், அதன்மேலேறும்படியாக ஸ்நானஞ்செய்து அந்தத் தீர்த்தத்தை நமஸ்கரித்துத் துதித்து, யானையின்மேலேறிச் சுவநயன் பட்டணத்தை நோக்கிப் போகப்புறப்படுகையில், அந்தச் சுவநயனென்கிற ராஜாவும், இவன்தான் கக்ஷீவானாக இருக்கவேண்டுமென்று கருதிச் சந்தோஷமடைந்து, அவன்கிட்டவந்து, "ஐயா, இந்த யானையின் மேலேறிக்கொண்டு எவ்விடம் போகிறீர்?" என்று கேட்டான். அதுகேட்ட கக்ஷீவான், ஐயா! என் தகப்பனார் தீர்க்கதமசு முனிவர்; என்பேர் கக்ஷீவான் என்று சொல்வார்கள்; நான் சுவநயனென்கிற அரசன் பட்டணத்துக்குப்போய், மனோரமையென்கிற அவன் பெண்ணை மணம்புரிந்து, அவனுடைய பிரதிக்ஞையைப் பூர்த்திசெய்விக்கப்போகிறேன்' என்றார் அமிர்தவருஷம்போன்ற அந்த வசனத்தைக்கேட்டு, ஆனந்தத்தினாற் கண்மலர்ந்து, அவனைப்பார்த்து, 'ஐயா! கக்ஷீவானே' நீர் யாருடைய குமாரத்தி மனோரமையை மணம்புரியப் போகின்றீரோ அந்தச் சுவநயனென்கிற அரசன் நானே. நானிப்பொழுது கிருதார்த்தனானேன். வாரீர், பாலதாபசாரே. நீர்என்பெண்ணைவிவாகம்புரிந்து, அவளோடுகூடிக் கிரகஸ்த தர்மங்களைச்செய்து வாழ்ந்துவருவீராக' என்று சொன்னான். அதுகேட்ட கக்ஷீவான் அரசனைப்பார்த்து ஐயா! என் தந்தை வேதாரணியத்தில் தபசு பண்ணிக்கொண்டிருக்கிறார். அவருக்கும் ஒரு பிராமணனையனுப்பிவையும் 'என்றுசொல்ல' அரசனப்படியே தன் புரோகிதரான சுதரிசனன் என்கிற பிராமணனை ஏராளமானசேனைகளோடு வேதாரணியத்துக்கு அனுப்பினான். அந்தப் புரோகிதனும் வேதாரணியம்போய், அங்கே ஓராச்சிரமத்தில் வேதாரணியேசுவரரை நோக்கித் தவம்புரியும் தீர்க்கதமசு என்ற முனிவரைக்கண்டு, நமஸ்காரம்செய்து, அவருக்குச் சந்தோஷ முண்டாகும்படியாக 'ஐயா! முனிவரே, க்ஷேமமா? தபசு விருத்தியடைந்து வருகிறதா? ஆச்சிரமத்திலெல்லாரும் சௌக்கியமா? தர்மம் சரிவர நடந்துவருகிறதா' என்று க்ஷேமம்விசாரிக்க, தீர்க்கதமசும்

அர்க்கியபாத்தியாதிகளாலுபசரித்து ஐயா பிராமணோத்தமா! வேதாரணியேசுவரருடைய கிருபையினால் எல்லாரும் சௌக்கியம். அசௌக்கியமே கிடையாது. நீர் சௌக்கியமா? சுகமாக வந்தீரோ? நீர் வேதவித்துக்களுக்கெல்லாம் சிரேஷ்டராகிய சுவநயன் என்பவனுடைய புரோகிதர் அல்லவா? அவனைவிட்டுச் சேனைகளோடு என் ஆசிரமத்துக்கு வந்தகாரணமென்ன?' என்று கேட்டார்.

சுதரிசனரும், தேஜசால் விளங்குகிற அம்முனிவரைப் பார்த்து, 'ஐயா! தங்கள் கிருபையினால் எல்லாரும் சௌக்கியந்தான். சுவநயராஜன் சாஷ்டாங்கமாகத் தங்களை நமஸ்கரித்து, வணக்கத்தோடு என் மூலமாகத் தெரிவிப்பது: கக்ஷீவான் என்னும் தமது குமாரன் கந்தமாதன பர்வதத்தில் அகஸ்தியதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருக்கிறார்; அவருடைய ரூபத்தையும், தர்மாசாரத்தையும், உத்தமகுலப் பிறப்பையும் யானறிந்து, என் பெண்ணாகிய மனோரமையை அவருக்குக்கொடுக்க இச்சிக்கிறேன்; வேட்டையாடவந்த நான்உமது புத்திரனிடத்திலிருக்கிறேன். தமது குமாரனும் தந்தை அனுக்ஞையில்லாமல் விவாகஞ் செய்யமாட்டேனென்று சொல்லுகிறார். ஆகையால் தாங்கள் தயவுசெய்து என் குமாரத்தியை உமது குமாரன் மணம் புரியும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டும். இந்தக் காரியத்தையுத்தேசித்தே என் புரோகிதரைத் தங்களிடம் அனுப்பியிருக்கிறேன்' என்று சொல்லி யென்னைத் தங்களிடத்துக்கு அனுப்பினார். என்றுசொல்லி முடித்தவுடனே, தீர்க்கதமசு, 'ஐயா, சுதரிசனரே! அப்படியே யாகட்டும், சுவநயனுக்கு எது இஷ்டமோ அது எனக்கும் இஷ்டந்தான். நானுங் கந்தமாதன பர்வதத்துக்குவருகிறேன்' என்றுசொல்லி, வேதாரணியேசுவரரைப் பக்தியுடன் நமஸ்கரித்துச் சுதரிசனரோடுகூடச் சேதுவைநோக்கிப் புறப்பட்டு, ஆறுநாளில் கந்தமாதனம் வந்து, அகஸ்திய தீர்த்தக்கரையிலிருக்கிற தம்புத்திரனைக்கண்டார். புத்திரனும் தந்தையைக்கண்டு, தன் பெயரைச்சொல்லி நமஸ்காரம் பண்ண, தகப்பன் பிள்ளையைத் தன் மடியிலிருத்திக்கொண்டு, உச்சிமோந்து, அன்போடு கட்டித்தழுவிப் புளகாங்கிதராய் க்ஷேமம்விசாரித்து, 'அப்பா, கக்ஷீவானே! எல்லாவேதத்தையும் அத்தியயனஞ்செய்தாயா? இவைகளையெல்லா மெனக்குச்சொல்லு' என்று வினவ, கக்ஷீவான் தந்தையைப்பார்த்துச் சொல்லுகிறான்; நான் படித்

துக் குருதக்ஷிணைகொடுத்த பிறகு என்னுடைய குருவாகிய உதங்கர் கட்டளையின்படி சுவநயராஜன் புத்திரியை விவாகஞ் செய்யும்பொருட்டு இந்த அகஸ்தியதீர்த்தம்வந்து, அவரது உபதேசப்படி மூன்றுவருஷம் நடந்துகொண்டுவந்தேன். மூன்றும்வருஷக் கடைசியில், சுவநயன் யதிரிச்சையாகவந்து உனக்கு பெண்ணைத்தருகிறேனென்றுசொன்னான். நான் அவசியம் என் தந்தைக்குத் தெரிவிக்கவேண்டுமென்றதினால் தங்களிடமொருபிராமணனையனுப்பிச் சமாச்சாரந் தெரிவித்தார்' என்றுசொல்லிமுடித்தான். இதன்மத்தியில் சுதரிசனன்என்ற புரோகிதன் சுவநய ராஜனிடம்போய்த் தீர்க்கதமசு வந்திருக்கிறரென்று தெரிவித்தான். அரசன் அதைக்கேட்டுத் தன் புத்திரனோடு பேசிக்கொண்டிருக்கிற தீர்க்கதமசு முனிவரைக்கண்டு, தேவேந்திரன் பிரமாவை வணங்குவதுபோல உலகத்துக் கெல்லாம் க்ஷேமத்தைச் செய்யும்படியான அவர் திருவடிகளில் நமஸ்கரிக்கத் தீர்க்கதமசு அவனைத் தூக்கியெடுத்து ஆசீர்வாதஞ்செய்தார். இச்சமயத்தில் உதங்கமுனிவர் இராமசேதுவில் தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்யவிரும்பி அநேக சிஷர்களோடும் இலட்சக்கணக்கான முனிவர்களோடும் அகஸ்தியதீர்த்தத்துக்கு வரக்கண்ட கக்ஷீவான் எதிர்கொண்டுபோய்த் தன் குரு பாதாரவிந்தத்தில் வணங்க, அவரும் அவனுக்கு ஆசீர்வாதம்பண்ணினர். தீர்க்கதமசு முனிவர் உதங்கரைக்கண்டு. ஒருவருக்கொருவர் குசலம் வினவியபின், லோகபிரசித்தர்களாக இருவரும் புண்ணியகதைகளைப் பேசிக்கொண்டிருக்கையில், சுவநய ராஜன் உதங்கரைவணங்கி யவரது ஆசீர்வாதம் பெற்றபின்பு சந்தோஷத்தோடு தீர்க்கதமசைப்பார்த்து, சுவாமி! கல்யாணத்துக்கு எத்தனஞ்செய்யலாமே, என்று சொல்ல முனிவரும், அப்படியேயாகட்டும்; நாளையதினம் நல்ல முகூர்த்தத்தில் இந்தக் கந்தமானபருவதத்திலேயே விவாகத்தை நிறைவேற்றுவோம்; ஆகையால் உன் பெண்ணைக் கன்னியாமாடத்தினின்று வரவழை, என்றுசொல்ல, அரசனும் தன்கூடாரத்துக்குவந்து விருத்தர்களான அநேகம்அந்தப்புரக்காவலாளிகளையனுப்ப, அவர்களும் வாயுவேகம் மனோவேகமுள்ள குதிரைமேலேறிக்கொண்டுபோய் அந்தப்புரத்துக்குச் சமாசார மெல்லாந் தெரிவித்து, அந்தப்புர ஸ்திரீகளையும், கன்னிகையையும்அழைத்துக்கொண்டு கந்தமாதனம் வந்துசேர்ந்தார்கள். மறுநாள் சுபமுகூர்த்தத்தில் கோதானமுதலான சடங்குகளை விதிப்படி செய்த

பின், கக்ஷீவான் நாலுகொம்புகளையும் பெரிய காத்திரத்தையும் உடைய வெள்ளையானையின்மேல்இரண்டாவது தேவேந்திரனைப் போல ஏறிக்கொண்டு மனோரமையின் பிரதிக்ஞையை நிறைவேற்றி வைக்கும்படியாக, மங்களாசாசனஞ் செய்துகொண்டுவருகிற அனேகம் பிராமணர்களோடும், தன் பிதா குருமுதலானவர்களோடும், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற அரசனுடைய கூடாரத்துக்குச் சந்தோஷத்தோடு வருவதைக்கண்டு விவாககோலங்கொண்டிருக்கிற மனோரமையானவள் நமது பிரதிக்ஞையின்றுதான்நிறைவேறிற்று என்று களித்திருந்தாள். அப்போது இராஜன் தன் கூடாரவர்சலில் உதங்கர் முதலானவர்களோடுவந்த கக்ஷீவானைப் புரோகிதரோடும் எதிர்கொண்டுவந்தான். அப்பொழுது அந்தப்புரத் தாதிகளெல்லாம் ஆலாத்திசுற்றினார்கள். பிறகு பிராமணர்களோடுகூட இலட்சமி விலாசம்பொருந்திய கக்ஷீவான்கூடாரத்திற் பிரவேசிக்க, அரசன் மிகுந்த வணக்கத்தோடு தீர்க்கதமசு, உதங்கர், இருவர்க்கும் அர்க்கியபாத்திய முதலியகொடுத்து உபசரித்தான். பிறகு வஸ்திர சாமர தோரணாதிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற கல்யாணமண்டபத்தில் மாப்பிள்ளையான கக்ஷீவான், தீர்க்கதமசு, உதங்கர் முதலானவர்களும் மற்றுமுள்ளரிஷிகளும் உட்கார்ந்தார்கள். அரசனும் மந்திரி புரோகிதர்களோடுஉட்கார்ந்தான். அப்பொழுது அழகிய கூந்தலையும், கொவ்வைப் பழம்போன்ற இதழையும், பருத்து உயர்ந்த தனபாரங்களையும், சர்வாங்க லட்சணங்களையுமுடைய மனோரமையை திவ்யவஸ்திராபரணாதிகளால்அலங்காரஞ்செய்து ஜனங்கள் நிறைந்த கல்யாணமண்டபத்துக்கு அழைத்துவந்தார்கள். மனோரமை தன் கையிலிருக்கிற தாமரை மலர்மாலையைக் கக்ஷீவான் கழுத்திலிட, உதங்கமுனிவர் வதூவரர் இருவரையும் திருமணமேடையி லுட்காரச்செய்து, அக்கினிவளர்த்து லாஜஹோமம்முதலான அக்கினிகாரியங்களையுமுடித்துப், பாணிகிரகணஞ்செய்வித்து விவாககிரியைகளை நிறைவேற்றினர். அப்பொழுதுஅங்கிருந்த பிராமணர்களெல்லாம் வதூவரர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள். பிறகு அரசன் தன் சம்பந்திகளுக்கும், தன் பந்துஜனங்களுக்கும். மற்றுமுள்ள அதிதிகளுக்கும் ஷட்ரசோபேதமாய் விருந்து செய்வித்துத் தாம்பூலாதிகள் கொடுத்து மரியாதைசெய்தான். பிறகு உதங்கர், தீர்க்கதமசு முனிவரிடம் செலவுபெற்றுக்கொண்டு தமதாசிரமம்போனர். மற்றைய பிரா

மணர்களெல்லாரும் தத்தமிடங்களுக்குப்போனுர்கள். வெள்ளை யானையும் அகஸ்தியதீர்த்தத்தில் மறைந்துபோயிற்று தீர்க்கதம சும் தன் குமாரன் மருமகளோடு இஷ்டப்பிரதமான அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிச் சர்வலோகப் பிரசித்தமான அந் தத் தீர்த்தத்தைப்புகழ்ந்து, வேதாரணியத்தி லிருக்கும் தமது புண்ணியாசிரமத்துக்குப்போக எண்ணங்கொண்டு, அரசனிடந் தெரிவிக்க, அரசனும் சந்தோஷத்தோடுகூடத் தன் குமாரத் திக்கு ஆயிரம்பசுக்கள், ஆயிரம்தாதிமார்கள், ஐந்நூறு கிராமங் கள், இலட்சம்பொன், திவ்யமான பதினுயிரம்வஸ்திரங்கள் நூறு நகைப்பெட்டிகள், ஆயிரம் முத்துமாலைகள், ரத்நமாலை முதலிய ஆபரணங்கள் இவைகளைச் சீதனமாகக்கொடுக்க, தீர்க்கதமசும் அந்தச் சீதனங்களோடுவதூவரர்களை அழைத்துக்கொண்டு வே தாரணியேசுவரரைசேவித்துக்கொண்டு சுகமாகவாழ்ந்திருந்தார்.

நாரதரால் மனோரமைகலியாணம்

முற்றிற்று.

---

## நாரதர் ஸ்ரீகண்ணபிரானுக்கு

# பாபவிமோசனம் சொன்னது.

கிருஷ்ணவதார பிரதமத்திலே கம்சவம்சத்தின் ஜென்மாந் திர கர்மவசப்படி கண்ணபிரான் திருக்கோலமாய் வந்தருளிய ஸ்ரீமந்நாராயணபிர்மத்தால் கம்சசம்ஹாரம்செய்து ஜயம்பெற்றி ருந்தபோது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஒருநாள் நாரதாதி முனீசு வரர்கள் பார்க்கவர அம்முனிவர்களைக் கண்ணன்பார்த்து,பிராம் மனோத்தமர்களே! மஹாபாபியான என்மாமனைக் கொன்றுவிட் டேன், மாமாவைக்கொல்வது தோஷமென்று சாஸ்திரந்தெரிந்த பெரியோர்கள் சொல்லுகிறுர்கள்; ஆகையால் என் பாபநிவர்த் திக்காக நீங்கள் பிராயச்சித்தம் விதிக்கவேண்டும் என்றுர். நாரத மஹாமுனிவர் பக்திவிநயத்தோடுகூட மதுரமாகச் சொல்லுகி றுர்.—சுவாமி! நித்திய சுத்தராயும், முக்தராயும், சகலமுமறிந் தவராயும், சச்சிதானந்த சொரூபராயும், பரமாத்மாவும் ஸநாத னராயுமிருக்கிற உமக்குப் புண்ணியபாபம் கிடையாது; லோக சிக்ஷார்த்தம் உமக்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டு

மென்கிற விதியில்லையானாலும், உலகத்தாருக்கு உபதேசிக்கும் பொருட்டாக நீர் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டியதாகையால் மஹாபுண்ணியமான கந்தமாதனபருவதத்தில் முன்காலத்தில் ஸ்ரீராமர் இராமநாதனென்கிற ஒருசிவலிங்கத்தை ஸ்தாபித்து, அதற்குஅபிஷேகம்பண்ணும் நிமித்தம் தமது வில்லின் நுனியால் பூமியைப்பிளந்து உண்டாக்கின கோடிதீர்த்த மென்கிற ஒருதீர்த்தம் இருக்கிறது. உம்முடைய பூர்வாவதார ஸ்ரீராமர் தாம்ஸ்வயமாகவே பிரம்மஹத்தி நிவர்த்திக்காக உண்டாக்கின தீர்த்தமாகையால் நீர் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் மாதுலனைக் கொன்றபாபம் உம்மைவிட்டு உடனே விலகிப்போம். இந்தக் கோடிதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால்பிரம்மஹத்தியாதி பாபங்கள்நீங்கி,ஆயுராரோக்கியம்பெற்றுச் சொர்க்காதிபோகங்களையடைந்து மோட்ச சாம்பிராஜ்ஜியத்தையும் கைக்கொள்வார்கள். என்று நாரதர் சொன்ன வசனத்தைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணர் முனிவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுச் சேதுயாத்திரையை உத்தேசித்துப் புறப்பட்டுக் கொஞ்சநாள்களில் கோடிதீர்த்தம்வந்து, அதில் சங்கற்ப பூர்வமாக ஸ்நானம்பண்ணி அநேக தானங்களைக்கொடுத்து மாதுல வதத்தாலுண்டான தோஷத்தினின்றும் விடுபட்டு, ஸ்ரீராமநாதரையும் சேவித்துத் தமது மதுராபுரி பட்டணம்வந்து சேர்ந்தார்.

ஸ்ரீகண்ணபிரானுக்கு பாபவிமோசனம் சொன்னது
முற்றிற்று.

---

### நாரதர்: உருக்குமாங்கதனுக்கு

## குட்டரோகந் தீர்த்தது.

நிலமகள் மதிக்கக் கலைமகள் துதிக்க, திருமகள்வசிக்க எல்லாவளமும் நிறைந்து செழித்தோங்கிய விதப்பதேசத் ததிபதியான உருக்குமாங்கத மகாராஜனென்பவர். களங்கமில்லாப் பூரணச் சந்திரன் பிரகாசிப்பதுபோல் தனது திருநாமஸ்வரணையானது பூலோக கயிலாசபளவும் பிரகாசிக்கும்பொருட்டு மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல்காத்து ஏக சக்கராதிபதியாய் சிம்மாசனத்தில் விளங்கி சாட்சாத் சிவபெருமான் திருவடிகளில்

மிக்க பேரன்புடையவனாகிச் சதாகாலமும் அவரைப் பூசைசெய்துகொண்டு சத்துருக்களையெல்லாஞ் செயஞ்செய்து, இலக்குமி-சரஸ்வதி-பூமிதேவி என்னு மிவர்கள் களிக்கும்படியாகத் தன்னாணையைப் பலதிக்குகளினுஞ்செலுத்திப் பழமையாயுள்ள வேதப்பிராமணர்கள் உயர்ந்த ராசர்கள் நீதியையுடைய அநேக நிருபர்கள் சகல கலைக்கியானங்களினும் வல்லவர்கள் ஆகிய இவர்களெல்லாம் இருமருங்கினுஞ் சூழ்ந்திருக்கப் பூமியையாளுகின்ற சிற்றரசர்களெல்லாந் திறைகொணர்ந்து நிற்க, அதிதிகள் முனிவர்கள் தபோதனர்கள் பெரியோர்கள் முதலாயினோர் ஆசிர்வதிக்க மந்திரிமார்-புரோகிதர்-சேனாதிபர்-தூதர்-சாரணர் முதலான துணைவர்கள் பக்கங்களில்நெருங்க, குற்றமற்ற சேனைகள் கூட்டங்கூட்டமாய் வளைதடி-வாள்-உடைவாள்முதலிய படைகளைக்கொண்டு தலைவாயிலுலாவ, சிலமகளிர் வெள்ளிய சாமரைகள் வீச, சிலமகளிர் கட்டியங்கூற இத்தன்மையாகிய வலங்காரத்தோடு சிறந்த சிங்காதனத்தில் வீற்றிருந்து செங்கோல்முறை வழுவாமல் சகல சீவராசிகட்கும் இன்பமுண்டாகத்தக்கதாய் இராச்சிய பரிபாலனஞ்செய்து வருகின்றகாலத்தில் சில ஜனங்கள் அவ்வுருக்குமாங்கதராசன் சமுகத்தில்வந்து பணிந்து ஓ சர்வஜனோபகாரா! சக்கிரேஸ்வரரே! காட்டுமிருகங்கள் கூட்டமாய்வந்து நாட்டுப்பயிர்களை வீட்டி யழிக்கின்றதென்று முறையிட்டார்கள். அதை யவ்வரசன்கேட்டு மனதிரங்கி வேட்டையாடி வருவோமென் றெழுந்து, பலபடைக் கூட்டங்களையும் வலைஞர்களையு மழைத்துக்கொண்டு சகல பரிசனங்களோடுங் காட்டிற் சென்று சிங்கம் புலி யானை கரடி முதலிய மிருகங்களைக்கொன்று, பின்னர்த்தான் தனியேசென்று, தனக்கெதிர்ப்பட்டு வருகின்றசெந்நாய் கலைமான் புள்ளிமான் முதலியவைகளை அதஞ்செய்து வருகையில் அதிகதாகங்கொண்டவனாகி இளைப்புற்று, ஓர் கானகத்துள் நுழைந்து அங்கு கவிமகாமுனிவர் வாசஞ்செய்கின்ற ஆச்சிரமத்தையடைந்து அவ்விடத்தில் அவர் பத்தினியாகிய முகுந்தை யென்பவள் உல்லாசமாய்த் தனியே உலாவல் செய்திருக்கக் கண்டு அவளருகிற்சென்று அன்னையே! அடியேன் தாகநீங்குமாறு நீர்தரல் வேண்டுமென்று மிகுந்தவணக்கத்தோடும் பிரார்த்தித்தான். இவ்வாறுபிரார்த்தித்த அரசனை முகுந்தைகண்டவுடன் அவன்பேரழகினுக் காவலுற்று அதிக விரகதாபங்கொண்டு மிக்க விளைப்போடு நீர்தேடிவந்த மெலிவையுங் கருதாது தன்

மனதி லுண்டான விரகத்தினை யவ்வரசனுக்கு அறிவிப்பவளாகி இதனைச் சொல்லுவதாயினள்.

சர்வாலங்கார சோபிதனாகிய மகாராசனே! உன்னைப்போலழகின் மிகுத்தவர்களைத் தேவர் கூட்டத்திலுங்கண்டதில்லை. உன்திருமேனியிற் சகல லட்சணங்களு நிறைந்திருக்கின்றமையால் உன்னைக்கண்ட பாவையர்களில் யாவர் மோகத்தாற்சோர்வுறார்கள். ஓர்காரிகையானவள் மற்றோரெவ்வன புருடனைக்கண்டுஆவல் கொள்ளுவாளாயின் உடனே யவனோடு கூடினாலல்லது அவள் விரகமொழியுமோ? முன்னர்யாவரையும் வதைக்கும்படி ஆலகாலவிடத்தைத் தன்னிடத் துண்டாகிய திருப்பாற்கடலானது மீட்டு நல்ல வமுதத்தை யீன்று யாவரையும் பிழைப்பித்ததுபோல உனது பேரழகினாலுண்டாகிய விரகத்தீயானது எனது தனங்கள் குழையும்படி உன்றோள்களைக்கூடிச் சுகித்தாலல்லது தீர்வதில்லையென்று சொல்லித் தனது துகில்சோரவும், கூந்தல்விழவும், முத்தாரங்கள்பொறியவும், கைவளைகள் நழுவவுமான அலங்கோலத்தோடு அவ்வரசனுக்கெதிரில்நின்றாள். இவ்வாறு இலக்குமியுங்கண்டு மயங்கத்தக்க மிக்க அழகினைவாய்ந்த அம்முகுந்தையானவள் தானே வலாற்காரமாய்க் கூடவேண்டுமென்றிரந்தும், உருக்குமாங்கதராஜன் மனங்கலங்காதவனாகி அம்முகுந்தையைநோக்கித் தாயே! நீ அந்தணர்குலத்திற் பிறந்து ஓர் அந்தவருக்கு வாழ்க்கைப்பட்டவள். யானோ அரசகுலத்திற் பிறந்து இவ்வுலகத்தை யரசாட்சி செய்திருப்பவன். அன்றியும் யான் விநாயகமூர்த்தியைத்தொழுகின்ற அன்பனாகும். என்மனதெக்காலத்தும் பரஸ்திரீகமனஞ் செய்வதில்லை. பெண்களாயினோர் தங்கடங்கள் கணவரோடு சற்றுநேரங்கூடியிருக்கினும்அது வே மேலான பெருஞ்சுகத்தைக்கொடுக்கும். அவ்வாறின்றி அந்நியபுருடரோடு கூடுவராயின் அஃது உடனே அச்சத்தை யுண்டாக்குவதினால் அவர்கட்கென்ன சுகமுண்டாகும். மேலும் இம்மையிற் சொல்லுக்கடங்காத் துயரங்களைப்பெற்று மறுமையில் அளவற்ற நரகவேதனையிலழுந்தி வருந்துவார்கள்.

இறந்தபின்பல்லவோ நரகவேதனை காணப்போகின்றோமெனக் கருதுவாயின் நீகொண்ட நெறிதப்பியகாரியத்தால்இப்போதே எங்கும் அவதூறுச்சொற்களுண்டாவதன்றி, உன் கணவனுக்குரிய பெருமிதத்திற்குங் குறைவுவருமாதலால் இனி யுன்

மனதையடக்கி உனக்குண்டாயிருக்கின்ற விரகதாபத்தை யொழித்து விடுவையென்று பரிவாகச்சொல்லினன். அவைகளனைத்தையும் அம்முகுந்தைகேட்டு இவ்வரசன் மனமானது எவ்வளவேனுங் கலங்குதலில்லாமற் கல்லுக்கொப்பாக விருப்பதன்றி, உறுதியான சொற்களையும் பேசுகின்றானென்று மனம்வருந்திச் சரேலென்று அவ்வரசனது முன்கையை நெருங்கிப்பிடித்து அன்பனே! ஸ்திரீகளாயினோர்க்கு இக் கிரேதாயுகத்திலுந் திரேதாயுகத்திலுந் தாங்களே வலுவிற்சென்று புருடர்களைக் கூடுவதாய் சுதந்தரத்தைப் பிரமதேவனளித்திருக்கின்றானதலால் ஓர் கணவனைப் பெற்றிருக்கின்ற மங்கையர் மற்றொருகணவனையுங் கூடவேண்டுமென்று உடன்படுவராயின், அவர்கட்கென்ன பாவமிருக்கின்றது. மேற்கூறிய யுகதர்மத்திற்கு விலக்காக நீயே வலுவிலென்னைக்கூட வருமாயின் இவ்விதபழி பாதகங்களை நினைக்கவேண்டுவதேயன்றிக் கிரமப்படி யானே யுன்னைக் கூடவேண்டுமென்றிச்சையுற்றால் அதனாலுனக்கென்ன பழி பாதகங்கள் நேரும். இனிமேலுந் தடைசொல்லி யென்னைக்கூடாமற் போவையாயின், நீறாகும்படியுன்னை யெரித்துவிடுவேன் அல்லது உன்னழகனைத்துங் குலைந்து நகரத்தைவிட்டுக் காட்டிற்றிரியும்படிச் சபித்துவிடுவேன். இதனைத்தீர்க்காலோசனை செய்யக்கடவையென்று சொல்லி, அவ்வரசன் மேலேவிழுந்து மார்பைத்தழுவினாள். உடனே அவ்வரசன் பயந்து, இம்மாதின்செயல் நன்று நன்றென்று நகைத்துத் தனது புயங்களால் அவளை நிலத்தில்விழவுதறி துன்மார்க்கியே! பெருகி வருகின்ற வெள்ளமும் ஓரணைக்கடங்கி நிற்கும் அக்கினி சர்ப்பமுதலிய தீயசெந்துக்களும் ஓர்தடைக்கஞ்சியிருக்கும். அறிவில்லார்க்குண்டான காமமானது அவருளடங்காது. பள்ளங்கண்டு பாய்கின்ற புனலுக்கொப்பாமென்று சான்றோர்கள் சொல்லுவர். அதுபோலவே நீயும் இத்துர்க்கியத்திற்கு அஞ்சாது உடன்பட்டனை. உன்செய்கை இத்தன்மையதென்று முன்னறிந்திருப்பேனாயின் யானிங்கொரு போதும் வரத்துணியேன் நீமகா தவசிரேட்டருடைய பத்தினியென்று என்தாகந்தணியுமாறு தண்ணீர்கேட்ட வெனக்கு நரகத்தில் வீழ்த்த வல்ல மகாபாதகமான காரியங்களை நடாத்தினை. உன்னை யிப்போதே யெனது வாளுக்கிரையாக்கிவிடுவேன். ஆனால் இருடி பத்தினியென்றஞ்சி விட்டுவிட்டேனென்றுசொல்லி, அவ்விடத்தைவிட்டுத் திரும்பினான். பின்னர் முகுந்தையானவள் கோபங்கொண்டு

அரசனே! என் கற்புக்குலையும்படி யிங்குவந்தனை, வந்தநீஎனக் கொருசுகமுங் கொடுத்தாயில்லை யாதலால் உன் சரீரத்திற்குட்ட ரோகமுண்டாகக் கடவதென்று சபித்தனள். அதனை யவ்வுருக் குமாங்கத ராசன்கேட்டு இவளிச்சித்தது கிடையாமற் கோபங் கொண்டிருக்கிருள். இவளிட்ட சாபத்திற்கு தீர்வு கேட்கினுஞ் சொல்லாள். ஆயினும் நிலைகெட்டமனத்தையுடைய அப்பாதகி முகத்தை மீளவும் பார்க்கலாகாதென்று திரும்பாமற்போய்விட் டான் உடனே அவளிட்ட சாபத்தினற் சரீரமெங்கும் வெண் குட்டரோக முண்டாக அதனை யவ்வரசன்கண்டு மிகுந்த துயர டைந்து விநாயகமூர்த்தியை மனதில்நினைத்து கர்த்தனே! தே வரீர் பணிவிடைகளில் அடியேன் மனதறிந்து யாதொரு குற்ற முஞ் செய்ததில்லையே தேவரீர் பாதபதுமங்களை யடைந்த அடி யார்களிடத்திற் கணப்போதேனுந் திருவருள்நீங்குவதுண்டோ தேவரீர்கிருபை யடியேனிடத்தும் உண்டாயிருக்குமாயின் இவ் வித பொல்லாத்தீங்கும் என்னைச் சேரவல்லதோ? அடியேனறி யாமற் செய்தவினைகள் யாதாயினுமிருந்தால்அவைகளைத் தேவ ரீர்பொறுத்தருளல்கடமையன்றோ? துஷ்டஜன பரிபாலகரென் று வேதங்களெல்லாந் தேவரீரைத் துதிப்பது மெய்ம்மையல்ல வோ? யான்முகுந்தைகொண்ட ஐயோ இத்தன்மைத்தானவியா தியுண்டாகலாமா? தேவர்களுங்கண்டு நாணத்தக்க பேரொளி வாய்ந்த எனது சரீரமானது பெற்றவளு .மிகழத்தக்க வெண் குட்ட நோய்கொண்டதே. இவ்வுடலை இக்காட்டிற்றனே மாய்த் துவிடுவதல்லது இவ்வியாதியோடு மெனது நகரத்திற்சென்று எவ்வாறு அரசாக்ஷிசெய்யவல்லவன்? ஐயோ, ஈதென்னகொடு மையென்று துயரப்பட்டு இளைப்பாகி,அவ்வனத்திற்றனே ஓரால மரத்துநீழலிலிருந்தான். இவ்வரசனோடு வேட்டைக்குவந்த பரி சனங்களெல்லாந் தங்களரசனைத்தேடி எங்குங் காணுதவர்களாகி மதிமயங்கி மீளவு நகரத்திற்போய்ச் சேர்ந்தார்கள். அச்சமயத் தில் ஆகாயமார்க்கமாக நாரதமுனிவர் செல்லக்கண்டு தெய்வ முனியே! மகதியாழ்த்தலைவரே! திருமான் முதலாயினேர் துன் பத்தை நீக்குகின்றவரே! தேவரீர் திருவடிகட்கடியேன் அடைக் கல மடைக்கலம். கிருபாமூர்த்தியே! அடியேன் வீமராஜனுடை யபுத்திரன். என்பெயர் உருக்குமாங்கதன். சுவாமிகள் இங்ஙன மெழுந்தருளி அடியேன் படுகிறதுன்பங்களை நீக்கி யிரக்ஷிக்கவே ண்டுமென்று மிக்க வுருக்கத்தோடும் பலமுறை துதித்து ஓல

மிடலுந்தமது ஞானநோக்கினாற் சகலமுமறியவல்ல நாரதமுனிவரான்வர் தாம் கருதிச்செய்கின்ற காரியத்தை விடுத்துக் கனைக்கின்ற கன்றைநோக்கிக் கதறிவருகின்ற பசுவைப்போல ஞெரேலென்று நிலத்தில் அரசனெதிரில் வந்தருளினார்.

அவ்வரசனவரை அஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, சுவாமி! அடியேன் இக்கானகத்தைநோக்கி வேட்டையாடவந்த விடத்தில் மிக்க தாகமுண்டாயது, அதனால் இளைப்பாகி நீரிருக்குமிடத்தைத்தேடிச் செல்லுகையில் அங்கோ ராச்சிரமத்தில் இருடிபத்தினியாகிய குமுந்தையென்பவள் எனக்கெதிர்ப்பட, தண்ணீர் தருமாறுகேட்டேன். உடனே அவள் விரகநோய்கொண்டு என்னை வலுவிற்பற்ற யானதற்கிணங்காமையால் என்னைச்சபித்து இக்கொடியநோயை யானடையச்செய்தனள். இப்பாவிந்நோயுடன் எனது நகரத்திற்குச்செல்ல மனமில்லாமல் உயிரைவிடவும் நினைத்தேன் அரியதவங்களைச்செய்து அடியேனைப் பெற்ற தாய் தந்தையர் நிமித்தம் எனதுயிரைக் காத்துவைத்திருக்கின்றேன். அடியேன் தினந்தோறும் ஆராதித்துவந்த கணேசமூர்த்தியினதுகிருபையினாலே இத்தருணத்தில் தேவரீரெனது கண்ணெதிரில் வரப்பெற்றேன், அன்றியும் என்னைத் துன்பப் படுத்துகின்ற இந்நோயைச சுவாமிகளால் நீக்கிக்கொள்ளத்தக்க பாக்கியத்தையுமடைந்தேனாதலால், இத்தினமே வீமராசனுக்கும் புத்திரசந்தானமுண்டான தினமாயது. இனியடியேற்கு இவ்வியாதி நீங்கும்படியான மார்க்கத்தையருளி இரட்சிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தலும் அவ்வரசனை நாரதமுனிவர் கிருபையோடும் பார்த்து, அன்பனே! உனது குடைநீழலிற்றங்கியிருக்கின்ற விதர்ப்பதேயத்தில் யான்வரும்போது கந்தர்ப்பமென்னு நகரத்தில் ஓரற்புதத்தைக்கண்டேன் அஃது யாதெனில் அந்நகரத்தில் விநாயகமூர்த்தியாலயமொன்றிருக்கின்றது. அவ்வாலயத்தெதிரில் கணேசகுண்டமென்னும் ஒருதீர்த்தம்விளங்கும், அதன் மகிமையைத் தெய்வலோகத்தாரும் அறிந்திருக்கின்றனர். அன்றியும் ஒருசூத்திரன் குஷ்டநோயினாற் றுன்புற்றுத் தீர்த்தயாத்திரையாகச் செல்லுகையில் அத்தடாகத்தையடைந்து ஸ்நானஞ்செய்தெழுந்தான் உடனே அவனுடைய குஷ்டநோய் நீங்கியதன்றிச் சகல வினைகளும் நீங்கப்பெற்று விநாயகமூர்த்தியினுடைய சொரூபத்தையடைந்து அவரருளாற் தேவகணங்கள் கொண்டுவந்த விமானத்திலேறிக் கணேசலோகத்திற் போய்ச்சேர்ந்தான். ஆகலால்

நீயு மவ்விடத்திற்சென்று அக்கணேசகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து அங்கெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியைப் பூசித்துத் தானதருமங்களை இயற்றுவையாயின் இக்குஷ்டவியாதியுன்னைவிட்டொழிந்துபோகும் இவ்வியாதி அவ்விநாயகமூர்த்தியாற் தீரவேண்டுவதல்லது இப்பிரபஞ்சத்துள்ள ஓடதிகளெல்லாம் புசித்தாலும், யானை-குதிரை-தேர்முதலிய பல தானங்களைச்செய்தாலுந் தீர்வதில்லையென்று திருவாய்மலர்ந்தருளினர் வியாதியை நிவர்த்திசெய்துக் கொள்ளக்கூடிய உபாயத்தைசொல்லியுந் தானடைந்த காலதிசையை நினைக்குநினைந்து முகச்சோர்வடையும் உருக்குமாங்கதனைப்பார்த்து நாரதமுனிவர் பின்னும்சொல்லத்துடங்குவார்.

உருக்குமாங்கனுக்கு குட்டரோகந் தீர்த்தது
முற்றிற்று.

---

நாரதர்: உருக்குமாங்கதனுக்கு

# இந்திரன் கதியுரைத்தது.

கலங்காத வீரத்தன்மையுடைய உருக்குமாங்கத மஹாராஜன் வினைப்போர்வையால் மெலிந்து வாடியமலரைப்போல் நாணமுற்றிருப்பவனை கிருபாமூர்த்தியாகிய நாரதபகவான்பார்த்து இன்னமும் வேண்டுமான திருஷ்டாந்திரம் சொல்லாவிடின் மன்னன்மனம்தேர்ச்சியடையாதென்றயூகித்து உருக்குமாங்கதனே யென்னகுறை நேர்ந்ததென்று சோகமடைகின்றாய் உலகத்தில் ஒவ்வொரு மன்னரும்முனிவரும் படாதபாடு நீயென்னபட்டாய். வானுலகத்துக்கெல்லாம் அதிபதியாகிய தேவேந்திரன் அடைந்த அவமானத்தில் ஆயிரத்தி லொருபங்கேனும் அடைந்தனையா? இல்லையே இந்த வினையானது உனக்கு அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும் ஒருக்காலும் அஞ்சுதல்வேண்டாம். பலகாலமும் நீங்காத பெரும்பழியையேற்ற இந்திரன் கதியைச்சொல்லுகிறேன் கேள்.

ஓ அரசனே! முன்னொருகாலத்தில் இந்திரனனவன் தேவர்களெல்லாந் தொழும்படியாக இரத்தின சிங்காதனத்திலிருந்து அரசுசெய்துவருகின்ற சமயத்தில் நாமங்குச்சென்றோம், நம்மையவ்விந்திரன்எதிர்கொண்டு பணிந்து ஓராதனத்திலிருத்திப் பற்

பலஉபசாரங்களைச்செய்து சுவாமி! தேவரீர் சகலபுவனங்களிலு ஞ்சஞ்சரிக்கின்றமையால் யாதாயினும் ஓரதிசயமுண்டாயின் அதனைக் கிருபைசெய்யவேண்டுமென்று கேட்டான்.

அதற்கு யாம் சொன்னதாவது, இந்திரனே! யாம் பூவுலகத்திற்குப்போயிருந்தேன். அங்குக் கௌதமமுனிவர் பத்தினியாகிய அகலிகையைக்கண்டேன், அவளழகினுக்கொப்பாக இவ்வுலகத்தில் யாவரையுங்காணேன். இலக்குமி - இந்திராணி - இரதி- அனசூயை-திதி-திலோத்தமை-அதிதி என்கின்ற இம்மாதர்களுடையஅழகும் அவளழகுக்கு எதிர்நிற்கமாட்டாது, திரிபுர சங்காரமூர்த்தியாகிய சிவபெருமானுடைய திவ்விய சரணாரவிந்தங்களையே இடைவிடாது தியானிக்கின்ற என்மனமும் அவளைக் கண்டவுடன் விருப்பங்கொள்ளுமாயின், இப்பிரபஞ்சத்தில் அவளைக்கண்டு விரும்பாதவர்கள் ஒருவருமிருக்கமாட்டார்களென்றுசொல்லி அவ்விடத்தினின்றும் நீங்கினேம்.பின்னர் அவ்விந்திரனுக்கு அகலிகையின்மீது விரகமுண்டாகி அழலிற்பட்ட மெழுகுபோல மனமுருகி, உடனே அவள்கணவராகிய கௌதமமுனிவர் வடிவங்கொண்டு அவர் அதிகாலையில் ஸ்நானஞ்செய்யச்செல்கின்ற சமயம்பார்த்து அகலிகையிடத்திற்குவந்து என் பிராணநாயகியே! விரைவிற் கலவிசெய்ய அமளியிடக் கடவையென்று சொன்னான், அதை யவ்வகலிகைகேட்டுச் சுவாமீ! எக்காலத்துந் தவறாத வொழுக்கத்தினையுடைய மகா தவசிரேட்டராகிய தேவரீர் இத்தினம் இவ்வகைத்தான அற்பகாரியத்திற்கு உடன்பட்டதென்னகாரணம்? ஸ்நானஞ்செய்து நித்திய நியமங்களைமுடித்து முறைமைப்படி சிவபூசைசெய்யுங்காலத்தில் மிக்கபழுதான காமப்பொருளை யிச்சிப்பதுந் தக்கதுதானோ? அப்படித் தகாதகாரியத்தைத் தக்கதாக இத்தினந் தேவரீர்கொண்டு இவ்விடம் வந்தது எந்தக்காரணத்தால் அதை அடியாட்கு விளம்பி யருளவேண்டுமென்னலும், முனிவர் வடிவங்கொண்டுவந்த தேவேந்திரன் சொல்லுவான், எனதன்பிற்குரிய வனிதாரத்தினமே! யான்காலையில் நீராடச்செல்லுகையில் அங்கோர்மாது வஸ்திரமில்லாமல் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தனள் யானவளழகைக் கண்டவுடனே எனதுமனம் பேதித்தது, உடனே மிகுந்த விரகதாபங்கொண்டு செய்யவேண்டிய நியமங்களில் மனதைச் செலுத்தச் சக்தியில்லாமல் வந்துவிட்டேன், இனி எனது உயிர்வாழ்வதும் அரிதாக இருக்கின்றது, விரைவில் என்னுடன் கலவிசெய்து சுகந்

தருவாயாக இந்தத் தடுத்திடுவையாயின் உனதுஉயிரழியுமாற் சபித்துவிடுவேனென்றான். இவையனைத்தையு மகலிகைகேட்டு மாறுவடிவங்கொண்டு வந்திருக்கின்ற மகாபாதகனைத் தன் கணவனென்றேநினைத்து, அக்கினிசாட்சியாகத் தங்கள் கரத்தைப் பற்றிய காதலன்கருத் தெவ்வாறோ அவ்வாறே நடந்துகொள்வது பெண்களுக்குரிய கடமையாதலால் அத்தருமத்தின்படி யவளிசைந்து அமளியைச் சமீபித்தனள்.

இப்பால் இந்திரன் மனமகிழ்ந்து பெண்ணரசியே! உனதுகடைக்கண் பார்வையால் என்னுயிர்பிழைத்திருக்கப்பெற்றேனென்றுகுலாவிஅருகிற்சென்று சொர்ணத்தாற்செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற சப்பிரகூட மஞ்சத்தின்மீதேறிப் பூங்கொத்தினையொத்த அம்மெல்லியலைத் தனது கரத்தாற்பற்றிச் சமீபத்திலிருக்கவைத்து, அவள் முகாரவிந்தத்திற் புன்னகை யரும்பவும், மேகலாபரணங்கள் பிரகாசிக்கவும், பவளத்துண்டத்தையொத்த கனிவாயிதழ் துடிக்கவும், தேமல்நிரம்பிய தனங்கள் வளர்ந்தோங்கி விம்மவும், மேலணிந்திருக்கின்ற கச்சானது நெகிழ்ந்து கிழியவும், இடைதுவண்டு வருந்தவுமாகப் பலவித சரசசல்லாபங்களைச்செய்து தனதுகரங்களால் இரண்டுபயோதரங்களையும் வருடி, ஆடையை நெகிழ்த்தெறிந்து, பொலிவுற்றிருக்கின்ற நிதம்பத்தைத் தடவிப் பூமாலைகளணிந்திருக்கின்ற கூந்தலானது அவிழ்ந்து சோரும்படியாக லதாவேஷ்டிதம்-விருக்ஷாதிருடம்-திலதண்டுலம்-க்ஷீரநீரம் - ஊருப்பிரகூடம் - சகனோபசிலேஷம்-ஆதனம்-லலாடிகம் என்கின்ற எண்வகை யாலிங்கனங்களை நடாத்திநுதலை நீவி, முகத்தின் முத்தமிட்டு, உச்சி-கொங்கைகளின்நடு-சகனம்-முதுகு-கன்னம்-பிடர்-நெற்றி - தொடை- என்னும் இவ்வெட்டிடத்திலும் - சங்கோசம்-பக்கத்தம்-பிரசுரிதகம்-முஷ்டி-கிலம்-கத்திரிகை - சந்தங்கிசம் - வித்தை - என்கின்ற எண்வகைத் தாடனங்களையுஞ்செய்து, கண் - கபோலம் - கொங்கை-நெற்றி-கைமூலம்-நிதம்பம்-வாயிதழ்-உந்தி என்கின்ற எட்டிடத்திலுஞ் சும்பனமியற்றி, அர்த்தசந்திரன் - மண்டலம்-புலிநகம்-மயூரபதம்-முயலடி-உற்பலம் என்கின்ற அறுவகை நகக்குறிகளையுமிட்டு மூஷகம்-அநுச்சூநகம்-பிரவாளமணி-பிந்துமணி-பிந்துமாலை-கோலசர்விதம் என்கின்ற அறுவகைத்தந்தக் குறிகளையமைத்து பெருவிரல்-புறந்தாள் -பரடு-முழந்தாள்-அல்குல்-நாபி-மார்பு-முலை-கைமூலம்-கழுத்து-கபோலம்-வாய்-கண்- நெற்

றி-உச்சியென்னும் பதினைந்திடங்களிலும் அமுதநிலையாராய்ந்து தேகபரவசனுகிக் கிரீடிக்கு முன்னிலையில் அவ்வகலிகையுஞ் சரீர புளகாங்கிதமுற்றவளாய், அவனிரண்டு தோள்களினுந் தனது கொங்கைகளழுந்தத் தழுவி மனமுருகி இன்பவமுதத்தினைத் தருவதுபோல அடிக்கடி தனது கொவ்வைக்கனியையொத்தசெவ்விதழூறலைத் தந்து சங்கவளையல்கள் நெறியவும், அதரம் வெளுப்புறவும், நெற்றியில் வியர்வையரும்பவும், கண்டத்தில் மயில்-புறு-அன்னம்-காடை-வண்டு-குயில்-கோழி - செம்போத்து என்கின்ற எண்விதப் புட்குரல்களையுங்காட்டி, கற்பகதருவைப் பின்னிக்கொண்டிருக்கின்ற காமவல்லிக்கொடிபோல அவ்விந்திரனைச் சரீரத்தோடு சரீரமாக வணைத்துக் காமநீரூற்றெடுக்கத் தக்கதாகப் பலசுரதகலைகளை நடாத்திவந்தனள்.

உடனே இந்திரன் பேரானந்தக்களிப்பின் மூழ்கி உத்தானியம்-திரியக்கு-ஆசிதகம்-ஸ்திதம்-ஆனதம் என்கின்ற ஐவகைக் கரணங்களோடு கந்துகநிலை-பன்னகநிலை-குக்குடநிலை - வெருகுநிலை-வியாக்கிரநிலை முதலிய பலநிலைகளையும் மற்றைய கலவித் தொழில்களையும் புரிந்து சிந்தையோடு சிந்தையும், ஆகத்தோடு ஆகமும், ஆவியோடு ஆவியும்ஒன்றுபடக்கலந்துஎக்காலத்துமறியாத பெரும்போக வாரிதியின்மூழ்கித் தனது எண்ணத்தின்படி நிறைவேற்றினவனாய், அளவளாவிய மனக்களிப்பினேடும் அவ்வகலிகையைப்பார்த்து; கடலிற்றேன்றுதள்ள அமிர்தமே! கரும்பிற் பிறவாதுதித்த சர்க்கரையே! புட்பத்திற் பிறவாதெழுந்த செந்தேனே! உனக்கும் எனக்கும் உடலமொன்றுனதன்றி உயிருமொன்றுய்விட்டது மகா தபோபலங்களால் உன்னைக் கிடைக்கப்பெற்ற வெனக்குஇனிமெற் பெறத்தக்கதென்ன விருக்கின்றதென்று அவ்விந்திரனுடு முறுவலரும்பவும் விழிகள் முகுளிப்பவுந் தேகபரவசங்கொண்டு பற்பல லீலாவிநோதங்களைநடாத்திய விளைப்போடு சப்பிரகூடமஞ்சத்திற் சிறிது தலைசாய்ந்திருந்த அகலிகையானவள் அவ்வசனங்களைக்கேட்டு மின்னற்கொடிபோலதுடங்கி இடைதளர்ந்து மெல்லெனவெழுந்து, துகிலையுடுத்து மஞ்சத்தினின்றுமிறங்கி மிகவு மச்சங்கொண்டு இவனது வடிவமாத்திரம் தம்முனிவரைப்போலிருப்பதன்றி, இவன் சரீரத்துண்டான வாசனையும், இவன்செய்த கலவித்தொழில்களும் இவன் பேசுகின்ற வார்த்தைகளும் வேறுபட்டிருக்கின்ற வாதலால் இவன் நம்மோடு கலவிசெய்யும்பொருட்டுக் கள்ளவேடங்கொண்

டுவந்த தேவேந்திரனேயென்று நிச்சயித்துப் புருவத்தைநெறித்துக் கோபித்து எனது முனிபுங்கவரைப்போல மாறுவேடங்கொண்டுவந்த நீயார் உண்மையைப்பேசாவிடிற் சபித்துவிடுவேனென்றுசொன்னாள். அதனைத் தேவேந்திரன்கேட்டு,நாமின்னவனென்று அறிவிப்போமாயின் இவள் மிகவுஞ் சந்தோஷங்கொண்டு நமக்கிச்சையுண்டாகுங் காலத்தெல்லாந் தடையின்றிக் கூடுவளெனக்கருதிப் பின்னர்நேர்ந்திடுந் துன்பத்தையெண்ணாமல் மிக்க அன்போடு தனது நிசவடிவைக்கொண்டு அவளெதிராகநின்று பெண்ணரசியே! யான் உம்பருலகத்திற் கதிபதியாகிய தேவேந்திரன், யான் உனதழகின் வளமைகளைக்கேட்டு அத்தெய்வலோக வாசினையும் இந்திராணி போகத்தினையும் வெறுத்து, இலக்குமி சரசுவதி முதலாயினோர் வனப்பினையு மதியாமல் உன்னையே யிச்சித்துவந்தேன். எனதெண்ணத்தின்படியே நீயுமிசைந்தனை யாதலால், இத்தினம் நாமிருவரும் புணர்ந்துபோகசாகரத்தின் மூழ்கினோம். நம்முயிருமுடலும் இரண்டறக் கலந்துவிட்டன. இனிமேலென்னை வேறாக நினைப்பையேற் குற்றமாகும். இத்தினத்தில் பஞ்சபுட்பபாணங்களை யென்மீது பிரயோகித்த மன்மதனானவன் இன்னும் பிரயோகிக்கின்றபோதெல்லாம் உனது கிருபாநோக்கம் பாலித்தருளி என்னை முற்றினும் பாதுகாக்கவேண்டுமென்று இரந்தான்.

இவையனைத்தையும் அகலிகைகேட்டுக் கோபங்கொண்டு எனது பிராணநாயகரைப்போல வஞ்சவடிவங்கொண்டு இந்தப் பாவி சந்திரனுக்குற்ற களங்கத்தினைப்போல என்மரபுக்கு எக்காலமும் மாறுக்களங்கத்தையுண்டாக்கி, எனது கற்பையுமழித்து, என்கணவருடைய உள்ளத்தையுங் கொதிக்கச்செய்து, என்னைப் பலவிதத்தினுங் கெடுத்தானே, இதற்கென்னசெய்வேனென்று சொல்லிப் பயந்து பரிதாபித்திருக்கின்ற சமயத்தில் சூரியோதயத்திற்கு முன்னதாகவெழுந்து ஸ்நானஞ் செய்யப்போயிருந்த கௌதம முனிவரானவர் சகல நியமாதிகளையு முடித்துக்கொண்டு மீளவுந் தமதாச்சிரமத்தில் வந்து தலைவாய்தலினின்றும் மனைவியைக்கூவித் தண்ணீர்கொண்டுவரும்படியாகக் கட்டளையிட்டனர். அடனே அகலிகையானவள் நடுநடுங்கிப் பழைய வொழுக்கங்களில்லாமலுஞ் சுசிகரமில்லாமலுந் தண்ணீர்கொண்டுவந்து கொடுத்தலும் கௌதமமுனிவர் அவளிருக்கும் அசுத்த கோலங்களைப் பார்த்துப் பெண்ணே! உன் வதனம் வேறுபட்டிருக்கின்ற

காரணமென்ன? இத்தினத்தில் வழக்கம்போல ஆதனமிடவில்லை விரைவிற் சலங்கொண்டுவரவில்லை. இனிய வசனங்களைபேசவில்லை. உன் சரீரஞ்சுசியில்லை. நீ முன்னிருந்த மாதாகவுந்தோற்றவில்லை. ஆதலால், நடந்த விசேடங்களை உண்மையாகச் சொல்லக் கடவையென்றார். அதற் கவ்வகலிகை உள்ளங்கலங்கி உடலம் நடுங்கித் தன் காதலரைப் பஞ்சாங்கமாகப் பணிந்தெழுந்து நாணங்கொண்டு தலைகுனித்து முகங்கோட்டி, நிலங்கிறி, மதிமயங்கி, உரைகுழறி, சுவாமி! தேவேந்திரன் தேவரீருடைய வடிவங்கொண்டுவந்து மாறுபாடு பேசி என்னைக் கலவிசெய்ய வழைத்தலும் அடியேன் றேவரீர் என்று நினைத்துக் கலந்துவிட்டேனென்றனள்.

இப்பாற் கௌதம முனிவர் வந்ததுமுதல் நடந்தகாரியங்களனைத்தையும் மறைவிலிருந்துகேட்ட தேவேந்திரனனவன் மனங்கலங்கி முட்டையிற் கட்டுண்டிருக்கின்ற கருவைப்போலப்போக்கிடங்காணுமல் ஐயோ! கடலின் மூழ்கினாலும் மலையிலொளித்தாலுங் காமத்தீயானது உடலைப்பற்றியிருக்கின்ற உயிரை அங்கும் வந்து சுடுவதுபோல நாமெங்கோடி யொளித்தாலும் இந்த முனி புங்கவருடைய கோபம் நீறுக்கிவிடுமே. ஆ! ஆ! என்ன காரியத்தினைச் செய்தோம் இனி என்னபழி சம்பவிக்கின்றதோவென்றுபயந்து, ஈன வுடலங்கொண்ட பூனை வடிவங்கொண்டு வெளியிற் செல்லப்புறப்படலும், மதிமயங்கிச்செல்கின்ற அப்பூனையைக் கௌதமமுனிவர்கண்டு இவ்வுருவங்கொண்டவன் தேவேந்திரனேயென்று நிச்சயித்து, இற்புலியே! நீயார் போகாதேயென்று தடுத்தனர், உடனே தேவேந்திரன் தனது நிசவுருவத்தைக்காட்டி மேலான தன் பராக்கிரமமெல்லாம் இழந்து நின்றான். அவ்வாறு நிற்பவனைக் கௌதமமுனிவர்கண்டு, அடா துர்த்தனே! உன்னை இப்போதே நீறுக்கிவிடுவேன், நீதேவர்கட்கெல்லாம் அரசனுகையாலே அத்தேவர் முகத்தைப்பார்த்து உன்னை விட்டு விட்டேன். ஆயினும் ஒரு பெண்குறியை இச்சித்தவந்தவுனக்கு உடல்முழுவதும் பெண்குறியாகக்கடவதென்று சபித்தனர். உடனே அழிந்த கனியிற்பட்ட கடுங்காற்றைப்போலக் கௌதம முனிவரிட்ட சாபமானது தேவேந்திரனைநெருங்கலும், செத்தசவத்திற் கொப்பானவனுகிக் கீழேவிழுந்து தனக்கு நேரிட்ட ஆபத்தை நினைக்குந்தோறு மனந்துவண்டு தாங்கற்கரிய துயரத்தையடைந்து, ஐயையோ! இதுவரையிற் கற்றகல்வியும்

அரக்கர்குலங்களைச் சயித்தடைந்த செல்வமுந் தேவலோகத்தை யாள்கின்ற அரசாட்சியும், மற்றுமுண்டான சகல சம்பத்துக்களுங் காமமென்னுங் கடுந்தீயிற்பட்டு எரிந்துவிட்டனபோலாயின வேயென்று மனம் வருந்தி, உடலுருகிக் கதறிக்கதறி ஓவென் றழுது, தெய்வமே! பெண்களாயினோர் தங்கட்கிருக்கின்ற ஒரு குறியை மறைக்கு நிமித்தம் மிகவுநீட்சியுள்ள ஆடையினை யுடுத் திருந்தும் ஓர்காலத்து ஆடவர் கூட்டத்துள் வருவதற் கிலச்சை யுறுவார்களே; அத்தன்மைத்தான பெண்குறிகள் என்னுடல் முழுவதும் அளவற்றனவாக நிறைந்துவிட்டனவே; அவற்றை யெல்லாம் எவ்வாறு மறைத்து ஒருவரெதிரில் உலாவப்போகின் றேனென்று கலங்கிஅவ்விடத்தினின்றுநீங்கி ஓர் மடுவிற்புகுந்து அதிலிருக்கின்ற தாமரை நாளத்தி னொளித்துக்கொண்டனன்.

உருக்குமாங்கத ராசனே! இத்தேவேந்திரன் செய்த குற் றத்தாற் றன்சரீர முழுவதும் அளவற்ற யோனிகளை யடைந்திரு ப்பதைப் பார்க்கின், இப்பூவுலகத்தில் அனந்த பாதகங்களைச் செய் தஒரு பெண் சனனமெடுப்பதென்றும், அளவற்ற பெண்சனன மெடுப்பது ஒரு பிறன்மனையை யிச்சித்த பாதகத்தா லென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். அஃதுண்மையாகவே நம்பத் தக்கதாயிருக்கின்றது. எழில்வாய்ந்த இந்திராணி முதலிய தே வஸ்தீரீகள் அனந்தம் பெயர்கள் இருக்கவும், இவ்வோர் இருடி பத்தினியாலல்லவா அவ்விந்திரன் தன்மாட்சிமையனைத்து மழி யப்பெற்று, ஒளித்துக்கொள்ள நேர்ந்தது, பெற்றதைச் சிறிதாக வெறுத்துப் பெறாததைப் பெரிதாகவெண்ணி விரும்புகின்ற ஆண வத்தின் வலியையாவர் சொல்ல வல்லவர்கள்.

மங்கையரைக் கூடுவதாலுண்டாகிய போகத்தை சில அற்ப அறிவினர்கள் இன்பமெனச்சொல்லுகின்றார்கள். அஃதின்பமே யாயின் தேவர்கட்கெல்லாந் தலைமைபெற்ற இந்திரனுக்கும் ஒரு பெண்ணிச்சையால் இத்தன்மைத்தான துன்பத்தினைக் கொடுக் குமோ! எவ்விடத்திலும் எவ்வுயிரிலும் அந்தர்யாமியாய் வியா பித்திருக்கும் பரமாத்மாவை தியானிக்கின்ற இன்பமே யின்பமல் லது வேறொன்றையு மின்பமென நல்லோர் கருதப்படுவதோ என் றுசொல்லி முடித்தனர்.

உருக்குமாங்கதனுக்கு இந்திரன் கதியுரைத்தது

முற்றிற்று.

## நாரதர்: பிரமதேவரிடத்தில்

# பிரம்மாண்ட உற்பத்திகேட்டது.

திரிலோகசஞ்சாரியாகிய நாரதமுனி ஒருகால் பிரமலோகமடைந்து தன்னுடைய பிதாவாகியும், மஹா தேஜஸ்வியாகியும், பிரகாசிக்கும் பிரம்மாவைப்பணிந்து, ஓ பிரபஞ்ச சொரூபிமய! சகந்நாயகனே! இந்தப் பிரமாண்டம் எங்கிருந்துதோன்றியது? இது உம்மாலுண்டாக்கப் பட்டதா? விஷ்ணுவினாலுண்டாக்கப் பட்டதா? அல்லது உருத்திரராலே யுண்டாக்கப்பட்டதா? உங்கள் மூவருள் பூஜிக்கத்தக்கவரும் சர்வசிரேஷ்டரும், சர்வவியாபகருமாயுள்ளவர் எவர்? இவற்றிற்குவிடை கூறும். கூறுவதிலெனக்குச் சந்தேகந்தோன்றா திருக்கவேண்டும். யான் துக்கரூபமாயும் பொய்யானதாயு மிருக்கின்ற சம்சாரபந்தத்தில் மூழ்கினவனாக விருக்கின்றேன். என்மனமோ சந்தேகமென்கின்ற ஓர் சிவிகையின்மேலெறி நிலைபெறாது தெப்பம்போலலைகின்றது. நாடோறுஞ் செய்வதாகிய தீர்த்த ஸ்நாநங்களாலேயும் வேதாத்தியயனங்களாலேயும், இதுபோன்ற பல சத்கருமாதிகளாலேயும், உபசாந்தியடைகிறதில்லை. ஏனென்றால் என் மனமானது யாரைத் தியானிக்கின்றது? யாருக்கு அக்கினிமுகமாக அவிர்ப்பாகங் கொடுக்கிறது? யாரைச் சரணாகதியடைகிறது? யாரைப் பத்திர புஷ்பங்களால் அருச்சிக்கிறது? யாரைத்தோத்திரஞ்செய்கிறது? ஜகத் காரணர்களாயிருக்கின்ற கர்த்தாக்களுக்கு ஈஸ்வரனாகவிருக்கின்றவர்யார் என்று நானாத்வமாய் விரிந்து ஒன்றிலுந்தெளிவின்றி ஒன்றைப்பற்றிச் செய்யுஞ்செயலு மின்றி வருந்துகின்றது என்றுகேட்ட நாரதரைப்பார்த்து பிரமதேவன் சொல்லுகிறார்.

ஓ நாரதா! இந்த உத்தமமாகிய கேள்விகளினுடைய நிச்சயார்த்தம் என்னாலும் விஷ்ணுமூர்த்தியாலும் அறியக்கூடாததாயிருக்க இதுவிஷயத்தை உன்னாலே அறியக்கூடுமானதா? அதனுண்மையை நான் என்னசொல்லப்போகிறேன். ஆயினும் ஒருவாறு தெரிந்தவளவிற்சொல்லுகிறேன். ஓ அறிவிற்சிறந்தவனே! இந்த சம்சாரத்தில் ஆசையுடையவன் இவ்வுண்மையை யறியமாட்டான். ஆனல் அறியத்தக்கவன்யாவனென்றால் தாபத்திரயமில்லாதவனும், பற்றற்றவனும், விரக்தனுமாயுள்ளவனெவனோ

அவனே யறியத்தக்கவன். பூர்வத்தில் வெள்ளமாகத்தோன்றிய ஓர் சலப்பிரளயத்தில் தாவர ஜங்க மங்களெல்லாம் நாசத்தை யடைந்தன. அப்பொழுது கமலத்திற்பிறந்த நானொருவன்தா னிருந்தேன். சந்திரசூரியர்களையும் விருக்ஷசமூகங்களையும் பர்வ தாதிகளையும் பார்க்கவில்லை. அச்சமயத்தில் நான் அக்கமலப் பொருட்டிலிருந்து மனதிலொரு விதமாகச் சிந்தித்தேன். இந்த மஹார்ணவமாயிருக்கின்ற இவ்வெள்ளத்தில் நாம் யாவராலுண் டாக்கப்பட்டோம், நம்மை இவ்வெள்ளத்தில் ரக்ஷிக்கின்றவர் யார், யுகமுடிவில் நம்மை யொடுக்கிக்கொள்ளுகிற பிரபு யார், பூமியானது இப்பொழுது தோன்றவேயில்லை, இந்த வெள்ளமா னது எதனை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. நமக் காதாரமா யுள்ள இந்தப்பங்கஜமும் எதனை ஆதாரமாகக்கொண்டுதோன்றி யது, பங்கஜத்துக்கு மூலம் சேறல்லவா? அதற்குமூலம் பூமியல் லவா? ஆகையால் நாம் பூமியைக்கண்டு பிடிப்போமானால் சேற் றையுங்காணலாம்; நாமிதனைக் கண்டுபிடிக்கவேண்டியது அவசி யந்தானே. என்று நிச்சயித்துப்பூமியினெல்லையைக் காணவேண் டி அவ்வெள்ளத்தைத் தாண்டித்தாண்டி அநேகம் ஆண்டாகச் சென்றும் பூமியைக் காணமற்போயினேன். அப்பொழுது ஆகா யத்தில் நீ தவஞ்செய்யக் கடவாயென்று ஒருவாக்கெழுந்தது. அதுபோலவே நான் இந்தத் தாமரைக் கமலத்திலேயேஆயிரம் வருடந் தவஞ்செய்துவந்தேன். அப்படித் தவஞ்செய்து வரும் பொழுது மீளவும் முன்போல் ஆகாயத்தில் நீ சிருட்டிபண்ணு என்று ஒருவாக்குண்டாயது. அதனைக்கேட்ட நான் எதனைச்சிரு ட்டிக்கிறது, ஒன்றையுங் காணேனே என்னசெய்கிறதென்று மய ங்கினேன். அப்பொழுது அதிபயங்கரரூபிகளான மதுகைடபரெ ன்கிற அசுரர்கள் அதிசீக்கிரத்திலென்னைச் சமீபித்தார்கள். சமீ பித்த அவர்களால் அவ்வெள்ளத்தில் யுத்தநிமித்தமாய்ப் பீடிக் கப்பட்டேன். பின்னர் நான் தாமரையின் நாளத்தைப்பிடித்துக் கொண்டு வெள்ளத்திலிறங்கினேன். அவ்விடத்தில் பரமாத்புத னாகியும், மேகஸ்யாமள வர்ணனாகியும், பீதாம்பர தாரியாகியும், சதுர்ப்புஜராகியும், சேஷ சயனராகியும், துளபமாலை யணிந்தவ ராகியும், சங்கசக்ர கதா பத்மதாரியாகியும், ஜகந்நாதராகியு மிரு க்கின்ற விஷ்ணுமூர்த்தியைக்கண்டேன். அந்த மகாபுருஷர் சேஷ னாகிய படுக்கையில் யோகநித்திரையோடு கூடினவராய், அதில் அசைவில்லாதவராய், அதைவிட்டு நீங்காதவரா யிருக்கின்றதை

ப்பார்த்து அப்பொழுது எனக்கு இது செய்யவேண்டுமென்று ஒரு அற்புதமாகிய சிந்தனை உண்டாகி நித்திராசொரூபிணியாகிய தேவியைத் தியானித்தேன். அப்படி தியானித்த உடனே சிந்திப்பதற்குக் கூடாமையாயுள்ள திவ்ய தேஜஸ்வினியாகியும், திவ்ய மங்களையாகியுமுள்ள அந்தத் தேவியானவள் விஷ்ணுமூர்த்தியினுடைய திருமேனியினின்றும் வெளிப்பட்டு ஆகாயத்தில் பிரகாசித்து நின்றனள். அப்பொழுது திருமால் அச்சத்தியினின்றும் விடுபட்டவராய் திவ்யதேஜசோடுங்கூடி எழுந்திருந்து மதுகைடபரோடு ஐயாயிரவருடம் யுத்தஞ்செய்து பளபளப்போடுகூடிய கட்கத்தினாற் சங்கரித்தனர். அவர்களிறந்துபோனபின்னர் நானும் நாராயணருமாகவிருந்தோம். எங்கண்மத்தியில் உருத்திரமூர்த்தியுந் தோன்றினர். அப்பொழுது எங்கள் மூவராலே பார்க்கப்பட்டவளாகியும், நின்மலையாகியும், மனோகரையாகியும், துதிக்கப்பட்டவளாகியு முள்ள மகாசக்தியாகிய தேவியானவள் சந்தோஷ சித்தர்களாயிருக்கின்ற எங்களைக் கருணைகடாக்ஷஞ்செய்து, ஓ பிரம விஷ்ணு ருத்திரர்களே! இந்த அசுரர்கள் சங்கரிக்கப்பட்டார்களல்லவா? இனி நீங்கள் முயற்சியுடையவர்களா யுங்களுக்குரிய சிருஷ்டி திதி ஸம்ஹாரங்களை நடத்தி, உங்களுடைய பதவிகளில் சுவஸ்த சித்தர்களாக வசியுங்கள். நீங்களே எல்லாப் பிரஜைகளையும் சராயுஜமுதலிய நான்கு பிரகாரமாகச் சிருஷ்டித்து சுன்மங்களைப்போக்குங்கள் என்றனுக்கிரகஞ்செய்தனள். அந்தமஹாதேவியினுடைய சுகப்பிரதமாயும் மிருதுவாயும் ஸ்பஷ்டமாயுமுள்ள அந்தவார்த்தைகளைக் கேட்டு, ஹே அம்ப! விஸ்தாரமாயிருக்கின்ற பூமியோ காணப்படவில்லை. இந்த சலந்தானெங்கும் விஸ்தரித்திருக்கின்றது. பிரஜைகளெங்கே? நாங்களெப்படி சிருஷ்டிப்போம். சிருஷ்டிப்பதற்குஞ் சாமர்த்தியமில்லாதவர்களாயிருக்கின்றோம்; என்று அத்தேவியைப் பார்த்துச் சொன்னோம். எங்களுடைய வார்த்தையைக்கேட்டு தேவி புன்சிரிப்புடையவளாய் திவ்யப்பிரகாசத்தோடுங்கூடிய ஓர் விமானம் ஆகாயத்தினின்றும் வரச்செய்து எங்களைப்பார்த்து நீங்கள் மூவரும் பயமில்லாதவர்களாய் இந்த விமானத்தில் நன்றுயுட்காருங்கள். இப்பொழுது சில அற்புதத்தைக் காட்டுகிறேனென்றாள். நாங்கள் மூவரும் அத்தேவியின் வார்த்தையைக்கேட்டு பிரணவாத்மகமாயிருக்கின்ற அந்த பகவதியைத் தியானித்து, இரத்தினகசிதமாயும், முத்துமாலைகளோடு கூடினதாயும், கண்டாமணிகளால்

சத்திக்கப்பட்டதாகியும், தெய்வக்கிரகம்போலுள்ளதாகியும், ரம்ணியமாகியுமிருக்கின்ற விமானத்தில் சங்கையில்லாமல் இந்திரிய நிக்ரஹமுடையவர்களா யுட்கார்ந்தோம். அப்பொழுது தேவி தன்னுடைய சக்தியினுல் ஆகாயத்தில் விமானத்தைத் தூண்டினுள்.

மனோவேகத்தையுடையஅந்த விமானம் ஓரிடத்திற்போய்ச் சேர்ந்தது. சேர்ந்த அவ்விடத்தில் சலத்தைப்பார்க்கவில்லை விஸ்தாரமாய்ப் பரவியிருக்கின்ற பூமியும், அதில் பத்திரபுஷ்ப பலங்களோடு கூடினதாகியும், குயில்களுடைய ஓசைகள் நிறைந்துள்ளதாகியும், செழுமையோடு கூடினதாகியுமுள்ள விருக்ஷங்கள், பர்வதங்கள், வனங்கள், உத்யானவனங்கள், நதிகள், காறுகள், நடபாவிகள், கிணறுகள், தடாகங்கள், குட்டைகள், முதலியவற்றையும், மிருகங்களையும், புருடர்களையும், ஸ்திரீகளையும், திவ்யப்பிராகாரங்களா லலங்கரிக்கப்பட்டும் அநேக கிருகங்களால்அழகுசெய்யப் பெற்றும் யக்ஞசாலைகளால் நிறையப்பெற்றும் பிரகாசிக்கின்ற பார்ப்போரது மனத்தைக்கிரகிக்கும் ரம்யமாகிய நகரத்தையும், அங்கு வேட்டையாடிவருகிற தேவசமானனுகிய ஒரு அரசனையும்பார்த்து, அந்தோ சலமன்றி வேறறியாத நாம் இவ்வற்புதங்களை எவ்வாறு காணப்பெற்றோமென்கிறஅடங்காத வதிசயமும் நாம்கண்ட இந்நகரம் மஹாத்புதமாகிய சுவர்க்கமல்லவா? இது யாராலே நிர்மிக்கப்பட்டது என்கிற ஐயமும் எங்கள் மனதிற்றோன்றியது. அப்பொழுது எங்களுக்கெதிரில்அந்தரத்தில் முன்காட்சிகொடுத்த தேவி மீளவும் யாங்கள்காணக் காட்சிகொடுத்தனள். அத்தேவியைப் பார்ப்பதற்குமுன் ஆகாயத்தில் வாயுமண்டலத்தில் சஞ்சரிக்கின்ற எங்கள் விமானம் ஓர் முகூர்த்தகாலத்துக்குள் மிகவும் மனோகரமாகிய மற்றோரிடத்திற் சென்றது. அந்த விடத்தைப்பார்த்தோம்.

அந்தவிடத்தில் நந்தனவனமொன்றும், அவ்வனத்தில் பாரிஜாதவிருக்ஷநிழலில் ஓர் காமதேனுவும்,அக்காமதேனுவினுடைய சமீபத்தில் நான்கு தந்தங்களோடுகூடிய ஐராவதமும், அவ்விடத்திலேயே ஆடல்பாடல் அபிநயங்களோடுகூடிய நாட்டிய விசேடங்களால் கிரீடித்துக்கொண்டிருக்கிற மேனகை முதலிய அப்ஸரஸ்திரீகளுடைய சமூகங்களும், மந்தார விருக்ஷத்தின் மத்தியில் பாடிக்கொண்டு ரமித்திருக்கிற அநேக யக்ஷ வித்யாதர கந்திருவரும், அவ்விடத்தில் சசி சமேதனுயிருக்கின்ற இந்திரன்,

வ்ருணன், குபேரன், யமதருமன், சூர்யமூர்த்தி, அக்னி, மற்று முள்ள தேவர்கள் முதலியோரும் இருக்கப்பார்த்து ஆச்சரிய முடையராயினேம். அப்பொழுது அந்த திவ்யாலங்காரத்தோடு கூடிய சுவர்க்கத்தினின்றும் இந்திரனைப்போல் மகாதீரனாகிய ஒரு அரசன் வெளிப்பட்டு மானுடர் சஞ்சரிக்கும் பூமியில்நின்ற னன். அவனை இன்னானென்று அறிவதற்கு முன் எங்கள் விமா னம் மகாவேகத்தோடு மற்றோரிடஞ்சென்றது. அங்கு பிரமனுல கமும், பிரமன்சபையும், அச்சபையில் சர்வதேவதைகளால் நம ஸ்கரிக்கத்தக்கவனா யிருக்கின்ற பிரமனொருவனு மிருக்கக்கண் டோம், அவனைச்சூழ்ந்து வேதங்களும் வேதாங்கங்களும், தெய் வவடிவங்கொண்டிருந்தன. இவைகளேயன்றி கடல்கள், நதிகள், பர்வதங்கள், தேவசர்ப்பங்கள், அஷ்டநாகங்கள் முதலியவைகளு முருக்கொண்டிருந்தன. அப்பொழுது அரனும், அரியும், அந்த சபையையும், பிரமனையும் பார்த்து அதிசயமடைந்து என்னைப் பார்த்து சதுர்முகத்தோடிருக்கின்ற இந்தப் பிரம்மா யாரென் றார். அப்பொழுது சிருஷ்டிகர்த்தாவாகிய இவர் யாரோ நானறி யே னென்றேன். பின்னர் நான் என்மனதில் நாமார், நமக்குமே ற்பட்டவர்களாய் நம்முடனிருக்கின்ற இந்த அரி அரர் யார். இந்தப் பிரமனும் இவனுக்கு முன்கண்ட இந்திரனும் இவருலக மும் நமக்குத் தோன்றுகின்றனவல்லவா இது சித்தப்பிரமை யோ அல்லது வுண்மையோவென்று சிந்தித்திருக்கும்பொழுது விமானம் மற்றோரிடஞ்சென்றது.

அவ்விடம் அநேக யக்ஷர்களாலே வசிக்கப் பட்டதாகியும், கிளி-குயில் முதலிய பக்ஷி சாதிகளால் சந்திக்கப்பட்டதாகியும், வீணை மிருதங்கமுதலிய வாத்தியங்களால் கோஷிக்கப்பட்டதா கியும், சுகப்பிரதமமாகியும், மங்களகரமாகியும், ரமணீயமாகியுமி ருக்கின்ற ஸ்ரீ கைலாயங்காணப்பட்டது. நாங்கள்போன அச்சம யத்தில் திவ்யமங்களமாகிய ஆலயத்தினின்றும் திரிநேத்திரதர ராயும், பஞ்சமுகத்தோடுங் கூடினவராயும், தசக்கரங்களையுடை யவராயும், சந்திரசேகரராயும், வியாக்ரசர்மத்தை அந்தரீயம் (இடையில்) உடுத்தவராயும், கஜசர்மத்தை உத்தரீயமாகவுடைய வராயும், பிரகாசிக்கின்ற பகவானாகிய சம்பு விருஷபாரூடராய் வெளிவந்தனர். அவரது வலமிடங்களில் மகாவீரராகிய கஜான னரும் ஷடானனருமாகிய இரண்டு புத்திரரும் வந்தனர். பின்பு றத்தில் நந்திதேவர் முதலிய பிரமதகணங்கள் ஜயஜயவென்று

கோஷித்துக்கொண்டுவந்தனர். ஓ நாரதனே! அந்த சங்கரரை நாங்கள் மூவரும்பார்த்து ஆச்சரியமடைந்தோம். பின்னர் அவ்விடத்தில் பராசக்தியின் அம்சபூதங்களாயிருக்கின்ற சக்தி பேதங்களைக்கண்டு சம்சயசித்தராயிருந்தோம். அப்பொழுது வாயு வேகத்தோடுங்கூடிய எங்கள் விமானம் அப்புறஞ்சென்றது.

அவ்விடமோ வைகுண்டம். ஓ நாரதனே நாராயணருடைய ஆஸ்தானமாகிய அந்தவைகுண்டத்தில் மனசினால் இத்தன்மைத்தென்று யூகித்தற்கு மரிதான சம்பத்துக்கள் காணப்பட்டன. அப்பொழுது சர்வசிலாக்கியமாகிய வைகுண்டத்தில் விமானத்திலிருந்த நாராயணரைப்பார்த்து ஆச்சரியமடைந்தோம். அச்சமயத்தில் அங்கிருந்த கமலாக்ஷராகிய விஷ்ணுமூர்த்திஎழுந்தருளி அங்குள்ள மகாமண்டபத்தின் முன்னேவந்தனர். காயாம்பு வண்ணராகியும், பீதாம்பரதாரியாகியும், சதுர்ப்புஜராகியும், திவ்யாபரணாலங்கிருதராயும், கருடவாகனரூடராயும், இலக்ஷ்மிதேவியினால் சாமரை வீசப்பட்டவராயும், ஆதியாயுமிருக்கின்ற அவ்விஷ்ணுமூர்த்தியைக் கண்டோம் கண்ட நாங்கள் ஆச்சரியமடைந்து அந்த விமானத்திலிருந்த வண்ணமாகவே ஒருவரையொருவர் பார்த்து இப்படியும் உண்டோவென்றெண்ணும்பொழுது வாயு வேகமாய் எங்கள் விமானம் மோதுகின்ற அலைகளோடு கூடினதாயும் அநேகவிதமான சலசரங்களால் நிறைந்துள்ளதாயுமுள்ள திருப்பாற்கடலை யடைந்தது.

அக்கடல் நடுவில் ஓர் த்வீபமானது எங்களுக்குத் தூரத்தில் காணப்பட்டது. அது மந்தாரம், பாரிஜாதம், மகிழம், மருதாணி, தாழை, சண்பகம் முதலிய விருக்ஷங்களால் சூழப்பட்டதாகியும், அவ்விருக்ஷங்களில் மலர்ந்த புஷ்ப கந்தங்களால் நிறையப்பெற்றதாகியும், வண்டுகளுடைய ரீங்காரத்தொனியும் குயிலோசையும் நீங்கப்பெற்றிலதாகியும் விளங்கிற்று. அச்சோலையின் மத்தியில்கட்டிலொன்று காணப்பட்டது. அக்கட்டில்பரமாத்புதமாகியும், மங்களசொரூபமாகியும், ரமணீயமாகியும் ரத்னங்களாலிழைக்கப்பட்டதாகியும், அநேகவித ரத்னமாலைகளாலலங்கரிக்கப்பட்டதாகியும், ஆஸ்தரணம் (நானாவித மெத்தைகளால்) அடுக்கிடப்பட்டதாகியும், அநேகவிதமான சித்ரங்களால் சித்திரிக்கப்பட்டதாகியும், இன்னும் சொல்வதற்கெட்டாத அலங்கார வகைகளா னிறைந்துள்ளதாகியும். இந்திர தனுசைப்போல் மே

த்கட்டினையுடையதாகியும், நானாவிதமான திரைச்சீலை களோடு கூடினதாகியும், கோடிசூர்யப் பிரகாசமாய்ப் பிரகாசித்தது.

அந்த சிலாக்கியமாகிய கட்டிலில் மகாபூஜ்யையாகிய தேவி வீற்றிருந்தனள். நாங்கள் எவ்வாறு வீற்றிருக்கக் கண்டோமென்றால், ரக்தவர்ணமாயிருக்கின்ற வஸ்திரமும், சந்தனப்பூச்சும் உடையவளாகியும், சிவந்தநேத்திரங்களுடையவளாகியும், கோடி மின்னல்கள் மின்னுவதுபோல் பளபளப்புடன் பிரகாசிக்கின்ற தேஜோரூபியாகியும், சிவந்த தந்தவரிசையோடுகூடிய அதரத்தையுடைய வளாகியும், ஆனந்தகரமாகிய முகமண்டலத்தையுடையவளாகியும், கோடிலக்ஷ்மிகளை ஒப்பிடுவதற்குக் கூடாதமங்களத்தையுடையவளாகியும், சூரியபிம்பம்போலொளிவிடுகின்ற காந்தியையுடையவளாகியும், அபயம் வரதம்பாசம் அங்குசம்இவற்றைத்தரித்தவளாகியு ர், ஹ்ரீங்காரமாகிய சக்திபீஜத்தை உச்சரிக்கின்ற பக்ஷிசமூகங்களோடு கூடினவளாகியும், சிவந்த நிறமுடையகருணா மூர்த்தியாகியும், பாலையாகியும், புதிய யௌவனத்தை உடையவளாகியும், சர்வாலங்காரத்தோடு கூடினவளாகியும் சுவர்ணமயமாகிய அங்கதம் கேயூரம் கிரீட முதலியவைகளால் அழகுபெற்றவளாகியும் பருத் திருமாந்து தாமரையரும்பைவென்று பிரகாசிக்கின்ற தனபாரங்களை யுடையவளாகியும், நானாவிதமானரத்நாபரணங்களால் பிரகாசிக்கின்ற வளாகியும், ஸ்ரீ சக்ரரூபமாயிருக்கின்ற . தாடங்கமாகிய காதோலையினால் பிரகாசிக்கின்ற முகாரவிந்தத்தையுடையவளாகியும், ஹ்ருல்லேகை புவனேசி என்கிற நாமங்களையுச்சரிப்பதில் அன்புடையவர்களாயிருக்கின்ற ஹ்ருல்லேகைமுதலிய நாமங்களைப்பெற்ற தேவகன்னிகைகளாலும், அனங்ககுசுமை முதலியவர்களாலும் சூழப்பட்டவளாகியும், புன்னகையினலலங்கரிக்கப்பட்ட வாக்குடையவளாகியும், சுந்தரவதியாகியும், எப்பொழுதும் யாவராலும் கண்டறியாதவளாகியுமுள்ளதேவியந்திரராஜமாய் அஷ்டகோணவடிவமாய் விளங்கும் ஸ்ரீ சக்ரமாகிய பீடத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டோம். அப்பொழுது நாங்கள் அந்த மகாதேவியைப் பார்த்து ஆச்சரியமடைந்தவர்களாய் தேவியென்றறியாது இந்த ஸ்திரீ யார்? இவள்என்ன பேருடையவள். ஒன்றுந்தெரியவில்லையே! அன்றியும் இந்த ஸ்திரீ ஸ்திரீயாகத் தோன்றவில்லை அநேகமுகங்களையுடையவளாகியும் அநேகநேத்திரங்களையுடைய வளாகியும் அநேகங்கரங்களையுடையவளாகியும் தூரத்தில் பிரகாசிக்கின்றாள்

இதிற்சந்தேகமில்லை. ஆகையினால் இவள் அப்சரஸ்திரீயுமல்லள், கந்தர்வ ஸ்திரீயுமல்லள்,தேவஸ்திரீயுமல்லள் இவள் யாரோவென்று சந்தேகத்தை யடைந்தவர்களாயிருந்தோம். ஓ நாரதனே? அப்பொழுது இந்த விஷ்ணுபகவான் புன்னகையோடு கூடிய அந்த தேவியைப்பார்த்து தன்னுடைய ஞானவிசேஷத்தினாலே ஜகன்மாதாவென்று நிச்சயித்து எங்களைப் பார்த்து அத்தேவியின் பெருமையைச் சொல்லத்தொடங்கினர்.

இவள் நாமெண்ணிய ஸ்திரீயல்லள். இவள் பகவதியாகிய தேவீ, நமக்கெல்லாம் காரணமா யிருக்கின்றவள், மகாவித்யா சொரூபிணியாகியும், மகாமாயா சொரூபிணியாகியும், எங்கும் நிறைந்தவளாகியும், அற்பமதியுடையவர்களால் அறிந்தடையப் படாதவளாகியும், யோக நிஷ்டையினால் அறிந்தடையத் தக்கவளாகியும், நம்மாலறியக்கூடாத அநுக்ரக சாமர்த்தியத்தையுடையவளாகியும், தன்னிச்சையின்படியே யாவுஞ் செய்கின்றவளாகியும், நித்யா நித்ய பதார்த்த ஸ்வரூபிணியாகியும், புண்ணியக் குறைவுடையவர்களால் ஆராதிப்பதற்குக் கூடாதவளாகியும்,தேவியென்கிற சொல்லுக்குப் பொருளாயுள்ளவளாகியும்,ஜகந்நாயகியாகியும், நித்யமங்களையாகியும், வேதங்களுக்கு உற்பத்திஸ்தானமாகியும், விசாலமாகிய நேத்திரங்களோடு கூடினவளாகியும், எல்லாப்பொருள்களுக்கும் ஆதியானவளாகியு முள்ள இந்த ஈஸ்வரியானவள் சகத்பிரளயத்தில் சமஸ்தமாகிய பிரபஞ்சத்தைச் சம்ஹரித்து எல்லாவான்மாக்களுடைய சூக்ஷ்ம சரீரங்களைத் தன்னிடத்தி லொடுக்கிக்கொண்டு விளையாடுகிறாள். ஓ பிரம ருத்திரர்களே! சர்வபீசாட்சர சொரூபிணியாகிய இந்த தேவியானவள் இப்பொழுது காணப் பிரகாசிக்கின்றாள். தேவியினுடைய பக்கங்களில் திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாகியும், பலசக்திகள் காணப்படுகின்றார்களல்லவா? அவர்களெல்லாம் அந்த தேவியினுடைய அம்சங்களாகும். நாம் தேவியினுடைய இந்த சொரூபதரிசனம் கிடைக்கப்பெற்றோ மாகையால் தன்யாராயினோம், மஹானுபாவராயினோம், கிருதகிருத்யராயினோம். இவ்வாறுவதற்கு நாம் பூர்வத்தில் நீங்காத முயற்சியினாலே தவஞ் செய்திருப்போம், அந்த தவத்தினுடைய உத்தமமானபலம்இந்த சொரூபதரிசனங்கிடைக்கச்செய்தது. இல்லாவிட்டால் இவ்வளவு பிரேமையுடன் இந்த தரிசனம் எப்படி கிடைக்கப்பெறுவோம். ஏனென்றால் புண்ய சமூகத்தை யுடையவர்களாகியும்,

பண்டிதர்களாகியும், விரதானுஷ்டானபரராகியும் இருக்கின்றவர் ஓர்கால் ஆசையின் வசப்படுவரானல் அவர்கள் இந்த திவ்யமங் களசொரூபியாகிய தேவியைத் தெரிசிக்கப்பெறுவாரா? பெறார். பரசிவத்தோடு கூடியிருக்கிற இந்த மகாதேவி மூலப்பிரகிருதி (காரணமாயுள்ளவள்) ஆகையினல் பிரமாண்டங்களைச் சிருட் டித்துப் பரமாத்மாவுக்குக் காண்பிக்கிருள். ஓ பிரமசங்கரரே! எந்த பகவான் எல்லாப்பிரமாண்டங்களையும் தேவசமுகங்களை யும் படைத்துப் பார்க்கின்றுரோ அந்த பரமேஸ்வரருக்கு சர்வ சொரூபிணியாகியும், மஹாமாயா சொரூபிணியாகியும், எல்லாவ ற்றிற்குந் தலைவியாகியும், சர்வான்மாக்களுக்கும் மங்களத்தை நினைப்பிக்கின்றவளாகியு மிருப்பவள் இந்த தேவியே. இவளு டைய பெருமையைச்சொல்ல நானெவ்வளவினன். மற்றைய தே வர்கள்தா னெவ்வளவினர். ஸ்ரீதேவி முதலிய தேவஸ்திரீகள் தா னெவ்வளவினராவர். இந்த பரமேஸ்வரியினுடைய லக்ஷம்பாகத் தில் ஓர்பாகத்திற்கேனும் ஒப்பிடும் அளவினையுடையே மல் லோம். ஆகையால் அவளே நிற்குனியாக்கும் லீலாபேதத்தால் குணராயும் தோற்றுவர் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிரமதேவரிடத்தில் பிரம்மாண்ட உற்பத்திகேட்டது
முற்றிற்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9 - NOV 1911
MADRAS

---

### நாரதர் : பிரமனிடத்தில்

## குணபேதங் கேட்டது.

இதைக்கேட்ட நாரதர் பரமானந்தமடைந்து மருபடியும் பிரம்மனைப்பார்த்து ஓ என்தந்தையே! ஆதியாகியும், யகடுக்கப் படாதவராகியுமிருக்கின்ற புருஷன் (பரமாத்மா) ஒருவனுளனெ ன்று தேவிகூறியதாகச் சொன்னீரன்றே, அவர் எப்பொழுதாவ து தரிசிக்கப்பட்டிருக்கின்றனரா! அநுபவிக்கப்பட்டிருக்கின்ற னரா! என் தந்தையாகிய ஓ பிரமதேவரே! முக்குணங்களோடு கூடிய சக்தியானவள் காணப்பட்டனளேயன்றி நிர்க்குணையென் றுசொல்லிய அச்சத்தி காணப்படவில்லை அவள் எப்படிப்பட்ட வள்! அவ்வுண்மை தெரியவில்லை; ஆகையால் முன் சொல்லிய பரயபுருஷனுடைய நிர்க்குணசொரூபத்தையும், நிர்க்குணையா

யிருக்கின்ற சத்தியினுடைய சொரூபத்தையும், எனக்குச்சொல்லவேண்டும். நான் முன்னோர் நிமித்தத்தினுல் ஸ்வேதத்வீபத்தில் ஓர் அரியதவஞ்செய்தேன், அப்பொழுது கோபத்தைச் செயித்தவர்களாகியும், சித்தபுருஷாளாகியும், மஹாத்மாக்களாயுமிருக்கின்றமுனிவர்கள் தரிசனமாயினர். அக்கூட்டத்தில் நீர்சொன்ன பரமாத்மாவானவர் என்னுடைய திருஷ்டிக்கு அவர்களைப்போலும் விஷயமாகக்காணப்படவில்லை நான் ஸ்வேத த்வீபத்தில் அடிக்கடியும் தீவிரமாகிய தவத்தைச்செய்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்றந்தையே! குணசகிதமாகியசிவமும், அத்யந்தம் மனோரமையாகிய சக்தியுந் தரிசிக்கப்பட்டனரேயன்றி நிர்க்குணையாகிய சத்தியும், நிர்க்குணராகிய பரமாத்மாவுந் தரிசிக்கப்பட்டார்களில்லை. அவ்வரிய பெரியோருடைய சொரூபங்களைச் சொல்லுமென்றுகேட்க, பிரமன் புன்சிரிப்புடன் விடைகூறத்தொடங்கினன். ஓ நாரதனே! குணரகிதராயிருக்கின்ற பரமாத்மாவினுடைய ரூபமானது திருஷ்டிக்குக் கோசரம் ஆகவேமாட்டாது. ஏனெனில் எது த்ருசியம் அது நஸ்சியம். ஆகையினாலே அதிர்சியமானது எப்படிகாணப்படும், குணரகிதமாயிருக்கின்ற சக்தியும் சிவமும் அறிவதற்குக்கூடாதவர். அறியவேண்டுமாயின் மஹரிஷிகள்போல் ஞானத்தினுலுணர்ந்து தியானித்தல்வேண்டும்.

ஓ நாரதனே! ஆதியந்தமில்லாத அந்த பிரகிருதிபுருஷர் (சக்திசிவங்கள்) அன்பினு லடையத்தக்கவர், அன்பற்றவர்களாலடையக்கூடாதவர், சொல்லுக்கு அர்த்தமாய்த் தெரிந்துக்கொள்ளத்தக்கவர், தேஜோரூபியாயுள்ளவர், அவருடைய தேஜஸானதுசரம் அசரமாகியஎல்லாப்பொருளிலும் வியாபகத்தையடைந்து நித்யமாயிருக்கின்றபடியால் சிவமும் சத்தியும்எல்லாப்பொருளிலும் வியாபகமாயிருக்கிறதென்று கூறப்பட்டன வென்றறியக்கடவாய் சகத்தில் சிவசத்திகளைப் பிரிந்திருக்கிற வஸ்துவொன்றுமில்லை. எப்பொழுதும் நாசரகிதர்களாகியும், ஸ்ரேவடிவமாக விருக்கின்றவர்களாகியும், சித் சொரூபிகளாயும், நிர்க்குணரகிதர்களாகியும், நிர்மலர்களாகியும், பிரியாதவர்களாயுமிருக்கின்றஅச் சிவசத்திகள் தேகமாகிய ஆலயத்தில் தியானிக்கத்தக்கவர்கள். ஓ நாரதனே! பரசிவந்தான் சத்தி, சத்திதான் பரசிவம். இந்தச் சிவசத்திகளுக்குள்ள அபேதத்தைச் சிறிதேனும் எவனும் அறியமாட்டான். வேதங்களைச் சாங்கமாக அத்யயனஞ்

செய்தாலும் அந்தச் சிவசத்திகளாலுண்டாகும் சுகானந்தத்தை யறியலாமேயன்றி அவர்களை எவ்வாற்றானும் அறியமுடியாது. தாவரசங்கமமாகிய சர்வப்பிரபஞ்சமும் அகங்கார தத்துவத்தினின்றுந்தோன்றியது. இந்த அகங்காரதத்துவத்திற்கு வேறாகிய சிவசத்திசொரூபமானது அநேககற்பங்களானாலும் எப்படி காணப்படுவதாகும், ஏனெனில் குணத்தோடு கூடினவன் நிற்குணமானவஸ்துவை நேத்திரத்தினால் எவ்வண்ணம்பார்ப்பான். ஆகையால் சகுணமூர்த்தியை நீ அறிவுடன் தியானஞ்செய்வாய். பித்தநீரால் வியாபிக்கப்பட்ட நாவானது உறப்புமுதலிய சுவையையும் உருவமுதலியவற்றையும் அறியவுங் காணவுங்கூடுமா! அதுபோல் முக்குணங்களால் சூழப்பட்டிருக்கின்ற மனமானது நிர்க்குணமான பரமாத்மாவை எப்படிதெரிந்துக்கொள்ளும்! குணங்கள் அகங்காரத்தினின்றுண்டாயது, அதனால் அதன் சம்பந்தமுடையது. அந்த பரமாத்மாவோ அகங்காரத்துக்கு அப்பாற்பட்டவர். எதுவரையில் குணசூனிய மாகவில்லையோ அதுவரையில் அந்த பரமாத்மாவினுடைய தரிசனம் எப்படிகிடைக்கும். எப்பொழுது சித்தத்தில் அகங்காரநிவர்த்தி யுண்டாகின்றதோ அப்பொழுது அந்த பரமாத்மாவைத் தரிசிக்கலாம். அவர் தூல சூக்ஷ்மாதி பேதங்களால் இரண்டுருவமுடையவரென்று சொல்லப்படுவர். இரண்டில் சூக்ஷ்மமென்று சொல்லப்படும் உருவம் ஞானரூபம். அது எப்பொழுது சித்தத்தில் அகங்காரநிவிர்த்தியுண்டாகின்றதோ அப்பொழுது அந்த பரமாத்மாவைத் தரிசிக்கலாம். ஆகையால் சகுணமூர்த்தியை அறிவுடன் தியானஞ்செய்து வருவாய் என்றனர்.

25851

மூன்றுகுணங்கள் இது இதுவென்றும், அகங்காரம்-சாத்விகம் ராஜசம் தாமசமென்கிற மூன்று பிரிவினையுடைத்தென்றுங் கேட்டிருக்கின்றேன்; அவைகளுடைய சொரூபங்களிதுவிதுவென்று தனித்தனியேசொல்லுவதுமன்றி நான் எதைத்தெரிந்துக்கொண்டால் பந்தத்தினின்றும் விடுபடுவேனோ அந்த ஞானாத்மகமான விஷயத்தையும், பலபலவாய் விரிந்திருக்கிற குணங்களையும், விவரமாகச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பிரமன் ஒ பரிசுத்தனே! சத்தி-ஞானசத்தி,கிரியாசத்தி,திரவியசத்தியென மூன்றுவகைப்படும் இந்த மூன்றுசத்திகளும் முறையே சாத்விகமுதலிய மூன்றுகுண சம்பந்த முடையவைகளாயிருக்கும். தாமசகுண சம்பந்தமுடைய திரவியசத்தியினின்றும் சத்த

பரிச ரூப ரச கந்தங்கள் தோன்றும், இவ்வைந்தினையுந் தன்மாத்திரைகளென்று சொல்லப்படும். இவற்றிற்கு அதிதேவதைகள்-வாயு, சூரியன், வருணன், அசுவினிதேவதைகள். இந்த சத்த முதலிய வைந்தில் தனித்தனியே சத்தகுணாத்மகமான ஆகாசமும், பரிசகுணாத்மகமான வாயுவும், ரூபகுணாத்மகமான அக்னியும், ரசகுணாத்மகமான அப்புவும், கந்தகுணாத்மகமான பிரிதிவியுந்தோன்றும், சத்தமுதலிய தன்மாத்திரையைந்தும், ஆகாசமுதலிய பூதமைந்தும் ஆக பத்தும் இவைகளை யனுசரித்துத்தோன்றுமவைகளும், திரவிய சத்தியாகிய தாமச அகங்காரத்தினின்றுந் தோன்றுமவைகளாம். சுரோத்திராதிகளைந்தும், வாக்காதிகளைந்தும் ராஜச அகங்காரத்தினின்று முண்டானவைகளாம். இவை ஞானேந்திரிய கன்மேந்திரியங்களெனப் பெயர் பெறும். இந்திரியபஞ்சகங்களும், பிராணாதி வாயுபஞ்சகமும் ஆகப்பதினைந்தும் ராஜச அகங்காரசிருஷ்டி என்று சொல்லப்படும். இவையெல்லாங் கிரியாசத்தி சொரூபங்கள். இந்தக் கிரியாசத்தியே உபாதானம். இதனுடைய விருத்திகள் மேலேகூறிய தத்துவங்கள் மனமுதலிய அந்தக்கரணங்கள் சாத்வீக அகங்கார சிருட்டியென்று சொல்லப்படும். இவற்றிற்கு அதிதேவதைகள்-சந்திரன், பிரமன், உருத்திரர், க்ஷேத்ரஜ்ஞர். இனி பஞ்சீகரணமுறையாவது யாதெனின்; முதலில் ரச தன்மாத்திரையை எடுத்து அப்பு பூதத்தையுண்டாக்கி அதுபோலவே ஏனைய தன்மாத்திரைகளினின்றுந் தனித்தனியே புத்திதத்துவத்தினால் ஏனைய பூதங்களையுமுண்டாக்கி எல்லாவற்றையுஞ் சலதத்துவத்தி லடக்கிப் பின்னர் சீவனைப் பிரவேசிப்பிக்கச் செய்கிறபொழுது நான் என்கிற அகங்காரஞானஞ் சிறிதுண்டாகிறது; இவ்வாறான பூதபஞ்சீகரணஞ்செய்து பிண்டமாக்கி அதில் சீவப்பிரவேசஞ்செய்வதாகிய சிருட்டியைச்செய்பவன் யான். ஆத்மக்கிருகமாகிய அந்த தேகதத்துவத்தை ரக்ஷிக்கின்றவர் பகவானாகிய ஆதிநாராயணர். இவரால் தநுகரணாதிகள் குறைவின்றி நிரம்பிவரும்பொழுதுஒவ்வொரு தத்துவத்தினுடைய குணங்கள் விருத்தியடைகின்றன. அவற்றுள் ஓரம்சங் கூறுகின்றேன். ஆகாசத்தில் சத்தகுண விருத்தியொன்றும், வாயுவில் அம்மூன்றனோடு ரசமும், பிரிதிவியில் அந்நான்கனோடு கந்தமும் ஆகிய குணங்கள் விருத்தியை யடைகின்றன.

இவ்வாறு குணவிருத்திகளாவதற்கு இடமாயுள்ள சரீரதாரிகளாயுள்ள ஆத்மகோடிகள் எண்பத்துநான்குலக்ஷம் பேதங்களாகவிருக்கும். இப்பொழுது கூறிவந்த அண்ட பிண்டங்களாகிய உருவங்களெல்லாம் பரமாத்மாவினுடைய ரூபங்களென்று சொல்லப்படும். இந்த விசாரம் வருமிடத்திற் கூறுகின்றேன். இவ்விடத்தில் பிரமாண்டவுற்பத்தி கூறிவந்தேனுகையால் அதனையே விரிவாயெடுத்துச்சொல்லவேண்டியது அவசியம்; ஆயினும் அந்த பரமாத்மா தூலசூக்ஷ்மாதி பேதங்களால் இரண்டுருவுடையவராகச் சொல்லப்படுகின்றது; இரண்டில் ஒன்றாகிய சூக்ஷ்மமாகிய ஞானரூபம் நிராகாரமாகவும், நிதானம் (எல்லாவற்றிற்கும் ஆதிகாரணம்) ஆகவுஞ் சொல்லப்படுகின்றது. மற்றொன்றாகிய தூலரூபம் உபாசகருடைய தியானாதிகளில் வருகிற சகளரூபமாகும். அச்சகளரூபம் தூலரூபமென்று சொல்லப்படுமேயன்றி உண்மையாயாராயின் காணக்கூடாத சூக்ஷமரூபமேயாம். எங்ஙனமெனின்; அந்த பரமாத்மாவினுடைய சகளரூபம் என்னை முதலாயினாருடையசூத்திரரூபமாயுள்ள சரீரங்களையசைப்பிக்கக்கொள்ளும் உருவமேயன்றிக் கன்மசம்பந்தத்தினால்வரும் உருவமன்றாகும், எனவே சிருட்டி முதலிய தொழில்களுக்குக் கர்த்தாக்களாயிருக்கின்றவர் பிரமனாதியர், அவர்களால் சிருட்டிக்கப்படுவோர் ஏனைய ஆன்மகோடிகள் ஆகவே பிரமனாதியர் சூத்திரம் (கயிறு) போன்றவராகிய பிரமனாதியர் வழியில் சராசராத்மகமாகிய ஆன்மகோடிகள் பதுமைபோன்று நிற்பவர்கள்; ஆகையால் இவ்வான்மகோடிகள் சனனமரணமென்கிற சலிப்பினை (அசைதலை)யுடைய, பிரமனாதியராகிய சூத்திரங்களை யசைப்பிக்கக்கொள்ளும் உருவங்களேயாம். ஓ நாரதனே! நீ எதையுணர்ந்தால் பந்தத்தினின்றும் விடுபடுவேனோ அந்த ஞானாத்மகமான விஷயத்தையும் சொல்லவேண்டும்' என்று கேட்டனையாதலால் அது இந்த விஷயந்தானென்று உன் மனதில் வேரூன்றக் கூறுகின்றேன் கேட்பாயாக.

---

## இதுவுமது.

ஓ அப்பனே! இதுவரையில் நீகேட்டவைகளுள் சிலவற்றிற்கு விடைகூறிவந்தேன். இனிக் குணங்களுடைய சொரூபலக்ஷணத்தை சொல்லுகின்றேன் ஒருமைப்பட்டமனமுடையவனாய்க் கேட்பாயாக. சாத்விகம் ராஜசம் தாமசமென்று சொல்லப்பட்ட

மூன்று குணங்களில் சத்வகுணமானது வெண்ணிற முடையதாய்ப் பிரீதிவடிவமாய்ச் சுகத்தை யாதாரமாகவுள்ளது. அந்தச்சத்துவ குணத்தினின்றுந் தோன்றுவன; மாறுபடாமை, சத்தியம், ஆசாரம், சிரத்தை, பொறுமை, தைர்யம், தயை, நாணம், சாந்தம், சந்தோஷம், தர்மானுஷ்டானத்தில் பிரியத்தைச்செய்தல், எப்பொழுதும் சத்விஷயத்தில் சிரத்தையை யுண்டுபண்ணுதல், அசத்விஷயத்தில் சிரத்தையை நிவர்த்திபண்ணுதல் முதலியன. இவைகள் அச்சத்துவத்தில் நிங்காதிருப்பன. இவற்றுள் சிரத்தை, மூன்றுவிதமென்று தத்வஞானிகள் கூறுவர், அவை சாத்வீக சிரத்தை, ராஜசசிரத்தை, தாமசசிரத்தை என்பன. ரஜோகுணமானது சுவந்தநிறமுடையதாய் அப்பிரீதிவடிவமாய்த் துக்கத்தை யாதாரமாயுள்ளது. அந்த ரஜோகுணத்தினின்றுந்தோன்றுவன-அதிகத்துவேஷம், துரோகம், மாச்சரியம், டம்பம், பேராசை, நித்திரை, அசிரத்தை, மானம், அடங்காமை, கர்வமுதலியன. தமோகுணமானது கருமைநிறமுடையதாய்ப் பிரமிக்கச்செய்யு மியல்பாயுள்ளது. இந்த தமோகுணத்தினின்றுந் தோன்றுவன-துக்கத்தை விளைவித்தல், பிறருக்குத் தாபத்தை விளைவித்தல், ஆலஸ்யம், அஞ்ஞானம், நித்திரை, தீனபாவம், விவாதம் (சண்டை) கார்ப்பண்ணியம், கபடம், ரோஷம், வைஷம்யம், நாஸ்திகபுத்தி, புறங்கூறுதல், தமோரூப விஷயங்களில் சிரத்தைமுதலியன. ஆகையால் புண்ணியத்தை விரும்புகின்றவன் சத்துவகுணவிருத்தியை விருத்திசெய்து, ரஜோகுணவிருத்தியை யடக்கியாண்டு, தமோகுண விருத்தியை யொழித்தல்வேண்டும். இம்மூன்று குணங்களுடையவிருத்திகளொன்றுக்கொன்று பொருத்தமுடையன வாகக் காணப்படாமையால் ஓ நாரதனே! விரோதப்பட்டவைகளாகவே யிருக்கும். இந்த மூன்று குணங்களும் பிரியாமலிருக்கின்ற மிதுனராசியைப்போல் சீவர்களைவிட்டிருப்பதில்லை. சீவர்களும் குணங்களை விட்டிருப்பதில்லை. ஆகவே குணங்கள் ஒன்றைப்பற்றியிராம லிருக்கத்தக்கனவன்றென்று அறியற்பாலன. சீவர்களைப்பற்றியிருப்பதாகிய முக்குணங்களும் தனித்தனி இருப்பன அன்று; மூன்றுஞ் சேர்ந்தேயிருப்பன, இவைகளுடைய விருத்திகள் மாத்திரந் தனித்தனியிருப்பன, இதனைப் பின்னர் கூறுகின்றேன். ஒருவனிடத்து சத்வகுணவிருத்தி மேலிட்டிருக்குமாயின் ஏனைய இரண்டுகுண விருத்திகளும்அடங்கியிருக்கும். அப்படியே ரஜோகுண விருத்தி மேலிட்டிருக்குங்கா

லத்தில் சத்துவ தமோகுணவிருத்திகளும், தமோகுணவிருத்தி மேலிட்டிருக்குங்காலத்தில் சத்வ ரஜோகுண விருத்திகளும் அடங்கியிருக்குமென் றறிவாய். ஓநாரதனே! இப்பொழுது என்னுலே சொல்லப்பட்ட குணரூபவிசாரத்தை உணரக்கடவாய்; மறுபடியும் சந்தேகம் வைத்துக்கொள்ளவேண்டாம். இவ்வுண்மைகளும் இக்குணங்களுடைய அனுபவமும் அனுபவத்துக்குவருங் காலத்தில் நன்குயறியப்படும். அவ்வனுபவ காலமன்றிக் கேட்பதனுலேயும், சாத்திரங்களைப் பார்ப்பதனுலேயும், சத்கர்மாநுஷ்டானங்களை யநுஷ்டிப்பதனுலேயும், அறியமுடியா.

எப்படியென்றால், பரிசுத்தமாகிய தீர்த்தமகிமையைக்கேட்ட ஒருவன் ரஜோகுண சம்பந்தமாகிய சிரத்தையுடையவனுய் அத்தீர்த்தத்தை யடைந்துஅவன் றன்மையைப்பார்த்து நீராடி அவ்விடத்திற் செய்யவேண்டிய தீர்த்த சிரார்த்தாதிகளியற்றி, தானமுங்கொடுத்து, சிலகாலம் வசித்து, பின்னர் முன்னிருந்ததுபோலவே ரசோகுணத்தோடு கூடினவனுகவும், ராகத்துவேஷங்கள் நீங்காதவனுகவும், காமக்குரோதங்களாற் சூழப்பட்டவனுகவும், தன்னிடம்வந்து சேருவனுயின் அவனுக்குத் தீர்த்தஸ்நானுதிகளால் வரும்பலன் வந்தனவோவென்றால் வந்தனவன்று. ஏனெனில்;—பயிரிடவெண்ணங்கொண்டவொருவன் விளைநிலமல்லாத களர்நில முதலியவைகளில் மிகவுங் கஷ்டப்பட்டு உழுதும், விதைவிதைத்தும், களைபறித்தல் முதலிய சீர்ப்பாடுகள் செய்தும், மாடு முதலிய மிருகங்களால் கெடுதிவாராவண்ணம் இராப்பகல் காத்தும், உண்டாக்கிய பயிர் பிரயோசனப்படுங் காலத்தில் பூச்சிகளால் பக்ஷிக்கப்படுமோயின் அவன் வருத்தமுற்றவனுவானே யன்றிப் பலன்பெற்றவனுவனு? அவ்வுழவனைப் போலவே "ரஜோகுண சம்பந்தமாகிய சிரத்தையுடையவனுய்த் தீர்த்தஸ்நானத்துக்குச் சென்ற இவனும் வருத்தமுற்றவனுவனேயன்றிப் பலன்பெற்றவனுகான்." இவ்விருவரும் பெற்றது கஷ்டமொன்றே, ஏனெனில்; விதைவிதைக்கத் தொடங்கினவனும் நிலத்திலுள்ள குற்றங்களை யாராயாது விதைத்தவன், ஸ்நானஞ்செய்யத்தொடங்கினவனும் தன்னுள்ளத்திலுள்ள குற்றங்களை யாராயாது செய்தவன்.

ஆகையால் நிலத்திலுள்ள குற்றங்களை யாராய்ந்தொழித்து செய்யவேண்டுவனயாவு முறைப்படச்செய்து, முடிவில் பிரயோ

சனமாகிய தானியத்தைப்பெற விரும்பும் உழவன் பலன்பெற்றுச் சுகமுறுவன். தீர்த்தபலனைப்பெற விரும்பினவனும் குணபேதங்களையும், குணங்களின் விருத்திபேதங்களையும் ஆராய்ந்து ஒழிக்க வேண்டுவனவற்றையொழித்துக் கொள்ளவேண்டுவனவாகிய குணங்களைக்கொண்டு பின்னர் செய்யத்தகுவனவாகிய சத்கர்மங்களைச்செய்து அவற்றின் பிரயோசனத்தை ஆரம்பத்திற்றானே பெறவிரும்பாது முடிவிற்பெற விரும்புவனாயின் அவன் அவற்றின் பலன்களைப் பெற்றுச் சுகமுறுவனென்றறிக.

இதுகாறுங்கூறிவந்த உபமான உபமேயங்களால் முன்கூறியவாறு குணங்களுடைய அனுபவம் தன்னனுபவத்திற்கு வருங்காலத்தில் நன்றாயறியப்படுமென்றி அதற்குமுன் கேட்குங் கேள்வியினாலும், பார்க்கும் பார்வையினாலும், அனுஷ்டிக்கும் அனுஷ்டானங்களினாலும் அக்குணங்களை யறியமுடியா' என்றதனை நன்கு விளக்கியதாகும். இச்செய்தி யிங்ஙனமிருக்க.

இனி முன்கூறிவந்த சத்துவமுதலிய குணங்களுடைய அனுபவம்—அதனதனுடைய அடையாளங்கள் இதுவிதுவென்றுதெரிந்தாலன்றித் தள்ளுங்குணங்களும், கொள்ளுங்குணங்களும் செய்யுங் கருமங்களும் தோன்றுவாகலான் அவற்றைக் கூறுகின்றேன்.

சத்வகுணம். இதுவென்றறிதற்கடையாளம் யாதெனின்; புத்தியானது—தர்மானுஷ்டானத்தில் பிரவிர்த்தித்திருக்கச்செய்தலும், தனக்குத் துன்பந்தரும் பாபார்ஜ்ஜிதமல்லாத திரவியத்தைத் தேடச்செய்தலும், யஜ்ஞாதி வேதகருமங்களை விரும்பச்செய்தலும், சாத்விகமாகிய யோகங்களிலே காமத்தைச்செலுத்தச்செய்தலும், மோக்ஷசாதனங்களிற் சிந்தனை யிருத்தச்செய்தலும், ஆன்மலாபத்துக்கு உதவியாகாத ரஜோகுண தமோகுணப்பிரவிர்த்திகளிற் செல்லாதிருத்தச் செய்தலும், ராஜசதாமசகுண ரூபிகளிடத்தில் சேராதிருக்கச் செய்தலும், அக்குண விருத்திகளை வெற்றிகொள்ளச் செய்தலுமாம்.

ரஜோகுணம். இதுவென்றறிதற் கடையாளம்யாதெனின்; சாத்திர சம்பந்தமாயிருக்கின்ற தருமங்களை விட்டுவிடுவதும், ராஜச சம்பந்தமாயிருக்கின்ற சிரத்தையடைந்து அசாஸ்திரீயமான்தருமங்களைச்செய்வதும், புண்ணியம் பாவமென்னும் பகுப்

பின்றி திரவியத்தைத்தேடுவதும், ரஜோகுண சம்பந்தமாகிய போகங்களைவிரும்புவதும், சாத்வீக தருமத்தை வெறுப்பதுமாம்.

தமோகுணம். இதுவென்றறிதற் கடையாளம் யாதெனின்; வேதத்தினிடத்தும், வேதார்த்தத்தை விளக்கவல்ல சாத்திரங்களிடத்தும் அவிஸ்வாசமும், தமோகுண சிரத்தையடைந்து திரவிய நாசஞ்செய்வதும், எல்லாரிடத்தும் துரோக சிந்தனையுடைத்தாயிருப்பதும், சாந்தியில்லாதிருப்பதும் கோபமேலிட்டிருப்பதும், மூர்க்கமடைந்திருப்பதும், தன்னிஷ்டம்போல் நடப்பதுமாம்.

இவைகளேயன்றி, இம்முக்குணங்களுக்கும் வேறு குணங்களுஞ் சிலவுள, என்னையெனில் சத்வகுணமானது சாத்திரஆராய்ச்சியினாலே விருத்தியடையின் அது பிரகாசமுடையதாய் ராஜச தாமச விருத்தி சம்பந்தமான கிருத்தியங்களில் வைராக்கியத்தைச்செய்து ரஜோகுண தமோகுணவிருத்திகளையும் நீக்கிவிடும். ரஜோகுணமானது—உலோபசம்மந்தத்தினால் விருத்தியடைந்து சத்துவ தமோகுண விருத்திகளை நீக்கிவிடும். தமோகுணமானது அஞ்ஞான சம்பந்தத்தினாலே விருத்தியடைந்து ஏனைய இரண்டு குணவிருத்திகளையும் நீக்கிவிடும். இவ்வண்ணம் சத்வமுதலிய மூன்றுகுணங்களில் ஒன்று பிரதானமாகும்பொழுது அதுஏனைய விரண்டு குணங்களையு நீக்கிவிடும்.

இப்பொழுது கூறிவந்த முக்குண வடையாளங்களும் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொருகுண வடையாளங்களிருப்பதன்று. யாவரிடத்தும் மிறுனதர்மம்போல் மூன்றுவித வடயாளங்களாகச் சொல்லப்பட்ட செய்கைகள் யாவுமிருக்கும். ஏனெனில் ரஜோகுணத்தைவிட்டு சத்துவகுணமும், சத்வகுணத்தைவிட்டு ரஜோகுணமும். இவ்விரண்டுகுணங்களைவிட்டுத் தம்மாகுணமுமிருப்பதன்றென்றும், இம்முக்குணங்களும் சீவர்களைவிட்டிருப்பதில்லை என்றும் முன்னமே கூறியிருக்கின்றேனாகையால் அம்முக்குண வடையாளங்களும் சீவர்களை விட்டிருப்பனவன்று. ஆகையால் சீவர்கள் முயலும் காரியப்பாடுகள் எவ்வச்சமயங்களில் எவ்வெவ்விதமாய் வருமோ அவ்வக்காரியப்பாடுகளுக்கேற்றவாறு அவ்வக்குணவடையாளங்களுண்டாகும்; ஏனெனில் இம்முக்குணங்களும் பிரசவதருமம் (தாயாகும் தருமம்) உடையது. சத்வகுணப் பிரதானனாகவேயிருக்கின்ற ஒருவனிடத்தில்

ரஜோகுண, தமோகுணங்களும், அப்படியே ரஜோகுணப் பிரதானனிடத்தில் சத்துவகுண தமோகுணங்களும், தமோகுணப் பிரதானனிடத்தில் சத்துவகுண ரஜோகுணங்களும் மண்ணினிடத்தில் கடகலசாதிகள் தோன்றும் வகைபோற் றோன்றுகின்றன. ஆகையால் அறிவுடையவன் தானெடுத்த சரீரத்தைப்பார்த்து இது பாபகர்மத்தினல் வந்ததல்லவா வென்றாராய்ந்து இப்பாவம் புத்தியின்கணிகழ்வதாகிய குணகன்மங்களாலென் றாகித்து இவைகளொழிக்கற்பாலனவா மென்றெண்ணி அந்தோ! இவைகள் தேவதத்தர், விஷ்ணுதத்தர், யஜ்ஞுதத்தர் முதலான பேருடையவரைப் போலும், ஆண் பெண்ணுருவமாயிருக்கின்ற மிதுனராசியைப்போலும், இருப்பதாகலான் நீங்குவதலதென்று தெளிந்து சரீரசம்பந்தமுள்ள வரையில்நீங்காதனவாகிய காமம்-குரோதம்-லோபம்-மோகம்-ஆசை-துவேஷம்-மதம் - அசூயை - ஈரிஷை-பொறாமை - மனக்களிப்பு முதலாயினவற்றைத் திநே திநே புத்தியின்க ணிகழாவண்ணஞ்செய்து சரீரத்தையும், சரீரசம்பந்தியாயிருக்கின்ற ஆத்மாவையும் பரிசுத்தஞ் செய்தல்வேண்டும். ஓ நாரதனே! இதுவரையில் ரஜோகுணத்துக்குச் சத்வகுண சம்பந்தமும், சத்வகுணத்துக்கு ரஜோகுணசம்பந்தமும் தமசுக்கு இவ்விரண்டு குணசம்பந்தமும், சீவர்களுக்கு இம்முக்குணசம்பந்தமும் உடையனவென்று கூறினேனென்றனர்.

திரும்பவும் நாரதர்-பிரமதேவனைப்பார்த்து ஓதந்தையே! தேவரீருடைய வாக்கினின்றும் அதிரசமாய்ப் பெருகிய குணலக்ஷணமுதலியனவற்றைச் செவி என்கிற வாயினாற்பருகியுந் திருப்தியடைந்தேனில்லை; ஆகையினல் எனக்குத் திருப்தியுண்டாகும் வண்ணமாயும், எந்த விஷயத்தினல் யான் மேலாகிய சாந்தியை யடைவேனோ அந்த விஷயமாயுமுள்ள து குணங்களுடைய விசாரஞானமா யிருத்தலால் அந்தஞானத்தை எடுத்துச்சொல்லவேண்டுமென்று கேட்க சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்ம்மா கூறுகின்றார்.

ஓ நாரதனே? யான் குணங்களுடைய சொரூபம் இத்தன்மைத்தாமென்று நன்கு யறிந்தவ னன்றாயினும் ஒருவாறு என்னுடைய அறிவுக்கெட்டியவளவில் எடுத்துச்சொல்லுகிறேன் என்னையெனில், முக்குணங்களிற் சிறந்த சாத்வீககுணமே யாவரிடத்திலுஞ் சிறந்திருக்குமென்று நினையற்க. அப்படி ஒருவரிடத்

திலும் இருப்பதாகக் காணப்படவில்லை ஏனெனில், அம்மூன்று குணங்களும் ஒன்றோடொன்று கலந்திருக்குந் தன்மையுடையனவாகையால் எவரிடத்திலுங் கலந்தேயிருக்கும், இதற்குச் சில திருஷ்டாந்தங் கூறுகின்றேன்.

சர்வாலங்கார சம்பன்னையாகியும், அபிநயபண்டிதை யாகியுமிருக்கின்ற ஒரு ஸ்திரீயானவள் தன்புருடனுக்குந் தாய்தந்தை முதலிய பந்துவர்க்கங்களுக்கும் பிரீதியுடையவளாக விருக்கின்றாள். அவர்களல்லாத ஏனையோர்க்கும் அவள் நன்னடையும்; நல்ல நய முடையவளென்றும், கற்பிலக்கண மறிந்து தருமநெறியில் நிற்கும் சாத்விககுண முடையவளென்றும் எண்ணச்செய்து இன்பத்தை விளைவிக்கின்றாள். அவளே சக்களத்தியருக்கு மாத்திரம் துக்கத்தையும், அஞ்ஞானமாகிய விபரீதச் செயல்களையும் விளைவித்தற்குக் காரணமாகின்றாள். சக்களத்தியருக்கு விளைவித்த துன்பம் ஏனையோர்க்கு விளைவிக்கின்றனளா? அதுபோலும், அக்கற்புடையவளே கள்வரால் பயந்து சிலர்ஓடிவருவாராயின் அவர்களுக்கு உபசாரஞ் செய்கின்றவளாகவும், அக்கள்வருக்குத் துன்பஞ்செய்யும் உபாயங்களைத் தேடுகின்றவளாகவும், தன் புருடனுக்குப் பரிவாரமா யிருக்கின்ற பரிசனங்களை ரோதனம் பண்ணுகின்றவளாகவும் ஆகின்றாள் அதுபோலும்; மேகக் கூட்டங்களாலே சூழப்பட்ட துர்த்தினமானது மின்னல் இடிமுதலியவைகளோடு கூடினதாயும், இருளா லடையப்பட்டதாயும், எங்கும்பெருகிவரும் பிரவாக முடையதாயும், தாமசரூபமென்று சொல்லப்பட்டதாயும், ஒருவரையும் வெளிவர வொட்டாமற் றடைசெய்வதாயும், சிதிலமான மேற்கூரை யுடையவர்களுக்கும் ஏழைமைக் குடிகளுக்கும், வைக்கோல் விறகு முதலியபொருள்களைக்கொள்ளுகின்றவர்களுக்குந் துன்பத்தை விளைவிப்பதாயு மிருக்கின்றது, பயிரிடுகின்ற வுழவர்களுக்குச் சுகத்தை விளைவிக்கின்றது அதுபோலும்; ஓ நாரதனே? சத்துவகுணமானது ரஜோகுண தமோகுணங்களுக்குத் துன்பத்தையும். தன்னினமான விருத்திகட்கு இன்பத்தையுஞ் செய்து கூடிவாழ்ந்து தான் பிரகாசமாகவே யிருக்குமென் றறிவாயாக.

ஓ புத்திரனே ? இன்னமும் அக்குணங்களுடைய லக்ஷணங்கள் சில கூறுகின்றேன், சத்துவகுணமாவது, பிரகாசமுடையதாய், களங்கமற்றதாய், நேத்திரமுதலிய இந்திரியங்களுக்கு

மனம் எப்பொழுதும் எப்படிவிஷயங்களைத் தெளிவாய்த் தெரி விக்கின்றதோ அப்படி நிர்மலமாயிருக்கின்றஅநேக பரமார்த்தங் களை அறிவிற் கறியச்செய்வதாய்விளங்குவது. ரஜோகுணமாவது கொட்டாவியையும் ஸ்தம்பம்போ லசைவற்றுஅறிவற் றிருத்தலை யும், சோம்பலையும், சித்த சலனத்தையும், உண்டு பண்ணுவதாய் ஊருக்குப்போகவேண்டிய ஒருவன் போகும்வழியை எவ்வண் ணந் தேடுவானே அவ்வண்ணம் பாபந்தேடும்வழியை நன்றாய்த் தேடச்செய்வதா யுள்ளது. தமோகுணமாவது ஞானத்தை மறைத்துச் சித்தத்துக்குச் சலனமுண்டாக்கிப் போர்புரிவதில் ஆவேசங்கொண்டு தலைப்பட்டிருக்கச் செய்வதாய், இந்திரிய ங்களுக்குச் சுகத்தைச் சூனியப் படுத்துவதாய், மனமுதலிய கரணங்களைச் சுவாதீனப் படுத்தாததாய், ஓய்ந்துறங்கவுஞ் செய் யாததா யுள்ளது. ஓ நாரதனே ? குணங்களுடைய லக்ஷணங்களை இம் முறையாகவும் அறியவேண்டுமென்றார். நாரதர்ஓதந்தையே முன் கூறியதிஷ்டாந்தங்களால் ஒன்றே சிலவற்றிற்குத் துன்பமா யும், சிலவற்றிற்கு இன்பமாயு மிருப்பதுபோல் குணங்களிருக்கு மென்று அறியலாயிற்று. இப்பொழுது கூறியலக்ஷணங்களையோ சிக்குங்கால் ஒன்றுக்கொன்று பெருஞ்சத்துருத்துவமாகவேகா ணப்படுகின்றன. இவைகள் ஒன்றாகக்கூடியிருந்து விவகாரங்களை எவ்வண்ணம் பிரகாசமாய் நடத்தும்அதைவிளங்கச் சொல்ல வேண்டு மென்று வினவ, பிரமதேவர் ஓ புத்திரனே! முன்கூறிய குணங்கள் தீபவிருத்தியைப்போ லிருப்பன. எப்படியென்றால், தகளியும், திரியும், தைலமும்வெவ்வேறாயும், வெவ்வேறு குணங் களை யுடையனவாயும் இருந்த போதிலும் தீபம் பிரகாசிக்கும் பொழுது அம்மூன்றுமின்றிப்பிரகாசிக்கின்றதா? அதுபோல்ஒரு குணம் பிரகாசிக்கும்பொழுது ஏனைய குணங்கள் தகளி முதலி யனபோ லிருக்கின்றனவென் றறியற்பாலதுஎன்று கூறவும், நார தர் அதுவரையில் தான் கேட்டுவந்தவினாக்களுக் கெல்லாம் விடைபெற்று மகிழ்ந்தவராயினர்.

பிரமனிடத்தில் குணபேதங்கேட்டது

முற்றிற்று.

---

## வியாசர்தவமும்
# சுகப்பிரமரிஷியின் ஜெனனம்.

கோடாகோடி கோடியாகிய வேதங்களையெல்லாம் சிக்கறுத்து எசுர்-இருக்கு-சாமம் அதர்வணமென்று நான்காகப்பிரித்து ஜடை சாகைகளுடன் உலகத்திற்கெல்லாம் ஆதாரமாகும்படி செய்தருளி சகல தபசுகளினாலும் திரிகாலக்கியானியாய் சாபானுக்கிரக சாமார்த்திய முடையவராய் அதிகதூய்மையாயிருக்கப்பட்ட வேதவியாச மகாமுனிவர் வெகுநாளாய் பிள்ளையில்லாமல் புத்திரன் வேணுமென்கிற யபேட்சையினாலே சூரியன் தினமும் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணிக்கொண்டு வராநின்ற வெள்ளியங்கிரிச்சாரலில் அருந்தவமிருந்து பர்வத ராஜபுத்திரியையும் பரமசிவனையும் கருத்திலிருத்திகடுந் தவசு பண்ணிவருங் காலத்திலே சிவனுக்கற்பிதமாகிய சில யாகங்களைச்செய்துமந்திர மூலமாய் அவிர்ப்பாகமளித்து சிவனை தியானித்து ஆனந்தகண்ணீர் விட்டழுது சரீரம்பொடித்துப் பூரிக்க நாவுகள் குழகுழத்துத் தழும்பேற நெஞ்சம் பஞ்சுபோலாகி வெண்ணெய்போலுருகி உடல்குழைந்து சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி பரவசத்தியானஞ்செய்து தன்னை மறந்தபோது ஏழைபங்காளனுக்குக் கிருபைவந்து யக்ஷகின்னரகருடகாந்தருவ சித்தவித்தியாதாருடன் அநேக கோடி ரிஷியீஸ்வரர்கள் தோத்திரம் பண்ணிக்கொண்டு மொய்த்து வரும்படியாக சகல ஜீவாத்மகோடிகளையும் ரட்சிக்கப்பட்ட சம்புவாகியநாதன் ரிஷபவாகனரூடராய் பர்வதியம்மனுடன் மான்மழுசதுர்ப்புசம் காளகண்டந்திரிநேத்திரத்துடனே காட்சிகொடுக்க அதைப்பார்த்த வேதவியாசர் சூரியனைக்கண்ட செந்தாமரைக் கமலம்போல் அகமகிழ்ந்து முகமலர்ந்து ஆனந்தமாய்க் கூத்தாடி பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி சாம்பசிவ மூர்த்தியின் திருக்கோலத்தைப் பார்த்துதன்னிலுமடங்காமல் மகிழ்ச்சிபூரித்து ஆனந்தவேர்வைவேர்த்து தோத்தரித்து மகாவிலாச உலாச கைலாசவாசியாகிய சுவாமியேயென்று உள்ளமுருகி நின்றார் அப்போது வேதவியாசரை கைலாசபதிநோக் கீரிழைத்த தவத்திற்கு நாமெத்தவுமெச்சினோம் உமது கோரிக்கையைக் கூறினால் கொடுப்போமென்று மொழிந்தார் வேதவியாசர் பணி

ந்து நிர்மலநிர்க்குண நிராகரநிச்சயமே அடியேனுக்கு ஆத்மக்கி யானமும் யோக்யமும் அறிவும் பத்தியுங் பஞ்சபூதசேஷ்டைக ளிலகப்படாப்பன்மையும் மாயையொழித்தமைந்த ஞெருவனை த் தந்தருள வேண்டு மென்று வருந்திக்கேட்க அப்படியே கொ டுத்தே னென்று திருவாக்கருளி வெள்ளியங்கிரிக் கெழுந்தருளி ஞர் இப்பால் வேதவியாசர் தபசுநிலைநீங்கி கயிலையங்கிரிச் சாரல் விட்டு இமயோத்கிரிக்குப் போய்ப் பர்ணசாலை யேர்ப்படுத்திக் கொண்டு வைதீக மடங்கட்டிவாசம்பண்ணி வருநாளையில் ஒரு நாள் தீக்கடையுங்கோலை செங்கையிற்பிடித்து அக்கினிபிறக்கு ம்படிக்குக் கடையும்போது மைதீட்டிய மயிற்கண்போன்ற செ வ்வரிபறந்த கண்களையுடைய அரம்பையானவள் அவ்விடம் வர க்கண்டார் அவளுடைய மதிமுகமும் மதர்த்தவிழிகளும் சுருட் டிய கடைக்கண்ணும் சுவர்ணகுடம்போற் தித்துப் பெருத்த கனதனமும் ஆல்வயிறும் மால்ரோமவரையு மாகத்தோற்றியசுந் தரத்தைக்கண்டு வேதவியாசர் மிகுமோகங்கொண்டு விலக்கக் கூடாத மன்மதபாணத்திற்கு இலக்காகி ஓமத்தீயில் உய்வது விடுத்து காமத்தீயில்கருகிமெலிந்து கண்பஞ்சடைந்து கலங்கி வருவதை முல்லைக்கொப்பாகிய பல்லையுடைய வல்லியறிந்து மன் மதன் கணையால்வாடி வேதவியாசரைநாடி மையல்தீரக் கலவிகூ டிமருவவேண்டுமென் றோடிவருபவள்போல நடைகாட்டி கெஞ் சிக்கெஞ்சிக் கொஞ்சிக்கொஞ்சிப் பஞ்சவர்ணம் அஞ்சும்போல் அஞ்சியஞ்சிவஞ்சி தஞ்சமீயென்று அளியாய் அழகிய கிளியாய் களிகொண்டு ஒருமரத்தின் கிளையிலிருந்தாள்.

வியாசர் வேளின்கணையால் மெலிந்துவேசாரிவிரகம் பொ றுக்கமாட்டாமல் நேரிற்கண்டநேரிழையழகும் அவள்நெருப்பும் காமப்பார்வையின் குறிப்பும் இவருக்குட்புகுந்து அவளை நினை ந்து நினைந்து உருகும்போது வீரியம்பெருகும்போது அது பூமி யில் விழப்படாதென்னும் புண்ணியத்தையெண்ணி கையிற்று ங்கிய காலையில் கையுநிறைந்து மெய்யுமறந்து நெருப்புக்கடைந்த குழியில் நிரம்பியது அதுஇவருக்குத்தெரியாமல் தன்னைத்தான் மறந்து அரணிக்கோலால் ஓயாமற்கடையும்போது அந்தச்சூடும் இந்தச்சூடுங்கலந்து அக்கினி ஜொலித்தெழுந்ததுபோல் மகத் தாகிய திவ்வியசுகமகாரிஷிபிறந்து சிறந்தார் உதயகிரியிலிருக் கும் சூரியனும்நாணும்படிக்குச் சுயம்பிரகாச காந்தியுடன் தோ ன்றிய சுகனென்னும்சுதனைக்கண்டு வேதாகமசாஸ்திர புராண

முதலாகியகலைகளுக்குரிய புருஷரும் பெரியோர்களும் அரியதவத்திற்குரியோர்களும் மெய்யன்பிறந்தான் எங்களையன்பிறந்தான் பிறந்தானென்று துதித்துக்கொண்டாடினார்கள்.

தருமதேவதை நீதிதேவதை வனதேவதை பூமிதேவதை முதலியபேர்களுமதித்து மகிழ்ந்தார்கள் தேவதுந்துமி முழக்கி புஷ்பமாரிபொழிந்தார்கள்சகலாத்மகோடிகளுக்கும்தற்செயலாய்ச்சம்பிரமும்சந்தோஷமும் பிறந்தது நித்தியோச்சவங் கொண்டாடினார்கள் பாரிலுள்ள பாவங்கள் பறந்தோடவும் தருமங்குமுமித் தலையெடுத்தாடவும் பெரும்பேறுங்கலந்த வைபவத்துடன் ஜனித்தபிள்ளையைப் பார்த்துக்களித்து தீராதவறுமையிலகப்பட்டுத் தேம்பியவொருவனுக்கு மாறுததிரவிய வாழ்வுவந்தால் அவனுடைய மகிள்வெப்படியோ அப்படிப்போலும் பிறந்திறந்துழன்ற பிராணனது நாள்நாளுங் கொஞ்சம் நல்வினைதேடி அதனாற் புண்ணியங்கூடி விவேகம்வளர்த்து மந்தம்மந்தரங்களெல்லாங்கடந்து திவாதம்அதிதிவதாரத்தில் கடைசியாய்ப்பிறந்து இருவினையொப்ப மலபரிபாகமாய் ஜனனமுளைதீஞ்சு இருவினைப்பயனுங்காஞ்சு உற்பவவிடாய்மாஞ்சு சுவர்க்கலோகத்தையடைந்துஆனந்தத்தையடைவது போலவேதவியாசர் பிர்ம்மானந்தத்தில்மூழ்கியெழுந்தார் அந்தக்காலத்தில் தேவர்களும் மேதேவேந்திரனும்ரிஷிகளும் பிர்ம்மதேவனும் சரஸ்வதியும் லட்சுமியும்ஆகாயத்தையும்பூமிதேவியும் சித்தசாத்தியரும்வந்து ஞானமே நிறைந்த சொரூபமாகப்பிறந்த மைந்தனைஉவந்துஏந்தி உச்சிமுகந்து நீராட்டிஆசிர்வதித்துசட்கர்ம்மப்பிரகாரம் புத்திரோச்சவம் ஜாதகன்மம் காலகிரமமாகநடப்பித்து சாமவேதகானத்தை வீணைமீட்டி தேவரம்பைகள் பாடிக்கொண்டிருக்க பார்வதிசமேதராகிய பரமசிவன் ரிஷபவாகனரூடராய்நாரதர்முதல் ஞானக்கடலாகியமோனமுனிவர்கள் முன்னும் பின்னுமொய்த்து வரும்படிக்குஎழுந்தருளிய வேதவியாசருடைய சேய்தனைப்பார்த்து கிருபாசமுத்திரத்துடன் திருவருண் முகூர்த்தஞ்செய்து மதிவளரக் கலைவளருமாறுபோல் மதிவளரக் கலைவளரவென்று வாழ்த்தி மகாதேவியுடன் வெள்ளிவரைக்கெழுந்தருளினர் பிர்ம்மாமுதலான தேவர்களும் போனார்கள்.

இப்பால் சுகப்பிர்ம்மாவானவர் தந்தையைப்பணிந்து திரிகரணசுத்தியாய் புத்திசெலுத்தி திடனுவென்கின்ற பிராமண

னிடத்தில் வேதாகமசாஸ்திரவிதி நூலெல்லாங்கற்று புராணஞ் சாரம் விபகாரம் நமஸ்காரம் - சிஷ்டாச்சாரம் - அதிகாரம் - தரு மா தருமம் இயாவுந்தெரிந்து ரிஷிகளெல்லாம் முதன்மையாயிரு ந்து தனது தந்தையிருக்கின்ற ஆசிரமத்திற்கு வந்துமுறைமைப் பிரகாரமிருந்து ரிஷிகளுடன்வாசம்பண்ணி விரிந்ததிறமைக்குரிய பெரியவிரதங்களை யனுஷ்டித்து பிரபஞ்ச மயக்கத்தையும்பார்த் துக்கொண்டு ஒருவர்கண்ணிலுந் தோற்றுமலகன்று காரணப் பொருள்போல் நின்றனர். சிலநாட்சென்று தந்தையானவர் சுக ரைமருங்கிலிருத்தி ஓ! குணவானே, உலகமெபன்னும் இவ்வு லகத்திலுள்ள சகலபேதங் களும்தாறுமாருய் மாயை யல்லது வேறில்லை இனிமேலதைக் கூறுவதிலென்ன சிரார்த்தம் பிரமம் ஒன்றுதான் நிச்சயபதார்த்தம். ஒகுற்றமற்ற சத்குணனே இது எதார்த்தம்அகிலபுவன சராசரங்களில்உள்ளும்புறம்பு மாயுறை ந்து விளையாடுவதுபரப்பிரம்மமே அவனசைந்தாலல்லது அணுவு மசையாது அவரேசுந்தரன் மற்றவர்கள் யாவரும் பரதந்திரன் ஓ, துரந்தரனேயென்று இந்தப்படிக்கு எந்தெந்தத் தருணத் திற்சொல்லவேண்டியதோ அந்தத்தருவாயில் வேதத்திலெடுத் துக்காட்டினர். தந்தைசொல் மிக்கமந்திரமில்லையென்னும் விதி ப்பிரகாரம் வியாசராலறிந்துக் கொண்ட மெஞ்ஞானதேசிகன் மறையாச்சிரமத்தில் பிரமசாரியம் கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் என்றுவிளம்பியிருக்கின்ற வகைதொகை விரிவுமூன்றையு மறி ந்து இதுகளைப்பார்ப்பதினுலும் கேட்பதினுலும் பிரபஞ்ச ஆசா பசாசம் பிடித்துக்கொண்டு ஆட்டும் அது சிலருக்குக் கொண் டாட்டம்.

அப்படிப்பட்ட பண்டாட் டங்களை யாற்றுகின்ற ஞான நூலை நவிலுமையாவென்று கேட்டார்மைந்தன் வசனத்தைக் கேட்ட வாதராயணர் நகைத்துசகலகலைக்கியானமும் உருவாய் ச்சமைந்த பிள்ளாய் நீ மேற்சொல்லிய மூன்ருச்சிரமங்களினுலும் பற்றுவையாமல் புத்தியினல் விலக்கிவிடலாமென் று பரர்க்கிருய் அதைவிட்டு விடப்போமா மேலேறுகிறவன் முதற்படியிலிருந் தேறுவதா அல்லதுமூன்று படியைத்தாண்டி நான்காம்படியிற் காலூன்றி யேறுவதாசொல்லும் தராசின்முட்போன்ற மனசை யுடையவர்களானுலும் பாபத்திற்கு பயமும்தயாரசமும் தண்ண ளியும் தலமையும்தன்னுயிர்போல் சராசரவுயிரும் சமமென்று ன்னுயிருக்குந் தவத்தினையுடையவர்களுக்கும் இந்த ஆச்சிரமும்

மூன்றைத் தள்ளிவேறில்லை இம்மூன்றிலேயே பழகிவரும்போது சகலமும் நாசமாகிய சன்னசமிருக்குது என்றியம்பிய பிதாவுக்குபிள்ளை சொல்லுகிறார்.

ஐயா! இந்தப் பிரபஞ்சவாழ்க்கைப்போகங்களை விரும்பிய ஆக்கையோர்க்கு நீர் போதிக்கவேண்டியது இதுதான் என்னையுங்கூடச் சேர்த்துக்கொண்டு சொல்லவேண்டாம். நானிந்தப் பூவாசை-பொன்னாசை - பெண்ணாசை-என்னுமூன்றையும்விரும்பினவனல்ல. நீரிதை மறந்துபோம். இக்தப்பிரபஞ்சமானது நல்வினை தீவினைகளின் போகமாய் மருவியிருப்பது இவற்றுள் நல்வினையாவது, தானம்-தருமம் - பரோபகாரம் இன்னும் பற்பல காரியங்களுண்டா யிருப்பது. தீவினையாவது, பொய் - கொலை- களவு-கள்-காமம் - இவைகள் மயமாயிருப்பது. இவைதானிருவினை இவைகளில் நல்வினையைச் செய்தவன் இங்குமங்கும்வீடு-வாசல்-மண்-மனை-பெண்டுபிள்ளை-பண்டபதார்த்தம் - பாக்கியம்-யோக்கியம்-சத்தியம்-சிலாக்கியம்-விமானம்-தேவசமானம் - வெகுமானம்-சுகுமானம்-விதானம் இவைமுதலிய நிதானத்துடன் உலகாதிபனுகிக் கமலையோடிருப்பான். இந்தவாழ்வினுற் பெறப்போகிற நயமென்ன? தீவினையைச்செய்தவனோ? தரித்திரனுய், நோய்பிடித்து, உண்ணல்-உடுத்தல்-படுத்தல்-கொடுத்தல் இவைகளற்று, வீடுவாசலில்லாமல் கைகால்குறைந்து கவலைமேவிடுவான் இந்தத்தாழ்விற் பெறப்போகிற நஷ்டமென்ன? இந்த நயநஷ்டங்க ளாரைவுடையது? செல்வத்தினுல் எதுமகிழ்ந்தது? இல்லாமையால் எது துக்கப்பட்டது? எண்ணிப்பார்க்கு மிடத்தில் இதுவும் பாவமே: ஒருமரத்து ளிரண்டுபாளை. ஒன்று நுங்கைத்தரும், ஒன்று கள்ளைத்தரும். அறிவாளிகளுக்குச் சம்பந்தவிசேடத்தால் இரண்டு மொன்றே. அறிவில்லாதபேர்களுக்கு அது வேறு இதுவேறு. சுகத்தினுல் நன்மையும், அசுகத்தினுல் தீமையுமில்லை. இவனுடைய பேதைமனமானது பிரமாதத்திற்கொண்டு போய்விடுகிறது. இந்த நினைப்பினுல் நெடுந்தூரம்போன இவன் திரும்பிவந்து எப்படி தேறுவானோ வென்றால்? சாஸ்திரக்கியானத்தைச்சார்ந்து, சாதுசங்கமப் பழக்கத்தினுலோர்ந்து, சங்கதியின்னதெனத்தேர்ந்து, அனுபவத்தாலறிந்து தேறுவான். அறிவாளிகளுக்குச் சுகதுக்கமான வினையிரண்டும்விலங்கு. இவ்வினையிரண்டும் பிறவிக்கிடமே. ஐயோ! ஆத்மா கடைத்தேறப் போகிறவழி யிதல்லவே, பல்லக்கு-குதிரை-யானை-விமானம் - தேர்

இவைகளிற் பவனிவந்தாலென்ன? கால்நடையாற் பாரெல்லாந் திரிந்து நடந்து வந்தாலென்ன? இருவருக்கும் துன்பயின்பமொன்றே. ஒருபிள்ளை இன்பப்படுகின்றான். ஒருபிள்ளை துன்பப்படுகிறான்.

இந்த இரண்டுபிள்ளைகளையுந் தாய்தகப்பன்பார்த்து சந்தோஷப் படுவார்களோ இல்லையா? சர்வாத்மகனாகிய ஈஸ்வரன் எல்லாரிடத்திலுமிருந்து பார்ப்பது நிசமாஅபத்தமா? நிசமானால் பிள்ளைகளிற்பேதம் வரவேண்டியதென்ன பெற்றவர்களுக்குப் பிள்ளைகளொன்றே சகலாத்மகோடிகளுந் தன்னை நினைத்துப்புசிக்கும்படிஏர்ப்படுத்தியிருக்கிறார். அந்தப்புசிப்புஎப்படியும்இவனுக்குக் கிடைக்கக் காத்திருக்கின்றது பிறத்தல்அனுபவித்தல் ஆனந்தப் படுதல்எல்லாம் இருவினையாளராகிய இருவருக்குஞ்சரியே இப்படிக்கிருக்க ஈஸ்வரத்தியானம்பண்ணி விதியையனுசரித்து நடவாமல் வெகுபேர் கெட்டுப்போகின்றார்கள் மனோநிச்சய மில்லாமல் வருவித்துக்கொண்டு வாடுகிறார்கள் விருதாவாய் வாழ்வென்றும் தாழ்வென்றும் பிராந்தியுட்கொண்டு மயங்கி வீழ்கிறார்கள் பிராந்திமயக்கந் தீர்ந்தால் மாறிப்போமல்லவோ? நிதானமுண்டாகுமே நாம்இன்னத்தினால் முழுகிப்போயிருந்தோம் நம்மை இன்னான் கைகொடுத்து அழைத்துவந்து நல்லயிடஞ்சேர்த்தான்.

இனிமேல் வீட்டுக்குப்போகலாம் இல்லை ஒருவருந் துணையில்லாவிட்டாலும் ஒருபக்கத்தில் வீழ்ந்துகிடந்தால் சிலநேரத்தில் தெளிந்துபோம் இதுபோல மோனமாய் ஒருமூலையில் விழுந்து கிடந்தாலும் கொண்டபிராந்தி மயக்கம் விண்டுபோய்விடும் அல்லது அகன்றுபோய்விடும் கடையில் பசிக்கு ஆன்மா உடலுடன் காணப்போகிறது உணவு மற்றதென்னவிருந்தாலும் பயனில்லையென்று ஞானசூட்சமறிந்து ஈஸ்வர பத்திபண்ணி எந்த வேளையிலுஞ் சிந்தைதெளிந்து களிம்புமாற்றிக் கண்டுணராமல் ஏன் வீணிற்கெட்டுப்போகின்றார்கள் நல்வினை தீவினை சம்மந்தமாய் விலங்கானதுபிறப்புமாறாமல் வந்துக்கொண்டிருக்கும்இந்த இருவினைகளில் நல்வினை நல்லதென்று தீவினை தீயதென்று மகிழுவார்கள்.

இவ்விரண்டு வினைக்கும் வித்தியாச மென்னவென்றால் இரண்டு விலங்குதான் விலங்கானாலும் நல்வினை செம்பொன்விலங்கு தீவினைகரும்பொன்விலங்கு இவ்வளவு தாரதம்மியமுடையதுஇத

னுடையது தன்மையறியாமல் உயிர்வர்க்கங்கள் நல்வினைவேணு மென்று மயங்கிமுயங்கி தானதருமம் பண்ணினால் சுகம்பெறலா மென்று சஞ்சலப்பட்டு அலைகின்றார்கள் ஆனால் கீர்த்தியுண்டுபெ ருமை பெறலாகும் அப்பவும் பூஷணையுந் தூஷணையும் உடலுக்கல் லது உயிருக்கொன்றுமில்லை இப்படிப்பட்ட பெருமையும் புண்ணி யமும் வாழ்வும் மேன்பாடும் எனக்குவேண்டாம் சிக்கனத்தில் ஜனனமரண வேதனையொழிந்து மோட்சமடையவேண்டும் இத ற்குவேண்டிய முத்திசொருப லட்சணமெல்லாமொழிந்து எனக் குமோக்கங்கிடைக்கும் ஆக்கத்தைத் தேடுமையாவென்று சுகப் பிரமம்சொல்ல அதைக்கேட்ட நாரதர் இவருக்குப் போதிக்கவே ண்டுமென்று தன்மனதில் நினைத்து பருவகாலம் பார்த்திருந்த பொருளைக்குறித்துக் கேட்டபடியால் இப்பொருளுக்குரியவன் இவனேயென்றுவேதமுடிவின்சாரத்தைவிளம்பத்தொடங்கினார்.

வியாசர்தவமும் சுகப்பிரமம் ஜனனம்

முற்றிற்று.

---

நாரதர்

## சுகருக்குபதேசம் செய்தல்.

வேதாந்தசாரமறிவதற்கு மிகுமோகியாகிய சுகயோகியே கேளும், வர்ணச்சிரமம் நான்கு. அவை யாதென்னில், பிர்ம்ம - க்ஷத்திரிய-வைசிய-சூத்திரரென்பது இந்நான்கினுடைய பேதபா வது அஞ்ஞானப்போர்வையல்லது வேறில்லை. உயர்ந்தசாதியிது வென்றும், அதுவே முக்கியமென்றும், தாழ்ந்தசாதி யிதுவென் றும் இதுவே தாழ்மையென்று மில்லை. அஞ்ஞானமகன்ற விஞ் ஞானம் எந்தயிடத்தில் விளங்குதோ அதுவே பிரதானம் கர்மத் தினாற் சாதியல்லது சன்மத்தினாற் சாதியில்லை சாதமென்பது பிறப்பு உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானம் பிரபஞ்ச மயக்கம் பிரபஞ்சமது இல்வாழ்வோன் இவன்நாட்டில் கிரகத் தாச்சிரமங் கண்டுக்கொண்டிருப்பவன் இது இரண்டுகாலுக்கும் போட்டுக்கொண்டவிலங்கு பிள்ளைகுட்டியென்னுங் கடையாணி யினாலிறுக்கித் தறிக்கப்பட்டது பிரமசாரியாச்சிரமம் வானப்பிர ஸ்தாச்சிரமம் இவ்விரண்டும் பெருமையுள்ளதென்று பெரியோர் கள் ஒப்புக்கொள்வது அதிலும் பயனில்லை அப்பால் அதியாச்சிர

மம் தயாரசமும் சத்தியமு மிருக்கவேண்டியது இவ்விரண்டில் கடுசத்தனை தப்பிப்போனல் மலையத்தனை நரகம்வந்து முன்னிற் கும் தெரியாமல் தவறினவனுக்கும் ஒருபங்கு தண்டனை ஆனபடி யால் வண்டியுருளைப்போல் கீழுதுமேலதாய் சுழன்றுக்கொண்டி ருக்கப்பட்ட சனனமரணமானது தீராதது அது என்றைக்குத் தீருமென்றால் நானென்பது நசிச்சுதானென்பது தவிர்ந்துஆணவ மலமகன்றுதானல் சராசரகோடி சகலாத்மாவும் தானேயல்லது வேறில்லை சமஸ்த தேகாதிகளெல்லாஞ் சம்பந்தமாயை ஆத்மா பரிசுத்தம் மாயாமயக்கத்திலகப்பட்டு மருண்டுகிடக்குது யாயை வசத்தாகிய உடலுக்கும் களங்கரகிதமான உயிருக்கும் சம்மந்த மில்லையென்றறி இது என்றைக்கு வேருகக்காண்பானே அந்த யிடமே மோட்சம் அப்போ நிராமயமும் நிட்களமும் நிர்விகல்ப மும் நிர்க்குணமும் தானேயாவான் அப்படிக்கு இருளும் வெளி ச்சமும் இல்லாதஇடத்திலிருந்து பார்க்கடல் எளிதில் வெளிச்ச மாய்த்தோற்றும் அப்படிப்பட்ட ஞானசொரூபியாய்த் தானிரு க்க அதை விட்டுவிட்டு மாயாமயக்கமாகிய உலகத்தைத் தா னென்றெடுத்து மேற்போட்டுக்கொண்டு தனக்குரிய ஞானசொ ரூபத்தை மறந்து எத்தனைநாள் திரிகின்றனே அத்தனை நாளும் தன்னைத்தானறிகிற தெளிவுவரமாட்டாது பிரபஞ்ச வாஞ்சை மயக்கத்திற்படியாமல் தற்சுபாவ தற்சொரூபமான சுகயோகியே யென்று ஞானேபதேசம் பண்ணிவைத்து அனுபோகமுங் காட் டியபோது சோதிவிளக்கமான சுத்தஞான சமுத்திரத்தில்மூழ்கி சனனக்கடலைத் தாண்டி எங்குந்தானகிய பிர்மக்ஞானம் விளங்கி பற்றிற்றியுற்ற உத்தமச் சுகயோகியானவர் நற்றவமுடைய உத் தமதிசைக்குப் போகவேணுமென்று வியாசரைப்பணிந்து செலவு கேட்டார் அப்பாமகனே, அடா சுதனே, என்னைப்பிரிய மனமெ ப்படிக்கிசைந்ததோ பிரியமானவனேயென்று பேசியகாலையில் நா ரதருணர்த்திய ஞானநிர்க்கரிஷியை யெடுத்துக்காட்டவும்அதை க்கேட்டு பிர்மித்துப் புகழ்ந்து மகிழ்ந்து சுகுணமானபிள்ளை தன் னைவிட்டகன்று போகிறனேயென்கிற கிலேசத்தால் பெருந்துய ரப்படுகிற பிதாவைத்தேற்றி பொருமலையாற்றி அதிதீவரமாகிய யோகப்பரியேறி பூலோகத்தைப் பிரிந்து ஆகாய மார்க்கத்திற் போம்போது மேலோகவாசிகளாகிய தேவதைகள்கண்டுஅநேகங் கோடி சூரியப்பிரகாசம்போல் சுகப்பிரமம் இதோ போகிறரென் றுபூரித்து ஐயோ இவர் குலஞ்செய்த நலம் யாதோ வேதவியாச

ரிழைத்த தவமெத்தன்மைத்தோ இந்தபிள்ளை பிறவிக்ஞானே தயமூர்த்தியாய்ச் சனித்துதேயென்று யாவருங் கரத்தைச் சிரத்திலேற்றி சிவசிவவென்று தியானித்து தெரிசனங்கண்டு தெளிவு கொண்டிருந்தார்கள்.

சராசரங்களியாவுந் தானுயிருக்கப்பட்ட சுகயோகியும் பிரசண்டமாருதவேகம் பின்னிட்டுப்போகும்படியாய் தான் முன்னிட்டு வடமுகத்தை நாடிவருகிற வேளையில் சகலசராசரங்களையும் பார்த்து உங்களிலே ஒருவன்தானிவனென்றுரைத்து லோகோபகார தந்தையாகிய வேதவியாசர் இந்தவழியேவந்து மைந்தாவென்று இவன்பெயரைச்சொல்லிக் கூப்பிடுவாராகில் நீங்கள் யாவரும் ஏன் ஏன் ஏனென்றுசொல்லுங்களென்றியம்பி சோதிமயமாய்ச் செல்லும்போது ஆகாயமளாவிய சிகரங்களையுடைய மலைச்சோனைகளில் தீர்த்தமாடவருகின்ற தேவஸ்திரீகள் வஸ்திரங்களைக் களைந்துவைத்து நிர்வாணமாய் நீராடியகாலையில் அந்த வழியாய்ப்போகிற சுகயோகியைப் பார்த்து நாணம் - வெட்கம்- அச்சமில்லாமல் தங்களிச்சையின்படிக்கு ஸ்தானம்பண்ணிக்கொண்டிருந்தார்கள் சுகப்பிரமம் விகல்பமில்லாமல் பிர்மக்ஞானத்துடன் செல்லுகின்ற விசையினுல் பர்வதங்கள்-மலைகள்-விருட்சங்கள் இதுகளெல்லாம் அசைந்தும்-முறிந்தும்அழுந்தும்-ஒடிந்தும் படிந்தும் பொடிப்பொடியாய்ப் போகத்தக்கதாகமகாமேருவுக்கு வடபாரிசத்திற் புகுந்துபோய்விட்டார் இப்பால் இரணியகருப்பனுக்குச் சமானமான வேதவியாசர் ஒப்பில்லாதபுத்திர சோபத்தினுல் அரணிவிலுற்பவித்துப் பிரிந்துபோன மகன்சுகன் போன வழியைத் தொடர்ந்துபோகிறபோது இமையர் நாட்டத்தவர்கள் எல்லோரும் பார்த்து ஐயா உம்முடைய குமாரன் இளஞ்சூரிய வீம்பம்போல் ஆகாயமார்க்கமாய்ப்போனுர் அவர்போன வேகத்தில் பர்வதங்களுங்குலுங்கி பட்சிமிருகங்களும் கலங்கி விருட்சங்களும் விலக்கிப்போய்விட்டதுகள் இன்னேரம் நெடுந்தூரம்போயிருப்பார் நீர் நடக்கிற நடைக்கும் அவர்சென்ற வேகத்திற்கும் சரிப்படாது நீர் அவரை யெந்தநாளையிற்காணப்போதீர் ஏதேது கண்டுபிடிக்கமாட்டீர் பூமியிலிழிந்துபோமென்றுரைக்க அவர்கள் சொல்லையுந்தட்டி பிள்ளையைப்பற்றி பெருங்காட்டைச் சுற்றி பெருமூச்சுவிட்டு ஒரு பர்வதத்திற்போயிறங்கினுர் அவ்விடத்திலுள்ள சுனைநீரில் விளையாடிக்கொண்டிருந்த தேவஸ்திரீகளி

யாவரும் வியாசரைக்கண்டு காண்பதற்கு முன்னே வெட்கப்பட்டு வஸ்திரங்களினால் மானத்தை மறைத்துக் கொண்டார்கள்.

அதை வியாசர்கண்டு சற்றுநின்று இதற்குமுன் இந்தவழியிற்போன ரிஷியைப்பார்த்தீர்களாவென்றார் ஆமென்றார்கள் அப்போது இப்போதுடுத்திய ஆடையைத் தரித்தீர்களாவென்றார் இல்லையென்றார்கள். முன்சென்றவன் என் மகன் நானவனைத் தேடிவந்தேன் என்பெயர் வியாசன் அவனும் புருஷன் நானும் புருஷன் அப்படிக்கிருக்க அவன்போனபோது அச்சமில்லாமல் ஆடிக்கொண்டிருந்த நீர் என்னைக்கண்டு லச்சைப் பட்டு வஸ்திரமுடுத்திக் கொள்ளவேண்டிய பரிசென்ன இந்தப் பேதத்தைப் பகருங்களென்று கேட்கவும் உசித கசித உத்தம ஸ்திரீகள் ஐயா-வியாசரே முன்னேபோன முனிவரானவர் சுத்தமாயையற்றவர் சொரூபக்ஞானமுற்றவர் அதனால் எங்கு மவராயிருப்பாரென்றுணர்ந்து நிர்வாண திசையினின்று ஸ்நானம் பண்ணினோம். மாயாப்ரபஞ்ச மயக்கறுத்த ஞானவானாதலால் எங்களுக் கவரைப்பற்றிப் பேசவேண்டிய சம்பந்தமில்லை எங்களுக்கு அவர்புலம்பு அவருக்கு நாங்கள்புலம்பு நீரவ்வாறல்ல இப்பிரபஞ்சமாயையின் மூழ்கிய பெருங்கிபானி உம்மைப் பார்த்தவுடனே உடலங்கம்பித்து வெட்கமேலிட்டு புடவை உடுத்திக்கொண்டோமென்றார்கள்.

அம்மொழியைக்கேட்டு வேதவியாசருக்குத் தெளிவுபிறந்து நிரம்பிய விசனமாய் நெடுமூச்செறிந்து பிள்ளையைநினைந்து பிரிவாற்றாமையால் பெருங்குரலிட்டு அப்பா மகனேயென்று கூவப்பட்டார் அங்ஙனகிலத்தமலைகள் மரங்கள்வனந்திரங்கள் செடிகள் செட்டுகள் முதலியதும் ஓரறிவு முதலாகிய ஆறறிவுடன் கூடிய ஆத்மங்காடிகளியாவும் அண்டரங்களும் ஏன்ஏனென்று எதிர்மொழியீந்ததுகள் வியாசர் வெருண்டு நமது புத்திரனைக் கூவினால் இந்தப்பூமிமுதல் மகாபூதங்களெல்லாம் ஏனென்று கேட்குது இதை யோசிக்குமிடத்தில் இப்பூமியாயும் பொருளாயும் பாவியபரவிய பரப்பிரமம் ஒன்று அதை நீ தெரிந்துக்கொள்ளாமல் தகப்பனென்கிற பெருமையும் தனயனென்கிற அருமையும் பாராட்டுகிறாயோ பிள்ளையார் தந்தையார் ஆருக்கு ஆர் தகப்பன் நீவேறுநான்வேறென்பதென்னை ஒன்றுமில்லை நாதம் பிர்மம்ஒன்றே இன்றுமுதலென்றுங்கண்டு கொள்ளென்று அறி

வுறுத்துகிற மொழிக்களும் பிறந்ததென்றுதெளிந்துத்தெளியா மனத்தினையுடையவராய் செல்வனே சிறுவனே சேயனேயென்று தினமும் மனமுந் திகிலுமாயிருந்தார்.

இப்படிக்குப் பிரபஞ்ச ஆசாபாச ஆபாசமகற்றி வேதவியாசரும் புத்திரபாசப் பற்றுவிடாமல் தெய்வமே தெய்வமேயென்று தியங்கிமயங்குநாளில் பிர்மா-விஷ்ணு தேவேந்திரன் முப்பத்து முக்கோடி தேவதைகள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் யக்ஷகின்னரகருட காந்திருவர் - சவனகாதி முனீஸ்வரர் சிவகணபூத கண இராக்ஷத கணங்களுடன் பச்சைக்கொடிபடர்ந்த பார்வதி கலந்த பவளம்போன்ற பரமசிவன் இடபவாகன ரூடராய்மான் மழு சதுர்ப்புசம் காளகண்டந் திரிநேத்திரம் சூலடமரம் கபாலமுடையவர் ஆலகால விடத்தைப் பட்சித்து அறியயனாதிகளாகிய தேவர்களை ஆதரித்த தனிமுதலானவர்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரண முதல்வனானவர் அற்புதவமுதனான ஆதிமூர்த்தி கிர்பாநோக்கமாய் வேதவியாச ரிடத்திற்கு வந்து பெருங்காட்சியாய் நின்றபோது வேதவியாசர் எழுந்துஅநேகவிதமாக விழுந்து சாமவேதக் கானஞ்சாற்றி பரவசமடைந்து பாயுங்கண்ணீருடன் என்புகளுருகி பட்சமாகக்கூத்தாடி தன் பிள்ளையைப் பிரிந்த வருத்தம் பாசபந்தநெருப்பு இவைகளெல்லாம் பறந்தோடிப்போகும்படியாய் சிறந்த தேவாதிதேவனைப்பணிந்து எழுந்திருந்து கைகட்டி வாய்பொத்தி பத்தியுடன் புத்தியாய்ப்பாடினார் அவ்விடத்திலிருந்த சாம்பவமூர்த்திவியந்து புகழ்ந்து சிரக்கம்பஞ் செய்து ஓ பேரறிவுடைய பெரியோனே நீர் பூர்வலோகத்தில்புத்திரன் வேண்டுமென்று நம்மைக்குறித்துத் தபசுபண்ணியபோது உமக்குவேண்டிய தென்னவென்று நாம்வந்துகேட்க பஞ்சபூதத்தையும் சயிக்கபாலகன் வேண்டுமென்றீர் நாமும் பட்சமாய் அநுக்கிரகம்பண்ணினோம் அவ்வாறேபிறந்த புத்திரன் பரமானந்த ஞானத்தைப்பெற்று ஒருவரும் பெருதற்கரிய புகழைக் கைக்கொண்ட பெரியவராகினார் நீர் பிரபஞ்சமாயையிலழுந்திய அறிவினரைப்போல் துன்பப்படவேண்டிய துயரமென்ன வேதஞ் சுரக்கிரவாக்கினால் மெஞ்ஞான சொரூபமெல்லாம் விளம்பிப்போட்டு கான் முளையைக்குறித்துக் கவலைப்படுவது ஞாயமோ இப் பிரபஞ்சத்தில் அதீதமாகிய ஞானத்தி லிருக்கிற பேர்கள் சமுக விசாரத்திலும் தழுவி தாம்கொண்ட கருத்திற்கு தவறுதல் தா

ராமல் பிள்ளைப்பூச்சிபோல பூரணகலையுடன் பொருந்தி வாழ்வார்கள்.

அப்படிக்கில்லாமல் பரிபூரணகியானம்பெற்ற பாக்கியனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்கிற மனவலிமையுடன் அவனைத்தேடிப் புறப்பட்டது உமக்குமுறைமையோ அப்படிக்குப் போனாலும் அவனுமக்கு அகப்படமாட்டான் ஒருவேளை யகப்பட்டாலும் உன்னுடனே கலந்திருக்க வரமாட்டான் பூமிகடல்மேகம் சந்திரசூரியர்முதலாகிய பிர்மாண்ட முள்ளவரையிலும் உன்பெயரும் உன்பிள்ளை பெயரும் நிலைநிற்கும் படிக்குக்கீர்த்தி தேடிக்கொண்டு மைந்தனைக்குறித்து மனதினில் சிந்தனைப் படுவதை மறந்துவிடு ஆனால்புத்திரவாஞ்சையால் பிள்ளையைக்காணவேணுமென்று எப்போது நீ அபேக்ஷிக்கின்றையோ அப்போது உன் பிள்ளையின்சாயை உனக்குத் தோன்றும் படியாய் வரங்கொடுத்தேன் நீர் பூலோகத்திற்கு போமென்று செலவுகொடுத்து தருமசமுத்திரதானுவானவர் மறைந்துவிட்டார்.

இப்பால் வியாசர் பரமேஸ்வரருடைய அனுக்கிரகத்தைப் பெற்று தம்முடையபர்ணசாலைக்கு வந்துமநோநிச்சயம் வைத்து மைந்தன் பிரிவைமறந்து உலகத்தாருக்கு உண்மைஞானத்தை தெரிவிக்காமல் ஒரு பரியாரமாய்ச்சொல்லி வேதநான்கையும் விரிந்த புராணங்களையுந்தழுவி நடக்கும்படி போதித்தவ்வாறு நடத்திக்கொண்டு வரும்போது மெய்மைஞானம் விருதாவாய்ப் போய்விடுதேயென்று விசனப்பட்டு இதை யொருவருக்கும் விளம்பலாகாது, ஏனெனில் நாரதர்நம்முடைய பிள்ளைக்கு பூட்டைத் திறந்து காட்டிவிட்டுப்போயினர் நாட்டைத்தழுவிக் கொண்டிருந்த நமதுமகன் நல்லறிவாளனாகிய சுகன்பக்குவப்பட்டிருந்தமையால் காட்டியசோதி கற்பூரதீபம்போற்கலந்து பரிபூரண்பாக்கியனான் இனிநாம் செய்வதென்னவென்று அகத்தைத்தழுவி இதற்குவேண்டிய சாஸ்திரங்களையெல்லாம் இதவாயேர்ப்படுத்திக் கொண்டிருந்தார்.

நாரதர் சுகருக்குபதேசஞ்செய்தல்

முற்றிற்று.

நாரதர்

# விநாயகருக்கு திருமணஞ் செய்தது.

திருமூர்த்திகளில் ஒருவராகிய பிரமதேவன் முறைமைப் படிசகல வண்டங் களையும் படைத்த வுடன் ஆன்மகோடிகள் பல வுமோங்கி நிலைபெற்று வாழ்ந்தன பின்னர் ஒருகாரணமாக விநாயக மூர்த்தியானவர் கைலாயகிரியிலே சிவபெருமானுக்குப் புத்திரராக அவதரித்திருந்தார். அக்காலத்தில் மகா தவசிரேஷ்டராகிய நாரதமுனிவர் அந் நிர்மல சொரூபியாகிய கணேச மூர்த்தியின் பாத பதுமங்களைப் போற்றுதற்குக் கைலாயபர்வதத்தை நோக்கி மிக்க ஆவலோடுஞ் சென்று அப்பர்வதத்தின்கண் பொன்மயமாக விளங்குஞ் சபாமண்டபத்தின் முகப்பில் இரத்தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள் புடைசூழ்ந்து போற்றுதல்செய்ப வீற்றிருக்கின்ற விநாயக மூர்த்தியைக் கண்டு, அவரது திருவடிக்கமலங்களிற் பணிந்து களிப்புடன் றுதித்து வீணையிற்கட்டுண்டிருக்கின்ற நரம்புகளைத்தடவி, இசையாகியபுதியவமுதத்தை நிறைத்துக்கர்த்தன் புகழைப்பாடி அவர் திருவருளைப் பெற்று இதனை விண்ணப்பஞ் செய்வாராயினர்.

சர்வபரிபூரண கருணாசாகர மூர்த்தியே! தேவரீரிடத்தில் அடியேன் தெரிந்துக்கொள்ள வேண்டுவதொன் றிருக்கின்றது. அதனைவிண்ணப்பஞ் செய்யச் செவிகொடுத்தருளவேண்டும். அதாவது தாமரைமலரை யாசனமாகக்கொண்ட பிரமதேவர் முன்னர்தமதுதியான சிந்தையினின்றும் உதித்தவர்களாகிய இரண்டு கன்னியரைத் தேவரீர்க்குத் திருக்கல்யாணஞ் செய்வதாண வோரெண்ணத்தை யுடையரா யிருக்கின்றார். அன்றியும் அப் பிரமதேவரே ✻ இலக்கணம் அமைந்த மைந்தர்களை இனிமையாகப் படைக்குங்காலத்தில் மும்மலக்குறும்புகளை நீக்கவல்ல தேவரீர் திருவுருவங்களை யெண்ணுவார் மாட்சிமைபெற்ற மங்கையரைப் படைக்குங்காலத்தில் யாவருந் துதித்தற்குரிய அம்மாதர்கள் வடிவங்களை முற்றுங்கருதுவராயின், சுவாமிகள் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின் பெருமைகள் இவ்வளவினவென்று அடியேனுள்ளவிட்டுரைக்கற் பாலவோ. ஆயினும் எனதறிவிற் புலப்பட்டவாறு அவர்கள் பாதாதிகேசமுதலிய அவயவ விலக்கணங்

களைச் சிறிது கேட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்துச் சொல்வதாவது:—

பருத்திடலுஞ்சுருங்குதலு மில்லாது மிருதுவாகி அனிச்ச மலரின்மேல்வைத்தாலுங் குழைந்து வெப்பமடைந்து, கொடிரேகை மச்சரேகை கவிகைரேகை-சங்கரேகை-சக்கரரேகை முதலான பலரேகைகளைப் பொருந்தி, அழகியசெந்தாமரை மலரை வென்று சிவந்திருக்கின்ற உள்ளங்கால்களையும், நீளல்-குறுகல் கோர்தல் முதலியகுற்றங்களின்றி மிக்கவொளிபொருந்தியபவளத் துண்டங்களைச் சிறுமையுற்றழியச்செய்து விளங்கியிருக்கின்ற பாதவிரல்களையும், செங்கழுநீர்மலரைக் கோபித்து தாளத்தைப் பங்கப்படுத்திச் சந்திரனைப் பயமுறப் பணித்துச் சிறிதுசிவந்த நிறமுடையனவாய் வெளுத்து வட்டமாகி வொளிவீசுகின்ற பாதவிரல்களினது நகக்கூட்டங்களையும் களிப்பையுற்ற புலவர்கள் தங்கள்புத்தகங்களைச் சேமத்தின் மறைத்துவைக்கவுஞ்செய்து இலக்கணவளவின் மேற்பட்டு மிருதுவாகி நரம்புகள் உரோமங்கள் இல்லாமல் குற்றங்களகன்று பிரகாசிக்கின்ற புறவடிகளையும் கைப்பந்துக்கொப்பாகி விளங்குகின்ற குதிக்கால்களையும், நரம்பு தோற்றமில்லாது அழகுபொருந்தி செம்பொனிழுக்குஞ் சிறுதராசின் றட்டையொத்து வட்டமாயிருக்கின்றபரடுகளையும், கன்னிக்கதலியை யொத்து நரம்புரோமமுந் தோற்றாது சிறந்திருக்கின்றதொடைகளையும், வருந்திச்செய்த அம்புபெய்தூணியை யொத்து விளங்குகின்ற கணைக்கால்களையும், வற்றுதலில்லாமல் வட்டமாகிய தாளத்தையொத்துத் தசையைப் பொருந்தி மிக்க அழகுவாய்ந்திருக்கின்ற முழந்தாட்களையும், மெல்லியதொடையைச்சேர்ந்து துணையாகநெருங்கி மதம்பொழிகின்ற யானையினது பிடரியையும் ஆமையையும் வென்று இருபத்துநான்கு அங்குலவளவு வாய்ந்திருக்கின்ற நிதம்பத்தையும், தாமரைமலர்வாய்ந்த மிருதுவானகயிர்கள் உள்ளோங்கி நெடுமையற்று இடப்பக்கத்திற் பள்ளமான சுழிகளில்லாது எழில்வாய்ந்திருக்கின்ற வயிற்று மடிப்புக்களையும், கொங்கைகளால் வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கின்ற மருங்கினையும், தக்க வடிவத்தோடும் அகன்று தாழ்ந்து வலஞ்சுருத்து மிக்க வொளிபெற்றிருக்கின்றஉந்தியையும், பலவகைப்பட்ட சுழிகளும் நீண்டமடிப்புகளும் இல்லாமல் மூன்று நல்லரேகைகளைப்பொருந்தி ஆலிலைபோலவாய்ந்து சொலுக்கடங்காத வனப்பில்விளங்கும் வயிற்று மயிரொழுங்கினை

யும், என்பு-நரம்பு-உரோமம் ஆகிய இவைகள்தோற்றாமல் தசையைப்பொருந்திப் பதினெட்டங்குல வளவையுடையதாய்ச் சீர்கொண்டிருப்பனவாகிய விலாப்புறங்களையும், புடைபரந்துமேலெழுந்து நீலமணிசேர்த்ததற்கொப்பான சிலீமுகம்வாய்ந்து இடைதோன்றாமல் நெருங்கி மார்பினிடமுழுவதுநிறைந்து தடையில்லாமற் பருத்துப் பூரித்து இடையினைவருத்தி நிமிர்ந்து அடிகனத்துத் தனக்குத்தானே யொப்பாகியிருக்கின்ற சூசுகங்களையும், நீளுதலும் குறுகுதலும் என்பு தோன்றுதலும் இல்லாத கழுத்தடியினையும், அழகுநிறைந்து திரண்டிருக்கின்ற வேய்போற்பிரகாசிக்குந் தோள்களையும், தசைதோன்றாதனவாகிய மூட்டுக்களையும், வன்மைபொருந்திய மகரவீணையையொத்தமுன்னங்கைகளையும், சாமரம்-வச்சிராயுதம்-நேமி என்னும் இவ்வகை ரேகைகளைப்பொருந்தி செவ்வாம்பல் மலரைப்போலப் பிரகாசிக்கின்ற உள்ளங்கைகளையும், நீலோற்பலமுகையைவென்று சிவந்த நல்லரேகைகள்வாய்ந்த கைவிரல்களையும், கிளியின் வாயினையொத்துச் சிவந்து பிரகாசிக்கின்ற கைவிரல்களினது நகக்கூட்டங்களையும், என்புதோன்றல்-நரம்பு உரோமமுவருதல் முதலியன வகன்று-மிருதுவாகிய தசையினால் மறையப்பட்டு எழுதற்கரியவனப்பின் மிகுந்திருக்கின்ற முதுகினையும், கோணுதல் - நரம்புதோற்றல்-மயிர்கிளைத்தல்-நீளல்-வற்றல் என்னு மிக்குற்றங்களின்றி எழில் வாய்ந்திருக்கின்ற பிடரியினையும், குறுகலும்-நீளலும் - பருத்தலும்-உரோமங்களை கமுகமரத்தினை நாணச்செய்து நான்கு அங்குலத்தோடு மூன்று ரேகைகள்பொருந்தி அழகு நிறைந்திருக்கின்ற கண்டத்தையும், வட்டமாய்த் தசையையுடைத்தாய் எழில்கொண்டு இன்பந் தருவனவாகிய மோவாயினையும், சிறந்தபவளத் துண்டுபோற்றிரண்டு இருபக்கமுங்குவிந்து பிரகாசிக்கின்ற கீழதரமும், அதற்குமேற் சற்றுயர்ந்து வனப்புவாய்ந்திருக்கின்ற மேலதரமும், பவளத்தையொத்துச் சிறந்திருக்கின்றவாயினையும் மயிலிறகி னடிகளையும், வெளுத்ததரளங்களையும் முல்லையரும்புகளையுமொத்து வெண்மையாகவுந் திருத்தமாகவுமிருக்கின்ற முப்பத்திரண்டு பற்களையும், சிவந்தவண்ணமாய் மிருதுவாயிருக்கின்ற நாவினையும், வெண்ணெயென்று சொல்லும்படி மிருதுவெய்திச் சாதிலிங்கத்திலுஞ் சிவந்து செழுமைபொருந்தியிருக்கின்ற உண்ணா, கபோலஞ்சுழியாமலும் பற்கடோன்றாமலும் வறிது நகைபுரியாமலும் மிகு நகைசெய்யாமலும் விளங்குகின்ற மூரலை

யும், இருபக்கங்களுஞ் சற்றுயர்ந்து எள்ளின்மலரையொத்துஇர ண்டு மூன்றுதரம் அதிசயமுற மெல்லெனத் தும்மலின்றிக் கல் லெனப் பலகால் தும்முதலில்லாத நாசியினையும், கண்ணாடியொ ன்றேயன்றி மற்றவைகட் கொப்பாகாது வட்டமாய்த் தசையை யுடைத்தாயமைந்திருக்கின்ற கபோலங்களையும், தெளிந்த நீலம ணிபோலச் சிறப்புறக் கறுத்து வெண்மையொளிகொண்டு கடை யிற் செவ்வரிபார்ந்து மெல்லிய வுரோமங்களைப்பொருந்தி விளங் குகின்ற நீண்டவிழிகளையும், உரோமம் இடைவிட் டிருத்தலும் பொன்னிறமமைத்தலும், பருத்தலும் நீளலும் இல்லாதகண்ணி மைகளையும், ஒன்றோடொன்று நெருங்காமல் போர்செய்யும் வில் லைப்போன்று விளங்குகின்ற புருவங்களையும், வள்ளைத்தண்டினைப் போல நீட்சியுற்று. மலரிதழையொத்து, நற்சுழிகளையுடையன வாய் விளங்கியிருக்கின்ற செவிகளையும், நரம்பு முரோமங்களுமில் லாமல் நவக்கிரக சக்கரரேகையைப் பொருந்தி மூவிரலகலமாய் அர்த்தசந்திர வடிவங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையும், பூர ணசந்திரனைப் பழித்துக் குளிர்ச்சிபொருந்திய தாமரை மலரை யொத்துச் சீமந்தரேகைகளைவாய்ந்து, நீண்டுவிளங்குகின்றமுகத் தினையும், இளம்பூவரும்புபோல வண்டினந் தொடர்ந்ததுபோன் றும் கருமைகொண்டிழைத்ததுபோன்றும் மேகங்கள் கண்படுத் திருப்பனபோன்றும் கூந்தற் பனையினைப்போன்று மிருந்து பரி மளித்து-இதனின் மிக்ககறுப்பில்லையென்று சொல்லத்தக்கதாக விளங்குகின்ற கூந்தலினையும் உடையவர்களா யிருக்கின்றார்கள்.

இஃதன்றி புருவமத்தியிலும், நாசி நுனியிலும், நிதம்பப் புறத்திலும், கைகளினிடத்திலும், கழுத்தினிடத்திலும், செவிக ளிடத்திலும், கபோலத்தினிடத்திலும், இடப்பக்கத்திலும், கொ ங்கைகள் வலப்பக்கத்திலும், சிவந்தமறுவைப் பெற்றிருக்கின்றோ ரும், திரண்டு அழகுபொருந்திய நெற்றியிலே வடித்தெடுத்த முத்தலைச் சூல விரேகையைப்பெற்றோரும், கைகளிலும் மார்பி லுங் கொப்பூழிலும் நாசியிலும் முதுகு வலப்புறத்திலும் அல்கு லடிப்புறத்திலும் வலசுழியைப் பொருந்தியிருங்கின்றோரும், பி டரி வலப்புறத்தில் இரண்டு வல சுழியைப்பெற்றோரும், பிரம தேவனுடைய நற்றலப்பயனுய்த் தோன்றிச் சிறந்த அவயவங்க ளை வாய்ந்திருக்கின்ற அம்மங்கையரது வடிவங்களைக்கண்டு தரிச னஞ்செய்தோரல்லர். மனவாக்குக்காயங்கட் களவுபடாத பரிபூர ணசொரூபராகிய கணேசமூர்த்தியே! ஒப்பற்ற அம்மங்கையரு

டைய வழகின்சாயல்கள் இத்தன்மையவென்றுரைத்தே னன்றி உள்ள விதத்தை யாவர்சொல்ல வல்லவர்களென்று நாரதமுனிவர் சொன்னமாத்திரத்தில் கொன்றைமாலையணிந்தபரமேஸ்வரர் புத்திரராகிய கணேசமூர்த்தி அங்கிகாரங்கொண்டு அம்முனிவருக்கு அருள்வழங்கினர். அவ்வருளைப்பெற்ற நாரதமுனிவர் பின்னுந்திருவடிகளில் வணங்கித்துதித்து விடைகொண்டு பிரமலோகஞ்சென்று அம்மங்கையரிடத்திற் பலமுறைதுதித்து அவர்கள் இன்புறத் தக்கதாகவும் இவ்வையக முய்யத் தக்கதாகவும் நாரதர் சொல்வாராயினர்.

புண்ணிய பூமியில் முளைத்துஅறமுதலிய நாற்பொருள்களையும்பூசித்து யாவர்க்கும் இம்மைமறுமைப்பயனை விளைவிக்கவல்ல கொடிபோன்றுவிளங்கிய அன்னைமீரே! யான் விநாயகக் கடவுளுடைய திருவடிகளை அன்போடுபணிந்து அவரதுசமுகத்தின்முன்னர் உங்கள்வனப்புக்களனைத்தையு மெடுத்துரைத்தேன். அவைகளையக்கடவுள் அங்கிகரித்து உம்மைத்திருக்கலியாணஞ்செய்து கொள்ளத்திருவுளங்கொண் டிருக்கின்றனர். இது நடந்தவிதந் தாங்களறிய வேண்டிய தென்ன, அக்கன்னியரும் மனமகிழ்ந்து கணேசமூர்த்தியை விவாகஞ்செய்துகொள்ளமிக்க ஆவல்கொண்டிருந்தார்கள். அப்பால் நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற் சென்று தாம்நடத்திவந்த காரியங்களனைத்தையுமறிவிக்க, பிரமன் மனக்களிப்படைந்து இனிநமது புத்திரிகட்குவிரைவில் விவாகத்தினைச் செய்துமுடிக்க வேண்டுமென்று தன்னுள்ளத்தின்மதித்தெழுந்தவனாய், உடனேகைலாய வரையிற் சென்று சோமன் சூரியன் அக்கினி என்கின்றமுன்றுவிழிகளையுடையவராயும், ஈசானம்தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்கின்ற * ஐந்து முகங்களையுடையவராயும், மூவர்க்கு முதல்வராயும் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பணிந்து பலமுறை துதித்து நின்றான் உமாபதியாகிய பரமேஸ்வரர் பிரமனை நோக்கி நீ இங்கு வந்தகாரணமென்னென்று வினவியருள, அதற்குப்பிரமன் சொல்லுவான். எந்தையே! பிரமன்விண்டு உருத்திராகிய எங்கண்மூவரையும் ஈன்று ஆக்கல்முதலிய முத்தொழில்களைத்தந்து ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு இலக்குமியுங்கண்டு நாணத்தக்க வனப்பினை வாய்ந்த எனதுபுத்திரிகளை மணஞ்செய்து கொடுக்க ஆவலுற்றிருக்கின்றேன். அதற்குத் தேவரீ ரநுமதியைப் பெறுமாறு வந்தேனென்றான். அதனைச்சந்திர

சேகரமூர்த்தியாகிய சிவபெருமான்செவியுற்றுக் கிருபையோடும் உமாபரமேசுவரியினுடைய திருமுகத்தை நோக்க, அவர் பிரமன் முகத்தைப்பார்த்து விநாயக மூர்த்திக்குத் திருக்கலியாணஞ்செய்வதால் யாவர்க்கு நன்மையுண்டாகு மாதலின் அதனை விரைவின் முடிக்கக்கடவையென் றருள் சுரந்தார்.

இவ்வாறு தாய்தந்தையரிசைதலும் பிரமன் மனமகிழ்ந்துவிடைபெற்றுவந்து கருணைமதத்தைப் பொழிகின்ற யானைமுகத்தையுடைய கணேச மூர்த்தியையடைந்து நமஸ்காரஞ் செய்து சமானரகித நிகிலசக்காரணகர்த்தராகிய விநாயக மூர்த்தியே! அடியேனிவ்வுலகங்களைச் சிருட்டிக்குமாறு தேவரீர்முன்னர் இரண்டுசத்திகளை யளித்தருளினீர். அச்சத்திகளைத் தேவரீர் திருமணஞ்செய்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டான் பூதபௌஷியவர்த்வமானுத் மகமாகிய காலத்திரயத்திலும், பிருதிவியாதி பஞ்சபூதாத்மகமாகிய காரணத்திரயத்திலும், உள்ளும் புறம்பும்வியாபித்து, அந்தரியாமியாகிய பரமாத்மாவாகியும், சர்வசாக்ஷியாகியு மிருக்கின்றசுவாமிகள் எவ்வாறு நடாத்திக் காட்டுகின்றீரோ, அவ்வாறன்றி, இப்பிரபஞ்சங்களிற் சுகங்காணமாட்டாது. அஃதன்றியும், ஆண்களோடு பெண்கள் மனங்கலந்து கூடினுலல்லது, சுவாமிகளடியேற்குக் கற்பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாசமுருதாதலாற் சுவாமிகள் தயவுசெய் தெழுந்தருளி, அடியேனைமுற்றினு மாட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

பின்னரப் பிரமதேவன் கருணைநாயகராகிய விநாயக மூர்த்தியினது கிருபாநோக்கம்பெற்றுக்கொண்டுபோய், வைகுந்தத்தையடைந்து திருமகள்கணவராகிய திருமாலைவணங்கித் தன் புத்திரிகளது திருக்கல்யாணத்தை யுரைத்து, அவ்விடத்தினின்றும் நீங்கித்தனது சத்தியலோகத்தைச் சேர்ந்து தேவதூதுவரைக்கூவி, அவர்களிடத்திற் சகலரிஷிகளும் சகலவேந்தர்களும் சகல தேவர்களும் அத்தேவர்கட் கரசனுகிய விந்திரனும்-மற்றுமுள்ள யாவருந்தங்கடங்கள் குடும்ப சமேதர்களாக விரைந்து வரவேண்டு மென்று திருமணப்பத்திரிகையை வரைந்தனுப்பிப் பின்னர் விசுவகர்மாவையழைப்பித்து, எமதுகர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாண மகோற்சவத்தைத் தரிசிக்க வருகின்ற விண்ணுட்டினர் பூமண்டலவாசிகள்-பாதலத்தினர் முதலானவர்கள் வீற்றிருப்பதற்கு யோக்கியகரமான கோயில்

கண் முதலியவைகளையுங் கல்யாண மண்டபத்தையுஞ் சாத்திர விதிப்படிக்குத் தீவிரமாய்முடிக்கக் கடவையென்று ஆக்கியாபித்தான். அதற்கவ்விசுவகர்மா அதிக மகிழ்ச்சியையடைந்தவனாய், இப்பணிவிடை செய்தற்கு யானென்னதவஞ் செய்தனனோ வென்று ஆனந்தமுற்று, இங்கிமிடத்திற்றானே சமதிட்டபடி செய்வேனென்று விடைபெற்றுச்சென்று ஒருநகர முண்டாக்கி, அதனைச் சூழப்பருத்தோங்கியிருக்கின்ற மதில்களெழுப்பி, நாற்புறங்களினும் விசித்திரமுற்று விளங்குகின்ற கோபுரங்களைத் தூக்க, அதனுட்புரத்தில் கல்யாணமகோற்சவத்தில் வசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வாசஞ்செய்யத்தக்ககூடங்களும் உப்பரிகைகளு மேற்படுத்தி, விசாலமுற்றிருக்கும் வீதிகளையும், இடைஇடையிற்சித்திரகூடங்கள் பளிங்குமண்டபங்கள்-சந்திரகாந்தத் திண்ணைகள் முதலியவைகளை வரிசைவரிசையாக வகுத்துக் கல்யாணத்திற்குரிய பண்டங்களைவைக்கத்தக்க பண்டாரவறைகளை முடித்து தாமரை அல்லிமுதலியபுட்பங்கள் மலிந்திருக்கின்ற தடாகங்கள்-ஓடைகள்-கேணிகள் - முதலியவைகளைத் தக்கவிடங்களிற்றொட்டு. வானையளாவத்தழைத்தோங்கிக் குளிர்ந்த நிழலைப்பரப்பிக்-கனிவருக்கங்களைக் கொண்டிருக்குஞ் சோலைகளுந் தோப்புகளுமுண்டாக்கிப் பரிமளமிகுந்த பலபுட்பசாதிகள் மலிந்திருக்கின்றநந்தனவனங்களையும்-பூங்காவுகளையுஞ்-சிருட்டித்து முடித்தவுடன் அந்நகரத்தினடுவில் மணச்சடங்குகள் முடித்தற்கோர் கல்யாணமண்டபத்தை விசாலமாகப்படைத்து அதன்மத்தியில் நவரத்நமயமாகிய சிங்காதன மொன்றைப் பலவிசித்திரங்களோடு மமைத்து அதைச்சூழ்வரத்திருமாலாகிய தேவர்களும்-முனிவர்களுநங் களித்திருக்கத்தக்க பீடங்களை அணியணியாக வகுத்துப் பலநிறப்பட்டுகளாற் சோடித்திருக்கின்ற விதானங்களினுஞ் சொர்ன மயமாய்த்தோற்றுகின்ற மண்டபத்தின் மேற்பரப்புகளினும். முத்துமாலைகள்-புட்பச்சரங்கள் மயிற்பிஞ்சங்கள் முதலியவைகளைத் தொங்கவிட்டு. நவரத்னங்க ளிழைத்திருக்குஞ் சுவர்ப்புறங்களினும். பருத்தோங்கி நிற்கும் பலவிதத் தூண்களினும் பொற்பாவைகள்-சித்திரப் பிரதமைகள் நிலைக்கண்ணாடிகள் முதலியவைகளைப்பதித்து ஓமகுண்டத்தையும் விசாலமாகப் படைத்தும் பிரமதேவனைக்கண்டு அறிக்கை யிட்டான். அச்சமயத்தில்தான் முன்னர்வரைந்தனுப்பிய திருமணப்பத்திரிகையைக் கொண்டுபோனதேவதூதர்கள் வாயுவேகமுமனோ

வேகமுந் தங்கட்குப் பிற்படத்தக்கதாகவோடி அவ்வவர்கட்கறி விக்க உடனே அம்மணவோலையைவாங்கி யாவரு நிமிர்ந்து வாசித்துச் சந்திரர்-சூரியர் முதலியநவக்கிரகங்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தொண்ணுயிரம் ரிஷிகள், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதர், போகபூமியர், ஆகாயவாசிகள், பாதலவாசிகள், சேடனுதியநாகராசர்கள்முதல் மற்றைத் தீவாந்தரங்களி லிருப்பவர்களுந்தங்கடங்கண் மனைமக்கள் சுற்றத்தினர் முதலிய கூட்டங்களோடு ஏகமாகத்திரண்டு கடையுகத்திற் சத்தசாகரங்களுங் கரைபுரண்டு மேருவைச்சூழ்வதுபோலத் தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாண சம்பிரமததைத் தரிசித்து ஈடேறுங்களிப்பினராய்ச் சயவுற்சாகங்களுடன் ஒவ்வொன்னுஞ சத்தமெழநாற்புறங்களினுமிருந்து தேவதச்சனல் நிருமித்திருக்கின்ற நகரமெங்கணும் வந்து நெருங்கினர்கள். பின்னர்ப்பிரமதேவனுனவன் வந்தபரிசனங்கட் கெல்லாஞ் சகலவாபரணம் உணவு முதலியவைகளை அவ்வவர்கட்கு வேண்டுமட்டும் அளித்துவரும்படி சங்கநிதி-பதுமநிதி-சிந்தாமணி-பஞ்சதரு - காமதேனு முதலானவைகட் காஞ்ஞாபித்துத் தான்பின்னர் நடத்தவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான் இப்பால் அக்காமதேனு முதலியவைகள் பிரமனிட்ட கட்டளையின்படி சகலசெல்வங்களையும் வந்தவர்க்கெல்லாந் தந்துவர, அவைகளை இந்திரன் முதலிய தேவர்கள்பெற்றுக்கொண்டுமனக் களிப்படைந்து வேறொரு தெய்வலோகத்திலடைந்த வர்களைப் போல அளவில்லாத ஆனந்தக்கடலுண் மூழ்கினர்கள். அந்நகரத் துள்ளோர்களும் எந்தையாகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச் செய்துவைத்த நாதனவலங்காரங்களைக்கண்டு முன்னர் காணக்கூடாத வுயர்ந்த பரகதியைப் பின்னரடைந்தவரை யொத்துக் களிப்படைந்தார்கள்.

அந்நகரத்தின்கண் பன்னிரண்டுகோடி சூரியர்களுஞ் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும்ஒருமித்து கூடியிருக்கின்றமையால் அங்கு இராப்பகலென்னுங் காலவேற்றுமைகள் இல்லாது ஒரே தன்மையாகியிருந்தது காமதேனுகொடுக்காநின்ற வுண்டிகளையுங் கற்பகத்தருவளிகின்ற ஆபரணங்களையும் அந்நகரத்து வந்திருக்கின்ற ஆடவர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதனுல் அவர்கள் தங்கள்பெயரின் மாத்திரம் வேறுபட்டிருந்தார்களேயன்றி உருவத்தில் ஒருவரையொருவர் ஒத்தவராகி இருந்

தார்கள் பஞ்சதருக்கள் நெருங்கிய சோலைகளானவை தம்முட் பலவதிசயங்களை யுண்டாக்கச்சிலர், அவ்வற்புதங்களைப் பார்த்து அவ்விடங்களைவிட்டு நீங்காதவர்களா யிருந்தார்கள். இளமைப்பருவத்தையுடைய மங்கையரும் பெருமைபொருந்திய மைந்தர்களுந் தாங்களிச்சித்தவண்ணங் கற்பகமுதலிய வைகளாற் றரப்பெற்றுமலர் பொதுளிய சோலைகளிற்சென்று விளையாடல் செய்தார்கள். இரத்தினுபரணங்களை யணிந்த குயாரவிந்தங்களையுடையமங்கையர் கூட்டங்களிற் சிலர் அம்மானையாடுவர்களும் சிலர் பந்தாடு வார்களும், சிலர் புனல்விளை யாடுவோர்களும், சிலர் ஊசலாடுவோர்களும், சிலர் தங்கடங்க ளன்பினரையுவந்து தேடுவார்களும், சிலர், அவ்வன்பினரைக் கலந்துகளிப்படைவார்களும், சிலர் கிளிப்பிள்ளைகளி னுடையமெல்லிய சொற்களால் நாகணவாய்ப் புட்களினுடைய மொழிகளைக் கீழ்ப்படுத்துவார்களும், சிலர் இந்நாகணவாய்ப் புட்களினுளைய சொற்களால் அக்கிளிப்பிள்ளைகளின் மொழிகளைத் தாழ்வு செய்வார்களுமாகிச் சோலைகளெங்கு மனங்களித் துலாவியிருந்தார்கள்.

கரும்புவில்லை யேந்தியமதனுங்கண்டு நாணத்தக்க வனப்பினைவாய்ந்த ஆடவர்களிற்சிலர் யானைகளோடு யானைகளையும், குதிரைகளோடு குதிரைகளையும், ஆடுகளோடு ஆடுகளையும், கவுதாரிகளோடு கவுதாரிகளையும், காடைகளோடு காடைகளையும், கோழிகளோடு கோழிகளையும் பொருவித்துச் சயங்கூறிக்களிப்படைந்தார்கள். வேதாகமமுதலியவைகளைத் துரிசற்றாராய்ந்துணர்ந்து இருவினைகளினின்று நீங்கியமகாதவத்தையுடையவசிட்டர் முதலான ரிஷிபுங்கவர்களிற் சிலர்தருமவாதஞ் செய்கின்றவர்களும்சிலர் அருத்தவாதஞ்செய்கின்றவர்களும் சிலர் காமவாதஞ் செய்கின்றவர்களும், சிலர் மோக்ஷவாதஞ்செய்கின்றவர்களுமாகியிருந்தார்கள். சனகர்முதலியயோகீஸ்வரர்கள் பரதத்துவசொரூபியாகியசிவபெருமானது ஆகமம் பிரமாணத்தினுலுங் காட்சிப் பிரமாணத்தினுலுஞ் சிரேஷ்டமாகிய பதிபசு பாசங்களின் றன்மைகளைப்பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்பால் நாரதமகாமுனிவர் சகல சம்பிரமங்களையுங் குறைவின்றி நிறைவேற்றியிருப்பதைப்பார்த்து மனங்களித்து விரைந்தெழுந்து வெள்ளியங்கிரியைச் சேர்ந்து சிவபெருமான் சந்நிதானத்தையடைந்து மும்முறை வலம்வந்துவணங்கித் தபாநிதியே!

விநாயப்பெருமான் திருக்கல்யாண மகோற்சவத்திற்குரிய சகல வலங்காரங்களுஞ்செய்து நிறைவேறின. அரசர்கள் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் வந்து நெருங்கியிருக்கின்றனர். தேவரீர் அடியேங்கண்மீது கிருபைபுரிந்து எழுந்தருளவேண்டுமென்றுவிண்ணப்பஞ் செய்துகொள்ளலுஞ் சிவபெருமான் கிருபைகூர்ந்து விநாயகமூர்த்தியையழைத்து, ஐயனே! பிரமனுல்வளர்க்கலுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்வதற்கான கோலத்தைக் கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர். அதுகேட்ட சுத்தசத்துவமூர்த்தியாகிய விநாயகக்கடவுளானவர் தெய்வகங்கையிலாடித் தேவர்களுடைய இமையாவிழிகளை யிடைவிடாது இமைக்கச்செய்யும் வனப்பினைவாய்ந்த தமது திருமேனியினொளியைச் சிறிது தணியச்செய்பவர்போலப் பீதாம்பரத்தையெடுத்துஅரையிற்சாத்தி வாசனைவீசுகின்ற கூட்டுவருக்கச் சந்தனத்தை மார்பினிடத்துந் தோள்களினிடத்தும் பூசிக்கொண்டார்.

சந்திரனை முடியிலணிந்ததைத் தெரிந்துகொண்ட மற்றைய கோள்களானவை தாமும் அம்முடிமே லேறியிருப்பதற் கெண்ணி அரியதவங்களைச்செய்ய அவைகளையுந் தமது நன்முடியிற் சூட்டிக்கொண்டதற்கொப்பாக மிக்கவொளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப்பதித்த பொன்முடியினைச் சூட்டிக்கொண்டார். சடைமீதிருக்கின்ற சந்திரன் அச்சடையை மறைத்திருக்கின்ற முடிமீதிருந்து திருமணச்சேவை செய்யானுயின்அவனுள்ளம் வருந்துமென்றெண்ணினர்போல அச்சந்திரனை அப்பொன்முடியின்மீது பொருந்தவமைத்து அதனைச் சூழ்வரக்கொன்றை மாலிகையினை யணிந்துகொண்டார். பல்லாயிரங்கோடி யண்டங்களிலுள்ள ஆன்மகோடிகளனைத்தையும் அரைநொடியிற்றகித்து நீறுக்கவல்ல தமது நுதல்விழியின் வெப்பத்தை அக்கல்யாண சபையிற் காட்டாதவண்ணம் அதனைத் தணிவிப்பவர்போலஅதன்முன்னர்க் கண்டவர் வியப்படையத்தக்க பிரகாசத்தினையுடைய இரத்தினப் பட்டத்தையணிந்தருளினர். பொன்முடியிலணிந்த மூன்றும் பிறையினது நிலவென்றுசொல்லும்படி ஒப்பற்ற நெற்றியில் வெண்டிருநீற்றையணிந்துஅதனடுவின்,மிக்கவாசனை கலந்திழைத்திருக்கின்ற சிவந்த திலகமிட்டுக்கொண்டார். திருக்கரத்திலிருக்கின்ற கொடியாகிய மீனும் ஆகாயத்திலிருக்கின்ற அருந்ததியாகிய மீனுந் தமதுதிருமுகமாகிய கருணைக்கடலில் இன்புற்றிருக்க வெண்ணிப் பக்கங்களில்வந்து பொருந்தியிருப்பனபோல

அழகு நிறைந்த மணிகளாற்செய்யப்பட்ட மகரகுண்டலங்களைக் காதிலழகுறவணிந்தனர். முகமாகிய பதுமநிதியைத்தாங்குகின்ற சங்கநிதியாகிய கண்டத்திற் சிந்தாமணியைப்போலத் தாளமாலைகளையும் பொன்னுபரணங்களையும் அணிந்து, இடையில் உதாபந்தனந்தரித்துக் கைகளிற்கடகங்களைப்பூண்டு, விரல்களின்மோதிரங்களையணிந்து, திருவடிகளிற் சிலம்புகளையார்த்து, இன்னும் அளவற்ற ஆபரணங்களைச் சிறப்பெய்த வணிந்தருளினர்.

இவ்வாறு விநாயகக்கடவுள் திருமணக் கோலங்கொண்ட சிறப்பைச் சிவபெருமான் கண்களிக்கப்பார்த்து ஈராயிரமருப்பினோடு மலைபோன்றுபாரித்திருக்கின்ற அயிராவணத்தை அவருக்குத்தந்து தாமும் உமாபரமேஸ்வரியும் இடபவாகனத்திலெழுந்தருளினர். வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள் மயில்வாகனத்திலேறி யருளினர். துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர் அட்டவித்தியேஸ்வரர், அஷ்டவசுக்கள், அஷ்டதிக்குப் பாலகர்முதலிய எல்லாத் தேவர்களுஞ் சர்வாலங்காரசோபிதராய் அவ்வவர் வாகனங்களிலேறிப் புடைசூழ்ந்தார்கள். நிகும்பன்-கும்பன்-சங்கபாலன்-குமுதன்-பானு-தனஞ்சயன் - தசமுகன் - காலபாசன்-விசயன் முதலிய பூதகணத்தலைவர்களோடு, நந்தியீசுவரரும் மற்றுமுள்ள கணநாதர்களும் நெருங்கினர்கள். யாவருந் துதித்தற்குரிய முதன்மைபெற்றிருக்கின்ற பிரணவமந்திரம் - வேதங்கள்-கலைகள்-காலங்கள்-இராசிகள்-சத்தகோடி மகாமந்திரங்கள் முதலியவைகளோடு காமிகம்-யோகசம்-சிந்தியம்-காரணம் - அசிதம்-தீப்தம்-சூக்குமம்-சகத்திரம்-அஞ்சுமான்-சுப்பிரபேதம்-விஜயம் -நிச்சுவாசம்-சுவாயம்புவம்-ஆக்கினேயம்-வீரம்-இரௌரவம்-மகுடம்-விமலம்-சந்திரஞானம்-முகவிம்பம்-புரோற்கீதம் - இலளிதம்-சித்தம்-சந்தானம்-சர்வோத்தமம்-பாரமேச்சுரம் - கிரணம் - பேதம்-வாதுளம் என்கின்ற இருபத்தெட்டாகமங்களும் ஒவ்வொரு தேவவடிவங்களாகித் திரண்டுவந்தன.

இவ்வாறு சகல சம்பிரமத்தோடு யாவரும் புடைசூழ்ந்து நெருங்கிய சமையத்தில் விநாயக மூர்த்தியானவர் அயிராவணத்தி லாரோகணித்துப் பூதகணங்கள் புகழ்பாடிவரவும், மாதவர் வேதமோதிவரவும், சந்திரவட்டக் குடைகள் ஆகாய வெளியை மறைக்கவும், பலவித பட்டுக்கொடிகள் இருமருங்கினு நெருங்கவும், சிலர் ஆலவட்டங்கள் வீசவும், சிலர் சாமரைகளிரட்டவும்,

தோற்கருவி, மிடற்றுக்கருவி என்கின்ற பஞ்சவாத்தியங்கள் நாற்றிசைகளினு முழங்கவும், இன்னும் அளவற்ற ஆடம்பரங்களோடு கடல்பெருகு மாறுபோல எள்ளிட விடமில்லாமல் ஒருவரோடொருவர் அடர்ந்து கிரீடங்கள், புயங்களுடன் புயங்கள் ஊடுதாக்க ஆகாயமார்க்கமாகச் செல்லுமளவில் அஷ்டபுயா சலங்களையுடைய சிவபெருமானுேடு கணேசமூர்த்தி திருமணக்கோலங் கொண்டெழுந்தருளிவருவதைப் பிரமன் விண்டு முதலிய தேவகணங்களாதியர் கண்டு அளவளாவிய வானந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று கற்பகமலர்களைத் தூவி யருச்சித்து அட்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அந்நகரத்துள்ள இராசவீதியில வலமாக வழைத்துக்கொண்டுபோய்த் திருக்கல்யாணமண்டபத்தி லெழுந்தருளச் செய்தார்கள்.

உடனே சரசுவதியானவள் பொன்கரகத்திற் றெய்வகங்கையை யேந்திவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அபிஷேகிக்க, பிரமதேவன் மிகுந்த வணக்கத்தோடும் அத்திருவடிகளைவிளக்கி மெல்லிய ஆடைகொண்டொற்றினுன். பின்னர்ச் சிவபிரானும் உமாதேவியும் ஓராதனத்திலிருந்தனர். சுப்பிரமணியர் முதலிய மற்றைத் தேவர்களெல்லாம் வெவ்வே றாதனங்களில் அமைந்தனர். விநாயகக்கடவுள் அம்மண்டபத்தினடுவில் அமைத்திருக்கின்ற மாணிக்கச் சிங்காதனத்தில் ஆரோகணித்துத் தேவமாதர்கள் நடிக்கின்ற ஆடலினும் பாடலினுந் தமது திருக்கண்ணுேக்கினைச் சாத்தியிருந்தனர். அளவற்ற தேவப்பெண்கள் வெள்ளடை, பாகு, வாழைக்கனி, தெங்கின்கனி, மற்றுமுள்ளபலாதிகள், இரத்தினுபரணங்கள், பூமாலைகள், சித்திரப்பட்டுகள் முதலான மங்கலவரிசைகளைத் தனித்தனி பொற்றும்பாளங்களில் நிரப்பித் தங்கடங்கள் கைகளிலேந்திக்கொண்டு, சாமரை, பூரணகும்பம், கண்ணுடி, தோட்டிமுரசு, மணிவிளக்கு, கொடி, இணைக்கயல் என்கின்ற அட்டமங்கலத்துடன் பலவாத்தியங்களுமுழங்க அந்நகரவீதியை வலமாகவந்து விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்திற் றெருப்பாகவைத்துவணங்கினுர்கள். இப்பால் அந்தப்புரத்தி லிருக்கின்ற சித்திபுத்தியென்னுங் கன்னியர்களைச் சரசுவதி இந்திராணி, இலக்குமி, அதிதி, அநசூயை, அருந்ததி என்கிற மாதர்களறுவரும்வணங்கி வாழ்த்துதல்செய்து, சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஆதனத்தி லெழுந்தருளப்பண்ணி அங்குவந்திருக்கின்ற தேவமாதர்கட்

கெல்லாம் வேறுவேறு கனிவர்க்கங்களையும், வெள்ளடை பாக்கு களையுந் தங்கள்கை மிதப்பத்தந்து பின்னர் யாவரும் புடை சூழ்ந்து பற்பல ஏவல்களை இயற்றிவர, அக்கன்னியர்க்குத் திரு மஞ்சன மாட்டுவித்தனர்.

புனுகுசட்டம்-ஜவ்வாது - கஸ்தூரி முதலிய சந்தணச்சேற்றையும் அருவருப்புண்டாக வப்பி மேருமலையிற்படர்ந்த மேகக் கூட்டங்கட் கொப்ப அகிற்புகை முதலிய வாசனைப் புகைகளை யூட்டினார்கள். பற்பல மலர்கள் நெருங்கிப் பூத்திருக்கின்ற கான கத்தைபோலவும், ஆகாய முழுவதினும் உடுக்கூட்டங்களை நிரப்பி வருகின்ற இருளை நிகர்ப்பவும், சீப்பினால்வாரிப் பரவியிருக்கின்ற கூந்தலிற் பலவித ரத்னமாலைகளையொத்த பன்னிறமலர் மாலி கைகளைச்சேர்த்து எருத்தின் முரிப்பினையொப்பக் கொண்டை யிட்டு மதம்பொழிகின்ற யானையானது தன் மருப்பிற்றுதிக்கை யைச்சுற்றிக் கொண்டாற்போலக் கஸ்தூரிமணங் கமழ்கின்ற உச் சிச்கொண்டையில் முல்லைமாலைகளைச் சூழவணிந்து,மேகமானது வெள்ளிய நீர்த்தாரைகளைச் சொரிவதுபோல அவ்வுச்சிக்கொண் டையிற் பிரகாசிக்கின்ற முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள். இந்திரன் தனதுவில்லைத் தன்வாகனமாகிய மேகத்தில்வைத்தது போலக் கரியகூந்தன் மருங்கடைந்திருக்கின்ற நுதலின்மீது அவ் விந்திரதனுசிலம்பு தொடுத்ததையொப்ப நுதலணிமாலையினை ய ணிந்தார்கள். விநாயகப்பெருமான் திருமுடியின்மீது விளங்கியி ருக்கின்ற இளந்திங்களையுந் திருகரத்திலேந்தியிருக்கின்ற மயிற் கொடியையும் அவர்காதலியராகிய சித்தி புத்திகளும் அணிந் துக்கொள்ளுவது முறமையென்று சந்திரப்பிரையையும்மயிலணி யையும் முடியின்மீதணிந்தார்கள். விநாயகக்கடவுளுடைய பிரதா பத்தைப்பொதிந்து வைத்ததுபோலச் சிவந்த திலதப்பொட்டி னையிட்டார்கள். அமுதபானராகியதேவர்கள் விழிகளைப்பாற்கட லென்றுங் கொங்கைகளை மந்தரகிரியென்றுங்கருதி யேக்கமுறாத வண்ணம் அவ்விழிகளைக் காத்தற்கோரடையாளமாக அஞ்சனந் தீட்டினார்கள்.

இம்மங்கையர் கண்கள் ஆலத்தையும் அமுதத்தையும்அளிப் பனவன்று சுத்தமாகிய திருபாற்கடலேயென்றும், அவைகளிற் றீட்டப்பட்டது அஞ்சனமன்று அதனையுண்பான வந்தமேகமெ ன்றுங் கருதி மயங்குதற் கேற்பனவாக அக்கடலினிடத் துண்

டாகிய சங்கநிதியாலீன்ற நீண்ட தரளமணியினை நாசியின்மீதணிந்தார்கள். அம்மங்கையர் முகாரவிந்தமாகிய சகோரப்பக்ஷியானது நெற்றியைச் சந்திரவிம்பமெனக் கருதி அமுதுண்ண வந்திருப்பதைப்போல அம்முகாரவிந்தத்தில் விளங்கியிருக்கின்ற கண்ணிணைகளாகிய நீலோற்பலமலர்களின் அழகைமற்றைய நீலோற்பலமலர்கள் கிரகித்துக்கொள்ளுமாறு இடந் தேடிக்கொள்கின்றனவென்று சொல்லும்படி மிக்க வொளிவிளங்குஞ் செவிகளின்மேல் அன்றலர்ந்த நீலோற்பல மலர்களையணிந்தார்கள். தாய்தந்தையரைப்போல அம்மங்கையர்கள் வளர்த்த அன்னப்புட்களானவை அவர்கட்கு இரகசியஞ்சொல்லச் செவிகளி னடுத்திருப்பனபோல ஒளிமிகுந்த மணிகளை வரிசையுறச்சேர்த்துப் பதித்தஅன்னக்கொப்புகளை யணிந்தார்கள். உரோகணிமாது இம்மங்கையருடைய வொளிமிகுந்த வனப்பினைத் தன்காதலனாகிய சந்திரனென்றுகருதி விருப்புற்றடுத்திருப்பதுபோலக் குளிர்ச்சியு மழகும் வாய்ந்த தரளத்தினாற்செய்த சன்னப்பூவென்னும் ஆபரணத்தினை யணிந்தார்கள்.

இவ்வாறு சித்தி என்னுந் தேவியார்க்கு இலக்குமி அதிதி இந்திராணி என்னு மூவர்களும், புத்தி என்னுந்தேவியார்க்குஅநசூயை அருந்ததி இரதிதேவி என்னு மூவர்களுமாக மணக்கோலத்திற்குரிய வலங்காரங்களையெல்லாஞ் சிறக்கச்செய்து முடித்துஅவ்விடத்தினின்று நீங்கிச் சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவியாருடைய கடைக்கணோக்கின் நேராகநின்று, அன்னையே! முன்னம் அடியேங்கள்செய்த தவப்பயனாகத் தேவரீர் ஆக்கியாபித்த பணிவிடைகளைக் குறைவின்றி நடாத்திவந்தனமென்றறிவித்து வணங்கி,அத்தேவியாருடைய வாஞ்ஞைபெற்று பின்னரவ்விருவகையினரும்அம்மங்கையரை நவரத்தினச்சிவிகைகளிலேற்றிப் பலவிண்ணின்மாதர்களுந் தோழியர்களும் புடைசூழ்ந்துவரவும், வெண்பட்டுக்குடைகள் மயிற்பிஞ்சுகள் முதலிய வலங்காரங்களோடு பலவகைக் கொடிசின்னங்கள் விளங்கவும், குடமுழாமுதலிய பலவாத்தியங்கண் முழங்கவுமாக அளவற்ற வைபவங்களோடு வீதியிலெழுந்தருளச் செய்தமாத்திரத்தில்முளை முதலியவெல்லாம் முறைமையாகச் சேர்த்துவைத்திருக்கின்ற கல்யாணமண்டபத்திற் சனகமகாமுனிவர் ஆசிரியராகவந்து தருப்பை வெண்பொரி முதலிய பலவகைப் பொருள்களையுஞ் சேகரித்து முகூர்த்தகாலம் பார்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்

தில் ஒருவர்க்கொருவ ரொப்பாவதன்றி மற்றொருவ ரொப்பில்லாத அம்மணப்பெண்களிருவரும் வீதியை வலமாகவந்து திருக்கல்யாண மண்டபத்தி லிறங்கிக் கற்பக தருவின்இருமருங்கினும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக் கொடிபோலக் கணேச மூர்த்தியினுடைய பக்கத்திற் கலந்திருந்தார்கள்.

உடனே மண்ணில் வழுக்கிவீழ்ந்த தேவர்கள் மீட்டும் விண்ணிற் புக்கிமகிழ்வை யடைந்ததுபோல,இதுகாறுங் கணேசமூர்த்தியை நீங்கியிருந்த அம்மங்கையர் மீட்டும் அவர்சமீபத்திற்சலத்தலும், முன்னர் வேறுபட்டு விளர்த்திருந்த நிறத்தினைப் போக்கித் தங்கள் சுபாவவடிவத்தினை யடைந்தார்கள். இப்பால் சகலகலைவல்லவராகிய சனகமகாமுனிவர் சங்கற்பஞ் செய்து புண்ணியாவசனம் புரிந்து அம்மணப்பந்தலிலுள்ள பொருள்களை யெல்லாந் தூய்மையாக்கிக் கணேசமூர்த்தியை வேதாகமங்களாற்றுதித்துத் தேன் கலந்த பாலும் பழமுமளித்து அருக்கியம் பாத்தியம் ஆசமனம் என்கின்ற மூன்று மந்திரசலங்களையுந் தந்து மணப்பெண்களுக்குங் கூறை முதலியவைகளை யணிவித்துப் பிரமதேவனைக் கூவினர். உடனே அப்பிரமதேவன் விரைந்துவந்து தம்பதிசமேதரா யெழுந்தருளியிருக்கின்ற விநாயகக் கடவுளுடைய மணவணிக்கோலத்தை மனங்களிக்கக்கண்டு கரங்களைச் சிரமேற்கூப்பித் தொழுது துதித்துத் தன்னருகில் நிற்கின்ற சரசுவதியைப்பார்க்க, அவள் பலதெய்வப் பெண்களுடன் துரிதமாகச்சென்று திருமஞ்சனய் கற்பகமலர் தூபதீப முதலாகிய பொருள்களைப் பொற்பள்ளயங்களிலேந்தித் தன்கணவன் சமீபத்தில் வந்துநின்றனள்.

அக்காலத்திற் சனகமகாமுனிவர் பணித்தருளியபடிக்குப்பிரமனவன் வேதாகமவிதிப்படி பாதபூசைசெய்யத் தனித்தவனாய்ப் பொற்றட்டினிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச் சேர்த்துத் தன்தேவியானவள் தங்கக்குடத்தில் நிரப்பிவைத்திருக்கின்ற கங்காசலத்தையெடுத்து, மெல்லமெல்ல வார்த்துவராத்தான் சுத்திசெய்து திருவொற்றுடையால் ஈரத்தைப்புலர்த்திக் களபகஸ்தூரி முதலியவைகளைச் சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பை யப்பிப் பஞ்ச தருக்களினது புதியமலர்களைக்கொண்டருச்சித்துச் சாம்பிராணித் தூபத்தைக்காட்டி,கர்ப்பூராஞ்சனங்கொடுத்து, சோடச வுபசாரங்களோடும் பூசனைகளை நிறைவேற்றியவு

டன் உடல் பொருள் ஆவிஎன்கிற மூன்றையும் அநாதியிற்றானே தமக்கு அடிமையாகவுடைய கடவுளுக்குப் பரிபக்குவ ராயினோர் தங்கள் போதமொழிவினிமித்த மீட்டுமவைகளைச் சமர்ப்பிக்கு முறைமைபோல விநாயகமூர்த்தியை அநாதிதொட்டு நீங்காத அச்சத்திகளைப் பிரமதேவனானவன் மீட்டும் பழமை பாராட்டி யளிப்பவனைப் கணேசமூர்த்தியினுடைய திருக்கரங்களிற்றனது புத்திரிகளாகிய சித்திபுத்திகளின் திருக்கரங்களைச் சேர்த்துச் சுவாமீ! அடியேன் அருமையாக வளர்த்தெடுத்த இம்மங்கை யரைத் தேவரீர அங்கீகரித்து, என்னை யாட்கொள்ளவேண்டு மென்று சரசுவதிவிட்ட தெய்வ தீர்த்தத்தால் தாராதத்தஞ்செ ய்து வணங்கினன். அவ்வாறே அத்திருக்கலியாண மகோற்சவத் தில்வந்திருந்த நவக்கோள்கள் முதலிய சகல வுயிர்களுந்தாமாக விருந்தும் அக்கன்னியரை ஏற்றுக்கொள்ளு நிமித்தம்அவைகளி னின்றும் வேறாகி வீற்றிருக்கின்ற கணேசமூர்த்தியானவர் அவ் விண்ணப்பத்திற்கு அருள் சுரந்து ஓர் தந்தை தன்கையிலிருக் கின்ற வெள்ளடையைச் சிறியமதலை கையிற்றந்துமீட்டும்அதைத் தன்வாயாற் கிரகித்துக் கொள்ளுமாறுபோல முன்னர் அப்பிர மன் கடைத்தேறுமாறு கடாட்சித்தருளிய அம்மங்கையரை மீட்டு மவனிடத்தி னின்றுந் தாம் ஏற்றுக்கொண்டனர்.

இப்பாற் பிரமதேவன் தன் னிஷ்டசித்தியைப்பெற்றுக் களி த்தவனாய்ச் சில காரியகராத்தரத்தி, வாழைக்கனி - மாங்கனி - பலாக்கனிமுதலிய கனிவர்க்கங்களையும், மதுரமிகுந்த கருப்பஞ் சாறு-ஆவின்பால்-தேன்-கற்கண்டு முதலிய சிறந்த வஸ்துக்களை யும், பொலிவாகத் தருவித்துத் தங்கப் பள்ளயங்களினும் கிண் ணங்களினு நிரப்பிக்கொண்டு வந்து. கர்த்தனே! தேவரீர் இவற் றினைப் புசித்தருளி அடியேனை யிரட்சிக்கவேண்டுமென்று நிவே தித்தனன். பின்னர் மங்களபேரி-முரசம்-மத்தளம்-டமா - குட முழா-தக்கை-வலம்புரிச்சங்கம்-வேய்ங்குழல்-திருச்சின்னம்-பூரி- எக்காளம்-துத்தாரி,சயகண்டை முதலிய பல மங்கள வாத்தியங் கள் அண்டங்களதிர்ந்து திசைகள் செவிடுபடத்தக்கதாகத் தாம் தாமென்று முழங்கவும். தேவர்கள்-முனிவர்கள்-கின்னரர்-கிம்பு ருடர்-சித்தர்-வித்தியாதரர்-கருடர் - காந்தருவர் முதலிய சகல சனங்களும் மன வெழுச்சியுடன் தங்கடங்கள் கரங்களைக்கொட் டிச் சயசயவென்று போற்றவும், ஏகாதசருத்திரர்- துவாதசாதித் தர்-அஷ்ட திக்குப்பாலகர் முதலிய யாவருஞ் சந்தோஷ சாகரத்

தின் மூழ்கி இத்தினஞ் சன்மசாபல்லியராய் முத்திக்களாயினோ மென்று பலவிதங்களிற்றுதித்து மங்கல வாழ்த்துக்கூறவும், அத்திரி ஆங்கிரசர், கௌதமர், சமதக்கினி, பாரத்துவாசர் முதலிய ரிஷிபுங்கவர்கள் வேதாகமங்களாற் றுதித்து வாழ்த்தவும், சமுத்திர கோஷமும் அஞ்சும்படியாக ஆகாயத்தினின்று தேவதுந்துபிகள் கணகணவென்று சத்திக்கவுமான இவ்வித வாடம்பரங்ளோடு சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச்சேர்ந்து சுற்றிலும் அந்தணர்களை யிருத்தித் தருப்பைகளைப் பரப்பி, அக்ஷதைகளையிறைத்து, மந்திரமலர்களாற் பிரணவமுதலிய பிரதம தேவதைகளை வழிபட்டு, பூரணகும்பம் குடவிளக்கு முதலியவைகளை யாங்காங்குவிதிப்படி தாபித்துவைத்து முத்தீக்களையு மந்திரபூர்வகமாக வோமகுண்டத்திலெழுப்பி, விநாயகக்கடவுளையுஞ் சித்தி புத்திகளையும் அதனருகில் எழுந்தருளச்செய்து, இருடிபுங்கவர்களும் அந்தணர் குழுஉக்களும் வேத சாகைகளைச்சொல்லிச் சமித்துக்களைக் கிரமப்படி ஓமகுண்டத்திற்போட்டுவர பசுநெய்யை யூற்றி இடையிடையிற் பொரியையும் பாலையுமிறைத்து நவக்கிரக வோம முதலிய கருமங்களை வேதாகமவிதிப்படி விநாயகப் பெருமான் முன்னிலையில் நிறைவேற்றிப் பூரணாகுதியுங் கொடுத்தவுடன் அத்தீயினிடத்தெடுத்த மைக்குழம்பை மாப்பிள்ளையினுடைய திருநுதலிலிட்டுப் பின்னர் அவரைக்கொண்டுகலியாணப் பெண்களுக்கிடுவித்து நாரதமுனிவர் மும்முறை பொரியிட அவைகளை ஓமாக்கினுக் காகுதிசெய்து மற்றைச் சடங்குகளையும் வரன்முறையாக முடித்தனர். பின்னூர்க் கல்யாணப்பிள்ளைக்கு மகாவிஷ்ணு தோழராகவிருந்து கைலாகுகொடுத்துப் பீடத்திலிருந் தெழுப்பவும், இலக்குமி முதலிய அறுவர்களுந் தங்கள் நாயகியராகிய சித்தி புத்திகளைத்தழுவி யெடுத்து அவர்கள் கனிட்ட விரல்களை எமதுகர்த்தாகிய விநாயகப்பெருமானுடைய கனிட்டவிரல்களாற் பற்றச்செய்தார்கள். உடனே சகலரும் புடைசூழ்ந்து போற்றி வரும்படியாகக் கணேசமூர்த்தியானவர் அத்தீக்குண்டத்தை மும்முறை வலம்வந்து வடபாரிசத்திற்சேர்ந்து கல்யாணப் பெண்களின் றிருவடிகளைத் தமது திருக்கரத்தாற் றூக்கித் தூக்கி நிலத்திலிட்டு முடிவில் அம்மியின்மீது வைத்துப் பதிவிரதா சிரோமணியாகிய வதிஷ்டமுனிவர் பத்தினியை எதிரிலழைத்து அவள்மீது தமதுதிருக்கண்சாத்தினர்.

இவ்விதமாக அக்கினிதேவன்-தவத்தர் தேவர்-வேதப்பிரா மணர்முதலிய யாவர் முன்னிலையினுஞ் சாட்சியாகத் திருக்கல் யாண சம்பிரமங்களனைத்துங் கிரமமாக்முடிந்தவுடன் விநாயகக் கடவுள் தமது தேவியரோடுந் தாய்தந்தையர் திருவடிகளில் வணங்க, அத்தாய் தந்தையர் ஆசீர்வதித்து மனப்பூரிப்படைந்து நவரத்தினமயமா யிருக்கின்ற ஆசனத்திலிருத்தித் திருமாலை நோக்க, அத்திருமால் சிவபிரானைவணங்கித் தேவேந்திரனெடுத் து நீட்டுகின்ற தாம்பூலாதிகளை அநந்தர்முதல் உருத்திர கணமீ ருயுள்ள எல்லாத் தேவர்கட்கும் வரன் முறையாகக் கொடுத்து வந்தனர். அவ்வாறே கற்பக விருட்சமும் முனிவர் முதலாயுள்ள பரிசனங்கட்கு வேண்டுவனவற்றை வரையாது கொடுத்து வந் தது. இவையன்றி அவ்வவர்கள் குறித்துக்கேட்டவரங்களையுஞ் சிவபெருமான் தமது பூரண கடாட்சத்தால் அநுக்கிரகித்துப் பார்வதிதேவியோடுசென்று மற்றோரிடத்திற் றனியாகவீற்றிருந் தனர். இப்பால் சித்திபுத்திகளிருவரும் அழகியமணிகளிழைத்த சிவிகைகளிலேறிவர எம்மை யடிமையாகவுடைய விநாயகமூர்த் தியானவர் ஈராயிர மருப்பிணையேந்திய அயிராவண மென்னும் பொருப்பில் ஆரோகணித்து அடைத்தகடலை யுடைத்ததுபோல மங்கல வாழ்த்துக்கள் சத்திக்கவும், தேவர்கள் புட்பவருடம்பொ ழியவும், சந்திரவட்டக் குடைகள் ஆகாயத்தைக் கவிக்கவும்,பல விருதுக்கொடிகள் அண்டமுகட்டை நெருக்கவும், இருமருங்கி னும் வரிசை வரிசையாகக் கவரிகளிரட்டவும், ஒப்பற்ற ஆலவட் டங்களை நாற்புறங்களினுமசைக்கவும், கின்னரர் இசைபாடவும், அரம்பையர் நடமாடவும், மற்றும் இவைமுதலிய சகல வாடம் பரங்களோடும் நந்திதேவர் தமது வெள்ளிமேவத்திரத்தால் நெரு ங்கியிருக்கின்ற சனங்களைவிலக்கி வரும்படியாகப் பைய பைய அயிராவணத்தை நடாத்திக்கொண்டு வீதியிற் பவனிவருகின்ற சமயத்தில் சிலமாதர்கள் நீராஞ்சனம் பூரணகும்பம்-மணிவிளக்கு முளைப்பாலிகை முதலிய மங்கலப்பொருள்களை யேந்தியும் சில மாதர்கள் கன்னற்றுண்டு-கதலிக்கனி-மாங்கனி-பலாக்கனி முத லிய வர்க்கங்களைவீசியும், சிலமாதர்கள் புட்பம்-சந்தனம்-கதம் பம்-பனிநீர் முதலிய பரிமளத்திரவியங்களைச்சொரிந்தும், சிலமா தர்கள் வச்சிரம்-வைடூரியம்-கோமேதகம் - புட்பராகம் முதலிய ரத்தினங்களை எறிந்தும் இவ்வாறு யாவரும் மிகுந்த பத்தி விசு வாசத்துடன் பற்பல சம்பிரமங்களைச்செய்து கரங்களைக்கூப்பித் தொழுது வாயார வாழ்த்தினவர்களாயிருந்தார்கள்.

இவ்வாறு ஆங்காங்குகாமுற்று விசாலித்திருகின்றமங்கையர் கூட்டத்துள் விநாயக மூர்த்தியைக் கைகுவித்துத் தொழுகின்ற வருடைய கரங்களுங் கொழுகொம்பற்ற கொடிபோலத்தாழ்ந்து வணங்கிமீளவும் எழுதலில்லாதவர்களுடைய நிதம்பங்களுமே தத்தம்வளைகளோடுங் கலைகலோடு நிறைந்து விளங்கியிருந்தன. அன்றி, மற்றையர் கரங்களும், நிதம்பங்களும், அவ்வளைகள் சேர்ந்தனவாகவும், கலைகள் வீழ்ந்தனவாகவுமிருந்தன. சிலமங் கையர் கைகளிலணிந்திருக்கின்றவளைகளெல்லாம்விநாயகப்பெரு மானுடைய மார்பைப்புல்லாதகைகளில் நாமிருப்பதனாலென்ன பயன் என்னபயனென்று நழுவிவீழ்ந்தன. சிலநங்கையர் முடித் திருக்கின்ற கூந்தல்களெல்லாம் அவர்கள் உள்ள நெகிழ்ச்சியை அக்கணேசமூர்த்திக் கறிவிப்பதுபோல அவிழ்ந்து சோர்ந்தன. சில கோதையர் ஆனந்தக்கூத்தாடினார்கள் சிலபேதையர் நயந் தெரிந்து பாடினார்கள், சில அரிவையர் குறிஞ்சிமுதலிய பண்க ளைப் பாடினார்கள். சிலதெரிவையர் பாவனையிற்கலந்தூடினார்கள். இவ்வாறு பேதை-பெதும்பை-மங்கை-மடந்தை-அரிவை - தெரி வை-பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவங்களையும் பெற் றிருக்கின்ற ஸ்திரீசாதிகளெல்லாந் தெருக்களில் நிறைந்து நின் று காதல் கொள்ளத்தக்கதாகஎன்னை யாட்கொள்பவராகிய விநா யகமூர்த்தியானவர் அலங்கரித்திருக்கிற வீதிகளை வலமாகவந்து மீட்டும் அரண்மனையிற் பிரவேசித்தனர். அத்தருணத்திற் காம தேனு, சிந்தாமணி, பஞ்சதரு, சங்கநிதி பதுமநிதி என்னும் இ வைகள் வேறுவேறுருவங்கொண்டு வந்தவர்கட்கெல்லாம் பெரு மைபெற்ற பலதிரவியங்களை அவ்வவர்கள் வெறுக்கும்படியாக மழைபோற் சொரிந்தன.

இவ்வண்ணந் திருக்கல்யாண சம்பிரமங்கள் முழுவதும் நிறை வேறிப்பின்னர்த் தேவர்கள்-முனிவர்கள்-திக்குப்பாலகர்-கணநா தர்கள்-பூமண்டலவாசிகள் - பாதலவாசிகள் முதலிய மற்றைய தீபாந்தரங்களிலிருந்து வந்தவர்கள் யாவருஞ் சிவபெருமான் பா ர்வதிதேவியாரோடும் வீற்றிருக்கின்ற சபையைச்சேர்ந்து தீர்க்க தண்டஞ்செய்து விடைபெற்று, தம்பதி சமேதரா யெழுந்தருளி யிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு பலமுறை துதித்து அடி யற்றமரம்போல வீழ்ந்து நமஸ்காரஞ்செய்து அவரது திருவரு ளைப்பெற்றுத் தங்கடங்கள் பதவிகளிற்சேர்ந்தனர். இப்பாற் சிவ பெருமான் தம்மோடுவந்த கந்தவேள் முதலிய காரணர்களெல்

லாம் புடைசூழ்ந்து வரும்படியாகச் சித்திபுத்தி மணாளராகிய் கணேசமூர்த்தியை யழைத்துக்கொண்டு பார்வதிதேவியாரோடுங் கைலைக்கெழுந்தருளித் தமது பஞ்சகிருத்தியங்களை நடாத்தியி ருந்தனர். விநாயகக்கடவுளுந் தமது உலகத்திற்சென்று எமதன் னையாகிய சித்திபுத்திகளோடுங் கலந்து சகலபோகங்களையும் அநுபவித்திருந்தனர்.

விநாயகர் திருக்கல்யாணம்
முற்றிற்று.

## நாரதமுனிவர் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு
# வள்ளியம்மையை விவாகம் செய்தது.

சிவத்திற்கிடான தவச்சிரேஷ்டராகிய நாரதரிஷியானவர் தெய்வலோகத்தைக்கடந்து கருங்கடல்சூழ்ந்த பூமண்டலத்தில் வந்து மகத்துவமுள்ள சிறந்த நதிகளிருக்குமிட மெங்கனுந்தே டிப்போய் ஸ்நானம்பண்ணிப் பரமேஸ்வரர் பார்ப்பதியாருடன் களித்தெழுந்தருளியிருக்கின்ற தெய்வீகத் தலங்களிற்போய்ப் பாடியாடிப் புகழ்ந்துபோற்றித் தரிசித்து ஆனந்த பரவசனாய்ப் பூவலம் வருமுன்னிலையில் வளங்களனைத்தும் பெருத்தோங்கிச் சோலைகள் சுனைகள் மலிந்து மங்களகரமாக்விருக்கும் வள்ளிமலை க்கருகில் வருகின்றசமயத்தில் நீண்டகதிர்களை விரித்து இரைச் சலிட்டு எங்கணும் பரந்திருக்கும் தினைப்புனங்களினொன்றில் பர ணினிடத்திருந்து கவணைக்கரத்திற்றாங்கி ஆயாலோட்டிக் காத்தி ருக்கின்ற வேடராஜபுத்திரியைத் தரிசித்தமாத்திரத்தில் உள்ள முமென்பு முருகத்தக்கதாகப் பத்திவிளங்கி மனப்பூரிப்புடன் கரங்களைக் கூப்பித்தொழுது அற்புதத்தை யடைந்தவனாய் எம தன்னையினது மங்களகரமாகிய ரூபலாவண்ணியத்தின்பெருமை யையும் குணாதிசயங்களையும் மனதினாலளவிட்டும்புகழநினைப்பினு முடிவதோ இத்தகைய எம்பிராட்டியானவள் முற்பிறப்பில் எம திறைவனாகிய பாலசுப்பிரமணியதேவருக்கு பாரியாதற்பொரு ட்டு அரிய தவங்களைச்செய்து அவனருளையும் பெற்றிருப்பதால் இந்த மாதாவினது பெருமிதங்களைச் சிவகுமாரனுக்குத் தெரிவி த்துக் கவலையிற்படுத்திக் கூட்டுறவாகுவது என்போலிக்கழகும் தவமுமாமென நினைந்து வள்ளிநாயகியாரை மெய்ப்பத்தியுடன்

போற்றி வாழ்த்தி அத்தலத்தைக்கடந்து விரைந்துபோய் ஒரு முகூர்த்தகாலத்தில் தினந்தோறும் மூன்று செங்கழுநீர் மலர்களைத் தரும் பெருமையினையுடைய சரவணப்பொய்கைவிளங்கும் திருத்தணிகாசலத்தின் மீதிற்சேர்ந்து அத்தலத்திலிருக்கும்திருவாலயத்தி னெழுந்தருளியிருக்கின்ற பன்னிருபுயாசலங்களைப் படைத்த கந்தசுவாமியை விழிகள் களிக்கக்கண்டுசன்னிதானத்தைச் சேர்ந்து மும்முறைவலம்வந்து தீர்க்கதண்டன் சமர்ப்பித்தெழுந்து வேதவாக்கியங்களினுற் றுதித்துப் பேரானந்தவாரியில் மூழ்கி களித்தவராய் நாரதமுனிவர் இவ்வண்ணம்விண்ணப்பஞ் செய்வதாயினர்.

குமாரக்கடவுளே! யிதற்குச்சமீபத்தி லொருமலை யிருக்கின்றது அதன்சாரலில் விளங்கும் வனத்திற் சிவமுனியென்னுந்தவசிரேஷ்டர் பவுனவிரதத்தைப்பூண்டு யோகசாதனையைச் செய்கின்றபோது பெட்டைமானென்று அதிகவடிவுட னெதிரிலுலாவக் கண்டு காமாந்தகாரனுய்க் களித்துப்பார்க்க அவர் நோக்கம்பட்டமாத்திரத்தில கருக்கொண்டு சிலதினங்களுக்குப் பின்பு பெண் குழந்தையைப் பெற்றுத் தன்னின மில்லாதபடியால் மானுனது சிசுவைத் தனிமையில் விட்டோடிப்போயினது உடனே வேடராஜனெடுத்து வளர்த்துப்போற்ற வள்ளியம்மையென்னும் திருநாமத்தைக்கொண்டு பன்னிரண்டுவயது பாலகுமாரத்தியாய் வள்ளிமலைப் பக்கங்களிலிருக்கும் தினைப்புனத்தைக் காவல்கொண்டு பரணிலிருக்கக் கண்டுவந்தேன். காங்கேயனே! அந்த மாதாவின் சுந்தரவடிவின் பெருக்கையும் குணுதிசயங்களையும் மற்றசிறப்புகளையும் பார்க்குமிடத்திற் செந்தாமரைமலர் வாசியாகிய ஸ்ரீமகாலட்சுமிக்கு மேற்பட்ட வனப்பைப் பெற்றிருப்பதாகக் காணுகின்றது இப்போது நான் விண்ணப்பஞ்செய்த காரணத்திற் சற்றும்பிசகிராது யதார்த்தமாக நம்பத்தக்கது தேவரீரெழுந்தருளி திஷ்டாந்திரமாகக்கண்டு களிக்கலாகும் மேலும் உலோகநாயகியாகிய அப்பெண் முதலானவள் முதல் ஸ்ரீபகவானுகிய மகாவிஷ்ணுவினிடத் துற்பத்தியாய் தேவரீரது தேசோமயமாகிய கோலத்தி னிடத்திற் காமுற்றுப் பன்னிரு புயாசலங்களையும் சொர்னக்கலசத்தை யொப்பவிளங்கும் தன்பாரங்களொன்றுபடத்தழுவி யின்றுபடத்தழுவி யின்புறும்படிக்கு நினைந்து அளவற்றகாலம் கடினமாகிய தவவிரதங்களைச்செய்திருந்தகாலையில்அப்பொழுது தாமெழுந்தருளிக் கடாட்சித்தவாரே இக்காலத்திலும்

திருவுளத்திறங்கித் தடுத்தாண்டி ரட்சிக்கவேண்டுமென்று நாரதரிஷியானவர் பரிவாய் வேண்டுகின்றதைப்பாலசுப்பிரமணியதேவர் நகைமுகராய்க் கேட்டருளித் தவசிரேஷ்டனே நம்மிடத்திற் பிரீதிபத்தியுடன் தெரிவித்த சந்தோஷவார்த்தைகளுக்கு மகிழ்ந்தனம் மேலும் நன்மையாகவும் நடத்தவேண்டிய காரணமாகவுமிருப்பதால் உன்மனவிருப்பத்தின்படி அத்தலத்தைச் சேர்ந்து வள்ளியை வசப்படுத்திக்கொண்டு வரக்கடவோமெனத் திருவாய்மலர்ந்தவராய் நாரதரிஷிக்குச் செலவுகொடுத் தனுப்பிவிட்டு அக்கன்னிகையினிடத்தில் மையல்கொண்டு காமக்கவலையிற்பட்டு மனமுருகிச் சற்றுந் தாழ்வுச்சம்மதமில்லாமல் வில்லையும்அம்பையும் இடைவிடாமற் கரங்களிற்கொண்டு வேட்டையாடித்திரியும் வேடராஜபுத்திரியானவள் பிழைத்தற்பொருட்டுத் திருவுளமிரங்கிச் சுயஞ்சோதிமயமாகிய தமதற்புதக் கோலத்தை மறைத்து காமக்குரோதலோபமத மார்சரியமென்னும் கவலையிற்பட்டுப் பஞ்சேந்திரியச்சேட்டையின் வயத்தராய் மயங்கியுழலும் மானிடவேடத்தைத் தாங்கி வேதங்கள் பூசித்துக்காண்பரிய திருவடிகளிற் கலீல்கலீலெனச் சத்திக்கும் வீரகண்டாமணியைக் கட்டிச் சல்லடைதரித்துக் கச்சையைச் சுந்தரமுள்ள விடையினிடத்திறுக்கிப் பரிமளமிகுந்த புஷ்பமாலையைத் தோள்களினிடத்திற் புரளும்படிக்குச்சூடி நீண்டதனுசையும் கண்களையுங் கரங்களிற் கொண்டு காளமேகத்தையொப்பக் கறுத்திருக்கும் சிகையைச் சேர்த்துக் கொண்டையாகமுடிந்து அதனைச்சூழ்வரப்பலகறைத் தாழ்வடத்தைச் சுற்றித் திருப்பாதங்களிற் செருப்பணிந்து இருவிதமாக வேடக்கோலத்தைப் பெற்றவராய்க் கிளியையொப்ப ஹிங்கித வார்த்தைகளையாடும் வேடமங்கையினிடத் துண்டாயிருக்கின்ற மோகமானது நிறையையழித்து மனதைப்பிடித்துத் தள்ள அதன்வயப்பட்டு எமதிறைவனாகிய சிவசுப்பிரமணியதேவர் திருத்தணிகை வெற்பைக்கடந்து செந்தாமரைமலரைப் பழித்து விளங்கும் அழகிய திருவடிகள் பரல்கள்பரந்த பூமியிற்பதிந்து கன்றிச்சிவந்து காட்டும்படிக்கு வழியைத்தாண்டி வள்ளிமலைக்குச் சமீபத்தில்வந்து மண்டலமெங்கனும் புகழும் பெருமையினையுடைய அப்பருவதத்தின்மேல் மெல்லமெல்லவேறிக் கதிர்கள் மலிந்து கண்டவர்கள் விழிகளுக்கலங்காரமாக ஓசையைக்காட்டி அசைந்திருக்கும் தினைப்புனத்திற்காட்டும் பரணின்மீதில் நின்று கணவனிடத்தில் மணிகளைவைத்து கரத்திற்கொண்டு வேலையொ

ப்பக் காதளவு மோடிசெவ்வரிபரந்து சேற்கண்டையைப்போலப் பிறந்திருக்கும் விழிகளை நாலுமூலைகளினும் பரப்பிக்கிள்ளையாதிய பட்சிக்கூட்டங்களையும் மான்மரை முதலிய மிருகங்களையும் நெருங்கவொட்டாமல் அதட்டிவீசிப்பாதுகாத்திருக்கும் செல்வத்தை எம்பெருமாட்டியைத்தெள்ளமுதை லோககராணியைத் தன் மனதுக்கினிய திருத்தேவியை, ஒருவன் வறுமையுற்ற காலத்திற்றன்முன்னம்வைத்துக் காணுதிருந்த பழம்பொருள் கிடைத்துக்களிப்பவரைப்போல விழிகள் களிக்கும்படிக் கெதிர்ந்தார் உடனே குடத்தில்நின் றெழுகுவதை நிகர்த்துத தேனைப்பெருக்கிப் பொற்சன்னங்களுக்கு சமமாய் மகரந்தங்களைப் பொருந்திச் சகத்திர விதழ்களை விரித்தலரும் பொற்றாமரைப் பீடத்தளாகிய ஸ்ரீமகாலட்சுமியைப்போலத் தழைத்தோங்கி குளிர்ந்தநிழலைப் பரப்பியிருக்கும் சோலைகள் காவுகள்தோப்புகள் பலவகைப் புட்பங்களைவிரித்து மதுரமிகுந்தநீர் நிறைந்திருக்கும். சுனைகள் மடுக்கள் ஓடைகள் மிகுதியாகிப்பலவகை வளங்கள் பெருத்திருக்கும்வள்ளிவரை மேற்புறத்திருந்து பிதாவின் வாக்கியப்படி வேறொரு ஞாபகமில்லாமல் நோக்கிச் சித்தத்தைப் புறம்பிற்செலுத்தாமல் ஏகமனதாய் பயிரைப் போற்றிவரும் மேகத்தையொத்த கறுத்தகூந்தலையும் மின்னலைப்பழித்து விளங்கும் அழகிய திருமேனியையும் மற்ற குணசம்பத்துகளையும் பெற்றிருக்கின்ற வேடர்பெருமான் றவக்கொழுந்தை, கடப்பமலர்மாலை மணம் நீங்காதபன்னிரு புயாசலங்களையுடைய பாலசுப்பிரமணியக்கடவுள் நெருங்கி எதிர்காட்சியாகக் கண்டவுடன் அனலிற்பட்ட மெழுகைப்போல மனங்கரைந்து விரகாக்கினிமேலிட்டு உள்ளத்தையும் உடலையுந்தகித்து வாட்டச்சோர்ந்து வெம்பித் தாபரித்திருக்கக் கூடாமையால் தினைப்புனத்தின் மத்தியிலிருக்கும் பரனுக்கருகில் மெல்லமெல்லநெருங்கி அம்மைமீதில் விழிகளைச் செலுத்திப் பற்கள்விளங்க நகைமுகராய் இதனைக்கூறுவதாயினர்.

ஓ! கூரிய வேலைப்போல விளங்கிகாதளவுமோடிச் செவ்வரி பரந்துமைதிமிர்ந்துபாலையொப்பவெளுத்துவிஷத்தினுங்கறுத்து மாரன் பார்வையைப்பருத்த நேத்திரங்களைப் படைத்திருக்கும் பெண்கள்சிகாமணியே மனமிரங்கிநான் சொல்லவிருக்கின்ற நீதிகளைக் கேட்பையாக.உமது சுந்தரவடிவையும்நிலையையுங்கண்டமாத்திரத்தில்நமக்குமனந்தாளவில்லை செல்வப்பெருக்கையுடைய

பொன்னகரத்தினும் சமுத்திரஞ்சூழ்ந்தபூமண்டலப் பரப்பினும் ஆதிசேஷனையொத்தவன்வாழும்பாதலத்தினும் அதிசுசுந்தரவதிகளாகியபெண்களனைவருக்கும்நாயகமாகப்புகழவல்லசர்வமங்களரூபலாவண்ணியமுள்ள உம்மையொத்தவரைக்கண்டபேரண்டம் சரபசார்தூலம்-சிங்கம்-புலி-யானை முதலிய கொடியமிருகங்கள் சஞ்சரிக்கின்ற இந்தமலையின்மீதிற்றழைத்துக் கதிர்களைவிரித்திருக்கும் தினைப்புனத்தைக் காக்கும்படிக்கு யாதொருஉதவியுமில்லாமல் தனிமையில்வைத்துப்போன வேடருக்குச் சிருஷ்டிகர்த்தனாகிய பிரமன் உமது நாணயத்தையும் பெருமைகளையும் பகுத்தறிந்து அதற்கடுத்த காரணங்களை நடத்தத்தக்க விவேகத்தையும் பரிவையுங்கிடைக்கச்செய்தவனல்லன் ஐயையோ, விதைப்பார்க்குமிடத்தில் நீதியுமன்று அவலமாகவுமிருக்கின்றது அதுநிற்ககறுத்து நீண்டிருக்கும் கூந்தலைவாய்ந்த பெண்ணரசியே! தொலைதூரத்திலிருந்து வந்த யான் உமது மங்களகரமாகிய தோற்றத்திற்கு எதிர்ப்பட்டமாத்திரத்தில் இத்தலத்தைக்கடந் தப்புறம் போகச் சம்மதமில்லாமல் மதிமயங்கிவருந்துகின்ற எமதுமனங்களிக்கத்தக்கதாகப் பவளத்தையொத்த வாயைத்திறந்து அருள் நோக்கத்தைச்செலுத்தி உமது மங்களகரமாகிய பெயரைச்சொல்லும்அதற்குச் சம்மதமில்லாவிடில் நீர்வாசஞ்செய்யும் சிறந்தபதியின்னதெனப்பேசும் அதுவும்சம்மதமில்லாமற் போமாயின்ஓப்பற்ற தமது சிற்றூருக்குப்போகும் மார்க்கத்தையாவது தயைசெய்து கோவையைப்பழித்துவிளங்கும் திருவாயைவிண்டு செவிகளுக் கமுததாரையாகப் பூரிக்கவேண்டும். ஓ பெண்கள்நாயகமே! என் கேள்விகளைப் காதுகொடுத்துவினவி மறுமொழியாட மனமிரங்கீராயின் யானென்னசெய்வேன். இவைநிற்க என்மனமும் தேகமும்பூரித்து களிக்கும்படிக்கு நகைமுகத்தையாயினுங் காட்டவொண்ணாதோ அல்லது சேற்கெண்டையைப்போலப் பிறழும் திருநோக்கத்தைக் குளிர்ச்சியாகச்செலுத்தவேண்டும். உமதுதரிசனையைப்பெற்ற மாத்திரத்தில் மனநிலைகலங்கிப் பொறிகள்மயங்கிக் காமக்கவலையிற்பட்டுழலும் தமியேன்களித்துப் பிழைக்கும் மார்க்கமொன்றைக் காட்டாமற் சற்றும் என்னிடத் தன்பைச் செலுத்தாமலும் இரக்கமற்று இவ்வாறேயிருப்பையாகில் சத்தியமாகச்சொல்வேன் எக்காலத்தினுந் தீராத பழிபாதகம் உம்மைச் சேருவதற்கையமில்லை பராமுகமாயிராமற் றுரிதமாயிதற்கொருவகை தேடவேண்டுமென்று உலையிற்பட்ட மெழுகைப்போல

மன்னங்கரைந்து வேடப்பாவையின்மேற் கொண்டமையல்வலையில கப்பட்டுக்கொண்டு திகைப்பவனையொப்பப் பற்களைக்காட்டி முக மலர்ச்சியுடன் வருந்திக் கெஞ்சிக்கரங்களை நீட்டிநீட்டிக் குறையி ரந்து நின்றனன்.

கேட்டீர்களோ சவுனகாதிதவத்தரே! அக்காலத்தில் பாலசுப் பிரமணியக்கடவுள் நடித்த திருவிளையாடல்களைப் பார்க்குமிடத் தில் சோடசகலைகளையுடைய சந்திரன் விளக்கமானது அலைகளை மிகுத்த நீர்ப்பெருக்கு தோற்றும்போது கலங்கிக்காட்டுமாறு போலவிளங்குகின்றது இவ்விதமாகக் குமாரதேவர் ஆதிகேசவன் திருக்குமரியெதிரில்நின்று இங்கிதவார்த்தைகளைப்பேசி மையற் பெருக்கைகாட்டிப் பலபல வழக்குகளைக்குறித்து வாதாடிக்கொ ண்டிருக்கின்ற காலையில் வள்ளியம்மைக்குத் தினந்தோறுங் கால ங்களில் உணவுகொண்டுவந்து கொடுத்துப்போகும் வழக்கப்படி க்கு வேடராஜன் தனபரிசனர் பன்றி-மான்-கரடி-யானைமுதலிய மிருகங்கள் பட்சிசாலங்கள் பயந்தோடி யொளிப்பதாகக் கொம் புகளை யூதியும் பறைகளை கணகணென்றறைந்து கூக்குரலிட்டும் தொடர்ந்து வரத்தக்கதாகத் தன்சீறூரைக்கடந்து தினைப்புன த்தைநோக்கி வருவதைக் குமாரசுவாமியார் தெரிந்தவுடன் அவ ர்களுக்குத் தமது நிஜதரிசனையைக்காட்டாமல்மறைத்து வேதங் கள் வேராகவும் சிவாகமங்கள் அடித்துண்டமாகவும் தருமசாத் திரம் கலைக்கியானங்களாகிய கிளைகள்-இலைகள்-தளிர்-மலர்-பிஞ்சு காய்-கனியாகவும் இத்தகைய சிறப்புகளைப்பெற்றிருக்கும் வேங் கைமரக் கோலங்கொண்டு குளிர்ந்தநிழலைப்பரப்பிக் கந்தமூர்த்தி நின்றபோது வேடராஜனும்அதிக சந்தோஷத்துடன் தீவிரமாய் தன்புத்திரி காவல்கொண்டிருக்கும் கொல்லையைச்சேர்ந்து தன் குலம் நீடூழிகாலம் புகழ்பெற்றோங்கும்படிக்கு எழுந்தருளியிருக் கும் பதிவிரதா சிரோமணியைக்கண்டு தாயே மிகவும்பசித்திருக் கின்றனையோவெனப் பாராட்டித் தான் பதம்படுத்திக்கொண்டு வந்த வள்ளிக்கிழங்கு தினைமா தேன்திரட்டுப் பால்மதுரமிகுத்த பழவகைகளாதியான தின்பண்டங்களைக்கொடுத்து தினைப்புனத் தைப்பலவாகப் போற்றியிருக்கும்படிக்குச்சொல்லித் திரும்புமு ன்னிலையில் பக்கத்திற் றழைத்தோங்கி நிற்கும் வேங்கையைக்க ண்டு அதிசயித்திருக்கின்றகாலையில் அவனுடன் கொலைத்தொ ழிலையுடைய கடினசித்தராகிய வேடரும்பார்த்துப் பிரமித்தவர்க ளாய் இதுபரியந்தம் நாம் வரப்போகவிருக்கின்றனம் இந்தமரத் தைக்கண்டது கிடையாது நூதனமாகக் காட்டுகின்றதால் இத

ஞல் சில தீங்குகள் நேரும்போலக் காண்கின்றது ஆதலாற் சூரிய கிரணங்களையடக்கித் தழைத்திருக்கும் வேங்கைமரத்தை யிந்த நிமிஷத்தில் முறித்தெறிவோம் வேருடன் பறித்துத்தள்ளுவோம் கோடாலியினுற் கரணையாடுவோம் துரிதமாய் எதைக்கொண்டாவது அதப்படுத்திப்போவது உத்தமமென்று பல பலவிதங்களாகப்பேசி மேலிடும் தியரைவிலக்கி அரசன் தன் குமாரத்தியினது முகத்தைப்பார்த்து அம்மணீ பரிமளமிகுத்த புஷ்பங்களை விரித்து வேங்கைமரமொன்று புதிதாய் இதோ காணுகின்றது இதுவருங் காரணமென்னே உண்மையாகச் சொல்லக்கடவாயெனக் கேட்டமாத்திரத்தில் அம்மைபயந்து அப்பனே யிந்தமரம் வந்ததேது எனக்கொன்றுந் தெரியாது மாயமாகவிருக்கின்றது நேற்றைத்தினமில்லாது அதிசயமாகத்தோற்ற விருக்கின்றதெனத் திருமேனியும் மனமும் நடுங்கும்படிக்கு இதுதவிர எனக்கு யாதுந்தோற்றுதெனப் பேசியதைக்கேட்டுப் பிதாவானவன் பரிவாய் தாயே அச்சப்படவேண்டாம் நீதனிமையாக இவ்விடத்திலிருக்கிறபடியால் அழகாய்ப் பூத்திருக்கும் வேங்கைமரமானது உனக்கு மலர்களைப்பறித்துக் களிந்துக் காலங்கழிக்க வுபயோகமாகவிருக்கும் ஆதலால் பயமில்லை கிளிகள் முதலான ஜந்துக்களைக் கிட்டவொட்டாமல் ஞாபகமாய்ப் பார்த்திருமெனக் கட்டளையிட்டு வேடர்களுடன் திரும்பித் தன் குறிச்சியைச் சேர்ந்திருந்தனன்.

இவ்விதமாக அவர்கள் மறைந்தவுடன் கொல்லைக்கருகில் வேங்கையுருக்கொண்டு நின்ற சுப்பிரமணியதேவர் அக்கோலத்தை மாற்றிப் பழையபடிக்கு மன்மதனிலும் அதிகசுந்தரமுள்ள மானிடவடிவைத் தாங்கி வேடராஜ புத்திரிக்கெதிரில் நின்று காமக்கவலையிலகப்பட்டு வாடுகின்றவனைப்போலப் பலநடனங்களைக் காட்டி நகைமுகராய்க் கரிய அளகபாரத்தையுடைய வள்ளிநாயகியாருக்குச் சமீபத்திற்போய் அவளிடத்திருக்கும் கிருபைப்பெருக்கினுலிதனைச் சொல்வதாயினர். கோங்கரும்பை யொப்பக் குவிந்து பொற்குடத்தைப் பருத்து விம்பித் ததும்பித்தேமல் பரந்திருக்கும் ஸ்தனபாரங்களைப் பெற்றிருக்கின்ற குறப்பாவாய் தயைசெய்து கேட்பையாக உன் மங்களகரமாகிய வடிவின் பொலிவையும் குணாதிசயங்களையும் கேள்விப்பட்டு வெகுதூரத்திலிருந்து மிகவும் வருந்தி உன்னைநாடி யிவ்விடம் வந்தேன் இனித் தேவரீர் செந்தாமரை மலரையொத்த திருவடிகளல்லது வேறுகதியி

ல்லை எக்காலத்திலும் உம்மைப் பிரியவறியேன்சற்றுமிடைவிடாமற் கலந்து குலவியிருக்க விரும்பினேன் மாவடுவைப்போலப் பரந்தோடியிருக்கும் விழிகளையுடைய பெண்ணமுதமே தீனனாகிய யான் தம்மைவிட்டுப் போகவுந் துணிவேனோ அப்படிக்குச் செய்ய யத்தனப்படினும் மனமொருமித்து நிற்குமோ உடலைப் பிரிந்து உயிர்தாபரித்திருக்கவல்லதோ இக்காரணங்களை விரித்து விரித்துப் பேசவும் வேண்டுமோ மின்னலையொப்பக்காட்டிமறையும் மெல்லியவிடையையுடைய பேதாய் மைதிமிர்ந்து வேலைப் போலக் காட்டும் தேவரீர் கூரியகண்களின் சுழல்வலையிற்பட்டு வாடித்திகைக்கின்ற அடியேனுக் கிருபாநோக்கமடையையாவது காட்டாமல் தாழ்க்கலாமோ இதையன்றிப் பிழைக்கும்மார்க்கம் வேறுண்டோ இந்த அபாயகாலத்திற் சற்றுதயைசெய்து தமது திருக்கரத்திலணைந்து ஊசலாடுமிவ்வுயிரைக் காக்கக்கடவாய். தருக்களடர்ந்திருக்கும் மலைச்சாரலில்வாழும் வேடர்முன்னே நீர் களித்து நீராடயோக்கியமாகிய சுனையாய் மனவெழுச்சிபெறக் கொங்கைகளிடத்திற்பூசும் பரிமளமிகுத்த சாந்தமாய்க்கறுத்து நீண்டிருக்குங் கொண்டையினிடத்திற் சொருகவல்ல சுகந்தங்களைவீசும் புதியமலராயுருப்பெற்று தம்மைச்சேர்ந்து மகிழ்ச்சி பெற்றிருக்கும் பாக்கியத்தைப் பெறுமற்போனேன் விரகாக்கினி மேலிட்டுத் தேகத்தையும்மனதையும் சுட்டுக்கொளுத்துவதினால் மிகவும் வாடுகின்றேன், தமது கிருபைக்குப் பாத்திரமாதற்பொருட்டு இனி செய்யவேண்டுங் கருமமென்னோ யாதுந்தோற்றவில்லை அதைக்காட்டுவீராகில் மனோபீஷ்டப்படிக்கு நடத்தக்காத்திருக்கின்றேன், ஓபெண்கள்சிகாமணியே! யிதுவென்ன வநியாயம் சிங்கசார்த்தூலங்களாகிய கொடிய ஜந்துக்கள் சஞ்சரிக்குமிகுந்த ஆரண்ணியத்தில் அபலமாகிய தினைப்புனத்தைப் போற்றிவருவது தம்மையொத்த பெண்கள் சிகாமணிக்கடாது அடாது மிகவும் யீனமாகக்காணுகின்றது என்கண்ணே ஆவியே கிருபையுற்றுப் பின்பற்றிவருவீராகில் கஜேந்திரச் சம்பத்தையுடைய பொன்னுலக வாழ்வைப்பெற்றிருக்கும் அரம்பா ஸ்திரீகளனைவரும் வணங்கி வேண்டிய தொண்டுகளைச்செய்து போற்றிவரவும் தெய்வபோகமுற்றினும் தாமே அநுபவித்துக் களித்திருக்கவைப்பேன். இஃதன்றியும் தேவரீர்மனதில் விருப்புற்றவைகளைத்திருவாயைத்திறந்து சொல்லுவீராகில் எத்தகையதாயினும் அவற்றை யிந்தநிமிஷத்திற் றேடித்தாவல்லேனென்று இவ்விதங்களிற்

பற்பல இனியசொற்களைப்பேசிக் காமலாகிரியினு லுண்டாகும் வருத்தங்களைக்காட்டிக் கரங்களைநீட்டிப் பற்களைத்திறந்து நகைமுகனுய்க் கெஞ்சி நிற்கின்றகாலையில் வேடராஜ புத்திரியானவள் அவ்வாக்கியங்க ளனைத்தையுங்கேட்டுக் குறிப்பாய் குமாரசுவாமியார் மனக்கருத்தை நிதானித் தறிந்துகொண்டு இவர் வடிவின் பெருக்குங் குணதிசயங்களும் கொஞ்சிப்பேசும் வார்த்தைகளின் குளிர்ச்சியும் வெகு நேத்தியாக விருக்கின்றதென்று மனதிலெண்ணி நாணமிகுதியினுற் றலையையிரங்கி யிவ்வித மறுமொழிகளைப் பேசுவதாயினள்.

ஓ ஐயா! உம்மைப்பார்க்கு மிடத்தில் இராஜகுமாரனுகவும் புவனங்களனைத்தையும் பாதுகாத்திரட்சிக்கும் முதல்வனுகவுங் காணுகின்றது. இத்தகையசிறப்பினைப்பெற்றிருக்கின்ற தேவரீர் யினளாகிய இந்த வேடர்பாவையைத் தழுவநினைந்து தகாதனவாகிய வார்த்தைகளைத் தயிரியமாய்ப் பயமற்றுப்பேசுவது பழியல்லது நன்மார்க்கத்துக் கடுப்பதோ கதிர்களைவிரித்துச் செழித்திருக்கின்றதினைப்புனத்தைப் போற்றி மிகவும் அசுசியாயிருக்கின்ற குறப்பெண்ணினிடத்தில் உலகங்களைப் பரிபாலனஞ் செய்யவல்ல தம்மையொத்த இறைவன் உளமயங்கிக் கருத்தழிந்து பித்தனையொப்பப்பசிக் கலவையையிச்சித்து வழக்காடுவது நியாயமல்ல. வீரத்தன்மை பொருந்திய புலியானது பசிப்பிணியினல் வாடுமாயினும் அற்பமாகிய புல்லைத்தின்ன நினைப்பதுண்டோவென வள்ளிநாயகியார் இவ்விதங்களாகப் பற்பல நீதிமார்க்கங்களை விரித்துக்காட்டி மறுதலைபேசியகாலத்தில் எமதன்னைமனம் திடுக்கிட்டுப் பயங்கொள்ளும்படிக்கு வேடர்திரண்டு குறிஞ்சிப்பறைகளையும் பம்மையாதிய வாத்தியங்களையும் முழக்கிக்கொண்டு சூழ்ந்துவரும்படிக்கு அரசன்தன்பதியைக்கடந்து வருகின்ற ஆடம்பரங்களைத் தெரிந்தமாத்திரத்தில் வள்ளியம்மை தேகமுற்றும் வியர்க்கநடுங்கி மனம்நிலைபெருமல் வருந்திக் கரங்களைப் பிசைந்துகொண்டு எமதுநாயகன் திருமுகமண்டலத்தைப் பார்த்து ஐயனேகொலைத்தொழிலையே முக்கியமாகவெண்ணி நடாத்தும் தீயசெய்கைகளையுடைய வேடர் மிகவும் கொடியர் முன்பின்யோசிக்கும் தாட்சணியமென்பது அவர்களிடத்திற் கிடையாது ஆதலாற் சற்றும்தாழ்க்காமற் றுரிதமாய் இத்தலத்தை நீங்கியோடித் தப்பிப்பிழையும் இதுதருணமேபதம் போம்போமென்று பரிவரய்ப் பேசிய அன்பின் காரணங்களைத் தெரிந்தவுடன் முருகனுக்கு மனம்பூரித்து பெண்ணரசியே பயப்

படவேண்டாம் உமதெண்ணப்படிக்குச் செய்வோமெனச்சொல்லித் தேசாதேசங்களெங்கணும் புகழ்ந்து போற்றத்தக்க சைவசமயத்தை யனுசரித்து நடந்துகொள்ளவல்ல விருத்தசன்னியாசிவேடங்கொண்டு அதிக ஆரவாரங்களைக்காட்டி அதட்டி உருட்டி கெக்கலிகொட்டி மிருகங்களை துரத்திக்கொண்டுவருகின்ற வேடர்களெதிரிற்போய் ராஜனைக்கண்டு பரிபூரண கடாட்சத்தைப் பாலித்துக் கரத்திற்பற்றியிருந்த பையிலிருக்கும் திருநீற்றை யிருவிரல்களினு லெடுத்துச் சிவநாதனை யிரட்சிக்கக்கடவனெனக் கொடுத்து, ஓ வேடர்பெருமானே சென்றவிடங்களில்சகலவெற்றிகளையும் பெற்று ஜயசாலியாய்ச் செல்வச் சம்பத்தை யனுபவித்து நீடூழிகாலம் வாழக்கடவாயென பற்பலவாழ்த்துகளைச்சொல்லி ஆசிர்வதித்தபோது வேடர்பெருமான் தன் கரத்திற்கொடுத்த விபூதியை நெற்றியிற்சாத்தித் துரிதமாய்த் தன்முடி கந்தமூர்த்தி பாதகமலங்களிற் படும்படிக்குத் தீர்க்கதண்டன் சமர்ப்பித்துச் சுவாமிகள் வயதுமுதிர்ந்த விருத்தராய் காடுசூழ்ந்த இந்த பருவதத்தை தேடிவந்தது நானும் எங்கள் முன்னவர்களும் செய்ததவமாகும். ஆதலால் தேவரீருக்கு விருப்பமாகிய வஸ்துக்களேதேனு மிருக்குமாயின் தயைசெய்து சொல்லவேண்டும் இந்தநிமிஷத்திற் றருவித்துக் கொடுப்பேனெனப் போற்று முன்னிலையிற் சரவணபவன் அவனிடத்திற்பரிவாய் வேடர்மரபிற்சிறந்த மஹாராஜனே கேட்பீராக வயதுமுதிர்ந்து சரீரம்தளர்ந்து வந்தவிடத்தைத் தேடியிருக்கும் பருவமுடைய எனக்கு நீயென்ன கொடுக்கப்போகிறுய் நமக்கொன்றுந்தேவையில்லை அப்பா நமது வரவின் காரணத்தைக் கேட்பையாக,

இந்தவள்ளி வரையிலுதித்து உங்களனைவருக்கும் பிரியமாகவிருக்கின்ற குமரியைக்கலந்து இக்காலத்தில் நேர்ந்திருக்கின்ற மனவருட்சி நீங்கத்தக்கதாக எக்காலமும் அதிற்படிந்து இன்பக்களிப்பை யனுபவித்துச் சவுக்கியமாகவிருக்க விருப்பமுற்று நெடுந்தூரத்தினின்று வருந்தி வேகமாய்வந்தனம் அப்பேறு நமக்குக் கிடைக்குமாயின் அதுவே நீ எமக்குச்செய்யவேண்டும் உபகாரம். என்னையொத்தவனுக்கு வேறுமொருபொருளைத் தரவேண்டுமோவென்று தவத்திற்சிறந்த முதியராகவந்த முருகன் சிலேடையாகச்சொன்ன விசேஷத்தை வேடராஜன் உண்மையாகக்கேட்டவுடன் நல்லகாரியம் தேவரீர் கோரிக்கையின்படிக்கு அந்தக்குமரிதீர்த்தத்தில் முழுகி உம்முடைய விஷ்டசித்தியை

முடித்துக்கொண்டு என்பெண் தனித்திருக்கின்றனள், பெரிய வரே அவளுக்குத்துணையாகவும் அடிக்கடிக்குவந்து விசாரணை செய்து போகவேண்டுமெனப் போற்றுவதற்கிரங்கி யிது மிகவும் அழகாயிருக்கின்றது அவ்வாறே செய்யக்காத்திருக்கின்றனனெ னச் சம்மதித்துக்கொண்டனர். அரசனும் அதிகசந்தோஷத்து டன் குமாரத்தியிருக்கின்ற கொல்லையைச்சேர்ந்து தினைமாகிழங் கு தேன் கனிவகைகளாதியாக வேண்டுபவையனைத்தையும் வழ க்கப்படிக்குக் கொடுத்துத் தாயே! யிந்தப்பெரியவர் குமரிதீர்த்த மாட வந்திருக்கின்றனர் உனக்கும் சகாயமாகவிருப்பரெனத்தெ ரிவித்து அவர்களிருவரையும் அத்தலத்தில் நிறுத்திப்போட்டு வீரகண்டாமணிகலிக்கும் பாதங்களையுடைய மறவர்பெருமான் தன்பரிசனருடன்திரும்பிப் பதியைச்சேர்ந்தனன் அவர்கள் ம றைந்தவுடன் முதியர் வள்ளியம்மையைப்பார்த்துப் பெண்கள் சிகாமணியே என்னசெய்வேன் பசிப்பிணிபாதிக்கின்றது தாபரி த்து நிற்கக் கூடவில்லை களைத்துவருகின்றது எதனையாவது கிஞ்சித்து சாப்பிடாவிடில் மோசம்வரும்போற் காணுகின்றதெ னப் பரிபவப்படுவதைக் கண்டவுடன் எமதன்னைக்கு மிகவு மிர க்கமுண்டாய் பெரியவரே பயப்படவேண்டாமென் றுதரித்துத் தினைமாதேன்கனிகளை நீட்டியபோது கபடசன்னியாசி யானவர் ஆவலுடன் கரங்களையேற்று வாங்கிக்கொண்டு துரிதமாயுண்டு அப்பா பசிதணிந்ததாயினும் வெய்யிலில்நடந்துவந்த வேஷடை யினாலும் உதாவஞ்சிப்பெருக்கினால் நெஞ்சுலர்ந் திருந்தபோது மாவை மிகுதியாகத் தின்றதினாலும் கண்டத்தி லடைத்துக்கொ ண்டு வருந்துகின்றனன் நீர் விடாய்ப்பட்டு மூர்ச்சிக்கவரு கின் றது இதற்கென்னசெய்வேனென மிரளமிரளவிழிப்பதைவேடர் பாவையறிந்தவுடன் ஒ தவசிரேஷ்டரே காலதாமசஞ் செய்யா மல் இந்தமலையைத்தாண்டி யிதற்கடுத்துக்காட்டும் ஏழுகுன்று களைக்கடந்து போவீராகில் மதுரமிகுத்த நீர்ப்பெருக்கையுடை ய ஒருசுனையிருக்கின்றது திருப்தியாய் வேண்டியமட்டுஞ் சாப் பிட்டு வருவீரெனச் சொல்லியபோது தனுர்ப்பாணிகளாகிய வேடர்பெருமான் மனதுக்கினிய பெண்ணே தாகத்தினாற் சோ பிக்கின்றதுமல்லாமற் றள்ளாதகிழவனுக விருக்கின்ற நான் பரு வதங்களின் மத்தியிலுள்ளவழியை எப்படிக் கண்டுபிடிக்கப்போ கின்றேன் மேலும் முன்பின் இவ்விடம்வந்திருந்து பழகினவனு மல்ல ஆதலால் பாதங்கள் வருந்துமென்று தாழ்க்காமற் றுரித

மாய் என்னுடன்வந்து சுனைநீரைக்காட்டித்திரும்பி விடுமென்று சண்முகங்களைமறைத்து விருத்தவேடத்தைத் தாங்கி எதிரில் பாசாங்குகளைக்காட்டி நிற்கின்ற கள்வன் சொல்வதை வள்ளியம்மை யதார்த்தமாகநம்பி யிரங்கினவவராய்ப் பாணைவிட்டிறங்கிச் சுவாமி வாரும்வாருமென்று தான்முன்னதாக வழிகாட்டியழைத்துப்போய்க் குன்றுகளனைத்தையுங் கடந்து குளிர்ந்த ஜலப்பெருக்கையுடைய சுனையைக்காட்டியபோது விடாய்த்தவனைப்போல விருகரங்களினாலும் புனலைவாரிக்குடித்து அகமுகமலர்சசியுடன் தேவியைக் கிருபையாகப்பார்த்து இதனைச் சொல்லுவதாயினர்.

ஓ பெண்கள்சிகாமணியே உதரத்தைக்கொளுத்திப்பிராணனைவருந்திச் சரீரத்தைச்சோரச்செய்து பாதித்திருந்த பசிப்பிணியைத்தவிர்த்துத் தாகசாந்திக்குச் சுத்தோதகத்தையுங் காட்டினீர் விடாயைத்தணித்தீர் இத்தகைய பேருதவிகளைச் செய்தபோதினும்இன்னமும் நமதுமனத்தளர்சசி நீங்கவில்லை. மேகத்தைநிகர்த்த கரிய கூந்தலையுடைய மின்னே என்னுவியே அடியேன்கொண்டிருக்கும் மோகக்கவலையையும் தணியச்செய்து ஆதரிப்பீராகில் நமக்குச்சம்பவித்திருக்கும் குறைபாடுகளனைத்தும் முற்றுப்பெற்றதாகக் களிப்போமென்று சலனமற்ற விருத்தசன்னியாசி மிகவும்வருந்தி மதிமயங்கி யிருகரங்களையுஞ்சேரக் கும்பிட்டுக் குறையிரந்து எதிரில்நிற்கின்றகாலையில் சுகந்தபரிமளங்களைவீசும் சிறந்தமலர்களை யணிந்திருக்கும் அளகபாரத்தையுடைய நங்கைநகைத்தும் பெருமூச்செறிந்து நடுநடுங்கிச்சீறிமாறுத்தரங் கொடுப்பதாயினள், நற்கதியிற்சேர்க்கவல்லசிறந்த தவவேடத்தைப் பூண்டிருக்கின்ற முதியரே மதிமருண்டு தகாத வார்த்தைகளைப்பேசினீர். ஐயரே உமதுகுணாதிசயங்களை யோசிக்குமிடத்தில் எப்படிக்கிருக்கின்றதெனில் சகலருக்கும் மதுரமிகுத்த பாலைப்போலக்காட்டிச்சாப்பிட்ட காலத்தில் அவர்களுயிரைவாட்டும் விஷத்தினும் கொடுமையாகத் தோற்றுகின்றது. பட்சிகள் மிருகங்கள் சேரவொட்டாமல் தினைப்புனத்தைக் காவல்கொண்டிருந்த என்னைக்குற்ற மற்ற தவங்களைப்பெற்ற முதியரைப்போலவந்து ஏதோ சிற்சிலவிரக்க மொழிகளைக்கூறி வஞ்சித்துநெடுந்தூரங் கொண்டுவந்து நம்மைஆலிங்கனஞ் செய்ய விருப்புற்று நினைத்தற்கரிய தகாதகாரணங்களைக்குறித்துக் கெஞ்சிக்கரங்களைச்கூப்பி எதிரில் மறித்து நிற்பது உம்மையொத்த

தவத்தருக்குநீதியோ உம்முடைய மாறுபட்ட செய்கைகளிற் சிறிதேனும் நம்மவராகிய வேடருக்குத் தெரியுமாயின் நம்மிரு வருக்கும் துரிதமாய்க் கொடியதீங்குகள் நேருவதற்கையமில்லை. சங்கைப்போல வெளுத்த சிகையையுடைய முதியரே யிவ்வரை யில் நன்னெறிகளை யனுசரித்துவந்த உம்மிடத்திற்சற்றும் நல்லு ணர்ச்சியைக்காணேன் நீர்விருத்தனுகக் காலத்தைக்கழித்தீர் இதனாற் பிரயோசனமொன்றுமில்லை இழிகுலத்திற் பிறந்த என் னிடத் திச்சைகொண்டு பயித்தியங்கொண்டவரைப்போல வா யில் வந்தவைகளைப் பிதற்றுகின்றீர் இதைப்பார்க்குமிடத்தில் வில்வேடர் மரபுக்குத் தீராதபழி யொன்றைநாட்ட யத்தனித்தி ருப்பதாகக் காணுகின்றது நான் காவல்கொண்டிருந்த தினைப்பு னத்தினிடத்தி லொருவருமில்லாமையால் மிருகங்கள் பட்சிக்கூ ட்டங்களனைத்துஞ்சேர்ந்து முதிர்ந்த கதிர்களனைத்தையும் கறி த்துக்கொண்டுபோவதன்றிப் பயிரையும் சின்னபின்னப்படஅழி த்துப்போடும் என்பிதா அதைப்பார்ப்பாராகில் கோபித்துக்கொ ள்ளுவர் ஆதலால் பேச்சுக்கற்றகிழத்தவரே நீர் சற்றும் இவ்வி டத்தில் நில்லாமல் நடந்துவிடும், நடந்துவிடுமல்லது வந்தகதி யைப் பட்டுக்கொள்ளும் சற்றுந்தாழ்க்காமல் நான் விரைவிற் போய்க் கொல்லையைச்சேருவேனென்று கூறிக்கொண்டு வள்ளி நாயகியார் வேகமாய்நடக்கும்போது பாலசுப்பிரமணியக்கடவுள் இலக்குமியையொத்த பெண்கொடியின் மன்வுறுதிக்கு மெச்சித் திகைத்தவராய் இனி யென்னசெய்வோமெனச் சற்றுயோசித்து ஒரு நினைவுகொண்டு ஒப்புவமையற்ற முன்னவனுகிய விநாயக மூர்த்தியைக்குறித்து மீறிப்போகின்ற இக்கன்னிகையி னெதிரி லெழுந்தருளித் தயைசெய்யவேண்டுமெனப் போற்றுகின்றகா லையில் தம்பியினிடத்திற் பரிவாய் அவர் கோரிக்கையின்படிக்கு பருத்த தேகத்தைப்பெற்ற மதயானையின் கோலங்கொண்டு கட லைப்போலிரைந்து திசைகளதிரவீறிட்டுப் பருத்து நீண்டிருக்கும் துதிக்கையைநீட்டி மரங்களை வேருடன்பறித்து வழியையடைத் து அதிக வுற்பாதத்தைக்காட்டி வள்ளிநாயகியாருக் கெதிரில் வருவதைக் கண்டவுடன் என்னசெய்வேன் மனம்கலங்கி நடுநடு ங்கித் தேகமுற்றும் வியர்க்கமதிமருண்டு யாதொரு வுதவியை யுங் காணுதபடியால் சரேலெனத்திரும்பி கைகாலுதறலெடுக்கத் தக்கதாக வேகமாயோடிவந்து தவவேடத்தைக்கொண்டிருக்கும் குமாரதேவர் பக்கலிற்சேர்ந்து சுவாமி யிதோ மதயானைதூரத்தி

வருகின்ற அதன்வசப்பட்டுமொண்டு போகாதபடிக்கு இத்தருண த்தில் அடியாளிடத்திரக்கமுற்று அதைத்துரத்திக் காக்குக்கட வீர் நீர்குறித்தபடிக்கெல்லாம்சம்மதப்படுவேன் படுவேனென்று பின்புறத்தில்வந்து முதுகைத்தழுவிக் கட்டியணைத்திருந்தனள்.

சொர்ணகலசங்களைப்போன்ற கொங்கைகள் முதுகினிடத் திற்ருக்கியபோது வயிரத்தம்பத்துக்கொப்பாக நின்ற பாலசுப் பிரமணியத் தேவருக்கு தேகம்பூரித்து உள்ளங்குளிர்ந்து திருமுக மண்டலத்தைச் சற்றுத்திருப்பிப் பெண்கள்சிகாமணியே பயப் படவேண்டாம் யானையைத்துரத் துரத்திவிடுவோம் மனச்சஞ்ச லம் மற்றிருக்கக்கடவாயென்று பற்பலவார்த்தைகளைச் சொல்லி ஆதரித்துத் தந்திமுகத்தெந்தையைத் தியானித்து வந்தனைகளை ச்செய்து வழுத்திக் தேவரீர் தயைசெய்தெழுந்தருளிய கார ணத்தினுல் மனதைப்பிடித்தலைத் திருந்த கவலையைப் போக்கி னேன் மங்கையும்என்னிஷ்டப்படிக்குச் சேர்ந்தனள் எமதிறை யவனே யதாஸ்தானத்துக்குத்திரும்பக்கடவீரென் றிரந்தகாலை யில் விநாயகமூர்த்தியுந் தம்பியினிடத்திற் றயைசெய்துமறைந் தனர், பின்புசரவண பவன்வள்ளியம்மை யைத்தழுவிக்கொண்டு போய் ஒருபூங்காவைச் சேர்ந்து உளமுந்தேகமும் பூரித்துக் களிக்கத்தக்கதாகக் கலந்தின் புற்றுமனமகிழ்ந்தவராய் அவளி டத்திற்கிருபையுற்றுச் சடுதியில்மறைந்து வயிரமுடிகள் கவிந்தி ருக்கும் சண்முகங்கள் பூர்னச்சந்திரோ தயங்களைப்போலப் பிர காசிக்கவும் துவாதசாதித்தரை யொப்பப்பன்னிருமகர குண்ட லங்கள் செவிகளினிலங்கவும் பன்னிருபுயாசலங்கள் கம்பீரமாகக் காட்டவும்முப்புரி நூல்புரளும் விசாலமாகியமார்பையும் தண் டைசிலம்பு தரித்துக்கொஞ்சும் திருவடிகள் தாமரைமலர்களை யொப்பக்காட்டவும் வெற்றிவேல், தனுசு, சக்கரம் கதைமுத லிய படைகள்விளங்கும் கரதலங்களைக்கொண்டு பொன்னை யொ த்த கண்களையுடைய கபாலத்தை விரித்துநடக்கும் மயில்வாக னத்தின்மீதி லெழுந்தருளிப்பிரகாசிக்கும் சண்முக மூர்த்தியை தெரிசித்தமாத்திரத்தில் ஓயெமதிறைவனே! தேவரீர் இக்காட் சியை முன்னமேகாட்டி நாயினேனைத் தொண்டு கொண்டு உமதி ஷ்டப்படிக்குபோக போக்கியங்களை யனுபவித்துகளியாமல் இது பரியந்தம் நடனங்களைக்காட்டி வீண்காலத்தை கழிக்குங்காரண மென்னேபேதமைப் பாலளாகியயான் பெண்மதியினுல் தமது பெருமைகளைக்கண்டறியாமல் பலகுறைபாடுகளைச் செய்தேன்

அவைகளனைத்தையும் திருவுளத்திற் பாராட்டாமல் க்ஷமித்து ரட்சிப்பது தமதுபாரமாகும் இன்றுமுதல்நாயினேனை வழியடிமையிற்சேர்த்து ஆட்கொள்ளவேண்டுமென்று திருமேனிநடுநடுங்கபலவிதங்களிற் சோற்றுமுன்னிலையில் குமாரதேவர்பரிவாய் அவளிடத்திற் கடாட்சவீட்ச ணியத்தைச்செலுத்திப் பெண்ணரசியேநீ முன்னம்என்னன்னை சகோதரரும் எனதுமாதுலருமாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவிக்குமகளாய் நம்மைச்சேர்ந்து களிக்கும் விருப்பத்தைக்கொண்டு அளவற்றகாலம் காலம் கடினமாகிய தவங்களைச்செய்தபோது நாமெழுந்தருளிக் கடாட்சித்தபடிக்கு இத்திருவவதாரத்தில் உமக்குஅனுக்கிரகஞ் செய்யவந்தனம் மேலும் நம்மைக்குறித்துப்பேசிய வாசகங்களனைத்தையும் தோத்திரங்களாகக்கொண்டனம். மனம்வருந்தாமற் சந்தோஷித்திருக்கக்கடவாயென்று தரித்துத்தழுவிப்பரிபூரண கடாட்சத்தைப் பாலித்து ஓவேடர்பாவாய் நீர்இவ்விடம் வந்தபொழுதாயிற்று தினைப் புனத்தைக்காக்கும்படிக்கு முன்னே போகக்கடவாய் நாமும்பின்பற்றி வருவோமெனத்திருவாய்மலர்ந்தமாத்திரத்தில் வள்ளிநாயகியாருக்கு அதிகமகிழ்ச்சியுண்டாய்மீட்டும் திருவடிகளிற் சேவித்துவிடைபெற்று மனமும் விழிகளும்கணவனிடத்திற்கிடக்க அருகிற்போய்த் தினைப்புனத்தைச் சேர்ந்துபழையபடிக்குப் பரணிலேறிக்கவணைத்திருக்கரத்திற் கொண்டுபட்சிகள் மிருகங்கள் மாறியோடத்தக்கதாக ஆயாலோட்டியிருந்தனள் அத்தருணத்தில் முன்னம் வேங்கைமரமாகநின்ற சிவசுப்பிரமணிய தேவர்கண்டு இதுநல்ல தருணமென்றெண்ணி ஒரு திருவிளையாடலைச்செய்ய உத்தேசித்துத் துரிதமாய்ச் சல்லடத்தையுடுத்துத தட்டியைக்கட்டிச் சிகையைக்கோதி முடிந்து அதைச்சூழ்வர மயிர்பீலியைச்செருகிப் பலகறைத் தாழ்வடத்தைச்சுற்றி அடிகளில் மிதியடிகளைச்சேர்த்து வில்லைவளைத்துநாரியைமாட்டியிடக்கரத்திற்கொண்டு வலக்கரத்தில் பாணத்தைப்பற்றிக் குறியாகப்பூட்டிஅரையிற்கூறியவாளொன்றைச்சொருகினவராய்வேட்டையாடி வருகின்றவனைப்போலப் பலதிசையினும் விழிகளைச் செலுத்திப்பார்த்து அதட்டிக்கொண்டு பாதங்கள்சிவக்கவேகமாய்வந்து காந்தள்புட்பத்தினுஞ்சிவந்து மிருதுவாகக் காட்டும் கரகமலங்களைப் படைத்திருக்கும் பெண்களே நான்செலுத்திய பாணத்தினால்தேகமுற்றுங் காயப்பட்டு உதிரம்பெருகப் பேழ்வாயைத்திறந்து இடியைப்போலவீறிட்டுஓய்ந்தநடையுடைய வொரு

ய்ானையானது இப்பிராந்தியத்தில்வரக்கண்டீர்களோ சாடைதான் தெரியுமோ ஒளித்துவைத்தீர்களோ துரத்திவிட்டீர்களோ வென்று பற்பல கேள்விகளைவினவிப் பாலசுப்பிரமணியக்கடவுள் நிற்பதைப் பாங்கிகண்டு மாறுரையாடுவதாயினள்.

உம்மையொத்த புஜபலபராக்கிரமச் சம்பத்தையுடைய வீரர்களுக்கு உமது பிரதாபங்களையுஞ் சொல்லுவீராகில் அவர்களால்மதித்துப் புகழத்தகும் தினைப்புனத்தைக் காத்துவரும்பேதையாகிய மங்கையரிடத்திற் சவுரியவார்த்தைகளை யாடியாவதென்னை யென்று மறுமொழிகூறினவளாய் மேலும் தினைப்புனத்தைக் காத்திருக்கும் தலைவியின்நாட்டத்தையும் இவர்கள்கொண்டிருக்கு மையலின்குறிப்பை விழிகளே காட்டுகின்றதெனத் தீர்மானித்தவளாய் இனி யிவ்விடத்திலிருக்கலாகாதென்றெண்ணிப் பாங்கியானவள் துரிதமாய் அடுத்தகொல்லையைச் சேர்ந்திருந்தனள். யானையையெய்தேனென்று வீரம்பேசிவந்த கடவுளானவர் பின்பற்றிப்போய் மேகத்தைப்போலக் கரியகூந்தலையுடைய பெண்ணே என்கோரிக்கையைக் கேட்டருள்கவெனச் சொல்வதாயினர் தமியேனுக்குறுதியாகியசுற்றமும் நீங்களே பிராணபதமான சிநேகிதரும்நீங்களே என்னுடலு உயிருமாக விருக்கின்ற உங்களிருவருக்கும் வேண்டியபொருள்களெத்தகையதாயினும் இந்தநிமிஷத்திற் சருவித்துக்கொடுக்கக் காத்திருக்கின்றனன்நீங்கள்காட்டிய பணிவிடைகளிற் குறைபாடில்லாமற் செய்யவல்லேன் கோபங்கொள்ளாமற் சற்றுநீ அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று அழகிய மயில்வாகனன்மொழித்த வசனங்களின் குறிப்பைத் தோழிதெரிந்து கொண்டவளாய் ஐயனே உமதெண்ணமிதுவோ சிறந்த எங்கள்குலத்துக்குப் பூமியுள்ளபரியந்தந் தீராதபழிப்புறையைநாட்ட வந்தீராயினும் இழிவாகிய மரபிலவதரித்திருக்கின்ற மறவர்பாவையை உம்மையொத்தகண்ணியவான் விரும்புவதழகோ இதுதகாது மறந்துவிடுமென்று மறுமொழியாடிய தோழியைப்பார்த்து எனது மாமனாராகிய ஸ்ரீமகாவிஷ்ணுபெற்ற அமுதத்தை வேடர்வருந்திப்பெற்ற தவக்கொழுந்தை பெண்கள் நாயகத்தை எனக்குக் காதலைத்தந்து நல்லருள்செய்த காரிகையைக் குறப்பேதையெனப் பேசுவதேபேதமையென்று கெஞ்சிய இனிய வாசகங்களைக்கேட்ட பாங்கியானவள் யாதுந்தோற்றமல் மயங்கி ஐயரே சற்றுநேரத்தில் வேடர்திரட்சியா யிவ்விடம் வருவார்கள் அவர்கள் மிகவுங்கொடியர் சில சந்தேகங்களைக் காண்ட

ராயின் முன்பின்பாராமல் பழிபாதகங்களுக்கும் அஞ்சாமற்கொ லைசெய்வதற்கையமில்லை நீரிவ்விடத்திலிருப்பதைத் திருஷ்டாந்த மாராயின் எங்கள்பிராணனுக்கு ஹானிவரும் உம்மையு மென்ன செய்வாரோ தெரியாது மேலும் நீரிவ்விடத்திலிருப்பதினு லாவ தொன்றுமில்லை ஆதலால் துரிதமா யித்தலத்தைக்கடந்துபோய் வாருமென்று பயமுறுத்தியபோது சரவணபவன் நகைத்து செ வ்வரிபரந்து விசாலமாய்க் காதளவுமோடியிருக்கும் விழிகளையு டையபெண்ணே உமதிறைவியுடன் என்னைக் கூட்டுறவுசெய்யா மற்போவையாகில் உன்னெஜமானியாகிய வள்ளியிநுருவத்தை யும் என்னுருவத்தையும் ஓரேபடத்திலெழுதி உங்களூர் வீதிகளி லொட்டத் துணிந்திருக்கின்றேன், அக்காலத்திற் சகலரும் பகி ரங்கமாய்த் தெரிந்துகொள்வார்கள். இதை நம்பக்கடவையென்று தேவ தேவோத்தமனாக விருக்கின்ற பாலசுப்பிரமணியக்கடவுள் பேசியதைப் பாங்கிகேட்டவுடன் இதுவென்ன அநியாயமாகவி ருக்கின்றதென்று பயப்பிராந்திகொண்டவளாய்ச் சுவாமி நீர்பனை மடலேறுவது நீதியன்று மேலும் நிராதவசையாகும் ஆதலாற் கோபியாமற் சற்று மனமிரங்கி அதோகாணுகின்ற மாதவிச்சோ லையிற்போய் மறைந்திருப்பீராகில் எங்கள் காதல்மங்கையை அத் தலத்துக் கழைத்துவருவேனென்று உடன்படிக்கைசொல்லி அ னுப்பிவிட்டுஅடுத்தபுனத்தைக் காவல்கொண்டிருக்கின்ற தலைவி யினிடத்துக்குப் போகுமுன்னிலையில் எம்திறைவனும் மனமகிழ் ச்சியுடன்நடந்து மேகங்கள் சஞ்சரிக்கும் உன்னதமுள்ள மாதவிச் சூழலைச்சேர்ந்து மனவெழுச்சியுடனிவர்கள் வரவுக் கெதிர்பார்த் திருந்தனர் பாங்கியும் தலைவியைக்கலந்து திருவடிகளிற்பணிந்து வேலைத்தாங்கிய குமாரனுக்கடுத்திருக்கின்ற காதல்மிகுதியையும் அதற்கிசையாமற்போனால் வரும் அவதூறுகளையும் விவரித்துச் சொல்லி மனதைத்தேற்றி ஒருமைப்படுத்தினவளாய்த் தலைவி யைத் தினைப்புனத்தைக்கடக்க மெல்லக்கொண்டுபோய் மயிலின ங்கள் களித்தாடும் குளிர்ந்த மாதவிப்பொங்கரில்நுழைந்து களி மிகுதியையுடைய பாவாய் இவ்வரையைச் சூழ்வரவிருக்கும் பரி மளமிகுத்த மலர்களைப்பறித்துவந்து மாலைதொடுத்துஉமது கொ ண்டையி லணிவேன் அதைத்தேடிவருகின்றபரியந்தம்இவ்விடத் தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருமென்று தோழியானவள் குறிப்பாய்த் தெரிவித்துப்போனவுடன் வள்ளிநாயகியுங் கந்தனை நினைத்து மனமுறுக்கிச் சுற்றிலும் விழிகளைப்பரப்பிப் பார்த்தி

ருக்கின்ற காலையில் அளவிறந்த மகிழ்ச்சியுடன் சண்முகப்பெரு மான் பழையகோலங்கொண்டு எதிரில்வந்து நின்றபோது வேலை ப்போன்ற விழிகளையுடைய வள்ளிநாயகியார் எமதிறைவன் பாத கமலங்களிற் சேவித்தமாத்திரத்திற் கேசவன்மருகன் திருக்கரங் களைநீட்டி வாரியெடுத்தணைத்தொருவிருட்சத்தி னடியிற்சேர்ந்து அவளின்பாலங்களை யனுபவித்து இருவரும் தேகபரவசராய்க் களித்திருக்கின்றகாலையில் தேவியைப்பார்த்து உன் பிதாவாகிய அரசன் வேடருடன்வரும்போதுஉன்னைக்காணுதவர்களாய்த்தே டவரும் ஆதலாற் பாங்கியுடன் விரைவிற்போய்த் தினைப்புனத் தைக் காவல்கொண்டிருக்கக்கடவாய் நாமும் நாளையத்தினம்இவ் விடம்வருவோமென் றனுக்கிரகஞ்செய்து மறைந்தனர்.

அக்காலமானது வேங்கைபுட்பங்கள் புஷ்பித்து மலர்ந்து பரிமளித்தகுறியும் தினைக்கதிர்களானது முதிர்ந்துஉலர்ந்துஅரு த்து ஒப்படிசெய்யத் தகுதியானது அத்தினமேயாகையால் வே டர்பிராணுகிய நம்பிராஜன் கட்டளைப்படி வேடச்சேனைகள்வந்து வள்ளிநாயகிக்குத் தெரிவித்து பாங்கிமாருடனே அரண்மனைக்கு செல்லும்படி யனுப்பிவிட்டு கண்ணகன்ற அளவும் வளர்ந்தோங் கிய தினைகதிர்களவ்வளவும் அறுத்து யானைகொண்டுமிதித்து அ ளவிட்டு அரண்மனையிற்சேர்த்தனர். (இஃது இவ்வாறிருக்க) வள் ளிவரையினிடத்தில் வள்ளிநாயகியாரைத் தழுவிக் களவுப்புணர் ச்சியைச் செய்திருந்த குமாரசுவாமியார் மறுதினம் வழக்கப்படி க்கு மாறுவேடத்தைத் தாங்கிக் கம்பீரமாய்வந்து திருத்தேவி யைக் காணுமலும் தினைப்புனத்தையரிந்திருப்பதையும் பலவாறு யோசித்து தெரிந்தவுடன் மனங்கலங்கி பகற்பொழுது முழுதும் தினைவனத்திலேயே கழித்து முன்னிரவிலும் கொல்லைத் தினைப் புனமெங்கனுஞ் சுழன்றுசுழன்று கடையில் அர்த்தராத்திரிவே ளையில் மெல்லமெல்லவேடர் சீறூரிற்புகுந்து குலயீனராகியகுற வர்பெருமான் வாசஞ்செய்யும் குடிசைக் கருகிற்போய்ப் பதுங்கி நின்று கரத்தைதட்டிச் சிலசைகைசெய்தனர் இச்சம்பவம் நேரு மென்று முன்னமே தெரிந்து மனக்கவலையினுற் நித்திரைகொள் ளாமற் படுத்துப்புரண்டுகொண்டிருந்த பாங்கியானவள்இந்தஅர வம் தெரிந்தவுடன் மெல்லவெழுந்து வெளிவந்து சுப்பிரமணிய தேவரைத் தரிசித்தவளாய்த் திருவடிகளில் வணங்கி தேவரீர் இராக்காலத்தில் இவ்விடம் வருவது தகாது நீங்களிருவருங்கலந் தின்புறுவதற்குத்தகுந்தவிடமுமில்லை அப்படிக்குநேரினும் பின்பு

எங்கள் பெண்கொடியானவள் பிரிந்திருக்கத்தரியாள் இவ்வித் சங்கடங்களிருக்கிறபடியால் வள்ளிநாயகியை உமதிடத்துக்கொண்டுபோய் உமதிஷ்டப்படிக் குலவியிருப்பது தகுதியாகக் காணுகின்றதெனச் சம்மதப்படுத்திச் சிவகுமாரனை அவ்விடத்தில் நிறுத்தித் திரும்பி குடிசையில் நுழைந்து வள்ளி நாயகியார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தைச்சேர்ந்து செவிகளுடன் வாயைப்புதைத்துத் தாயே! உமதுமனதுக்கினிய கொழுனன்பிரிவினால் மிகவும் வருந்தி மனந்தாபரியாமல் உம்மைக் கரவடமாய்த் தன் சாலைக்குக் கொண்டுபோகும் படிக்குத் துணிவுகொண்டு கடைவாயிலின்புறத்தில் வருந்திருக்கின்றனர் துரிதமாய்ப் புறப்படக்கடவாயென்று மெதுவாய்ச்சொல்லிய வாசகங்களைக் கேட்டமாத்திரத்தில் மனங்குளிர்ந்து தேகம்பூரிக்கக் களித்தவளாய் இது மிகவும் நன்மையாகவிருக்கின்றது அவ்வாறேசெய்வேனென ஒருமித்துத் தாய்தந்தையர் மெய்மறந்துதூங்குவதையும் மற்றசுற்றத்தார் கைகால்போனது தெரியாமல் சோர்ந்துறங்குவதையும் சாடைகளினலறிந்து திடசித்தளாய் விழிகளைமூடாமற் காத்திருக்கும் வேட்டைநாய்கள் அப்போதுதான் சற்றுக் கண்களை மூடியதையுந் தெரிந்துகொண்டு அண்டைப அயலார் சந்தடியில்லாமையுங்கண்டு ஊரெங்கனும் ஒய்ந்திருப்பதையும் மதித்துக் கொடியபேய்களுறங்கும் நடுச்சாமத்திற் பாங்கியானவள்கரத்தைப்பற்றி அரவந்தோற்றுமல் மெல்லக்கூட்டிவந்து நடையைச்சேர்ந்தவுடன் தாழ்ப்பாள் சத்தந்தெரியாமல் விலக்கிக் கதவை ஒருக்களிப்பாய்த்திறந்து எந்தாயை வெளியிற்கொண்டுவந்து சேர்த்தகாலையில் வேடராஜபுத்திரியானவள் ஆவலுடன் எமதிறைவனை எதிர்கொண்டுவணங்கிச் சிறுதொழில்களைச்செய்துவரும் குறவர்குறிச்சியில் நாயினேன்பொருட்டுச் செந்தாமரைமலர்களையொப்ப மெத்தெனவிளங்கும் பாதங்கள்கன்றிவருந்தும்படிக்கு இராத்திரிகாலத்தில் யாதொருதுணையுமில்லாமல் தேவரீர்வருவதோ இக்குற்றத்தை க்ஷமிக்கவேண்டுமெனப்பரிபவப்பட்டு கரங்களை கூப்பித்தொழுது தவக்கொழுந்தாகிய தேவி நிற்கும்போது தோழியானவள் சுப்பிரமணியக் கடவுளைப்பார்த்து வில்லையும் கணைகளையுமிடைவிடாமற் கரங்களிற் பற்றிக்கொண்டு கொலைக்கஞ்சாமற் றீயதொழில்களையே முக்கியமாகக் கருதிச்செய்துவரும் கடினசித்தராகியம்வடர் இக்காரணங்களைக் காண்பராயிற் கெடுதிநேருவதற்கையமில்லை யிதைத்குறித்துக்கால

தாமதஞ்செய்யாமல் இந்த நிமிஷத்திற்றமது சிறந்தபதிக்குக் கொண்டுபோய் இவளைப் பாதுகாத்திரட்சிப்பது தேவரீருக்குப் பாரம் இப்பெண்கொடியை அருமையாய்ச்சீராட்டி வளர்த்தனம் இக்காலத்தில் உமதடைக்கலமாகத் தந்தனமென முத்துக்கோவையையொத்த தந்தபந்திகளையுடைய தலைவிகரங்களை முருகப்பெருமாள் கையில்வைத்துக் கரங்களைக்கூப்பித்தொழுது போற்றியகாலையில் கடப்பமலர்மாலைபுரளும் பன்னிருபுயாசலங்களையுடைய கந்தர் அவளிடத்திற் பரிபூரணகடாட்சத்தை வைத்துக் கிருபையாகப்பார்த்து ஓ பெண்ணே நீ நம்மிடத்திற் பரிவாய்ச் செய்த கருணை ஒருபோதும் மறக்கமாட்டோமெனத் திருவாய் மலர்ந்தபோது மைதிமிர்ந்த விழிகளையுடைய பாங்கியானவள் வள்ளிநாயகியாரைச் சேவித்துத் தழுவித்தாயே தேவதேவோத்தமனைக் கணவனாகப்பெற்ற உமக்கு யாதொருகுறைவுமில்லை அவர் மனக்கருத்தின்படிக்கு நடந்துகொள்ளக்கடவை துரிதமாய்த் தலைவனைப்பிரியாமல் கூடப்போய்வாருமென்று ஐயனுடன் கூடித் தலைவி செலவு கொடுக்கப்பெற்றுத் திரும்பி விழலினாற்சோடித்திருக்கும் சிறுகுடிலில் நுழைந்து சந்தடியில்லாமல் மெதுவாய்க்கபாடபந்தனம் செய்துகொண்டு தன் படுக்கையைச் சேர்ந்து நித்திரை செய்திருந்தனள்.

அவள் மீண்டபின்பு அன்னநடையைவாய்ந்த தேவியுடன் வெற்றிவேலாயுத மூர்த்தியானவர் பாதிராத்திரியிற் காவலனைத்தையுங்கடந்து வேடர் சேரியைத்தாண்டி காமன் பாணங்களாகிய முல்லை, அசோகு, நீலம், அல்லி, மா, புன்னை, குருக்கத்தி, கோங்கு சண்பகமுதலாகிய தருக்கள் தழைத்துப் புஷ்பங்களைவிரித்துப் பரிமளித்துத் தேன்களைத்துளித்து சுனைகள் மிகுந்து இருண்டிருக்கும் சோலையிற்சேர்ந்து திருத்தேவியுடன் சந்தாகுலவிக்களித்து வருமுன்னிலையில் இராத்திரிநீங்கிவிடியற்காலமானதால் வேடராஜன் மனைவி யானவள் திடுக்கிட்டவளைப்போல வெழுந்தபோது பக்கத்திற்படுத்திருந்த கடககங்கணங்களை யணிந்திருக்கும்புத்திரியைக் காணாமையால் வீட்டிலிருக்கின்ற அறைகள் முற்றம் தாழ்வாரமெங்கனுந் தேடிப் பார்த்துக்காணாமல் தோழியைக்கண்டு வள்ளியம்மை யெங்கே காண்கிலனென்று வினவிய காலத்தில் தாயே முன்சாமத்தில் அவளும் நானுமாய்த் தேவரீர் பக்கத்திற் படுத்து நித்திரை செய்ததுண்டு அதன்பின்பு எனக்கொன்றுந் தெரியாதென மறுத்

தாம் கொடுத்தவுடன் தாயானவள் அனலிற்பட்ட மயிலைப்போர் லப் பதைபதைத்துக் கிலேசித்தோடிக் கணவனைக்கண்டு என் பிராணநாயகா என்னசொல்வேன் தமது பெண்ணரசியைக்கா ணோம் இதற்கென்னசெய்வேனென்று புலம்புவதைக்கண்டு மற வர்பெருமான் மதிமயங்கி உடனே கோபம் பிரவேசித்து வடவா முகாக்கினியைப்போலச் சீறி யந்தச்சேரியில் நாட்டியிருக்கும் காவலைக்கடந்து நம்மனைக்காவலைச் சட்டைபண்ணாமல் மிகுந்த தயிரியமாய் பெண்கொடியைக் கொண்டுபோன கள்வன்யாவன் அவனை யிந்தநிமிஷத்திற் பற்றிவந்து தகுந்த தண்டனையைச் செய்வேனெனச்சீறி உடனே சல்லடத்தைமாற்றித் தட்டியையி டையிலிறுக்கி வாளாயுதத்தை அரையிற்சொருகி வில்லையும் பா ணங்களையுங் கரங்களிற் பற்றிக்கொண்டு அதிதீவரமாய்க் குமரி யைத் திருடிப்போன திருடன் அடிச்சுவற்றைநாடி அந்தமார்க் கத்தைக்கண்டு அதிக வீராவேசத்துடன் வில்லியர்பெருமான் நடக்கும் சேதியைத் தெரிந்தவுடன் கட்டுக்காவலையுடைய இந்த ஊரில் அர்த்தராத்திரியில்வந்து வள்ளியம்மையைக்கொள்ளைகொ ண்டு மாயமாய்ப்போன சோரனைச் சும்மாவிடலாகாது தொடர் ந்துபிடித்து கட்டுவோம் குத்துவோம் சிறையிலடைப்போமெ ன்று பற்பலவீரங்களைப் பேசித் தட்டிசல்லடத்தைக் கட்டி வில் பாணம், வாள், வளைதடி, சில்லாக்கோல் முதலாகிய படைகளைப் பரித்து யுத்தசன்னத்தராய்ச் சேரியிலிருக்கின்ற வீரரனைவரும் ஏகமுகமாய் திரண்டு பிரசண்டவாய்வினுங் கடுகிப்போய்த் தமதி றைவனைக்கலந்து பறைகளைமுழக்கியும் கொம்புகளையூதியும் நட க்கின்றவர் அம்மார்க்கத்திற் பாதச்சுவடுகளைக் குறித்துப் பார்த் தும் பலதிசையினும் மோடியும் சிலர்தோப்புகளிற் புகுந்தாராய் ந்தும் பலர் தினைப்புனங்கள் பரந்திருந்த எல்லையெங்கணும்பார்த் தும் மற்றவிடங்களிற் பற்பலவேடர் புகுந்து சந்துபொந்து மூலை முடுக்குகளெங்கணும் நுழைந்து தேடிவரும் ஆரவாரங்களை அத ற்கடுத்த சோலையினிடத்திற் பாலசுப்பிரமணியதேவருடன் கொ ஞ்சி வார்த்தையாடிக்கொண்டிருந்த வள்ளிநாயகியார் தெரிந்தமா த்திரத்தில் திடுக்கிட்டுத் திருமேனி நடுநடுங்கி வியர்க்க மிகவும்பய ந்தவளாய்ச் சண்முகதேவர் பாதாரவிந்தங்களில் விழுந்து சேவி த்து மனவருத்தத்துடன் இதனை விண்ணப்பஞ்செய்வதாயினள்.

ஓ என் பிராணநாயகா கேட்டீரோ அதோ வொலிக்கின்ற ஆரவாரங்களை மோசம்வந்தது அடியேனைக்காணாத காரணத்தி

ஞல் என்பிதாவும் மற்றவேடருங் கோபதீபிதர்களாய் வில்,வால் குந்தம், எழு, மழு, பிண்டிபாலம், கடபணம் முதலாகியசுபாண விதங்களைத் தாங்கித் திசாதிசைகளெங்கணுந் தேடிக்கொண்டு வந்து இதோவிந்தச் சோலையின்பக்கத்தில் நெருங்கிவிட்டனர் அவர்கள் கொடுமையையும் கடினசித்தத்தையும் பலநாள்கண்டு பழகினவளாதலால் அடியேன்மனம் பதைபதைத்து நடுங்கிவாடு கின்றது இனிமேல்நாம் செய்வதொன்றும் தோற்றவில்லைவேடர் மிகவும் பொல்லாதபாபிகள் என்னசெய்வாரோ இதற்கடுத்தமு யற்சிகளை விரைவில் நினைந்துவேண்டிய சாக்கிரதையுடனிருக்க வேண்டும் கர்த்தனேயென்று பரிபவப்பட்டுப்போற்றுகின்ற திரு த்தேவியிடத்திற் கருணைகூர்ந்து உன்பத்திமைக்குக்களித்தனம் நீயொன்றுக்கும் அஞ்சிப் பயப்படவேண்டுவதில்லை வருத்தமின் றி மனவெழுச்சியுட னிருக்கக்கடவாய் நீடூழிகாலம் வாழி வாழி ஓ பெண்கள் சிகாமணியே யென்று ஆசீர்வதித்தருளினர்.

அத்தருணத்தில் வேடர் ஆர்ப்பாட்டங்களைச் செய்துகொ ண்டு அதட்டியுருட்டிப் பற்பல வசைமொழிகளைப்பேசிக் கந்தர் திருத்தேவியுடனிருக்கின்ற சோலையிற் சிலர்நுழைந்து உற்றுப் பார்த்துக் கள்வன்அகப்பட்டான் வாருங்கோள் வாருங்கோளெ ன்று கூவிக் கிராதகத்தொழிலையுடைய குறவரனைவரும் ஏகமாய்க் கூடிச் சோலையைவளைத்து முற்றுகைபோட்டுக்கொண்டு உருத் திராகாரமாகக் கொதித்திருக்குமுன்னிலையிற்பின்னணியில்வந்த எயினர்பெருமான் இச்சேதியைத் தெரிந்தவுடன் காளகூடத்தி னும் கோபித்தவனுய்த் தன்சேனைக்குமுன்னணியில் முந்தி நம துபெண்ணை அபகரித்துக்கொண்டுவந்த கள்வன் இத்தகைய பெ ருஞ்சேனையின் வரவைக்கண்டு சற்றும்அச்சமில்லாமல் மனவெ ழுச்சியுடன் அசைவற்றிருக்கின்றதன்றி நமதுவலியையும் வீரத் தன்மையும் ஜயப்பிரதாபங்களையும் அசட்டைசெய்திருக்கின்ற னன் இவன்புயவன்மையைத் தீப்பட்டெரிந்து சாம்பலாகும் கா ட்டைப்போல இந்தநிமிஷத்திலேயே வாட்டுவோமெனப்பொங் கிருறிஞ்சிக்கிறைவனும் மற்றப்பாதகரும் சமுத்திரப்பெருக்கைப் போல ஆர்ப்பரித்து வில்லைவளைத்துஆயிரங்கிரண சமோகங்களை யுடைய சூரியனை மேகங்கள் கவியுமாறுபோல நாலுதிசையினுஞ் சூழ்ந்து சரவருஷங்களைப்பொழிந்து வாதாடுமுன்னிலையில் அவ் வாளிகள்மேலிட்டுச் சிடசிடென்றும் குறுகுறென்றும் சடசடெ ன்றும் இரைந்துகொண்டு அதிவேகமாய்வந்து பத்தர்கள் அருச்

சனைசெய்யும் மலர்களைப்போலக் கிருபைக்கடலாகிய குமாரதேவர் திருமேனியெங்கும் தைத்துதைத்துப் பலபலவென்று சுற்றிலுமிறைந்தன, இச்சம்பவங்களைக் கண்ணாரக்கண்டு முகூர்த்த நேரம் அசைவற்றுநின்று அக்காலத்தும் வேடர்மேற் கருணையுள்ளவராய் தமது வெற்றிக்கொடியைமாத்திரம்நினைந்தனர் அப்படி நினைத்தமாத்திரத்தில் சிவந்தகொண்டையையுடைய சேவலானது கந்தர்குறிப்பின்படிக்கு விசாலமாய்த் தழைத்திருக்கும் சிறகைவிரித்தசைத்து வானவழிக்கொண்டு பறந்துவந்து சிவகுமாரன் சன்னிதானத்தில் நின்று கழுத்தைநீட்டிப் பேரொலியெழ ஒருவிசைகூவிற்று அந்த முழக்கமானது பிரளயகாலத்தெழும் போட்டியினும்மேலிட்டுப் பகைவர்செவிகளிற் கேட்டமாத்திரத்தில் விஷப்பரிசம் பட்டவர்களைப்போல வேடராசன் தன்பிள்ளைகள் பந்துவர்க்கங்கள் கொடியமனதையுடைய சேனையுடன் ப்ரசண்டமாருத மோதலிலகப்பட்ட விருட்சங்களைப்போலப் பொறிகள்கலங்கிப் புலன்களொடுங்கிக் கைகால்தளர்ந்து ஒருவர்மீதொருவர் விழுந்துமாண்டனர்.

இவ்விதமாகப் பிதாவும் சகோதரர் எழுவரும் மாமன்மைத்துனர் உறவாகவிருந்தவர்முற்றும் ஒருமுனையிற்செத்தகொடுமையைக் கண்ணாரக் கண்டமாத்திரத்தில் திடுக்கிட்டு மனம் பதைபதைத்துத் திருமேனி நடுக்கமெடுக்க விழிகளில் நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக்கதறி எண்ணுதவெல்லா மெண்ணியெண்ணிச்சோருகின்றபோது இக்காரணங்கள் யாதுந் தெரியாதவரைப்போலத் தமது திருத்தேவியன்பைச் சோதிக்கும்பொருட்டுமனக்கலக்கமற்று முருகப்பெருமாள் அச்சோலையைக்கடந்து சிந்தையில் அருள்வெள்ளமானது பெருக்கெடுத்தலைக்கக் கம்பீரமாய் நடந்துபோம்போது தேவியும் நிழலையொப்பப் பின்பற்றிச்சென்றனள், இச்சம்பவங்களனைத்தையும் போதவுணர்விற்றெரிந்த நாரதபகவான் மிகவும் சிந்தாக்கிராந்தராய் மனோவேகத்தினு முந்தியெதிரில்வந்து சுப்பிரமணியர் திருக்கோலத்தைத்தரிசித்து மனமகிழ்ச்சியுடன் அம்மையப்பர்திருவடிகளில்வணங்கி ஜயஜயபோற்றியென்று வாழ்த்தினவராய்க் கார்த்திகேயனே அடியேன் தம்மைக்கண்டு நீங்கியபின் புநடந்தசேதிகளைத் திருவுளம்பற்றக்கடவீரெனவேண்டுவதற்கிரங்கி நாரதரைப் பரிவாகப்பார்த்துத் தாம் திருத்தணிகைவரையைக்கடந்து வள்ளியம்மையைக்கண்டு தன்வயப்படுத்தியகாரணத்தினுலெதிர்த்துவந்த வேடராசன் வம்சநா

ச்மறக்களப்படுத்தியவரையிற் சவிஸ்தாரமாகத்திருவாய்மலர்ந்த சம்பவங்களைக்கேட்ட நாரதர் மனவிரக்கத்துடன் கண்ணபிரான் திருமருகனை வந்தித்துச் சுவாமிகள் சொல்லிய காரணங்கள்வெகுநேர்த்தியாகவிருக்கின்றன தேவரீர் திருவிளையாடலுக் கொரு எல்லை கிடையாதாயினும் இந்த அநியாய மெங்கேனுமுண்டோ தம்மைக்குறித்துப் பற்பல தவவிரதங்களைச்செய்து வருந்தி நோற்ற சிறப்பினாற் கிடைத்தற்கரிய விஷ்ணுவின் திருக்குமாரத்தியை பெண்ணாகப்படைத்துச் சீராட்டிப்பாராட்டிப் போற்றி அரிதில் வளர்த்துப் பரிபவப்படுத்திப்போற்றிவந்த பிதாவையும் அணைவரையும் மற்ற சுற்றத்தினராதியரைக் கோபித்துக்கொன்றபோதினும் சற்றும் தயை தாட்சண்ணியமில்லாமலும் அதற்கொரு நிவாரணத்தைக் காட்டாமலும் இதுபரிபந்தம் அவர்கள் கிரகத்தில் உண்டுடுத்து வளர்ந்த பதிவிரதாசிரோமணியானவள்மனங்கலங்கி வாடிவருந்தும்படிக்கு இட்டுக்கொண்டுபோவது அழகோ உலகநடைக்கடுப்பதோ கள்ளவேடத்தைத் தாங்கிப்பரிந்து வளர்ந்த பெண்ணையுந் திருடிக்கொண்டுபோனால் சும்மாவிட்டுவிடுவார்களோ காங்கேயனே தேவியின் மனவருத்தந்தீர்ந்து களித்திருக்கத்தக்கதாக அவர்களிடத்திற் கிஞ்சித்துத் தயைசெய்து கிருபாநோக்கம் பாலிக்கவேண்டுமென்று பலவாகப் போற்றுகின்ற மஹாருஷியைப் பரிவாகப்பார்த்தருளி நல்லகாரியம் உமதிஷ்டப்படிக் காகட்டுமென்த் திருவாய்மலர்ந்து திரும்பித் தேவியும் இருஷியும் பின்பற்றிவரச் சோலையினிடத்திற்சென்று தமதிடத்தில் மெய்ப்பத்தியும் அன்பும் மற்றகளிப்பையும் பூரணமாகப்பெற்றிருக்கின்ற வள்ளியம்மை முகாரவிந்தத்தைப் பார்த்து நம்மிடத்தில் அபலமாகிய போரைச்செய்து மாண்டு நிலத்தில்விழுந்து கிடக்கும் உன் சுற்றத்தா ரனைவரையும் எழுப்பக்கடவாயென அம்மையார் பெருமைகள் பலருக்குந் தெரிவதாகத்திருவுளம் பற்றியமாத்திரத்தில் ஆனந்தபரவசத்தளாய் மகாபாக்கியமென்று காமாக்ஷியின் சுபுத்திரரைச் சேவித்து அவர் திருவடிகளை மனதிற்றியானித்துப் பத்திபரவசத்தளாய் அரியபிராணனையிழந்து தேகம்புழுதியிற்பட நிலப்பாயலில் அலங்கோலமாய் விழுந்துகிடக்கின்ற என்னுடைப்பிதாவே சீராட்டிவளர்த்த தமையரே அருமையாகப்போற்றிவந்த சுற்றத்தாரே நீங்களனைவருங்கமலக்கண்ணன் மருகன் கட்டளையின்படிக்கு எழுந்திருந்து குலவி என்மனக்கவலையைத் தீர்க்கக்கடவீரென்று பவளவாய்திறந்து ஒருதிரு

வாய்மொழியைப் பேசியமாத்திரத்தில் உறங்கியிருந்தவர் உணர்ச்சிபெற்றெழுந்ததுபோலப் பழையபடி பிராணனையடைந்து துள்ளிக் கொக்கரித்து வேடராஜனாதியர் எழுந்ததருணத்தில் சிவகுமாரன் அக்காலத்திற்கொண்டிருந்த கோலத்தை மறைத்துக் கிருபாசமுத்திரம்பெருகும் சண்முகாரவிந்தங்களையும் பொன்வரையைப் பழித்தோங்கியிருக்கும் பன்னிருபுயாசலங்களையும்வெற்றிவேல் சக்கரம் தனுசு முதலிய படைகள் கரங்கள்தோறும் துவாதசாதித்தரைப்போல விளங்கவும் இத்தகைய தமது திருவடிவைத்தாங்கி எதிரில்நின்ற காலத்தில் அந்த அற்புதக் காட்சியை அனைவருந் தரிசித்தமாத்திரத்திற் றிடுக்கிட்டும் தேகம்நடுக்கமெய்திப் பயப்பிராந்திகொண்டு அடியற்ற பனைகளைப்போல நிலத்தில்விழுந்து பன்முறைவணங்கிவாயில்வந்தவிதங்களிற்போற்றிசெய்து விழிகளில் ஆனந்தவாரியைப்பெருக்கித்தேகம் குதூகுலித்து மயிர்ச்செறிவெழ அளவுபடாத பேரானந்தத்தையடைந்தவர்களாய்க் கரங்களைக்கூப்பிக்கொண்டு இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர்.

ஓ எமது குலதெய்வமே கொலைதொழிலையே முக்கியமாக விரும்பி நடாத்திவரும் இழிகுலராகிய அடியோங்கள் வம்சபரம்பரையாக அடிமைகொண்டு யாதொருதீங்குகளும் நேராமல் எங்கள் சேரியைப்பாதுகாத்து அந்நிலத்துக்கு ஆதிதேவதையாகவுமிருக்கின்ற தேவரீரே நாயினேங்கள் முன்னவருடன் செய்ததவமுயற்சியினாற்பெற்றுப் போற்றி வளர்த்திருந்த பெண்கொடியை அரையிருளில் குறிச்சியிற் புகுந்து சோரத்துவமாய்க் கவர்ந்துகொண்டுபோவது எக்காலமும் நீங்காதபழிப்புக்கிடமா மென்பது பளிங்குபோலவிளங்குமே ஆதலால் தேவரீர் திருவுளமிரங்கி இனியாவது எங்கள்இழிகுலமானது உலகமுள்ளளவும் கீர்த்தியடையும்படி பூர்த்தியான கருணைசெய்து இக்கன்னிகையுடன் எங்களூரைச்சேர்ந்து அக்கினி, ஆதித்தன், கடவுளர், பந்துக்கள் சாட்சியாய்த் திருக்கலியாணஞ்செய்து கொண்டு எங்கள்மரபுக்கடுத்த சீர்சிறப்புகளுடன் நாங்களனைவரும் சந்தோஷத்துடன் அனுப்பிவைக்கும்படிக்குத் தாராளமாய்த் திருத்தேவியை உம்முடைய வூருக்கழைத்துப் போகலாமென்று விண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில் மாதுலன் அவன்வர்க்கத்தவர் கோரிக்கையின்படிக்கிசைந்து அவ்வாறே நடப்பிக்கின்றன மெனத்திருவாய் மலர்ந்தவராய் வள்ளிநாயகியார்தொடர்ந்து வர

நாரதபகவானும் தழைத்தோங்கிக் குளிர்ந்த நிழலைப்பரப்பி யிருக்கும்மலர்க்காவை நீங்கிப் பாதகமலங்கள் கன்றிவருந்தும்படிக்கு நடந்து வள்ளிவரைக்கருகிலிருக்கின்ற சிற்றூரிற் பிரவேசித்தனர், வேடராஜன் மற்றவருடன் மனமகிழ்ந்து ஆனந்தபரவசராய்ச் சூழ்ந்துவந்து தங்கள்சேரியைச்சேர்ந்தவுடன் தம்மினத்தவரைப்பார்த்துச் சங்கரன் குமாரராயும் நமது குலதெய்வமாயுமிந்த நிலத்தைப் பாதுகாத்துவரும் சுப்பிரமணியக்கடவுளே வலியவந்து நமதுமாதைத் திருடிப்போயினன் இப்போது அடியேன் கோரிக்கையின்படிக்குத் திருமணமுன்னிலையில் வள்ளியாரைப் பெற்றுப்போகச்சம்மதித்து வந்தானென்று பலருமறியத் தெரிவித்தனன்.

அக்காலத்தில் முன்னம் பொங்கிக்கொண்டிருந்த கோபமும் நாணமுமடங்கி மகிழ்ச்சிமிகுதியினால் தேகம்சிலிர்த்துமயிர் பொடிப்பச் சந்தோஷசாகரத்திலழுந்தி யிப்படிக்கோவிருந்தது நமதையன் திருவிளையாடலென்று கூத்தாடுகின்றபோது வேடராஜன் குறிச்சியிற் றலைமை பெற்றிருக்கின்ற விசாலமாகியதன் னில்லத்திற் சரவணபவனையும் பரிமளமிகுந்த புஷ்பங்களைச்சூடியிருக்கும் அளகபாரத்தையுடைய வள்ளியம்மையையும் பணைகள்முழங்க பம்பையதிர இத்தகையவைபவங்களுடன் அழைத்துப்போய்க்குலமுறைப்படிக்கு மஞ்சள்நீர், ஆலம், மற்றசடங்குகளைத்தன்தேவிநடத்தி வணங்கிப்போகப்பொற்பிரகாசமாகவிளங்கும் வேங்கைத்தளிர்களினுற் சோடித்தபாயலின்பேரி லெழுந்தருளச்செய்து நாரதருக்கும் தர்ப்பாசனத்தைக் கொடுத்து முற்றியபின்பு கலியாணகாரியங்களிற்சருவசாக்கிரதை செய்தும் இந்த மங்களவார்த்தையைப் பக்கங்களிலிருக்கின்றதன் பந்துக்களுக்குத் தூதின்மூலமாகச் சொல்லியனுப்பியும் திரிகின்ற தருணத்தில் வேலாயுதமூர்த்தியானவர் தமதருகிற் வீற்றிருக்கின்ற தேவியின்மீது கிருபாநோக்கத்தைப் பாலித்த மாத்திரத்திற் பழையவடிவம் குறமகளீர் அலங்கரித்திருந்த சிங்காரங்களுமாறி ஆதிமகாவிஷ்ணு புத்திரியாகவிருந்த தெய்வப்படிவத்துடன் நவரத்தினமயமாகிய சர்வாபரணபூஷிதையாய்க் கண்டவர்கள் விழிகளுக்குக்களிப்பைத்தரும் சிறந்தகோலத்துடனிருப்பதைக் கவலைமுற்று மொழிந்து மனவெழுச்சியுடனிருக்குந் தந்தையும் தாயும், செவிலியும், தோழிமுதலான பந்துவர்க்கங்கள் தெரிந்தமாத்திரத்தில் புஷ்பத்திற் பெருகும் தேனைக்கிரகிக்க வரும்வண்டி

னங்களைப் போலப்பலதிசையினு மிருந்துவந்து பெண்ணரசியி னது காட்சியைத்தரிசித்து அற்புதமடைந்து இந்தத்தேவியானவள் குலஹீனராகிய நம்மனையிற் சேர்ந்து குலவியிருந்ததையோசிக்குமிடத்தில் நமது முன்னவருடன்செய்திருக்கின்ற தவப்பேருகும் மற்றென்றையுங் குறிக்கப்படவில்லையென்று தமதிறைவன் பாக்கியத்துக்குக் கொண்டாடியிருந்தனர். வேடராஜனும் அதிகசந்தோஷத்துடன் தங்களினத்திற் கலியாண முடிக்கும் போது செய்துவரும் கிரமப்படிக்கு முருகனுக்குப் பூசைகளை நடத்தித் தழைகளினுற் பந்தலிட்டுப் புஷ்பக்கொத்துகளையும் தளிர்களைமத்திமத்தியிற்றாக்கி முடிந்தவுடன்பாணத்தைநாட்டி அந்நிழல் அடியைக்காக்கும் மத்தியானகாலம் நேர்ந்தபோது வேடர்குரவைகளைப்பாடி மலர்களையிறைத்துக் கூத்தாடத்தக்கதாகத் தானரிதிற்பெற்ற பெண்ணரசியின் திருக்கரத்தைக் குமாரதேவர் அஸ்தத்தில்வைத்து எங்கள் தவக்கொழுந்தைச் சூரியநாராயணன் சாட்சியாய் மனப்பூர்வகமாகத் தத்தஞ்செய்துவிட்டேன் கமலாசனியின்திருமருகனே தேவரீர் பணிவிடைக்கு ஒப்புக்கொள்ளுமென்று தன்தேவிவிடும் கரகநீரைவிட்டுப் போற்றினன், பின்புநாரதபகவானுனவர் சிவகுமாரன் கட்டளையைப்பெற்றுக் கொண்டு ஓமக்கனலைவளர்த்திச் சமித்துக்களையும் ஆவினெய்பால் பொரிமுதலிய திரவியங்களினுல் நவக்கிரகவோமத்தைநடத்திப் பூரணுகுதிகொடுத்துப் பெண்ணையும் பிள்ளையையும் தீவிலஞ்செய்வித்து அருந்ததியைக்காட்டி வேதவிதிப்படிக்குச் சகலசடங்குகளு முடித்தகாலத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு பிரமன் உருத்திரன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடகாந்தருவ சித்தவித்தியாதரர் ஏகாதசருத்திரர் துவாதசாதித்தர் முதலியரனைவரும் சூழ்ந்து யஜயவெனப் போற்றிவரவும் பூதகணங்கள் மங்கலவாத்தியங்களை முழக்கித்தொடரவும் இத்தகைய ஒலக்கத்தின் மத்தியில் பருவதராசபுத்திரி சமேதராய் விருஷபவாகனத்திலாரோகணித்துத் தேவதேவோத்தமனுகிய சிவபிரான் வானவெல்லையிலெழுந்தருளித் தமதுதிருக்குமாரன் குறமகளைப் பாணிக்கிரகணஞ் செய்யும் சம்பிரமங்களைப்பார்த்துத்தம்பதி சமேதராய்க்களித்துப்பல ஆசீர்வாதங்களைச் செய்துவருமுன்னிலையில் ஸ்ரீமகாவிஷ்ணுபிரமருத்திரேந்திராதியான விண்ணவர் கற்பகமலர்களை வாரிவாரிச் சொரிந்து பாலசுப்பிரமணிய க்கடவுளை வாழ்த்தி அஞ்ச

வியஸ்தராய் ஜயஜயவெனப்போற்றினர் இக்காட்சியைச் சரவணபவன் தரிசித்தமாத்திரத்தில் சந்தோஷசாகரத்தில் முழுகினவராய்த் தாய்தந்தையர் மாமன்மாமியை வந்தித்து வாழ்த்திமற்றையரிடத்திற் கிருபாநோக்கம் பாலித்தனர் அதன்பின்பு சிவபெருமான் தம்முடன்வந்த திருக்கூட்டத்துடன் திரும்பி வெள்ளியங்கிரியைச்சேர்ந்து களித்திருந்தனர். நாரதபகவானும் மணப்பந்தலில் நடத்தவேண்டிய சடங்குகளனைத்தையும் நிறைவேற்றிய பின்பு வெற்றிவேலாயுதமூர்த்தியை வள்ளிநாயகியாருடன் வணங்கித் துதித்துவரும்போது திருமால்மருகன் திருத்தேவியுடனிருக்கின்ற மணக்கோலத்தை வேடராஜன் கண்டுகளித்து இந்தவிழிகளைப்பெற்றதற்குக் கிடைக்கவேண்டும் பலப்பிராப்தியை யித்தினமடைந்தேனென்று கரங்களைக் கொட்டிக்கொண்டு ஆனந்தக்கூத்தாடினன். மற்றசுற்றத்தினரும் தேகபரவசராய் முருகன்வெறியாடல்களைக் கொண்டாடித் தீர்க்கதண்டன் சமர்ப்பித்துக்களித்தனர்.

நாரதமுனிவர் ஸ்ரீசுப்பிரமணியருக்கு

## வள்ளியம்மையை விவாகம் செய்வித்தது

முற்றிற்று.

---

## நாரதர்கலகம் நான்காம்பாகம்,

முற்றிற்று.

# தெய்வகுண வெளிச்சம்.

விசுவாவசு என்பவன்—வாதி. கிருசானு என்பவன்—பிரதிவாதி.

பூலோகத்திலுள்ள தெய்வங்களையும் தெய்வஸ்தலங்களையுங்குறித்து தேவலோகத்து காந்தருவர்களாகிய (விசுவாவசு என்பவனுக்கும் கிருசானு என்பவனுக்கும்) நடந்த அனேக திருட்டுப் புரட்டுகளும் வியாசர கட்டுபாடுகளும் விளங்கும், இந்தப் புத்தகமானது (விஸ்வகுணதேரிசனமென்னும்) சமஸ்கிருத சாஸ்திரத்தை அப்படியே மொழிபெயர்த்தது. ஸ்தலரகசியமெல்லாம் இதிற்காணலாம்.

சூரியபகவானைக்குறித்து
ஸ்ரீமந்நாராயணனைக்குறித்து
பூமிதேவியைக்குறித்து
அயோத்தியைக்குறித்து
கங்காநதியைக்குறித்து
காசியைக்குறித்து
சமுத்திரங்களைக்குறித்து
ஜகந்நாதத்தைககுறித்து
பைராகிகளைக்குறித்து
திருவேங்கடாஜலத்தைக்குறித்து
கடிகாசலத்தைக்குறித்து
திருவெவவுளூரைக்குறித்து
ஸ்ரீபெரும்புதூரைக்குறித்து
திருவல்லிக்கேணியைக்குறித்து
கஞ்சிவரதராஜரைக்குறித்து
வேதாந்ததேசிகரைக்குறித்து
நரசிமமசுவாமியைக்குறித்து
வைகுண்டப்பெருமாளைக்குறித்து
உலகளந்தபெருமாளைக்குறித்து
பாண்டவதூத சுவாமியைக் குறித்து
விஜயராகவசுவாமியைக்குறித்து
க்ஷீரநதி பாலாற்றைக்குறித்து
சூத்திரரைக்குறித்து
பாகாநதியைக்குறித்து
செஞ்சிக்கோட்டையைக்குறித்து

ஸ்ரீமூஷ்ணத்தைக்குறித்து
காவேரியைக்குறித்து
ஸ்ரீரங்கத்தைக்குறிதது
கருடாழ்வாரைக்குறித்து
அரிதாசரைக்குறித்து
திருவானைக்காவலைக்குறித்து
சோழதேசத்தைக்குறித்து
கும்பகோணத்தைககுறித்து
சேதுவைக்குறித்து
மதுரைமீனாட்சியம்மையைக்குறித்து
திருமாலிருஞ் சோலைமலையைககுறித்
தாம்பிரபரணியைக்குறித்து
சமயவிளக்கத்தைக்குறித்து
சைவப்பிராமணர்களைக்குறித்து
பண்டாரங்களைக்குறித்து
ஜோசியர்களைக்குறித்து
வைத்தியர்களைக்குறித்து
கவீஸ்வரர்களைக்குறித்து
தர்க்கசாஸ்திரிகளைக்குறித்து
மீமாம்சகர்களைக்குறித்து
வியாகரணர்களைக்குறித்து
உபாத்தியாயர்களைக்குறித்து
கிரந்தகர்த்தாசொல்லியதுகளைக்குறித்
இராஜசேவையைக்குறித்து
அத்துவைதிகளைக்குறித்து.

இம்மாதிரி இன்னும் அனேக தெயவங்களைக் குறித்திருக்கின்றது.

இதன் விலை அணா 8. தபாற்கூலி அணா 3.

85 89

சிறுமணவூர் முனிசாமி முதலியார் கம்பெனி,
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதருஸ்,